# நாற்காலி

'நாற்காலி இல்லாததும் ஒரு வீடா?' எங்கள் வீட்டில் இப்படித் திடீரென்று எல்லோருக்கும் தோன்றிவிட்டது. அவ்வளவுதான்; குடும்ப 'அஜெண்டா'வில் வைக்கப்பட்டு இந்த விஷயத்தில் விவாதம் தொடங்கியது.

முதல் நாள் எங்கள் வீட்டுக்கு ஒரு குடும்ப நண்பர் விஜயம் செய்தார். அவர் ஒரு சப்ஜட்ஜ். வந்தவர் நம்மைப் போல் வேட்டி சட்டை போட்டுக்கொண்டு வரப்படாதோ? சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார். எங்கள் வீட்டில் முக்காலிதான் உண்டு. அதன் உயரமே முக்கால் அடிதான். எங்கள் பாட்டி தயிர் கடையும்போது அதிலேதான் உட்கார்ந்து கொள்வாள், அவளுக்கு பாரியான உடம்பு. எங்கள் தாத்தா தச்சனிடம் சொல்லி அதைக் கொஞ்சம் அகலமாகவே செய்யச் சொல்லியிருந்தார்.

சப்ஜட்ஜுக்கும் கொஞ்சம் பாரியான உடம்புதான். வேறு ஆசனங்கள் எங்கள் வீட்டில் இல்லாததால் அதைத்தான் அவருக்கு கொண்டுவந்து போட்டோம். அவர் அதன் விளிம்பில் ஒரு கையை ஊன்றிக்கொண்டு உட்காரப் போனார். இந்த முக்காலியில் ஒரு சனியன் என்னவென்ற h ல் அதன் கால்களுக்கு நேராக இல்லாமல் பக்கத்தில் பாரம் அமுங்கினால் தட்டிவிடும்! நாங்கள் எத்தனையோ தரம் உறியில் வைத்திருக்கும் நெய்யைத் திருட்டுத்தனமாக எடுத்துத் தின்பதற்கு முக்காலி போட்டு ஏறும் போது அஜாக்கிரதையினால் பலதரம் கீழே விழுந்திருக்கிறோம். பாவம், இந்த சப்ஜட்ஜும் இப்பொழுது கீழே விழப்போகிறாரே என்று நினைத்து, அவரை எச்சரிக்கை செய்ய நாங்கள் வாயைத் திறப்பதற்கும் அவர் தொபுகடீர் என்று கீழே விழுந்து உருளுவதற்கும் சரியாக இருந்தது. நான், என் தம்பி, கடைக்குட்டித் தங்கை மூவருக்கும் சிரிப்பு தாங்க முடியவில்லை. புழக்கடைத் தோட்டத்தைப் பார்க்க ஓடினோம். சிரிப்பு அமரும்போதெல்லாம் என் தங்கை அந்த சப்ஜட்ஜ் மாதிரியே கையை ஊன்றிக் கீழே உருண்டு விழுந்து காண்பிப்பாள். பின்னும் கொஞ்சம் எங்கள் சிரிப்பு நீளும்.

எங்கள் சிரிப்புக்கெல்லாம் முக்கிய காரணம் அவர் கீழே விழும் போது பார்த்தும் எங்கள் பெற்றோர்கள், தாங்கள் விருந்தாளிக்கு முன்னாள் சிரித்துவிடக்கூடாதே என்று வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டதை நினைத்துத்தான்!

ஆக, நாங்கள் எல்லாருக்கும் சேர்த்துச் சிரித்துவிட்டு வீட்டுக்குள் பூனைபோல் அடி எடுத்து வைத்து நுழைந்து பார்த்தபோது அந்தப் பாரியான உடம்புள்ள விருந்தாளியை காணவில்லை. அந்த முக்காலியையும் காணவில்லை. 'அதை அவர் கையோடு கொண்டு போயிருப்பாரோ?' என்று என் தங்கை என்னிடம் கேட்டாள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே, எங்கள் வீட்டில் எப்படியாவது ஒரு நாற்காலி செய்துவிடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இந்த நாற்காலி செய்வதில் ஒரு

நடைமுறைக் கஷ்டம் என்ன என்றால், முதலில் பார்வைக்கு எங்கள் ஊரில் ஒரு நாற்காலி கூடக் கிடையாது; அதோடு நாற்காலி செய்யத் தெரிந்த தச்சனும் இல்லை.

'நகரத்தில் செய்து விற்கும் நாற்காலியை வாங்கிக்கொண்டு வந்துவிட்டால் போச்சு' என்று எங்கள் பெத்தண்ணா ஒரு யோசனையை முன் வைத்தான். அது உறுதியாக இராது என்று நிராகரித்துவிட்டார் எங்கள் அப்பா.

பக்கத்தில் ஒரு ஊரில் கெட்டிக்காரத் தச்சன் ஒருவன் இருப்பதாகவும் அவன் செய்யாத நாற்காலிகளே கிடையாது என்றும், கவர்னரே வந்து அவன் செய்த நாற்காலிகளைப் பார்த்து மெச்சி இருக்கிறார் என்றும் எங்கள் அத்தை சொன்னாள்.

அத்தை சொன்னதிலுள்ள இரண்டாவது வாக்கியத்தைக் கேட்டதும் அம்மா அவளை, 'ஆமா, இவ ரொம்பக் கண்டா' என்கிற மாதிரிப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

அப்பா வேலையாளைக் கூப்பிட்டு, அந்தத் தச்சனுடைய ஊருக்கு அவனை அனுப்பிவிட்டு எங்களோடு வந்து உட்கார்ந்தார். இப்போது, நாற்காலியை எந்த மரத்தில் செய்யலாம் என்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"தேக்கு மரத்தில் தான் செய்ய வேண்டும். அதுதான் தூக்க வைக்க லேசாகவும் அதே சமயத்தில் உறுதியாகவும் இருக்கும்" என்றாள் பாட்டி, தன்னுடைய நீட்டிய கால்களைத் தடவி விட்டுக் கொண்டே. (பாட்டிக்குத் தன்னுடைய கால்களின் மீது மிகுந்த பிரியம். சதா அவற்றைத் தடவிவிட்டுக் கொண்டே இருப்பாள்!)

இந்தச் சமயத்தில் எங்கள் தாய் மாமனார் எங்கள் வீட்டுக்குள் வந்தார். எங்கள் பெத்தண்ணா ஓடிபோய் அந்த முக்காலியைத் தூக்கிக்கொண்டு வந்தான். சிறிதுநேரம் வீடே கொல்லென்று சிரித்து ஓய்ந்தது.

மாமனார் எங்கள் வீட்டுக்கு வந்தால் அவருக்கென்று உட்காரு வதற்கு அவரே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார். தலை போனாலும் அந்த இடத்தில்தான் அவர் உட்காருவார். பட்டக சாலையின் தெற்கு ஓரத்திலுள்ள சுவரை ஒட்டியுள்ள ஒரு தூணில் சாய்ந்துதான் உட்காருவார். உட்கார்ந்ததும் முதல் காரியமாகத் தம் குடுமியை அவிழ்த்து ஒருதரம் தட்டித் தலையைச் சொறிந்து கொடுத்துத் திரும்பவும் குடுமியை இறுக்கிக் கட்டிக்கொண்டு விடுவார். இது அவர் தவறாமல் செய்கிற காரியம். இப்படிச் செய்து விட்டு அவர் தம்மையொட்டியுள்ள தரையைச் சுற்றிலும் பார்ப் பார். "தலையிலிருந்து துட்டு ஒன்றும் கிழே விழுந்ததாகத் தெரிய வில்லை" என்று அண்ணா அவரைப் பார்த்து எக்கண்டமாகச் சொல்லிச் சிரிப்பான்.

அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இப்படிக் காகித பாணங்களினால் துளைத்தெடுக்கப்படுவார்! 'சம்பந்திக்காரர்கள்; நீங்கள் பார்த்து என்னைக் கேலி செய்யாவிட்டால் வேறு யார் செய்வார்கள்' என்கிற மாதிரி திறக்காமல்

கல்லுப்பிள்ளையார் மாதிரி அவர் பாட்டுக்கு உட்கார்ந்து புன்னகையோடு இருப்பார். எங்களுடைய ஏடாகிப் பேச்சுக்களின் காரம் அதிகமாகும்போது மட்டும் அம்மா எங்களைப் பார்த்து ஒரு பொய் அதட்டுப் போடு வாள். அந்த அதட்டிடு வாக்கியத்தின் கடைசி வார்த்தை "கழுதைகளா" என்று முடியும்.

மாமனார் வந்து உட்கார்ந்ததும், அம்மா எழுந்திருந்து அடுப்படிக்கு அவசரமாய்ப் போனாள். அவளைத் தொடர்ந்து ஆட்டுக்குட்டியைப் போல் அப்பாவும் பின்னால் போனார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஆளோடி வழியாக அம்மா கையில் வெள்ளித் தம்ளரில் காயமிட்ட மோரை எடுத்துக்கொண்டு நடந்து வர, அம்மாவுக்குப் பின்னால் அப்பா அவளுக்குத் தெரியாமல் எங்களுக்கு மட்டும் தெரியும்படி வலிப்புக் காட்டிக்கொண்டே அவள் நடந்துவருகிற மாதிரியே வெறுங்கையைத் தம்ளர் ஏந்துகிற மாதிரி பிடித்துக்கொண்டு நடந்து வந்தார்! அவர் அப்படி நடந்து வந்தது, 'அவா அண்ணா வந்திருக்கானாம்; ரொம்ப அக்கறையா மோர் கொண்டுபோய்க் கொடுக்கிறதைப் பாரு' என்று சொல்லு கிறது மாதிரி இருந்தது.

மோரும் பெருங்காயத்தின் மணமும், நாங்களும் இப்பொழுதே மோர் சாப்பிடணும் போல் இருந்தது.

மாமனார் பெரும்பாலும் எங்கள் வீட்டுக்கு வருகிறது மோர் சாப்பிடத்தான் என்று நினைப்போம். அந்தப் பசுமாட்டின் மோர் அவ்வளவு திவ்வியமாய் இருக்கும். அதோடு எங்கள் மாமனார் எங்கள் ஊரிலேயே பெரிய கஞ்சாம்பத்தி. அதாவது, ஈயாத லோபி என்று நினைப்பு எங்களுக்கு.

இந்தப் பசுவை அவர் தம்முடைய தங்கைக்காகக் கன்னாவரம் போய்த் தாமே நேராக வாங்கிக்கொண்டு வந்தார். இந்தக் காராம்பசுவின் கன்றுக்குட்டியின் பேரில் என் தம்பிக்கும் குட்டித் தங்கைக்கும் தணியாத ஆசை. வீட்டைவிட்டுப் போகும்போதும் வீட்டுக்குள் வரும்போதும் மாமனார் பசுவை ஒரு சுற்றிச் சுற்றி வந்து அதைத் தடவிக்கொடுத்து (தன் கண்ணே எங்கே பட்டு விடுமோ என்ற பயம்!) இரண்டு வார்த்தை சிக்கனமாகப் புகழ்ந்து விட்டுத்தான் போவார். 'பால் வற்றியதும் பசுவை அவர் தம்மு டைய வீட்டுக்குக் கொண்டுபோய் விடுவார். கன்றுக்குட்டியும் பசுவோடு போய்விடும்' என்ற பெரிய பயம் என் சிறிய உடன் பிறப்புகளுக்கு.

பின்னால் ஏற்படப் போகிற இந்தப் பிரிவு அவர்களுக்குக் கன்றுக்குட்டியின் மெல் பிரீதியையும் மாமனாரின் பேரில் அதிகமான கசப்பையும் உண்டுபண்ணி விட்டது. அவர் ருசித்து மோரைச் சாப்பிடும்போது இந்தச் சின்னஞ்சிறுசுகள் தங்களுடைய பார்வை யாலேயே அவரைக் குத்துவார்கள்; கிள்ளுவார்கள்!

நாற்காலி விவாதத்தில் மாமனாரும் அக்கறை காட்டினார். தமக்கும் ஒரு நாற்காலி செய்ய வேண்டுமென்று பிரியம் இருப்பதாகத் தெரிவித்தார். எங்களுக்கும் ஒரு துணை கிடைத்தது மாதிரி ஆயிற்று.

வேப்ப மரத்தில் செய்வது நல்லது என்றும், அதில் உட்கார்ந்தால் உடம்புக்கு குளிர்ச்சி என்றும், மூலவியாதி கிட்ட நாடாது என்றும் மாமனார் சொன்னார். வேப்பமரத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தும் அப்பா மாமனாரை ஆச்சரியத்தோடு கூடிய திருட்டு முழியால் கவனித்தார். எங்கள் மந்தைப் புஞ்சையில் நீண்ட நாள் நின்று வைரம் பாய்ந்த ஒரு வேப்பமரத்தை வெட்டி ஆறப்போட வேண்டுமென்று முந்தாநாள் தான் எங்கள் பண்ணைக்காரனிடம் அப்பா சொல்லிக்கொண்டு இருந்தார்.

பெத்தண்ணா சொன்னான், "பூவரசங் கட்டையில் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும். அது கண் இறுக்கமுள்ள மரம். நுண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்; உறுதியுங்கூட" என்ற h ன்

அக்கா சொன்னாள், "இதுகளெல்லாம் வெளிர் நிறத்திலுள்ள வைகள். பார்க்கவே சகிக்காது. கொஞ்சநாள் போனால் இதுகள் மேல்; நமக்கு ஒரு வெறுப்பே உண்டாகிவிடும். நான் சொல்லு கிறேன், செங்கரும்பு நிறத்திலோ அல்லது எள்ளுப் பிண்ணாக்கு மாதிரி கறுப்பு நிறத்திலோ இருக்கிற மரத்தில்தான் செய்வது நல்லது; அப்புறம் உங்கள் இஷடம்." பளிச்சென்று எங்கள் கண்களுக்கு முன்னால் கண்ணாடி போல் மின்னும் பளபளப்பான கறுப்பு நிறத்தில் கடைந்தெடுத்த முன்னத்தங் கால்களுடனும், சாய்வுக்கு ஏற்றபடி வளைந்த, சோம்பல் முறிப்பது போலுள்ள பின்னத்தங் கால்களுடனும் ஒரு சுகாசனம் தோன்றி மறைந்தது.

எல்லாருக்குமே அவள் சொன்னது சரி என்று பட்டது. ஆக எங்களுக்கு ஒன்றும், எங்கள் மாமனார் வீட்டுக்கு ஒன்றுமாக இரண்டு நாற்காலிகள் செய்ய உடனே ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டு நாற்காலிகளும் எங்கள் வீட்டில் வந்து இறங்கியபோது அதில் எந்த நாற்காலியை வைத்துக்கொண்டு எந்த நாற்காலியை மாமனார் வீட்டுக்குக் கொடுத்தனுப்புவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒன்றைப் பார்த்தால் மற்றதைப் பார்க்க வேண் டாம். அப்படி ராமர் லெச்சுமணர் மாதிரி இருந்தது. ஒன்றை வைத்துக்கொண்டு மாமனார் வீட்டுக்கு ஒன்றைக் கொடுத்தனுப் பினோம். கொடுத்தனுப்பியதுதான் நல்ல நாற்காலியோ என்று ஒரு சந்தேகம்.

ஒவ்வொருத்தராய் உட்கார்ந்து பார்த்தோம். எழுந்திருக்க மனசே இல்லை. அடுத்தவர்களும் உட்கார்ந்து பார்க்கவேண்டுமே என்பதற் காக எழுந்திருக்க வேண்டியிருந்தது. பெத்தண்ணா உட்கார்ந்து பார்த்தான். ஆ…ஹா என்று ரசித்துச் சொன்னான். இரண்டு கைகளா லும் நாற்காலியின் கைகளைத் தேய்த்தான். சப்பணம்

போட்டு உட்கார்ந்து பார்த்தான். "இதுக்கு ஒரு உறை தைத்துப் போட்டு விட வேணும். இல்லையென்றால் அழுக்காகிவிடும்" என்று அக்கா சொன்னாள்.

குட்டித் தங்கைக்கும் தம்பிப் பயலுக்கும் அடிக்கடி சண்டை வரும், "நீ அப்போப் பிடிச்சி உட்கார்ந்துகிட்டே இருக்கியே? எழுந்திருடா, நான் உக்காரணும் இப்போ" என்று அவனைப் பார்த்துக் கத்துவாள். "ஐயோ, இப்பத்தானே உட்கார்ந்தேன்; பாரம்மா இவளை" என்று சொல்லுவான், அழ ஆரம்பிக்கப் போகும் முகத்தைப் போல் வைத்துக்கொண்டு.

தீ மாதிரி பரவிவிட்டது ஊருக்குள், எங்கள் வீட்டிற்கு நாற்காலி வந்த விஷயம். குழந்தைகளும் பெரியவர்களும் பெருங் கூட்டமாக வந்து வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். சிலர் தடவிப் பார்த்தார்கள். சிலர் உட்கார்ந்தே பார்த்தார்கள். ஒரு கிழவனார் வந்து நாற்காலியைத் தூக்கிப் பார்த்தார். "நல்ல கனம், உறுதியாகச் செய்திருக்கிறான்" என்று தச்சனைப் பாராட்டினார்.

கொஞ்ச நாள் ஆயிற்று.

ஒரு நாள் ராத்திரி ரெண்டு மணி இருக்கும். யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். உள் திண்ணையில் படுத்திருந்த பெத்தண்ணா போய் கதவைத் திறந்தான். ஊருக்குள் யாரோ ஒரு முக்கியமான பிரமுகர் இப்பொழுதுதான் இறந்து போய்விட்டாரென்றும் நாற்காலி வேண்டுமென்றும் கேட்டு எடுத்துக்கொண்டு போனார்கள்.

இறந்துபோன ஆசாமி எங்களுக்கும் வேண்டியவர் ஆனதால் நாங்கள் யாவரும் குடும்பத்தோடு போய் துட்டியில் கலந்துகொண் டோம். துட்டி வீட்டில் போய் பார்த்தால்...? எங்கள் வீட்டு நாற்காலியில் தான் இறந்துபோன அந்தப் 'பிரமுகரை' உட்கார்த்தி வைத்திருந்தார்கள்.

இதற்குமுன் எங்கள் ஊரில் இறந்து போனவர்களைத் தரையில் தான் உட்கார்த்தி வைப்பார்கள். உரலைப் படுக்கவைத்து அது உருண்டுவிடாமல் அண்டை கொடுத்து, ஒரு கோணிச் சாக்கில் வரகு வைக்கோலைத் திணித்து, அதைப் பாட்டுவசத்தில் உரலின் மேல் சாத்தி, அந்தச் சாய்மான திண்டுவில் இறந்துபோனவரை, சாய்ந்து உட்கார்ந்திருப்பதுபோல் வைப்பார்கள்.

இந்த நாற்காலியில் உட்காரவைக்கும் புதுமோஸ்தரை எங்கள் ஊர்க்காரர்கள் எந்த ஊரில் போய் பார்த்துவிட்டு வந்தார்களோ? எங்கள் வீட்டு நாற்காலிக்குப் பிடித்தது வினை. (தரை டிக்கெட்டிலிருந்து நாற்காலிக்கு வந்துவிட்டார்கள்)

அந்தவீட்டு 'விசேஷம்' முடிந்து நாற்காலியை எங்கள் வீட்டு முன்தொழுவில் கொண்டுவந்து போட்டுவிட்டு போனார்கள். அந்த நாற்காலியைப் பார்க்கவே எங்கள் வீட்டுக் குழந்தைகள் பயப்பட்டன. வேலைக்காரனை கூப்பிட்டு அதைக் கிணற்றடிக்குக் கொண்டுபோய் வைக்கோலால் தேய்த்துத் தேய்த்துப் பெரிய வாளிக்கு ஒரு பதினைந்து

வாளி தண்ணீர்விட்டுக் கழுவி, திரும்பவும் கொண்டுவந்து முன் தொழுவத்தில் போட்டோம். பலநாள் ஆகியும் அதில் உட்கார ஒருவருக்கும் தைரியம் இல்லை. அதை எப்படித் திரும்பவும் பழக்கத்துக்குக் கொண்டு வருவது என்றும் தெரிய வில்லை.

ஒரு நாள் நல்ல வேளையாக எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். அந்த நாற்காலியை எடுத்துக்கொண்டு வந்து அவருக்குப் போடச் சொன்னோம். அவரோ, "பரவாயில்லை, நான் சும்மா இப்படி உட்கார்ந்து கொள்கிறேன்" என்று ஜமக்காளத்தைப் பார்த்துப் போனார். எங்களுக்கு ஒரே பயம், அவர் எங்கே கீழே உட்கார்ந்து விடுவாரோ என்று. குடும்பத்தோடு அவரை வற்புறுத்தி நாற்காலி யில் உட்கார வைத்தோம். அவர் உட்கார்ந்த உடனே சின்னத் தம்பியும் குட்டித் தங்கையும் புழக்கடைத் தோட்டத்தைப் பார்த்து ஓடினார்கள். மத்தியில் வந்து நாற்காலியில் உட்கார்ந்தவருக்கு என்ன ஆச்சு என்று எட்டியும் பார்த்துக் கொள்வார்கள்!

மறுநாள் எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு உள்ளூர்க் கிழவனார் தற்செயலாகவே வந்து நாற்காலியில் உட்கார்ந்து எங்களுக்கு மேலும் ஆறுதல் தந்தார். ('இப்போதே அவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்து பார்த்துக் கொள்கிறார்!' என்று பெத்தண்ணா என் காதில் மட்டும் படும்படியாகச் சொன்னான்.)

இப்படியாக, அந்த நாற்காலியைப் 'பழக்கி'னோம். முதலில் வீட்டிலுள்ள பெரியவர்கள் உட்கார்ந்தோம். குழந்தைகளுக்கு இன்னும் பயம் தெளியவில்லை. "கொஞ்சம் உட்காரேண்டா நீ முதலில்" என்று கெஞ்சுவாள், குட்டித் தங்கை தம்பிப் பயலைப் பார்த்து. "ஏன் நீ உட்காருவதுதானே?" என்பான் அவன் வெடுக்கென்று.

எங்கள் வீட்டுக்கு வந்திருந்த பக்கத்துத் தெரு சுகந்தி தன்னுடைய ஒரு வயசுத் தம்பிப் பாப்பாவைக் கொண்டுவந்து உட்காரவைத்தாள், அந்த நாற்காலியில். அதிலிருந்துதான் எங்கள் வீட்டுக் குழந்தைகளும் பயமில்லாமல் உட்கார ஆரம்பித்தார்கள்.

திரும்பவும் ஒரு நாள் ராத்திரி, யாரோ இறந்துபோய்விட்டார்கள் என்று நாற்காலியை தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் இப்படி அடிக்கடி நடந்தது.

நாற்காலியை வருத்தத்தோடுதான் கொடுத்தனுப்புவோம். வந்து கேட்கும் இழவு வீட்டுக்காரர்கள் எங்கள் துக்கத்தை வேறு மாதிரி அர்த்தப்படுத்திக் கொள்வார்கள். தங்களவர்கள் இறந்து போன செய்தியைக் கேட்டுத்தான் இவர்கள் வருத்தம் அடைகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்துக்கொள்வார்கள்!

தூக்கம் கலைந்த எரிச்சல் வேறு. "செத்துத் தொலைகிறவர்கள் ஏன்தான் இப்படி அகாலத்தில் சாகிறார்களோ தெரியவில்லை?" என்று அக்கா ஒருநாள் சொன்னாள்.

"நல்ல நாற்காலி செய்தோமடா நாம்; செத்துப்போன ஊர்க் காரன்கள் உட்காருவதற்காக, சே!" என்று அலுத்துக்கொண்டான் அண்ணன்.

"நாற்காலி செய்யக் கொடுத்த நேரப் பலன்" என்றாள் அத்தை.

பெத்தண்ணா ஒரு நாள் ஒரு யோசனை செய்தான். அதை நாங்கள் இருவர் மட்டிலும் தனியாக வைத்துக் கொண்டோம்.

ஒரு நாள் அம்மா என்னை ஏதோ காரியமாக மாமனாரின் வீட்டுக்குப் போய்வரும்படி சொன்னாள்.

நான் அவருடைய வீட்டுக்குள் நுழைந்தபோது மாமனார் நாற் காலியில் அமர்க்களமாய் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண் டிருந்தார். அவர் வெற்றிலை போடுவதைப் பார்த்துக்கொண் டிருப்பதே சுவாராஸ்யமான பொழுதுபோக்கு. தினமும் தேய்த்துத் துடைத்த தங்க நிறத்தில் பளபளவென்றிருக்கும் சாண் அகலம், முழ நீளம், நாலு விரல் உயரம் கொண்ட வெற்றிலைச் செல்லத்தை, 'நோகுமோ நோகாதோ' என்று அவ்வளவு மெல்லப் பக்குவ மாகத் திறந்து, பூஜைப் பெட்டியிலிருந்து சாமான்களை எடுத்து வைக்கிற பதனத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வெளியில் வைப்பார். வெற்றிலையை நன்றாகத் துடைப்பாரே தவிர, காம்பு களைக் கிள்ளும் வழக்கம் அவரிடம் கிடையாது. (அவ்வளவு சிக்கனம்!) சில சமயம் மொறசல் வெற்றிலை அகப்பட்டுவிட்டால் மட்டும் இலையின் முதுகிலுள்ள நரம்புகளை உரிப்பார். அப்பொழுது நமக்கு, "முத்தப்பனைப் பிடிச்சு முதுகுத்தோலை உறிச்சி பச்சை வெண்ணையைத் தடவி...." என்ற வெற்றிலையைப் பற்றிய அழிப் பாங்கதைப் பாடல் ஞாபகத்துக்கு வரும்.

களிப்பாக்கை எடுத்து முதலில் முகர்ந்து பார்ப்பார். அப்படி முகர்ந்து பார்த்துவிட்டால் 'சொக்கு' ஏற்படாதாம். அடுத்து அந்தப் பாக்கை ஊதுவார்; அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத பாக்குப் புழுக்கள் போகவேண்டாமா அதற்காக, ஆரம்பத்தில் மெதுவாக ஆரம்பிக்கும் இந்த முகர்ந்து பார்த்தலும் ஊதலும் வரவர வேகமாகி ஒரு நாலைந்து தடவை மூக்குக்கும் வாய்க்குமாக, கை மேலும் கீழும் உம் உஷ், உம் உஷ் என்ற சத்தத்துடன் சுத்தமாகி டபக்கென்று வாய்க்குள் சென்றுவிடும்.

ஒருவர் உபயோகிக்கும் அவருடைய சுண்ணாம்பு டப்பியைப் பார்த்தாலே அவருடைய சுத்தத்தைப் பற்றித் தெரிந்துவிடும். மாமனார் இதிலெல்லாம் மன்னன். விரலில் மிஞ்சிய சுண்ணாம்பைக் கூட வீணாக மற்றப் பொருள்களின் மேல் தடவமாட்டார். அவருடைய சுண்ணாம்பு டப்பியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம். பதினைந்து வருஷத்துக்கு முன் வாங்கிய எவரெடி டார்ச் லைட் இன்னும் புத்தம் புதுசாக இப்போதுதான் கடையி லிருந்து வாங்கிக்கொண்டு வந்ததோ என்று நினைக்கும்படியாக உபயோகத்தில் இருக்கிறது அவரிடம். அதோடு சேர்த்து வாங்கிய எங்கள் வீட்டு டார்ச் லைட் சொட்டு விழுந்து நெளிசலாகி மஞ்சள் கலரில் பார்க்கப் பரிதாபமாக, சாகப் போகும் நீண்ட நாள் நோயாளி யைப் போல் காட்சியளிக்கிறது.

நாற்காலியை அவர் தவிர அந்த வீட்டில் யாரும் உபயோகிக்கக் கூடாது. காலையில் எழுந்திருந்ததும் முதல் காரியமாக அதைத் துடைத்து வைப்பார். ஓர் இடத்திலிருந்து அதை இன்னோர் இடத் துக்குத் தாமே மெதுவாக எடுத்துக்கொண்டு போய்ச்

சத்தமில்லாமல் தண்ணீர் நிறைந்த மண்பானையை இறக்கி வைப்பது போல் அவ்வளவு மெதுவாக வைப்பார்.

மாமனார் என்னைக் கண்டதும், "வரவேணும் மாப்பிள்ளைவாள்" என்று கூறி வரவேற்றார். "கொஞ்சம் வெற்றிலை போடலாமோ?" என்று என்னைக் கேட்டுவிட்டுப் பதிலும் அவரே சொன்னார்: "படிக்கிற பிள்ளை வெற்றிலை போட்டால் கோழி முட்டும்!"

அம்மா சொல்லியனுப்பிய தகவலை அவரிடம் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

ராத்திரி அகாலத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. வீட்டில் எல்லாம் அயர்ந்த தூக்கம். நான் பெத்தண்ணாவை எழுப்பினேன்.

நாற்காலிக்காக வந்த ஒரு இழவு வீட்டுக்காரர்கள் வெளியில் நின்றுக்கொண்டிருந்தார்கள். பெத்தண்ணா அவர்களைத் தெருப்பக்கம் அழைத்துக்கொண்டு போனான். நானும் போனேன். வந்த விஷ யத்தை அவர்கள் சொல்லி முடித்ததும் பெத்தண்ணா அவர்களிடம் நிதானமாகப் பதில் சொன்னான்.

"நாற்காலிதானே? அது எங்கள் மாமனார் வீட்டில் இருக்கிறது அங்கே போய்க் கேளுங்கள், தருவார். நாங்கள் சொன்னதாகச் சொல்ல வேண்டாம். இப்படிக் காரியங்களுக்கு இல்லை என்று சொல்ல முடியுமா? அங்கே கிடைக்காவிட்டால் நேரே இங்கே வாருங்கள்; அப்புறம் பார்த்துக்கொள்வோம்" என்று பேசி அவர் களை அனுப்பிவிட்டு, வீட்டுக்குள் வந்து இருவரும் சப்தமில்லாமல் சிரித்தோம்.

அப்பா தூக்கச் சடைவோடு படுக்கையில் புரண்டுகொண்டே, " யார் வந்தது?" என்று கேட்டார்.

"வேலை என்ன? பிணையலுக்கு மாடுகள் வேணுமாம்" என்றான் பெத்தண்ணா.

துப்பட்டியை இழுத்துப் போர்த்திக்கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டார் அப்பா.

இப்பொழுது மாமனார் காட்டில் பெய்து கொண்டிருந்தது மழை!

ரொம்ப நாள் கழித்து, நான் மாமனாரின் வீட்டுக்கு ஒரு நாள் போனபோது அவர் தரையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். வழக்கமான சிரிப்புடனும் பேச்சுடனும் என்னை வரவேற்றார்.

"என்ன இப்படிக் கீழே? நாற்காலி எங்கே?" சுற்று முற்றும் கவனித்தேன். வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே என்னை ஆழ்ந்து பார்த்துப் புன்னகை செய்தார். பின்பு அமைதியாக, "அந்தக் காரியத்துக்கே அந்த நாற்காலியை வைத்துக் கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன். அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே?" என்றார்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வரும்போது இந்தச் செய்தியைச் சொல்லப் பெத்தண்ணா விடம் வேகமாக விரைந்தேன். ஆனால் வரவர என்னுடைய வேகம் குறைந்து தன் நடையாயிற்று.

'நாற்காலி இல்லாததும் ஒரு வீடா?' எங்கள் வீட்டில் இப்படித் திடீரென்று எல்லோருக்கும் தோன்றிவிட்டது. அவ்வளவுதான்; குடும்ப 'அஜெண்டா'வில் வைக்கப்பட்டு இந்த விஷயத்தில் விவாதம் தொடங்கியது.

முதல் நாள் எங்கள் வீட்டுக்கு ஒரு குடும்ப நண்பர் விஜயம் செய்தார். அவர் ஒரு சப்ஜட்ஜ். வந்தவர் நம்மைப் போல் வேட்டி சட்டை போட்டுக்கொண்டு வரப்படாதோ? சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார். எங்கள் வீட்டில் முக்காலிதான் உண்டு. அதன் உயரமே முக்கால் அடிதான். எங்கள் பாட்டி தயிர் கடையும்போது அதிலேதான் உட்கார்ந்து கொள்வாள், அவளுக்கு பாரியான உடம்பு. எங்கள் தாத்தா தச்சனிடம் சொல்லி அதைக் கொஞ்சம் அகலமாகவே செய்யச் சொல்லியிருந்தார்.

சப்ஜட்ஜுக்கும் கொஞ்சம் பாரியான உடம்புதான். வேறு ஆசனங்கள் எங்கள் வீட்டில் இல்லாததால் அதைத்தான் அவருக்கு கொண்டுவந்து போட்டோம். அவர் அதன் விளிம்பில் ஒரு கையை ஊன்றிக்கொண்டு உட்காரப் போனார். இந்த முக்காலியில் ஒரு சனியன் என்னவென்ற h ல் அதன் கால்களுக்கு நேராக இல்லாமல் பக்கத்தில் பாரம் அமுங்கினால் தட்டிவிடும்! நாங்கள் எத்தனையோ தரம் உறியில் வைத்திருக்கும் நெய்யைத் திருட்டுத்தனமாக எடுத்துத் தின்பதற்கு முக்காலி போட்டு ஏறும் போது அஜாக்கிரதையினால் பலதரம் கீழே விழுந்திருக்கிறோம். பாவம், இந்த சப்ஜட்ஜும் இப்பொழுது கீழே விழப்போகிறாரே என்று நினைத்து, அவரை எச்சரிக்கை செய்ய நாங்கள் வாயைத் திறப்பதற்கும் அவர் தொபுகடீர் என்று கீழே விழுந்து உருளுவதற்கும் சரியாக இருந்தது. நான், என் தம்பி, கடைக்குட்டித் தங்கை மூவருக்கும் சிரிப்பு தாங்க முடியவில்லை. புழக்கடைத் தோட்டத்தைப் பார்க்க ஓடினோம். சிரிப்பு அமரும்போதெல்லாம் என் தங்கை அந்த சப்ஜட்ஜ் மாதிரியே கையை ஊன்றிக் கீழே உருண்டு விழுந்து காண்பிப்பாள். பின்னும் கொஞ்சம் எங்கள் சிரிப்பு நீளும்.

எங்கள் சிரிப்புக்கெல்லாம் முக்கிய காரணம் அவர் கீழே விழும் போது பார்த்தும் எங்கள் பெற்றோர்கள், தாங்கள் விருந்தாளிக்கு முன்னாள் சிரித்துவிடக்கூடாதே என்று வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டதை நினைத்துத்தான்!

ஆக, நாங்கள் எல்லாருக்கும் சேர்த்துச் சிரித்துவிட்டு வீட்டுக்குள் பூனைபோல் அடி எடுத்து வைத்து நுழைந்து பார்த்தபோது அந்தப் பாரியான உடம்புள்ள விருந்தாளியை காணவில்லை. அந்த முக்காலியையும் காணவில்லை. 'அதை அவர் கையோடு கொண்டு போயிருப்பாரோ?' என்று என் தங்கை என்னிடம் கேட்டாள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே, எங்கள் வீட்டில் எப்படியாவது ஒரு நாற்காலி செய்துவிடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இந்த நாற்காலி செய்வதில் ஒரு

நடைமுறைக் கஷ்டம் என்ன என்றால், முதலில் பார்வைக்கு எங்கள் ஊரில் ஒரு நாற்காலி கூடக் கிடையாது; அதோடு நாற்காலி செய்யத் தெரிந்த தச்சனும் இல்லை.

'நகரத்தில் செய்து விற்கும் நாற்காலியை வாங்கிக்கொண்டு வந்துவிட்டால் போச்சு' என்று எங்கள் பெத்தண்ணா ஒரு யோசனையை முன் வைத்தான். அது உறுதியாக இராது என்று நிராகரித்துவிட்டார் எங்கள் அப்பா.

பக்கத்தில் ஒரு ஊரில் கெட்டிக்காரத் தச்சன் ஒருவன் இருப்பதாகவும் அவன் செய்யாத நாற்காலிகளே கிடையாது என்றும், கவர்னரே வந்து அவன் செய்த நாற்காலிகளைப் பார்த்து மெச்சி இருக்கிறார் என்றும் எங்கள் அத்தை சொன்னாள்.

அத்தை சொன்னதிலுள்ள இரண்டாவது வாக்கியத்தைக் கேட்டதும் அம்மா அவளை, 'ஆமா, இவ ரொம்பக் கண்டா' என்கிற மாதிரிப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

அப்பா வேலையாளைக் கூப்பிட்டு, அந்தத் தச்சனுடைய ஊருக்கு அவனை அனுப்பிவிட்டு எங்களோடு வந்து உட்கார்ந்தார். இப்போது, நாற்காலியை எந்த மரத்தில் செய்யலாம் என்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"தேக்கு மரத்தில் தான் செய்ய வேண்டும். அதுதான் தூக்க வைக்க லேசாகவும் அதே சமயத்தில் உறுதியாகவும் இருக்கும்" என்றாள் பாட்டி, தன்னுடைய நீட்டிய கால்களைத் தடவி விட்டுக் கொண்டே. (பாட்டிக்குத் தன்னுடைய கால்களின் மீது மிகுந்த பிரியம். சதா அவற்றைத் தடவிவிட்டுக் கொண்டே இருப்பாள்!)

இந்தச் சமயத்தில் எங்கள் தாய் மாமனார் எங்கள் வீட்டுக்குள் வந்தார். எங்கள் பெத்தண்ணா ஓடிபோய் அந்த முக்காலியைத் தூக்கிக்கொண்டு வந்தான். சிறிதுநேரம் வீடே கொல்லென்று சிரித்து ஓய்ந்தது.

மாமனார் எங்கள் வீட்டுக்கு வந்தால் அவருக்கென்று உட்காரு வதற்கு அவரே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார். தலை போனாலும் அந்த இடத்தில்தான் அவர் உட்காருவார். பட்டக சாலையின் தெற்கு ஓரத்திலுள்ள சுவரை ஒட்டியுள்ள ஒரு தூணில் சாய்ந்துதான் உட்காருவார். உட்கார்ந்ததும் முதல் காரியமாகத் தம் குடுமியை அவிழ்த்து ஒருதரம் தட்டித் தலையைச் சொறிந்து கொடுத்துத் திரும்பவும் குடுமியை இறுக்கிக் கட்டிக்கொண்டு விடுவார். இது அவர் தவறாமல் செய்கிற காரியம். இப்படிச் செய்து விட்டு அவர் தம்மையொட்டியுள்ள தரையைச் சுற்றிலும் பார்ப் பார். "தலையிலிருந்து துட்டு ஒன்றும் கிழே விழுந்ததாகத் தெரிய வில்லை" என்று அண்ணா அவரைப் பார்த்து எக்கண்டமாகச் சொல்லிச் சிரிப்பான்.

அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இப்படிக் காகித பாணங்களினால் துளைத்தெடுக்கப்படுவார்! 'சம்பந்திக்காரர்கள்; நீங்கள் பார்த்து என்னைக் கேலி செய்யாவிட்டால் வேறு யார் செய்வார்கள்' என்கிற மாதிரி திறக்காமல்

கல்லுப்பிள்ளையார் மாதிரி அவர் பாட்டுக்கு உட்கார்ந்து புன்னகையோடு இருப்பார். எங்களுடைய ஏடாகிப் பேச்சுக்களின் காரம் அதிகமாகும்போது மட்டும் அம்மா எங்களைப் பார்த்து ஒரு பொய் அதட்டுப் போடு வாள். அந்த அதட்டிடு வாக்கியத்தின் கடைசி வார்த்தை "கழுதைகளா" என்று முடியும்.

மாமனார் வந்து உட்கார்ந்ததும், அம்மா எழுந்திருந்து அடுப்படிக்கு அவசரமாய்ப் போனாள். அவளைத் தொடர்ந்து ஆட்டுக்குட்டியைப் போல் அப்பாவும் பின்னால் போனார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஆளோடி வழியாக அம்மா கையில் வெள்ளித் தம்ளரில் காயமிட்ட மோரை எடுத்துக்கொண்டு நடந்து வர, அம்மாவுக்குப் பின்னால் அப்பா அவளுக்குத் தெரியாமல் எங்களுக்கு மட்டும் தெரியும்படி வலிப்புக் காட்டிக்கொண்டே அவள் நடந்துவருகிற மாதிரியே வெறுங்கையைத் தம்ளர் ஏந்துகிற மாதிரி பிடித்துக்கொண்டு நடந்து வந்தார்! அவர் அப்படி நடந்து வந்தது, 'அவா அண்ணா வந்திருக்கானாம்; ரொம்ப அக்கறையா மோர் கொண்டுபோய்க் கொடுக்கிறதைப் பாரு' என்று சொல்லு கிறது மாதிரி இருந்தது.

மோரும் பெருங்காயத்தின் மணமும், நாங்களும் இப்பொழுதே மோர் சாப்பிடணும் போல் இருந்தது.

மாமனார் பெரும்பாலும் எங்கள் வீட்டுக்கு வருகிறது மோர் சாப்பிடத்தான் என்று நினைப்போம். அந்தப் பசுமாட்டின் மோர் அவ்வளவு திவ்வியமாய் இருக்கும். அதோடு எங்கள் மாமனார் எங்கள் ஊரிலேயே பெரிய கஞ்சாம்பத்தி. அதாவது, ஈயாத லோபி என்று நினைப்பு எங்களுக்கு.

இந்தப் பசுவை அவர் தம்முடைய தங்கைக்காகக் கன்னாவரம் போய்த் தாமே நேராக வாங்கிக்கொண்டு வந்தார். இந்தக் காராம்பசுவின் கன்றுக்குட்டியின் பேரில் என் தம்பிக்கும் குட்டித் தங்கைக்கும் தணியாத ஆசை. வீட்டைவிட்டுப் போகும்போதும் வீட்டுக்குள் வரும்போதும் மாமனார் பசுவை ஒரு சுற்றிச் சுற்றி வந்து அதைத் தடவிக்கொடுத்து (தன் கண்ணே எங்கே பட்டு விடுமோ என்ற பயம்!) இரண்டு வார்த்தை சிக்கனமாகப் புகழ்ந்து விட்டுத்தான் போவார். 'பால் வற்றியதும் பசுவை அவர் தம்மு டைய வீட்டுக்குக் கொண்டுபோய் விடுவார். கன்றுக்குட்டியும் பசுவோடு போய்விடும்' என்ற பெரிய பயம் என் சிறிய உடன் பிறப்புகளுக்கு.

பின்னால் ஏற்படப் போகிற இந்தப் பிரிவு அவர்களுக்குக் கன்றுக்குட்டியின் மெல் பிரீதியையும் மாமனாரின் பேரில் அதிகமான கசப்பையும் உண்டுபண்ணி விட்டது. அவர் ருசித்து மோரைச் சாப்பிடும்போது இந்தச் சின்னஞ்சிறுசுகள் தங்களுடைய பார்வை யாலேயே அவரைக் குத்துவார்கள்; கிள்ளுவார்கள்!

நாற்காலி விவாதத்தில் மாமனாரும் அக்கறை காட்டினார். தமக்கும் ஒரு நாற்காலி செய்ய வேண்டுமென்று பிரியம் இருப்பதாகத் தெரிவித்தார். எங்களுக்கும் ஒரு துணை கிடைத்தது மாதிரி ஆயிற்று.

வேப்ப மரத்தில் செய்வது நல்லது என்றும், அதில் உட்கார்ந்தால் உடம்புக்கு குளிர்ச்சி என்றும், மூலவியாதி கிட்ட நாடாது என்றும் மாமனார் சொன்னார். வேப்பமரத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தும் அப்பா மாமனாரை ஆச்சரியத்தோடு கூடிய திருட்டு முழியால் கவனித்தார். எங்கள் மந்தைப் புஞ்சையில் நீண்ட நாள் நின்று வைரம் பாய்ந்த ஒரு வேப்பமரத்தை வெட்டி ஆறப்போட வேண்டுமென்று முந்தாநாள் தான் எங்கள் பண்ணைக்காரனிடம் அப்பா சொல்லிக்கொண்டு இருந்தார்.

பெத்தண்ணா சொன்னான், "பூவரசங் கட்டையில் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும். அது கண் இறுக்கமுள்ள மரம். நுண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்; உறுதியுங்கூட" என்ற h ன்

அக்கா சொன்னாள், "இதுகளெல்லாம் வெளிர் நிறத்திலுள்ள வைகள். பார்க்கவே சகிக்காது. கொஞ்சநாள் போனால் இதுகள் மேல்; நமக்கு ஒரு வெறுப்பே உண்டாகிவிடும். நான் சொல்லு கிறேன், செங்கரும்பு நிறத்திலோ அல்லது எள்ளுப் பிண்ணாக்கு மாதிரி கறுப்பு நிறத்திலோ இருக்கிற மரத்தில்தான் செய்வது நல்லது; அப்புறம் உங்கள் இஷ்டம்." பளிச்சென்று எங்கள் கண்களுக்கு முன்னால் கண்ணாடி போல் மின்னும் பளபளப்பான கறுப்பு நிறத்தில் கடைந்தெடுத்த முன்னத்தங் கால்களுடனும், சாய்வுக்கு ஏற்றபடி வளைந்த, சோம்பல் முறிப்பது போலுள்ள பின்னத்தங் கால்களுடனும் ஒரு சுகாசனம் தோன்றி மறைந்தது.

எல்லாருக்குமே அவள் சொன்னது சரி என்று பட்டது. ஆக எங்களுக்கு ஒன்றும், எங்கள் மாமனார் வீட்டுக்கு ஒன்றுமாக இரண்டு நாற்காலிகள் செய்ய உடனே ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டு நாற்காலிகளும் எங்கள் வீட்டில் வந்து இறங்கியபோது அதில் எந்த நாற்காலியை வைத்துக்கொண்டு எந்த நாற்காலியை மாமனார் வீட்டுக்குக் கொடுத்தனுப்புவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒன்றைப் பார்த்தால் மற்றதைப் பார்க்க வேண் டாம். அப்படி ராமர் லெச்சுமணர் மாதிரி இருந்தது. ஒன்றை வைத்துக்கொண்டு மாமனார் வீட்டுக்கு ஒன்றைக் கொடுத்தனுப் பினோம். கொடுத்தனுப்பியதுதான் நல்ல நாற்காலியோ என்று ஒரு சந்தேகம்.

ஒவ்வொருத்தராய் உட்கார்ந்து பார்த்தோம். எழுந்திருக்க மனசே இல்லை. அடுத்தவர்களும் உட்கார்ந்து பார்க்கவேண்டுமே என்பதற் காக எழுந்திருக்க வேண்டியிருந்தது. பெத்தண்ணா உட்கார்ந்து பார்த்தான். ஆ...ஹா என்று ரசித்துச் சொன்னான். இரண்டு கைகளா லும் நாற்காலியின் கைகளைத் தேய்த்தான். சப்பணம்

போட்டு உட்கார்ந்து பார்த்தான். "இதுக்கு ஒரு உறை தைத்துப் போட்டு விட வேணும். இல்லையென்றால் அழுக்காகிவிடும்" என்று அக்கா சொன்னாள்.

குட்டித் தங்கைக்கும் தம்பிப் பயலுக்கும் அடிக்கடி சண்டை வரும், "நீ அப்போப் பிடிச்சி உட்கார்ந்துகிட்டே இருக்கியே? எழுந்திருடா, நான் உக்காரணும் இப்போ" என்று அவனைப் பார்த்துக் கத்துவாள். "ஐயோ, இப்பத்தானே உட்கார்ந்தேன்; பாரம்மா இவளை" என்று சொல்லுவான், அழ ஆரம்பிக்கப் போகும் முகத்தைப் போல் வைத்துக்கொண்டு.

தீ மாதிரி பரவிவிட்டது ஊருக்குள், எங்கள் வீட்டிற்கு நாற்காலி வந்த விஷயம். குழந்தைகளும் பெரியவர்களும் பெருங் கூட்டமாக வந்து வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். சிலர் தடவிப் பார்த்தார்கள். சிலர் உட்கார்ந்தே பார்த்தார்கள். ஒரு கிழவனார் வந்து நாற்காலியைத் தூக்கிப் பார்த்தார். "நல்ல கனம், உறுதியாகச் செய்திருக்கிறான்" என்று தச்சனைப் பாராட்டினார்.

கொஞ்ச நாள் ஆயிற்று.

ஒரு நாள் ராத்திரி ரெண்டு மணி இருக்கும். யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். உள் திண்ணையில் படுத்திருந்த பெத்தண்ணா போய் கதவைத் திறந்தான். ஊருக்குள் யாரோ ஒரு முக்கியமான பிரமுகர் இப்பொழுதுதான் இறந்து போய்விட்டாரென்றும் நாற்காலி வேண்டுமென்றும் கேட்டு எடுத்துக்கொண்டு போனார்கள்.

இறந்துபோன ஆசாமி எங்களுக்கும் வேண்டியவர் ஆனதால் நாங்கள் யாவரும் குடும்பத்தோடு போய் துட்டியில் கலந்துகொண் டோம். துட்டி வீட்டில் போய் பார்த்தால்...? எங்கள் வீட்டு நாற்காலியில் தான் இறந்துபோன அந்தப் 'பிரமுகரை' உட்கார்த்தி வைத்திருந்தார்கள்.

இதற்குமுன் எங்கள் ஊரில் இறந்து போனவர்களைத் தரையில் தான் உட்கார்த்தி வைப்பார்கள். உரலைப் படுக்கவைத்து அது உருண்டுவிடாமல் அண்டை கொடுத்து, ஒரு கோணிச் சாக்கில் வரகு வைக்கோலைத் திணித்து, அதைப் பாட்டுவசத்தில் உரலின் மேல் சாத்தி, அந்தச் சாய்மான திண்டுவில் இறந்துபோனவரை, சாய்ந்து உட்கார்ந்திருப்பதுபோல் வைப்பார்கள்.

இந்த நாற்காலியில் உட்காரவைக்கும் புதுமோஸ்தரை எங்கள் ஊர்க்காரர்கள் எந்த ஊரில் போய் பார்த்துவிட்டு வந்தார்களோ? எங்கள் வீட்டு நாற்காலிக்குப் பிடித்தது வினை. (தரை டிக்கெட்டிலிருந்து நாற்காலிக்கு வந்துவிட்டார்கள்)

அந்தவீட்டு 'விசேஷம்' முடிந்து நாற்காலியை எங்கள் வீட்டு முன்தொழுவில் கொண்டுவந்து போட்டுவிட்டு போனார்கள். அந்த நாற்காலியைப் பார்க்கவே எங்கள் வீட்டுக் குழந்தைகள் பயப்பட்டன. வேலைக்காரனை கூப்பிட்டு அதைக் கிணற்றடிக்குக் கொண்டுபோய் வைக்கோலால் தேய்த்துத் தேய்த்துப் பெரிய வாளிக்கு ஒரு பதினைந்து

வாளி தண்ணீர்விட்டுக் கழுவி, திரும்பவும் கொண்டுவந்து முன் தொழுவத்தில் போட்டோம். பலநாள் ஆகியும் அதில் உட்கார ஒருவருக்கும் தைரியம் இல்லை. அதை எப்படித் திரும்பவும் பழக்கத்துக்குக் கொண்டு வருவது என்றும் தெரிய வில்லை.

ஒரு நாள் நல்ல வேளையாக எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். அந்த நாற்காலியை எடுத்துக்கொண்டு வந்து அவருக்குப் போடச் சொன்னோம். அவரோ, "பரவாயில்லை, நான் சும்மா இப்படி உட்கார்ந்து கொள்கிறேன்" என்று ஜமக்காளத்தைப் பார்த்துப் போனார். எங்களுக்கு ஒரே பயம், அவர் எங்கே கீழே உட்கார்ந்து விடுவாரோ என்று. குடும்பத்தோடு அவரை வற்புறுத்தி நாற்காலி யில் உட்கார வைத்தோம். அவர் உட்கார்ந்த உடனே சின்னத் தம்பியும் குட்டித் தங்கையும் புழக்கடைத் தோட்டத்தைப் பார்த்து ஓடினார்கள். மத்தியில் வந்து நாற்காலியில் உட்கார்ந்தவருக்கு என்ன ஆச்சு என்று எட்டியும் பார்த்துக் கொள்வார்கள்!

மறுநாள் எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு உள்ளூர்க் கிழவனார் தற்செயலாகவே வந்து நாற்காலியில் உட்கார்ந்து எங்களுக்கு மேலும் ஆறுதல் தந்தார். ('இப்போதே அவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்து பார்த்துக் கொள்கிறார்!' என்று பெத்தண்ணா என் காதில் மட்டும் படும்படியாகச் சொன்னான்.)

இப்படியாக, அந்த நாற்காலியைப் 'பழக்கி'னோம். முதலில் வீட்டிலுள்ள பெரியவர்கள் உட்கார்ந்தோம். குழந்தைகளுக்கு இன்னும் பயம் தெளியவில்லை. "கொஞ்சம் உட்காரேண்டா நீ முதலில்" என்று கெஞ்சுவாள், குட்டித் தங்கை தம்பிப் பயலைப் பார்த்து. "ஏன் நீ உட்காருவதுதானே?" என்பான் அவன் வெடுக்கென்று.

எங்கள் வீட்டுக்கு வந்திருந்த பக்கத்துத் தெரு சுகந்தி தன்னுடைய ஒரு வயசுத் தம்பிப் பாப்பாவைக் கொண்டுவந்து உட்காரவைத்தாள், அந்த நாற்காலியில். அதிலிருந்துதான் எங்கள் வீட்டுக் குழந்தைகளும் பயமில்லாமல் உட்கார ஆரம்பித்தார்கள்.

திரும்பவும் ஒரு நாள் ராத்திரி, யாரோ இறந்துபோய்விட்டார்கள் என்று நாற்காலியை தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் இப்படி அடிக்கடி நடந்தது.

நாற்காலியை வருத்தத்தோடுதான் கொடுத்தனுப்புவோம். வந்து கேட்கும் இழவு வீட்டுக்காரர்கள் எங்கள் துக்கத்தை வேறு மாதிரி அர்த்தப்படுத்திக் கொள்வார்கள். தங்களவர்கள் இறந்து போன செய்தியைக் கேட்டுத்தான் இவர்கள் வருத்தம் அடைகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்துக்கொள்வார்கள்!

தூக்கம் கலைந்த எரிச்சல் வேறு. "செத்துத் தொலைகிறவர்கள் ஏன்தான் இப்படி அகாலத்தில் சாகிறார்களோ தெரியவில்லை?" என்று அக்கா ஒருநாள் சொன்னாள்.

"நல்ல நாற்காலி செய்தோமடா நாம்; செத்துப்போன ஊர்க் காரன்கள் உட்காருவதற்காக, சே!" என்று அலுத்துக்கொண்டான் அண்ணன்.

"நாற்காலி செய்யக் கொடுத்த நேரப் பலன்" என்றாள் அத்தை.

பெத்தண்ணா ஒரு நாள் ஒரு யோசனை செய்தான். அதை நாங்கள் இருவர் மட்டிலும் தனியாக வைத்துக் கொண்டோம்.

ஒரு நாள் அம்மா என்னை ஏதோ காரியமாக மாமனாரின் வீட்டுக்குப் போய்வரும்படி சொன்னாள்.

நான் அவருடைய வீட்டுக்குள் நுழைந்தபோது மாமனார் நாற் காலியில் அமர்க்களமாய் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண் டிருந்தார். அவர் வெற்றிலை போடுவதைப் பார்த்துக்கொண் டிருப்பதே சுவாராஸ்யமான பொழுதுபோக்கு. தினமும் தேய்த்துத் துடைத்த தங்க நிறத்தில் பளபளவென்றிருக்கும் சாண் அகலம், முழ நீளம், நாலு விரல் உயரம் கொண்ட வெற்றிலைச் செல்லத்தை, 'நோகுமோ நோகாதோ' என்று அவ்வளவு மெல்லப் பக்குவ மாகத் திறந்து, பூஜைப் பெட்டியிலிருந்து சாமான்களை எடுத்து வைக்கிற பதனத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வெளியில் வைப்பார். வெற்றிலையை நன்றாகத் துடைப்பாரே தவிர, காம்பு களைக் கிள்ளும் வழக்கம் அவரிடம் கிடையாது. (அவ்வளவு சிக்கனம்!) சில சமயம் மொறசல் வெற்றிலை அகப்பட்டுவிட்டால் மட்டும் இலையின் முதுகிலுள்ள நரம்புகளை உரிப்பார். அப்பொழுது நமக்கு, "முத்தப்பனைப் பிடிச்சு முதுகுத்தோலை உறிச்சி பச்சை வெண்ணையைத் தடவி...." என்ற வெற்றிலையைப் பற்றிய அழிப் பாங்கதைப் பாடல் ஞாபகத்துக்கு வரும்.

களிப்பாக்கை எடுத்து முதலில் முகர்ந்து பார்ப்பார். அப்படி முகர்ந்து பார்த்துவிட்டால் 'சொக்கு' ஏற்படாதாம். அடுத்து அந்தப் பாக்கை ஊதுவார்; அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத பாக்குப் புழுக்கள் போகவேண்டாமா அதற்காக, ஆரம்பத்தில் மெதுவாக ஆரம்பிக்கும் இந்த முகர்ந்து பார்த்தலும் ஊதலும் வரவர வேகமாகி ஒரு நாலைந்து தடவை மூக்குக்கும் வாய்க்குமாக, கை மேலும் கீழும் உம் உஷ், உம் உஷ் என்ற சத்தத்துடன் சுத்தமாகி டபக்கென்று வாய்க்குள் சென்றுவிடும்.

ஒருவர் உபயோகிக்கும் அவருடைய சுண்ணாம்பு டப்பியைப் பார்த்தாலே அவருடைய சுத்தத்தைப் பற்றித் தெரிந்துவிடும். மாமனார் இதிலெல்லாம் மன்னன். விரலில் மிஞ்சிய சுண்ணாம்பைக் கூட வீணாக மற்றப் பொருள்களின் மேல் தடவமாட்டார். அவருடைய சுண்ணாம்பு டப்பியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம். பதினைந்து வருஷத்துக்கு முன் வாங்கிய எவரெடி டார்ச் லைட் இன்னும் புத்தம் புதுசாக இப்போதுதான் கடையி லிருந்து வாங்கிக்கொண்டு வந்ததோ என்று நினைக்கும்படியாக உபயோகத்தில் இருக்கிறது அவரிடம். அதோடு சேர்த்து வாங்கிய எங்கள் வீட்டு டார்ச் லைட் சொட்டு விழுந்து நெளிசலாகி மஞ்சள் கலரில் பார்க்கப் பரிதாபமாக, சாகப் போகும் நீண்ட நாள் நோயாளி யைப் போல் காட்சியளிக்கிறது.

நாற்காலியை அவர் தவிர அந்த வீட்டில் யாரும் உபயோகிக்கக் கூடாது. காலையில் எழுந்திருந்ததும் முதல் காரியமாக அதைத் துடைத்து வைப்பார். ஓர் இடத்திலிருந்து அதை இன்னோர் இடத் துக்குத் தாமே மெதுவாக எடுத்துக்கொண்டு போய்ச்

சத்தமில்லாமல் தண்ணீர் நிறைந்த மண்பானையை இறக்கி வைப்பது போல் அவ்வளவு மெதுவாக வைப்பார்.

மாமனார் என்னைக் கண்டதும், "வரவேணும் மாப்பிள்ளைவாள்" என்று கூறி வரவேற்றார். "கொஞ்சம் வெற்றிலை போடலாமோ?" என்று என்னைக் கேட்டுவிட்டுப் பதிலும் அவரே சொன்னார்: "படிக்கிற பிள்ளை வெற்றிலை போட்டால் கோழி முட்டும்!"

அம்மா சொல்லியனுப்பிய தகவலை அவரிடம் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

ராத்திரி அகாலத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. வீட்டில் எல்லாம் அயர்ந்த தூக்கம். நான் பெத்தண்ணாவை எழுப்பினேன்.

நாற்காலிக்காக வந்த ஒரு இழவு வீட்டுக்காரர்கள் வெளியில் நின்றுக்கொண்டிருந்தார்கள். பெத்தண்ணா அவர்களைத் தெருப்பக்கம் அழைத்துக்கொண்டு போனான். நானும் போனேன். வந்த விஷ யத்தை அவர்கள் சொல்லி முடித்ததும் பெத்தண்ணா அவர்களிடம் நிதானமாகப் பதில் சொன்னான்.

"நாற்காலிதானே? அது எங்கள் மாமனார் வீட்டில் இருக்கிறது அங்கே போய்க் கேளுங்கள், தருவார். நாங்கள் சொன்னதாகச் சொல்ல வேண்டாம். இப்படிக் காரியங்களுக்கு இல்லை என்று சொல்ல முடியுமா? அங்கே கிடைக்காவிட்டால் நேரே இங்கே வாருங்கள்; அப்புறம் பார்த்துக்கொள்வோம்" என்று பேசி அவர் களை அனுப்பிவிட்டு, வீட்டுக்குள் வந்து இருவரும் சப்தமில்லாமல் சிரித்தோம்.

அப்பா தூக்கச் சடைவோடு படுக்கையில் புரண்டுகொண்டே, " யார் வந்தது?" என்று கேட்டார்.

"வேலை என்ன? பிணையலுக்கு மாடுகள் வேணுமாம்" என்றான் பெத்தண்ணா.

துப்பட்டியை இழுத்துப் போர்த்திக்கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டார் அப்பா.

இப்பொழுது மாமனார் காட்டில் பெய்து கொண்டிருந்தது மழை!

ரொம்ப நாள் கழித்து, நான் மாமனாரின் வீட்டுக்கு ஒரு நாள் போனபோது அவர் தரையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். வழக்கமான சிரிப்புடனும் பேச்சுடனும் என்னை வரவேற்றார்.

"என்ன இப்படிக் கீழே? நாற்காலி எங்கே?" சுற்று முற்றும் கவனித்தேன். வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே என்னை ஆழ்ந்து பார்த்துப் புன்னகை செய்தார். பின்பு அமைதியாக, "அந்தக் காரியத்துக்கே அந்த நாற்காலியை வைத்துக் கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன். அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே?" என்றார்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வரும்போது இந்தச் செய்தியைச் சொல்லப் பெத்தண்ணா விடம் வேகமாக விரைந்தேன். ஆனால் வரவர என்னுடைய வேகம் குறைந்து தன் நடையாயிற்று.

சொல் விளையாட்டு

கிராமத்தை ஒட்டிய ஒரு பஸ் நிறுத்தத்தில் காத்துக் கொண்டிருந்தேன்.

பள்ளி விடுமுறைநாட்கள் என்பதால் குழந்தைகள் மர நிழலில் குவித்து வைக்கப்பட்டிருந்த மணலில் உட்கார்ந்துகொண்டு சொல்விளையாட்டு ஆடிக் கொண்டிருந்தார்கள். கவனிக்காதது போல் கவனித்துக் கொண்டிருந்தேன், காதை அவர்கள் பக்கம் திருப்பி வைத்துக்கொண்டு ஒரு குழந்தை கேட்கிறது.

“போகும் போதும் என் நிழல் முன்னாலேயே வந்தது; வரும்போதும் என் நிழல் முன்னாலேயே வந்தது; ஏம்?”

“எங்கே எங்கே இன்னொரு தபா சொல்லு” என்று குழந்தைகள் கேட்டதும் அதை அப்படியே திருப்பிச்சொன்னது முதல்குழந்தை.

கேட்ட குழந்தைகள் மட்டுமில்லை நானும் யோசித்தேன். புரியவில்லை.

காலவித்தியாசம், அழிப்பாங் கதைகளின் வடிவங்கள் கூட மாறிவிட்டன போல!

இவைகளின் விடைகள் எப்போதும் ஒரு சொல்லாகத்தான் இருக்கும்.

விடுகதை என்று சொல்லப்படும் ஒரு அழிப்பாங்கதை பரவுவதற்கு முன்னால் அதன் விடை அதை உண்டாக்கியவருக்குத்தான் தெரிந்திருக்கும் அல்லது அதைக் கேட்டுத் தெரிந்துகொண்ட முதல்நபருக்குத்தான் தெரிந்திருக்கும். இதன்விடை யாருக்கும் தெரியவில்லை எனக்கு உட்பட!

சரி; அந்தக் குழந்தை என்ன பதில் சொல்லுகிறது பார்ப்போம் என்று காத்திருந்தேன் வந்த பஸ்ஸையும் விட்டுவிட்டு.

தான் போட்ட கதையைத் தானே விடுவித்தது இப்படி:

“காலையில எழுந்திருச்சதும் மேக்காமப் போனேம். சாய்ந்திரம் எழுந்திருச்சி கிழக்காம வந்தேம்,” என்று பதில் சொல்லி நிறுத்தி சிரித்துக்கொண்டது அந்தக் குழந்தை.

இப்போது விடையும் கூட ஒரு அழிப்பாங்கதே போல இருக்கே! என்று தோன்றிது எனக்கு. மற்ற குழந்தைகளும் திகைத்தன. முதல் குழந்தை சிரித்துக்கொண்டே விடையை விளக்கிச் சொன்னது:

“அட இவளுகளே, இதுகூடத் தெரியலையா!

காலையில நாம மேக்காம நடந்துபோனா நம்ம எனலு (நிழல்) நமக்கு முன்னாலெ தானே போவும்?

சாய்ந்திரம் திரும்பவந்தாலும் அந்த நம்ம எணலு நமக்கு முன்னாலெதானெ வரும்?"

பெண் குழந்தைகள் இப்பொ உயரம் மட்டு வளரவில்லை அறிவும் வளந்திருக்கு.

அந்த அழிப்பாங்கதையை என்னுள் சொல்லிப் பார்த்துக்கொண்டேன்.

போகும்போது எந்நிழல் முன்னாலே வந்தது

வரும்போதும் எந்நிழல் முன்னாலே வந்தது;

ஏன்?

கிராமத்தை ஒட்டிய ஒரு பஸ் நிறுத்தத்தில் காத்துக் கொண்டிருந்தேன்.பள்ளி விடுமுறைநாட்கள் என்பதால் குழந்தைகள் மர நிழலில் குவித்து வைக்கப்பட்டிருந்த மணலில் உட்கார்ந்துகொண்டு சொல்விளையாட்டு ஆடிக் கொண்டிருந்தார்கள். கவனிக்காதது போல் கவனித்துக் கொண்டிருந்தேன், காதை அவர்கள் பக்கம் திருப்பி வைத்துக்கொண்டு ஒரு குழந்தை கேட்கிறது."போகும் போதும் என் நிழல் முன்னாலேயே வந்தது; வரும்போதும் என் நிழல் முன்னாலேயே வந்தது; ஏம்?""எங்கே எங்கே இன்னொரு தபா சொல்லு" என்று குழந்தைகள் கேட்டதும் அதை அப்படியே திருப்பிச்சொன்னது முதல்குழந்தை.கேட்ட குழந்தைகள் மட்டுமில்லை நானும் யோசித்தேன். புரியவில்லை.காலவித்தியாசம், அழிப்பாங் கதைகளின் வடிவங்கள் கூட மாறிவிட்டன போல!இவைகளின் விடைகள் எப்போதும் ஒரு சொல்லாகத்தான் இருக்கும்

விடுகதை என்று சொல்லப்படும் ஒரு அழிப்பாங்கதை பரவுவதற்கு முன்னால் அதன் விடை அதை உண்டாக்கியவருக்குத்தான் தெரிந்திருக்கும் அல்லது அதைக் கேட்டுத் தெரிந்துகொண்ட முதல்நபருக்குத்தான் தெரிந்திருக்கும். இதன்விடை யாருக்கும் தெரியவில்லை எனக்கு உட்பட!சரி; அந்தக் குழந்தை என்ன பதில் சொல்லுகிறது பார்ப்போம் என்று காத்திருந்தேன் வந்த பஸ்ஸையும் விட்டுவிட்டு.தான் போட்ட கதையைத் தானே விடுவித்தது இப்படி:"காலையில எழுந்திருச்சதும் மேக்காமப் போனேம். சாய்ந்திரம் எழுந்திருச்சி கிழக்காம வந்தேம்," என்று பதில் சொல்லி நிறுத்தி சிரித்துக்கொண்டது அந்தக் குழந்தை.இப்போது விடையும் கூட ஒரு அழிப்பாங்கதே போல இருக்கே! என்று தோன்றிது எனக்கு. மற்ற குழந்தைகளும் திகைத்தன.

முதல் குழந்தை சிரித்துக்கொண்டே விடையை விளக்கிச் சொன்னது:"அட இவளுகளே, இதுகூடத் தெரியலையா!காலையில நாம மேக்காம நடந்துபோனா நம்ம எனலு (நிழல்) நமக்கு முன்னாலெ தானே போவும்?சாய்ந்திரம் திரும்பவந்தாலும் அந்த நம்ம எணலு நமக்கு முன்னாலெதானெ வரும்?"பெண் குழந்தைகள் இப்பொ உயரம் மட்டு வளரவில்லை அறிவும் வளந்திருக்கு.அந்த அழிப்பாங்கதையை என்னுள்

சொல்லிப் பார்த்துக்கொண்டேன்.போகும்போது எந்நிழல் முன்னாலே வந்ததுவரும்போதும் எந்நிழல் முன்னாலே வந்தது;ஏன்?

கதவு

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.

‘எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க’ என்றான் சீனிவாசன். உடனே “எனக்கொரு

டிக்கெட், உனக்கொரு டிக்கெட்” என்று சத்தம் போட்டார்கள்.

“எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சி தள்ளினா என்ன அர்த்தம்? அப்புறம் நான் விளையாட்டுக்கு வர மாட்டேன்”

“இல்லை, இல்லை, இடிச்சி தள்ளலே”

“சரி, எந்த ஊருக்கு டிக்கெட் வேணும்?”

குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் “திருநெல்வேலிக்கு” என்று சொன்னான். “திருநெல்வேலிக்கு, திருநெல்வேலிக்கு”

என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக் கொண்டிருந்தாள். சீனிவாசன்

வெறுங்கையால் டிக்கெட் கிழித்துக் கொடுத்து முடிந்ததும், கதவில் பிடித்துத்

தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன் மீது

ஏறி நிற்கும் அக்குழந்தைகளை அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக்குழந்தைகளை வேகமாக ஆடி மகிழ்வித்தது. “திருநெல்வேலி வந்தாச்சி” என்றான் சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவாட்டம்

தொடங்கியது.

அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய் விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள பெண் குழந்தைகளில் மூத்ததிற்கு எட்டு வயது இருக்கும். இன்னொன்று கைக்குழந்தை.

அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய் விடுவாள். அப்பா மணி முத்தாறில் கூலி வேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா

காட்டிலிருந்து வரும் வரை வைத்துக் கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பி தன் பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம் பூராவும் பரவிற்று. ஆனால் லட்சுமிக்கு மிகவும் திருப்தி, படம் சுத்தமாகிவிட்டதென்று. படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து தலையைக் கொஞ்சம் சாய்த்துக் கொண்டு பார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக் கொண்டு பார்த்தாள். சிரித்துக் கொண்டாள். காண்பிக்க பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்றும் சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்க முடியாமல்.

லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாடியைத் தாங்கிக் கொண்டு வாசல் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லட்சுமி படத்தைப் பின்புறமாக மறைத்துக் கொண்டு, "டேய் நா என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லு பாப்போம்" என்றாள்

"என்ன கொண்டு வந்திருக்கியோ? எனக்குத் தெரியாது"

"சொல்லேன் பாப்போம்"

"எனக்குத் தெரியாது"

லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

"அக்கா, அக்கா, எனக்குத் தரமாட்டியா?" என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான் சீனிவாசன். 'முடியாது' என்ற பாவனையில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் சுற்றிச் சுற்றி வந்தான். "ம்ஹூம், முடியாது. மாட்டேன்... நான் எவ்ளோ கஷ்டப்பட்டு தேடி எடுத்துக் கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?" என்றாள்.

"ஒரே தடவை பாத்துட்டுக் கொடுத்துர்றேன் அக்கா, அக்கா" என்று கெஞ்சினான்.

"பார்த்துட்டுக் கொடுத்துறனும்"

"சரி"

“கிழிக்கப்படாது”

“சரி சரி”

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது.

“டேய், உள்ளப் போய் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்தப் படத்தை நம்ம கதவிலே ஒட்டணும்” என்றாள்.

“ரொம்பச் சரி” என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்.

ரெண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கை தட்டிக் கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டு பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஓடி வந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது.

2.

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதே மாதிரி வேறு ஒரு ப்டம் ஒட்டி இருப்பது தெரிய வரும். அந்தப் படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகி விட்டதால் அழுக்கும் புகையும் பட்டு மங்கிப் போயிருந்தது. ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.

குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.

“லட்சுமி உங்க ஐயா எங்கே?”

“ஊருக்குப் போயிருக்காக”

“உங்க அம்மா?”

“காட்டுக்கு போயிருக்காக”

“வந்தா தீர்வைய கொண்டு வந்து போடச் சொல்லு, தலையாரித் தேவரு வந்து தேடீட்டு போனாருன்னு சொல்லு”

சரி என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.

மறுநாள் தலையாரி லட்சுமியின் அம்மா இருக்கும் போதே வந்து தீர்வை பாக்கியைக் கேட்டான்.

“ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணி முத்தாறு போயி அஞ்சு மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருஷமா மழை தண்ணி இல்லயே. நாங்க என்னத்தை வெச்சு உங்களுக்கு தீர்வை பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலி

வேலை செய்து இந்தக் கொளந்தைங்கள காப்பாத்ரதே பெரிய காரியம். உங்களுக்குத் தெரியாததா?" என்றாள்.

இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை. இந்த மாதிரியான வசனங்களைப் பலர் சொல்லிக் கேட்டவன் அவன்.

"நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு? இந்த வருஷம் எப்படியாவது கண்டிப்பா தீர்வை போட்டுறனும். அப்புறம் எங்க மேல சடைச்சிப் புண்ணியம் இல்லை." என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

3.

ஒருநாள் காலை வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தலையாரி நான்கு பேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்த வீட்டுப்பக்கம் ஓடி வந்து பார்த்தார்கள். அவர்களுக்கு இது ஒரு மாதிரி வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒரு மாதிரி கழற்றி நான்கு பேரும் கதவைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப் போல் கைகளை வைத்துக் கொண்டு "பீப்பீ..பீ…பீ" என்று சத்தம் காட்டி விரல்களை நீட்டிக் கொண்டு உடலைப் பின் வளைத்துத் துடைகளின் மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை செய்து "திடும்.. திடும்.. ததிக்குணம்..ததிக்குண" என்று தவில் வாசிப்பவனைப் போல முழங்கினான். சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக் கொண்டான். இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக் கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.

தலையாரியால் இதைச் சகிக்க முடியவில்லை. "இப்போ போகிறீர்களா இல்லையா கழுதைகளே" என்று கத்தினான். குழந்தைகள் ஓட்டம் பிடித்தன. அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும் போது லட்சுமி வாசல்படியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டான். இப்படி வெகுநேரம் அவர்களால் இருக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு பெண், "நான் வீட்டுக்குப் போறேன்" என்று எழுந்தாள். உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந்தார்கள். வெகுநேரம் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசவில்லை.

கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பினாள். இதற்குள்

சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக் கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும்

கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான். லட்சுமியும் பார்த்தாள்.

“பாப்பாவை தொட்டுப் பாரு அக்கா; உடம்பு சுடுது” என்றான். லட்சுமி தொட்டுப்

பார்த்தாள்; அனலாகத் தகித்தது.

சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள்.

சுள்ளிகள் சேகரிக்கும் போது கையில் தேள் கொட்டி இருந்ததால் முகத்தில் வலி தோன்ற அமைதியாக வந்து குழந்தைகளின் பக்கம் அமர்ந்து கைக்குழந்தையை வாங்கிக் கொண்டாள். ‘உடம்பு சுடுகிறதே?’ என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். இதற்குள் குழந்தைகள் காலையில் நடந்த சேதியை அம்மாவிடம் சொன்னார்கள்.

செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது.

உடம்பெல்லாம் கண்ணுத் தெரியாத ஒரு நடுக்கம். வயிற்றில் தாங்க முடியாத ஒரு வலி தோன்றியது போல் குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக் கூடாது என்று எவ்வளவு தான் அடக்கினாலும் முடியவில்லை. “என்னைப் பெத்த தாயே” என்று அலறி விட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்தில்இருந்து விலகிக் கொண்டார்கள். இனம் புரியாத பயத்தின் காரணமாக அவர்களும் அழ ஆரம்பித்தனர்.

4.

மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை. நாட்கள் சென்று கொண்டேயிருந்தன. இரவு வந்து விட்டால் குளிர் தாங்க முடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள். கதவு இல்லாததால் வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக் காற்றைப் போல் வீட்டினுள் வந்து அலைமோதிக் கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டை விட்டு அவர்களையும் விட்டு பிரிந்து சென்று விட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. லட்சுமிக்காகவும் சீனிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்.

சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியானம் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பும் போது ஒரு தீப்பெட்டிப் படம் கிடைத்தது. கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமி அதில் ஆர்வம் கொள்ளவில்லை.

“அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, பசிக்கி; சாப்பிட்டு இந்த படத்தை

ஒட்டனும்”

“தம்பீ, கஞ்சி இல்லை”  இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்.

“ஏன்? நீ காலையில் காய்ச்சும் போது நான் பாத்தேனே?”

‘ஆம்’ என்ற முறையில் தலையசைத்து விட்டு, “நான் வெளிக்குப் போயிருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்து விட்டுப் போய்விட்டது தம்பி… கதவு இல்லையே” என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க. தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.

சீனிவாசன் அங்கே சிதறிக் கிடந்த கம்மம் பருக்கைகளை எடுத்துப் படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவரில் ஒட்டினான். படம் கீழே விழுந்து விட்டது. அடுத்த இடத்தில், அடுத்த சுவரில் எல்லாம் ஒட்டிப் பார்த்தான்; ஒன்றும் பிரயோசனம் இல்லை.

ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.

சாயந்திரம் லட்சுமி சட்டி பானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள்.

சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்தான்.

“அக்கா அக்கா நம்ம பள்ளிக் கூடத்துக்கு பக்கத்திலே சாவ்டி இருக்கு பாரு.. அதுக்கு பின்புறம் நம்ம வீட்டு கதவு இருக்கக்கா! கண்ணாலே நான் பார்த்தேன்” என்றான்.

“அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பாப்போம்” என்று சீனிவாசனின் கையைப் பிடித்தாள்.

இருவரும் கிராமச்சாவடி நோக்கி ஓடினார்கள்.

உண்மை தான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. தூரத்திலிருந்தே தங்கள் நண்பனை

இனம் கண்டு கொண்டார்கள் அச்சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை.

அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்ல முடியாது.

அங்கே முளைத்திருந்த சாரணத்தியும் தைவாழைச் செடிகளும் அவர்கள் காலடியில் மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள். அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை

லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள்.

கதவோடு தன் முகத்தை ஒட்ட வைத்துக் கொண்டாள். அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

சீனிவாசனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள்.

கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்து

சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது.பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.'எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க' என்றான் சீனிவாசன். உடனே "எனக்கொருடிக்கெட், உனக்கொரு டிக்கெட்" என்று சத்தம் போட்டார்கள்."எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சி தள்ளினா என்ன அர்த்தம்? அப்புறம் நான் விளையாட்டுக்கு வர மாட்டேன்""இல்லை, இல்லை, இடிச்சி தள்ளலே""சரி, எந்த ஊருக்கு டிக்கெட் வேணும்?"குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் "திருநெல்வேலிக்கு" என்று சொன்னான். "திருநெல்வேலிக்கு, திருநெல்வேலிக்கு"என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக் கொண்டிருந்தாள். சீனிவாசன்வெறுங்கையால் டிக்கெட் கிழித்துக் கொடுத்து முடிந்ததும், கதவில் பிடித்துத்தொத்திக் கொண்டார்கள்.

சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன் மீதுஏறி நிற்கும் அக்குழந்தைகளை அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக்குழந்தைகளை வேகமாக ஆடி மகிழ்வித்தது. "திருநெல்வேலி வந்தாச்சி" என்றான் சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவாட்டம்தொடங்கியது.அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய் விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள பெண் குழந்தைகளில் மூத்ததிற்கு எட்டு வயது இருக்கும். இன்னொன்று கைக்குழந்தை.அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய் விடுவாள். அப்பா மணி முத்தாறில் கூலி வேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மாகாட்டிலிருந்து வரும் வரை வைத்துக் கொண்டு கதவோடு விளையாடிக்கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில்ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பி தன்பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம்

பூராவும்பரவிற்று. ஆனால் லட்சுமிக்கு மிகவும் திருப்தி, படம் சுத்தமாகிவிட்டதென்று.படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து தலையைக் கொஞ்சம் சாய்த்துக் கொண்டுபார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக் கொண்டு பார்த்தாள்.சிரித்துக் கொண்டாள். காண்பிக்க பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்றும்சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டிஅடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்க முடியாமல்.லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாடியைத் தாங்கிக் கொண்டு வாசல்படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லட்சுமி படத்தைப்பின்புறமாக மறைத்துக் கொண்டு, “டேய் நா என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லுபாப்போம்” என்றாள்“என்ன கொண்டு வந்திருக்கியோ? எனக்குத் தெரியாது”“சொல்லேன் பாப்போம்”“எனக்குத் தெரியாது”லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

“அக்கா, அக்கா, எனக்குத் தரமாட்டியா?” என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான்சீனிவாசன். ‘முடியாது’ என்ற பாவனையில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் சுற்றிச் சுற்றி வந்தான். “ம்ஹூம், முடியாது.மாட்டேன்… நான் எவ்ளோ கஷ்டப்பட்டு தேடி எடுத்துக் கொண்டு வந்திருக்கேன்தெரியுமா?” என்றாள்.“ஒரே தடவை பாத்துட்டுக் கொடுத்துர்றேன் அக்கா, அக்கா” என்று கெஞ்சினான்.“பார்த்துட்டுக் கொடுத்துறனும்”“சரி”“கிழிக்கப்படாது”“சரி சரி”சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது.“டேய், உள்ளப் போய் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்தப் படத்தை நம்ம கதவிலே ஒட்டணும்” என்றாள்.“ரொம்பச் சரி” என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்.ரெண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்துசந்தோஷத்தினால் கை தட்டிக் கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டு பக்கத்துவீட்டுக் குழந்தைகளும் ஓடி வந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது.2.அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதே மாதிரி வேறு ஒரு ப்டம் ஒட்டி இருப்பது தெரிய வரும். அந்தப் படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகி விட்டதால் அழுக்கும் புகையும் பட்டு மங்கிப் போயிருந்தது.

ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.“லட்சுமி உங்க ஐயா எங்கே?”“ஊருக்குப் போயிருக்காக”“உங்க அம்மா?”“காட்டுக்கு போயிருக்காக”“வந்தா தீர்வைய கொண்டு வந்து போடச் சொல்லு, தலையாரித் தேவரு வந்து தேடீட்டு போனாருன்னு சொல்லு”சரி என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.மறுநாள் தலையாரி லட்சுமியின் அம்மா இருக்கும் போதே வந்து தீர்வை பாக்கியைக்கேட்டான்.“ஐயா, அவரு ஊரிலே

இல்லை. மணி முத்தாறு போயி அஞ்சு மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருஷமா மழை தண்ணி இல்லயே. நாங்க என்னத்தை வெச்சு உங்களுக்கு தீர்வை பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைங்கள காப்பாத்ரதே பெரிய காரியம்.

உங்களுக்குத் தெரியாததா?" என்றாள்.இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை. இந்த மாதிரியான வசனங்களைப் பலர் சொல்லிக் கேட்டவன் அவன்."நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு? இந்த வருஷம் எப்படியாவது கண்டிப்பாதீர்வை போட்டுறனும். அப்புறம் எங்க மேல சடைச்சிப் புண்ணியம் இல்லை." என்றுசொல்லிவிட்டுப் போய் விட்டான்.3.ஒருநாள் காலை வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். தலையாரி நான்கு பேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான்.வந்தவர்கள் அந்த வீட்டுப்பக்கம் ஓடி வந்து பார்த்தார்கள். அவர்களுக்கு இது ஒருமாதிரி வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒரு மாதிரி கழற்றிநான்கு பேரும் கதவைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அந்தக்குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப் போல் கைகளை வைத்துக் கொண்டு "பீப்பீ..பீ…பீ" என்று சத்தம் காட்டி விரல்களை நீட்டிக் கொண்டு உடலைப் பின் வளைத்துத் துடைகளின் மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை செய்து "திடும்.. திடும்.. ததிக்குணம்..ததிக்குண" என்று தவில் வாசிப்பவனைப் போல முழங்கினான். சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக் கொண்டான். இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக் கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.

தலையாரியால் இதைச் சகிக்க முடியவில்லை. "இப்போ போகிறீர்களா இல்லையா கழுதைகளே" என்று கத்தினான். குழந்தைகள் ஓட்டம் பிடித்தன. அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும் போது லட்சுமி வாசல்படியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டான். இப்படி வெகுநேரம் அவர்களால் இருக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு பெண், "நான் வீட்டுக்குப் போறேன்" என்று எழுந்தாள். உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந்தார்கள். வெகுநேரம் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசவில்லை.கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பினாள். இதற்குள்சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக் கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும்கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான். லட்சுமியும் பார்த்தாள்."பாப்பாவை தொட்டுப் பாரு அக்கா; உடம்பு சுடுது" என்றான். லட்சுமி தொட்டுப்பார்த்தாள்; அனலாகத் தகித்தது.சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள்.

சுள்ளிகள் சேகரிக்கும் போது கையில் தேள் கொட்டி இருந்ததால் முகத்தில் வலி தோன்ற அமைதியாக வந்து குழந்தைகளின் பக்கம் அமர்ந்து கைக்குழந்தையை வாங்கிக் கொண்டாள். 'உடம்பு சுடுகிறதே?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். இதற்குள் குழந்தைகள் காலையில் நடந்த சேதியை அம்மாவிடம் சொன்னார்கள்.செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது.உடம்பெல்லாம் கண்ணுத் தெரியாத ஒரு நடுக்கம். வயிற்றில் தாங்க முடியாத ஒரு வலி தோன்றியது போல் குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக் கூடாது என்று எவ்வளவு தான் அடக்கினாலும் முடியவில்லை. "என்னைப் பெத்த தாயே" என்று அலறி விட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்தில்இருந்து விலகிக் கொண்டார்கள். இனம் புரியாத பயத்தின் காரணமாக அவர்களும் அழ ஆரம்பித்தனர்.4.மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை. நாட்கள் சென்று கொண்டேயிருந்தன. இரவு வந்து விட்டால் குளிர் தாங்க முடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள். கதவு இல்லாததால் வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது.

கார்த்திகை மாசத்து வாடை, விஷக் காற்றைப் போல் வீட்டினுள் வந்து அலைமோதிக் கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டை விட்டு அவர்களையும் விட்டு பிரிந்து சென்று விட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. லட்சுமிக்காகவும் சீனிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்.சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியானம் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பும் போது ஒரு தீப்பெட்டிப் படம் கிடைத்தது. கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமி அதில் ஆர்வம் கொள்ளவில்லை."அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, பசிக்கி; சாப்பிட்டு இந்த படத்தைஒட்டனும்""தம்பீ, கஞ்சி இல்லை" இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்."ஏன்? நீ காலையில் காய்ச்சும் போது நான் பாத்தேனே?"'ஆம்' என்ற முறையில் தலையசைத்து விட்டு, "நான் வெளிக்குப் போயிருந்தேன். ஏதோநாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்து விட்டுப் போய்விட்டது தம்பி… கதவுஇல்லையே" என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க.

தன்னுடைய தாய் பசியோடுகாட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.சீனிவாசன் அங்கே சிதறிக் கிடந்த கம்மம் பருக்கைகளை எடுத்துப் படத்தின்பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை. என்ன செய்வதென்றேதெரியவில்லை. சுவரில் ஒட்டினான். படம் கீழே விழுந்து விட்டது. அடுத்த இடத்தில்,அடுத்த சுவரில் எல்லாம் ஒட்டிப் பார்த்தான்; ஒன்றும் பிரயோசனம் இல்லை.ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.சாயந்திரம் லட்சுமி சட்டி பானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள்.சீனிவாசன் முகத்தில் ஆவல்

துடிக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்தான்."அக்கா அக்கா நம்ம பள்ளிக் கூடத்துக்கு பக்கத்திலே சாவ்டி இருக்கு பாரு..அதுக்கு பின்புறம் நம்ம வீட்டு கதவு இருக்கக்கா! கண்ணாலே நான் பார்த்தேன்"என்றான்."அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பாப்போம்" என்று சீனிவாசனின் கையைப் பிடித்தாள்.இருவரும் கிராமச்சாவடி நோக்கி ஓடினார்கள்.உண்மை தான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது.

தூரத்திலிருந்தே தங்கள் நண்பனைஇனம் கண்டு கொண்டார்கள் அச்சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களாஎன்று சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை.அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்ல முடியாது.அங்கே முளைத்திருந்த சாரணத்தியும் தைவாழைச் செடிகளும் அவர்கள் காலடியில்மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில்போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள். அதில் பற்றி இருந்த கரையான் மண்ணைலட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள்.கதவோடு தன் முகத்தை ஒட்ட வைத்துக் கொண்டாள். அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு.சீனிவாசனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள்.கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துசிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

ஒரு வாய்மொழிக் கதை

கதை சொல்லணுமாக்கும். சரி சொல்றேன்.

எங்க ஊர்லே எல்லாம், ஒரு கதை சொல்லுண்ணு கேட்டா, 'நா வாழ்ந்த கதையைச் சொல்லவா; நா தாழ்ந்த கதையைச் சொல்லவா 'ண்ணு கேக்கிறதுண்டு. நாம ரெண்டுலெ எதையாவது கேட்டு வைக்கணும். ஆனா அவங்க வாழ்ந்த கதையும் வராது; தாழ்ந்த கதையும் வராது. ஏதாவது ஒரு கதை வரும்.

பின்னெ என்னத்துக்கு இந்த கேள்விண்ணு நினைக்கலாம்.ஒரு வேளை கொஞ்சம் யோசிச்சுக்கிட அவகாசம் வேணும்ங்கிறதுக்காக இருக்கலாம். எல்லாம் ஒரு 'இது 'க்காகத்தான்.

திறுக்கைச் சுத்ன உடனே தண்ணி கொட்ற மாதிரி கேட்ட உடனே கதை சொல்றதுக்கு மன்னன் பல்ராம் நாயக்கர் தான்.

'யோவ் ஒரு கதை சொல்லும் 'ண்ணு கேட்க வேண்டியது தான். உடனே முகத்திலே ஒரு சந்தோஷம் – ஒரு களை – வந்துரும். எச்சியெக் கூட்டி விழுங்கி தொண்டையைச் சரி செஞ்சிக்கிட்டே அடப்புலே சொருகியிருக்கிற சேலம் பொடிப் பட்டையை உருவி ஒரு சிம்ட்டாப் பொடியை எடுத்து வச்சிக்கிட்டு, தொடங்குவாரு.

'ஆனைத் தலைத்தண்டி பெருங்காயம் போட்டு

கீரை கடையிற ராசா மகளுக்கும்,

அரிசி கழுவினதண்ணி ஆயிரம் ஏக்கர்

பாய்ற ராசா மகனுக்கும் கலியாணம் ‘

கதை தொடங்குறப்பவே எல்லார் மாதரியும் பொடியைப் போட்டுக்கிட மாட்டாரு. சரியான கட்டம் வரணும் கதையிலெ. அப்பிடி ஒரு இடைவெளி கொடுத்து, சர்ர்ர்ண்ணு பொடியை இழுத்து பெருவிரலும் நடு விரலும் ஒட்டுனயிடத்திலெ ஆள்க்காட்டி விரலாலெ சொடக்கு விழற மாதிரி ஒரு உதறு தட்டுத் தட்டிட்டு, பிதுக்கிய கண்ணீர் விழியாய் நம்மையெல்லாம் ஒரு கத்துகெத்தான பார்வையால் பார்ப்பார்; எவண்டா எம்மாதிரி கதை சொல்ல முடியும்ண்ணு கேக்கும் அந்தப் பார்வை.

ஓரெடுப்பு உழுதுட்டு வந்த சம்சாரிகெ மத்யான வேளையிலெ, அலுப்புத்தீரக் கொஞ்சம் கரை மரத்து நிழல்லெ துண்டை விரிச்சி தலை சாச்சிக் கிடக்கிறப்பொ பல்ராம் நாய்க்கரு வருவாரு.

அறையை மறைக்க வெறும் அறணாக் கயத்திலெ சொருகப்பட்ட கையகலக் கோமணத்துணி. அந்த அறணாக்கயித்துலெ இடது பக்கம் சேலம் பொடிப் பட்டையும், முள்வாங்கியும் வேட்டியை அவுத்து தலெயிலெ கட்டிய லேஞ்சி. அதிலே மிச்சமாகத் தொங்குற கங்குல் – முதுகுத் தண்டை மறைக்க விடப்பட்ட ஒரு முழத் தொங்கல் – லேஞ்சி கட்ணமானைக்கே அந்தத் தொங்கலை மேல் முதுகுக்கு விரிச்சி, மரத் தடியிலெ தலெய சாச்சி காலைத் தூக்கி மரத்து மேலே போட்டுக்கிடுவாரு ஒரு யோகாசனம் மாதிரி.

பேச்சுக்கு மத்தியிலெ அண்ணைக்கு பிள்ளையாரப்பன் தான் தொடங்கினான்.

‘ஒருத்தன் கிட்டெ கைமாத்து வாங்காமெ பொழுதே ஓட்ட முடியலையே. ‘ வரதப்பன் சொன்னான்.

‘அதெப்படிவே முடியும். ஆனாப்பட்ட சல்க்காரே அடுத்த நாட்டுக்காரன்ட்டெ கை நீட்றப்பொ நாம எம்மாத்ரம் ? ‘

‘வாங்குறது பெரிசில்லப்பா; திரும்பக் கொடுக்க முடியலையே. ‘

‘திரும்பக் கேக்காத ஆளாப் பாத்து வாங்கணும். ‘

‘அப்பேர்க்கொத்த ஆளு எங்கெனெ இருக்கு, சொல்லு; அவங்கிட்ட போயி வாங்குவம். ‘

‘இருப்பான்; எங்கெனயாவது இருப்பான்; நமக்குத் தட்டுப் படணும். ‘

‘அப்படியும் ஒருத்தன் பூமியிலெ இருக்கவா செய்தான் ? ‘

‘ஏய், அப்படி ஒருத்தனென்னப்பா, அதுக்கு மேலேயும் ஒருத்தன் இருந்திருக்காம்பா. ‘

குரல் வந்த திக்கு பல்ராம் நாயக்கர் தான் அருணாக்கயித்திலெ சொருகியிருந்த பொடிப்பட்டையை உருவி எடுத்துக்கொண்டே சொன்னார். ‘இப்படித்தான் ஒங்க மாதிரி

ரெண்டு பேரு ரோசனை செஞ்சாங்களாம்.. அப்பொ, அவுகளுக்கு ஒரு தகவல் கிடைச்சதாம். நம்ம நாட்டுக்குப் பக்கத்து நாட்லெ ஒருத்தர் வேண்டியமட்டுக்கும் கேக்கிறவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்தாராம். கடனை வாங்கினவுக திருப்பித் தர வேண்டாம். அவங்க வாரிசுக திருப்பித் தந்தா போதும். '

பிள்ளையாரப்பனும் வரதபபனும் சந்தோஷததால் சிரித்தார்கள்.

அது நல்ல விசயந்தான். அலப்பரை இல்லை. ஆனா, நம்ம வாரிசுகளெ எவன் சம்பாரிக்கிறது அவன் எப்பப் பணக்காரனாகி அவரோட பாக்கியெத் தீக்கிறது ?

'அட; எப்பச் சம்பாரிச்சு பணக்காரனாகிறானோ அப்பத் தீத்தாப் போதுங்கிறது தான் கண்டிஷன்ண்ணேன். '

'ஆங்; சரி, சரி சொல்லுங்க. '

'ஆச்சா; ஒடனே இவங்க ரெண்டு பேரும் கட்டுச் சோத்தைக் கட்டிக்கிட்டு அந்த நாட்டுக்குப் போனாங்க. '

'போனா; அங்கெ போயி விசாரிக்கறப்போ இன்னொரு தாக்கல் கெடச்சது. அங்கொருத்தன் சொன்னான். இதென்ன பெரிய காரியம்ண்ணூட்டு இவங்கிட்டெ கடன் வாங்க வந்துட்டாகெ. இந்த நாட்டுக்குப் பக்கத்து நாட்டிலெ ஒருத்தரு கடங்கொடுக்காரு. அவருக்கு கடன் வாங்கினவனும் கொடுக்க வேண்டாம். வாரீசுகளும் கொடுக்க வேண்டாம். அடுத்த ஜென்மம் எடுத்தா அப்பொ வந்து கொடுத்தாப் போதும். '

'அடடே.. இது ரொம்ப அருமையா இருக்கே! '

'சரி; நாம அங்கே போவோம். இவங்க கிட்டெ வாங்கிட்டு நாம கண்ணை மூடாட்டா நம்ம வாரீசுக நம்மை ஏசிக்கிட்டே இருக்கும் 'ண்ணூ சொல்லிட்டு அந்த நாட்டுக்குப் புறப்பட்டுப் போனாங்க '

காட்டு வழி. பேசிக்கிட்டே நடந்து போய்க் கிட்டு இருக்காங்க. அதிலெ ஒருத்தன் சொன்னான். 'அடுத்த ஜென்மத்திலெ நாம என்ன பிறப்புப் பிறக்கப் போறோமோ. மனுசனாப் பிறந்தாத் தானே, அவரு கடனை நாம அடைக்கணும் '

'அது தானே ' என்று ஆதரித்தான் மற்றவனும்.

(இந்தக்கதையின் தொடர்ச்சியை இன்னொரு விதமாய்ப் படிக்க வேண்டுமென்றால் இங்கே வரவும் – ஆசிரியர், திண்ணை)

இந்த மாதிரி இவங்க பேச்சைக் கேட்ட யாரோ, விழுந்து விழுந்து சிரிக்கிற மாதிரி ஒரு சத்தம் கேட்டுது. கெக் கெக் கெக் கெ..ஓ கெக் கெக் கெக் கெக் கெக்கெ…

இவங்க எல்லாப் பக்கமும் திரும்பிப் பாத்தாங்க. யாரையுமே காங்கலை. அந்தரத்திலெ இருந்து சிரிப்புச் சத்தம் மாத்திரம் கேட்டுப் பதறிப் போனாங்க. இவங்க பதறுனதையும் திகைக்கிறதெயும் கண்ட அந்த அசரீரி மேலும் சிரிச்சி உருண்டது.

இவங்களோட திகைப்பும் பதட்டமும் நீங்குறதுக்கு முன்னாலெயே அந்தக் குரல் இவங்களைப் பாத்து ‘ ஏ அப்பா கடங்காரங்களா; என்னை உங்களுக்குத் தெரியலையா ? இந்தா பாருங்க; நாந்தான் பேசுதேன். ‘

சோளக்காட்டு காவலுக்கு அங்கே போட்டிருந்த பரண் உச்சியிலெ ஒரு மாட்டுக் கொம்பு, பூண் பிடிச்ச மாதிரி ஒரு கம்பு நுனியிலெ நட்டமா சொருகி வச்சிருந்தது. அது தான் அப்படிச் சிரிச்சதும் பேசினதும்.

‘ போன ஜென்மத்திலெ நான், இப்பொ நீங்க கடன் வாங்கப் போரீகளே அவரு கிட்டத் தான் நானும் கடன் வாங்கியிருந்தேன். கடனை வாங்கி வாங்கி ரொம்பப் போடுஸா செலவழிச்சேன்.

‘இந்த ஜென்மத்திலெ அவரு தொழுவிலேயே வந்து மாடாப் பிறப்பெடுத்தேன். கண்ணுக்குட்டியா இருந்தப்பொ என் தொண்டை நனஞ்சிருக்காது தாய்ப்பாலு .

காளையா வளந்த உடனே ‘பசுச் சுகம் ‘ அறியமுன்னாடி என்னை உடையடிச்சி உழவுலெ கட்டிட்டாங்க. ஆயுசு பூராவும் குளம்புக தேய முன்னும் பின்னும் நடந்து நடந்து மூக்கணாங்கயிறு மூக்கை அறுத்து ரெத்தம் கசிய அவரு தோட்டத்துக் கமலை இழுத்து தண்ணீர் இரைச்சேன். குப்பை வண்டி இழுத்தேன்.

‘ஆயுசு முடிஞ்சு செத்துப் போன பிறகும் அவுகளுக்கு என் தோலை உரிச்சுக் கொடுத்து கமலைக்குக் கூனைவாலாய் தன்ணி இரைக்க உதவுனேன். கூனைவாலாகிக் கிழிஞ்ச பிறகும் அவுக வீட்டு ஆள்களுக்கு காலுக்குச் செருப்பாகி உழைச்சேன். அப்பவும் என் பாடு தீரலை. இப்போ, அவரோட தோட்டத்துக்குக் காவல் காத்துக்கிட்டிருக்கேன்.. ‘

இப்படிச் சொல்லிட்டு மாட்டுக் கொம்புச் சிரிக்க ஆரம்பிச்சது. சிரிப்புச் சத்தம் கேட்டாலும் கவனிச்சுக் கேட்டா அது அழுகைச் சத்தம் போல இருந்தது.

ஒண்ணும் ஓடலை இவங்களுக்கு; அப்படியே மெய்மறந்து நிண்ணுட்டாக.

அப்புறம் அவங்க கடன் வாங்கப் போனாங்களா; வந்த வழியைப் பாத்துத் திரும்பிட்டாங்களா; தெரியலை.

அந்த நேரத்திலெ, பல்ராம் நாயக்கரோட மகள் ஓடியாந்து ‘அய்யா மாடு அவுத்துக்கிட்டது; முட்ட வருது ஓடியா ‘ண்ணு பரபரப்பாக் கூப்பிட்டா. வேகமா எந்திரிச்ச நாயக்கரு, அவுந்த கோமணத்தெ அறணாக் கயித்லெ சொருகிக்கிட்டே அவசரமாய்ப் போயிட்டாரு.

கதை சொல்லணுமாக்கும். சரி சொல்றேன்.எங்க ஊர்லே எல்லாம், ஒரு கதை சொல்லுண்ணு கேட்டா, 'நா வாழ்ந்த கதையைச் சொல்லவா; நா தாழ்ந்த கதையைச் சொல்லவா 'ண்ணு கேக்கிறதுண்டு. நாம ரெண்டுலெ எதையாவது கேட்டு வைக்கணும். ஆனா அவங்க வாழ்ந்த கதையும் வராது; தாழ்ந்த கதையும் வராது. ஏதாவது ஒரு கதை வரும்.பின்னெ என்னத்துக்கு இந்த கேள்விண்ணு நினைக்கலாம்.ஒரு வேளை கொஞ்சம் யோசிச்சுக்கிட அவகாசம் வேணும்ங்கிறதுக்காக இருக்கலாம். எல்லாம் ஒரு 'இது 'க்காகத்தான்.திறுக்கைச் சுத்ன உடனே தண்ணி கொட்ற மாதிரி கேட்ட உடனே கதை சொல்றதுக்கு மன்னன் பல்ராம் நாயக்கர் தான்.'யோவ் ஒரு கதை சொல்லும் 'ண்ணு கேட்க வேண்டியது தான். உடனே முகத்திலே ஒரு சந்தோஷம் – ஒரு களை – வந்துரும். எச்சியெக் கூட்டி விழுங்கி தொண்டையைச் சரி செஞ்சிக்கிட்டே அடப்புலே சொருகியிருக்கிற சேலம் பொடிப் பட்டையை உருவி ஒரு சிம்ட்டாப் பொடியை எடுத்து வச்சிக்கிட்டு, தொடங்குவாரு.

'ஆனைத் தலைத்தண்டி பெருங்காயம் போட்டுகீரை கடையிற ராசா மகளுக்கும்,அரிசி கழுவினதண்ணி ஆயிரம் ஏக்கர்பாய்ற ராசா மகனுக்கும் கலியாணம் 'கதை தொடங்குறப்பவே எல்லார் மாதரியும் பொடியைப் போட்டுக்கிட மாட்டாரு. சரியான கட்டம் வரணும் கதையிலெ. அப்பிடி ஒரு இடைவெளி கொடுத்து, சர்ர்ர்ண்ணு பொடியை இழுத்து பெருவிரலும் நடு விரலும் ஒட்டுனயிடத்திலெ ஆள்க்காட்டி விரலாலெ சொடக்கு விழற மாதிரி ஒரு உதறு தட்டுத் தட்டிட்டு, பிதுக்கிய கண்ணீர் விழியாய் நம்மையெல்லாம் ஒரு கத்துகெத்தான பார்வையால் பார்ப்பார்; எவண்டா எம்மாதிரி கதை சொல்ல முடியும்ண்ணு கேக்கும் அந்தப் பார்வை.ஓரெடுப்பு உழுதுட்டு வந்த சம்சாரிகெ மத்யான வேளையிலெ, அலுப்புத்தீரக் கொஞ்சம் கரை மரத்து நிழல்லெ துண்டை விரிச்சி தலை சாச்சிக் கிடக்கிறப்பொ பல்ராம் நாய்க்கரு வருவாரு.அறையை மறைக்க வெறும் அறணாக் கயத்திலெ சொருகப்பட்ட கையகலக் கோமணத்துணி. அந்த அறணாக்கயித்துலெ இடது பக்கம் சேலம் பொடிப் பட்டையும், முள்வாங்கியும் வேட்டியை அவுத்து தலெயிலெ கட்டிய லேஞ்சி. அதிலே மிச்சமாகத் தொங்குற கங்குல் – முதுகுத் தண்டை மறைக்க விடப்பட்ட ஒரு முழத் தொங்கல் – லேஞ்சி கட்ணமானைக்கே அந்தத் தொங்கலை மேல் முதுகுக்கு விரிச்சி, மரத் தடியிலெ தலெய சாச்சி காலைத் தூக்கி மரத்து மேலே போட்டுக்கிடுவாரு ஒரு யோகாசனம் மாதிரி

பேச்சுக்கு மத்தியிலெ அண்ணைக்கு பிள்ளையாரப்பன் தான் தொடங்கினான்.'ஒருத்தன் கிட்டெ கைமாத்து வாங்காமெ பொழுதே ஓட்ட முடியலையே. ' வரதப்பன் சொன்னான்.'அதெப்படிவே முடியும். ஆனாப்பட்ட சல்க்காரே அடுத்த நாட்டுக்காரன்ட்டெ கை நீட்றப்பொ நாம எம்மாத்ரம் ? "வாங்குறது பெரிசில்லப்பா; திரும்பக் கொடுக்க முடியலையே. "திரும்பக் கேக்காத ஆளாப் பாத்து வாங்கணும். "அப்பேர்க்கொத்த ஆளு எங்கெனெ இருக்கு, சொல்லு; அவங்கிட்ட போயி வாங்குவம். "இருப்பான்; எங்கெனயாவது இருப்பான்; நமக்குத் தட்டுப் படணும்.

“அப்படியும் ஒருத்தன் பூமியிலெ இருக்கவா செய்தான் ? “ஏய், அப்படி ஒருத்தனென்னப்பா, அதுக்கு மேலேயும் ஒருத்தன் இருந்திருக்காம்பா. ‘குரல் வந்த திக்கு பல்ராம் நாயக்கர் தான் அருணாக்கயித்திலெ சொருகியிருந்த பொடிப்பட்டையை உருவி எடுத்துக்கொண்டே சொன்னார். ‘இப்படித்தான் ஒங்க மாதிரி ரெண்டு பேரு ரோசனை செஞ்சாங்களாம்.. அப்பொ, அவுகளுக்கு ஒரு தகவல் கிடைச்சதாம். நம்ம நாட்டுக்குப் பக்கத்து நாட்லெ ஒருத்தர் வேண்டியமட்டுக்கும் கேக்கிறவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்தாராம்.

கடனை வாங்கினவுக திருப்பித் தர வேண்டாம். அவங்க வாரிசுக திருப்பித் தந்தா போதும். ‘பிள்ளையாரப்பனும் வரதபபனும் சந்தோஷத���தால் சிரித்தார்கள்.அது நல்ல விசயந்தான். அலப்பரை இல்லை. ஆனா, நம்ம வாரிசுகளெ எவன் சம்பாரிக்கிறது அவன் எப்பப் பணக்காரனாகி அவரோட பாக்கியெத் தீக்கிறது ?‘அட; எப்பச் சம்பாரிச்சு பணக்காரனாகிறானோ அபப்த் தீத்தாப் போதுங்கிறது தான் கண்டிஷன்ண்ணேன். “ஆங்; சரி, சரி சொல்லுங்க. “ஆச்சா; ஒடனே இவங்க ரெண்டு பேரும் கட்டுச் சோத்தைக் கட்டிக்கிட்டு அந்த நாட்டுக்குப் போனாங்க. “போனா; அங்கெ போயி விசாரிக்கறப்போ இன்னொரு தாக்கல் கெடச்சது. அங்கொருத்தன் சொன்னான். இதென்ன பெரிய காரியம்ண்ணூட்டு இவங்கிட்டெ கடன் வாங்க வந்துட்டாகெ. இந்த நாட்டுக்குப் பக்கத்து நாட்டிலெ ஒருத்தரு கடங்கொடுக்காரு. அவருக்கு கடன் வாங்கினவனும் கொடுக்க வேண்டாம். வாரீசுகளும் கொடுக்க வேண்டாம். அடுத்த ஜென்மம் எடுத்தா அப்பொ வந்து கொடுத்தாப் போதும். “அடடே.. இது ரொம்ப அருமையா இருக்கே! “சரி; நாம அங்கே போவோம். இவங்க கிட்டெ வாங்கிட்டு நாம கண்ணை மூடாட்டா நம்ம வாரீசுக நம்மை ஏசிக்கிட்டே இருக்கும் ‘ண்ணூ சொல்லிட்டு அந்த நாட்டுக்குப் புறப்பட்டுப் போனாங்க ‘காட்டு வழி. பேசிக்கிட்டே நடந்து போய்க் கிட்டு இருக்காங்க. அதிலெ ஒருத்தன் சொன்னான். ‘அடுத்த ஜென்மத்திலெ நாம என்ன பிறப்புப் பிறக்கப் போறோமோ.

மனுசனாப் பிறந்தாத் தானே, அவரு கடனை நாம அடைக்கணும் “அது தானே ‘ என்று ஆதரித்தான் மற்றவனும்.(இந்தக்கதையின் தொடர்ச்சியை இன்னொரு விதமாய்ப் படிக்க வேண்டுமென்றால் இங்கே வரவும் – ஆசிரியர், திண்ணை)இந்த மாதிரி இவங்க பேச்சைக் கேட்ட யாரோ, விழுந்து விழுந்து சிரிக்கிற மாதிரி ஒரு சத்தம் கேட்டுது. கெக் கெக் கெக் கெ..ஓ கெக் கெக் கெக் கெக் கெக்கெ…இவங்க எல்லாப் பக்கமும் திரும்பிப் பாத்தாங்க. யாரையுமே காங்கலை. அந்தரத்திலெ இருந்து சிரிப்புச் சத்தம் மாத்திரம் கேட்டுப் பதறிப் போனாங்க. இவங்க பதறுனதையும் திகைக்கிறதெயும் கண்ட அந்த அசரீரி மேலும் சிரிச்சி உருண்டது.இவங்களோட திகைப்பும் பதட்டமும் நீங்குறதுக்கு முன்னாலெயே அந்தக் குரல் இவங்களைப் பாத்து ‘ ஏ அப்பா கடங்காரங்களா; என்னை உங்களுக்குத் தெரியலையா ? இந்தா பாருங்க; நாந்தான் பேசுதேன். ‘சோளக்காட்டு காவலுக்கு அங்கே போட்டிருந்த பரண் உச்சியிலெ ஒரு

மாட்டுக் கொம்பு, பூண் பிடிச்ச மாதிரி ஒரு கம்பு நுனியிலெ நட்டமா சொருகி வச்சிருந்தது. அது தான் அப்படிச் சிரிச்சதும் பேசினதும்.‘ போன ஜென்மத்திலெ நான், இப்பொ நீங்க கடன் வாங்கப் போரீகளே அவரு கிட்டத் தான் நானும் கடன் வாங்கியிருந்தேன். கடனை வாங்கி வாங்கி ரொம்பப் போடுஸா செலவழிச்சேன்.

‘இந்த ஜென்மத்திலெ அவரு தொழுவிலேயே வந்து மாடாப் பிறப்பெடுத்தேன். கண்ணுக்குட்டியா இருந்தப்பொ என் தொண்டை நனஞ்சிருக்காது தாய்ப்பாலு .காளையா வளந்த உடனே ‘பசுச் சுகம் ‘ அறியமுன்னாடி என்னை உடையடிச்சி உழவுலெ கட்டிட்டாங்க. ஆயுசு பூராவும் குளம்புக தேய முன்னும் பின்னும் நடந்து நடந்து மூக்கணாங்கயிறு மூக்கை அறுத்து ரெத்தம் கசிய அவரு தோட்டத்துக் கமலை இழுத்து தண்ணீர் இரைச்சேன். குப்பை வண்டி இழுத்தேன்.‘ஆயுசு முடிஞ்சு செத்துப் போன பிறகும் அவுகளுக்கு என் தோலை உரிச்சுக் கொடுத்து கமலைக்குக் கூனைவாலாய் தன்ணி இரைக்க உதவுனேன். கூனைவாலாகிக் கிழிஞ்ச பிறகும் அவுக வீட்டு ஆள்களுக்கு காலுக்குச் செருப்பாகி உழைச்சேன். அப்பவும் என் பாடு தீரலை. இப்போ, அவரோட தோட்டத்துக்குக் காவல் காத்துக்கிட்டிருக்கேன்.. ‘இப்படிச் சொல்லிட்டு மாட்டுக் கொம்புச் சிரிக்க ஆரம்பிச்சது. சிரிப்புச் சத்தம் கேட்டாலும் கவனிச்சுக் கேட்டா அது அழுகைச் சத்தம் போல இருந்தது.ஒண்ணும் ஓடலை இவங்களுக்கு; அப்படியே மெய்மறந்து நிண்ணுட்டாக.அப்புறம் அவங்க கடன் வாங்கப் போனாங்களா; வந்த வழியைப் பாத்துத் திரும்பிட்டாங்களா; தெரியலை.அந்த நேரத்திலெ, பல்ராம் நாயக்கரோட மகள் ஓடியாந்து ‘அய்யா மாடு அவுத்துக்கிட்டது; முட்ட வருது ஓடியா ‘ண்ணு பரபரப்பாக் கூப்பிட்டா. வேகமா எந்திரிச்ச நாயக்கரு, அவுந்த கோமணத்தெ அறணாக் கயித்லெ சொருகிக்கிட்டே அவசரமாய்ப் போயிட்டாரு.

தேள் விஷம்

(18+ வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் – நாட்டுப்புற பாலியல் கதைகள் நூலின் இருந்து).

ஒரு ஊர்ல ஒரு சம்சாரி (விவசாயி). அவம் பொண்டாட்டி பாக்க அழகா இருப்பா. அவளோட மார் அழகே தனி. அவளுக்கு அடுத்த தெருவுல கடை வச்சிருந்த ஒருத்தனோட ‘தொடுப்பு’ உண்டாயிப் போச்சு. எப்பிடின்னா…..

அவ போனா மட்டும் அவன் கடையில ஒரு கூறுப் பருத்திக்கு ரெண்டு கூறுப் பருத்திக்கு உண்டான சாமான்கள் கொடுக்கிறது. ஒழக்குத் தானியத்துக்கு அரைப்படித் தானியத்துக்கு கொடுக்கிற அளவுக்கு – ரெண்டு மடங்கு சாமான்கள் தந்தான். ஒரு நா ராத்திரி, அவ சாமான்க வாங்க வர்றதுக்கு கொஞ்சம் நேரமாயிட்டு. ஆனாலும் அவம் காத்திருந்தான். வளக்கம் போல தானியம் கொண்டு வந்தா. சாமான் வாங்குனா.

புறப்பட்டு போறதுக்கு முன்னாடி, அவ தயங்குன மாதிரி இருந்தது.

என்னெங்கிற மாதிரி அவெள ஏறிட்டுப் பார்த்தான். அப்பதாம் அவ சொல்லுவா.'ஒடம்பு ஏம் இப்பிடி மெலிஞ்சிக்கிட்டே வர்ரீறு. வைத்தியருகிட்டே கையக் காமிச்சு மருந்து ஏதாவது சாப்பிடக் கூடாதா?'

அப்பதாம் அவம் தன்னோட ஆசைய தயங்கி தயங்கிச் சொன்னாம்.

இவ அதுக்கு ஒண்ணுஞ் சொல்லாம, வேற என்னத்தையோ பத்தி அவங்கிட்டே ஒரு தகவல் விசாரிக்கிற மாதிரி விசாரிச்சா. இவம் அதுக்கு என்னத்தையோ பதில் சொன்னாம்.

இப்பிடிக் கொஞ்சம் நேரம் போச்சி. அதுக்குப் பிறகு என்ன பேசன்னுட்டுத் தெரியல. இவம்தான் சொன்னாம்.'நாளைக்கு ஓம் வீட்டுக்கு வரட்டா?'

அவ அதுக்கு ஒண்ணுஞ் சொல்லாம ஒரு 'குறுஞ்சிரிப்பாணி' சிரிச்சிட்டுப் போயிட்டா.

***

காட்லே சம்சாரி விடியுமின்னெ உழப் போனான். ஏரெக் கட்டி கொஞ்ச நேரந்தாம் உழுதிருப்பான். தண்ணிக் கலயத்தெ காக்கா உருட்டிவிட்டுட்டது.

இது என்னடா சங்கட்டம். தண்ணியில்லாம என்ன செய்ய. வெயிலேறிட்டா தண்ணி குடிக்காம முடியாதென்னு ஏரெ நிறுத்திட்டு, கலயத்தெ எடுத்திக்கிட்டு விறுவிறுன்னு வீட்டப் பாக்க வந்தாம்.

வீட்டுக் கதவு சாத்தியிருக்கு.இந்நேரத்துக்கு வீட்டுக்கதவு சாத்தியிருக்கக் காரணமில்லையே.

என்ன விசயம்னு தொறவால் தொளை (சாவி துவாரம்) வழியா உள்ளுக்குப் பாத்தா, அவம் கண்ணுக்கு ஒரு காச்சி (காட்சி) தெரியுது.

கடைக்காரன் இவம் பொண்டாட்டி மார்ல வாய வச்சி..................

படபடன்னு கதவெத் தட்டினான்.கதவு தொறந்தது. இவம் பெண்டாட்டி இவனெப் பாத்ததும் 'ஓ'ண்ணு கதறிக் கிட்டே, நல்லவேளை இப்பவாது வந்தீளே. ஏம் பாட்டெப் பாத்தீளா. இந்தக் கொடுமை உண்டுமா. இவரு இல்லேன்னா நாஞ் செத்துத்தாம் போயிருப்பேம் என்று சொல்லி அழுதாள்.

புருசங்காரனுக்கு ஒண்ணும் வெளங்கலே.

கடைக்காரனெப் பாத்தா அவம் தலெயக் கவுந்துகிட்டு ஒண்ணுஞ்சொல்லாம நிக்காம்.

என்ன, என்ன சொல்லுதே என்ன நடந்தது. வெவரமாச் சொன்னாத்தானே தெரியும்னு கேட்டான் சம்சாரி.

என்னத்தெ வெவரமாச் சொல்ல, வெக்கக் கேடு. பருத்தி மார்ப் படப்புலெ போயி பருத்தி புடுங்கி அணைச்சி எடுத்துக்கிட்டுதாம் வந்தேன். 'சுரீர்'னு மார்ல தீக்கங்கு வச்ச மாதிரி

இருந்தது. கீழபோட்டுப் பார்த்தா…சரியான கருந்தேளு. வலியான வலியில்லே. தாங்க முடியல. என்ன செய்யிறதுன்னுட்டுந் தெரியல. இவரு தேள் விசத்தை உறுஞ்சி எடுத்துருவாருன்னு சொன்னாங்க. இவரெப் போயி கூப்ட்டா, நா ஆம்பளை இல்லாத வீட்டுக்கு வரமாட்டேன்னுட்டாரு. பெறவு, நாந்தாம் சொல்லி, எம் வீட்டுக்காரரு அப்பிடியெல்லாம் நெனக்க கூடியவரு இல்லெ. அதோட ஆபத்துக்குப் பாவமில்லேன்னு கூட்டிட்டு வந்தேம். அப்போதைக்கு இப்போ தேவலைன்னாலும் வலி பொறுக்க முடியலன்னு அழுதா.

சரி…சரி…அழுவாதெ. இதெல்லாம் யாருக்கும் வரக்கூடியதாம். நம்ம என்ன செய்ய முடியும் அதுக்கு. பரவாயில்ல. அவராவது சமயத்துக்கு கூப்ட்ட ஒடனே வந்தாரெ.

'நா அங்க, தண்ணிய காக்கா கொட்டிட்டதுன்னு திரும்பவும் தண்ணி கொண்டு போறதுக்காக வந்தென்னு' கடைக்காரனுக்கு 'சமயத்துக்கு வந்து ஒதவினதுக்கு ரொம்ப உபகாரம்'னுட்டு சொல்லிட்டு, கலயத்துல தண்ணிய றெப்பிக்கிட்டுப் போயிட்டான்.

***

கொஞ்ச நா கழிஞ்சது.

ஒரு நா திடீர்னு அய்யோ தேள் கொட்டீட்டதேன்னு சம்சாரி கூப்பாடு போட்டான்.அடுப்பங் கூடத்துல வேலையா இருந்த அவம் பொண்டாட்டி எங்கே எங்கே 'தேளுதான்னுட்டுப் பாத்தீங்களா' என்று பதச்சிப் போயி வந்தா.

தேளுதாம் பாத்துட்டேன். வசமாப் பிடிச்சி மாட்டிட்டது. நல்ல கருந்தேளுன்னாம்.அய்யோ வலி பொறுக்க முடியலயே. நீ ஓடிப் போயி அந்தக் கடைக்காரனெ கையோட கூட்டிட்டு வா. ஓடு சீக்கிரம்னு அவசரப்படுத்தினான்.

அவளும் ஓட்டமும் நடையுமாப்போயி கடைக்காரன பாத்து, இன்ன மாதிரி, சங்கதி ஒடனே பொறப்பட்டு வா. நீ இப்ப வரலன்னா அவரு சந்தேகப் பட்டுடுவாரு. எந்தின்னு சொன்னா.

அவனுக்கும் நாம வர்றமா இல்லயான்னு பாக்கதுக்குதான் இதெல்லாமான்னு ஒரு எண்ணம்.

வேற வழியில்லாம அவனும் வந்தாம்.

எங்கே, எந்த எடத்துலன்னு கடைக்காரன் கேட்டாம்.

சம்சாரி வேட்டிய …………………..

தாத்தாவோட சேர்ந்து நாங்களும் சிரிச்சோம்!

'பெறவு?' என்று கேட்டாம் கிட்டான்

பெறவு என்னடா பெறவு? பெறவு பெறவுதான்.

கடைக்காரப் பயல் தப்ப முடியல. வசமா மாட்டிக்கிட்டான்.

---------

நீர்முள்ளு

(18+ வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் – நாட்டுப்புற பாலியல் கதைகள் நூலின் இருந்து).

கதை சொல்லத்தொடங்கியதும் பெரியவருக்கு சிரிப்பாணி அள்ளியது. பேச்சு முதலில் நீர முள்ளுச்செடி பற்றி வந்தது. நான் அதைப் பார்த்ததில்லை என்றேன்.

அய்யோ அது கெட்ட கழுதெயில்லா; அது பண்ணுன கூத்தைக் கேளுங்க என்று தொடங்கினார் பெரியவர்.

'இப்படித்தாம் பாருங்க, எங்க ஊர்ல ஒரு 'செவ்வாளப்பய' சரியான வெடுவாச்சுட்டி. எருமை மாட்ட மேய்ச்சுட்டு வந்து தண்ணியில அடிச்சாம்.

எருமக் களுதைக தண்ணிக்குள்ள எறங்கினா சாமானியமா வெளியேறுமா சவம். அத வெளியேத்துததுக்குள்ளே மனுசம் படுற பாடு…குளத்து கரையில ஒத்தக் கல்லு காங்க முடியாது. சுத்தி சுத்திப் பெறக்கி எரும மாட்டே எறியதேம்னு சொல்ல.

தண்ணிக்குள்ள வீசிக்கிட்டே இருந்தா எங்கென இருக்கும் கல்லு!

பய..நல்லா வேகமா நீஞ்சுவானாம். எல்லாத்தையும் களைஞ்சு எறிஞ்சுட்டு, நாளு வெரல் அகலத்துல உள்ள கோமணத்த மட்டும் வச்சுக்கிட்டு தண்ணிக்குள்ள பாஞ்சாம். அந்த இடத்துல தண்ணீக்குள்ளார 'நீருமுள்ளுச் செடி' இருந்தது அவனுக்குத் தெரியாது.

கோமணத்துல 'சுருக்'குன்னதும் சுள்ளாச்சுருக்குதாம் போலிருக்குன்னு நெனச்சு கவனிக்காம விட்டுட்டாம்.(சுள்ளாஞ்சுருக்கு – துணிகளின் மேல் ஒட்டிக் கொள்ளும் ஒருவகை புல்லின் விதை. துணியின் மீது ஒட்டிக் கொண்டு அசைவின் போது சுருக்கென்று உடம்பில் தைக்கும். இதனால் கெடுதி இல்லை; உபத்திரவம்தான்)

இந்த நீர்முள்ளுச் செடியோட முள்ளு, ரோமத்தை விட கொஞ்…சம் கனம்; அவ்வளவுதான். மஞ்சள் நிறத்துல இருக்கும். பய நிறமும் மஞ்சள்; அதனால் ஒண்ணும் தெரியல சரியா. அதோட நல்ல விளையாட்டுப் பருவம்; கக்கத்துலல்லாம் அப்பத்தாம் ரோமம் முளைக்கிற வயசுன்னு வச்சுக்கிடுங்களேம்.

ஒரு நாளாச்சி, ரெண்டு நாளாச்சு, மூணு நாளாச்சு பொதுபொதுண்ணு வீங்கிருச்சு. கோமணம் வய்க்க முடியல! பய மேலுக்கு குதுகுதுன்னு வந்துட்டு.

யாரிட்ட காணிப்பான், காணிக்க கூடிய இடமா?அண்ணைக்கி பெயலால மாட்டுக்குப் போக முடியல. இழுத்து மூடிப்படுத்துக்கிட்டு முக்கிக்கிட்டு மொனங்கிக்கிட்டும் கெடக்காம்.

ஏலே; எந்தி; நேரங்காணாதான்னு அவம் வீட்டுத்தாத்தா வந்து உசுப்பினாரு. தாத்தாகிட்ட கொஞ்சம் ஒட்டுதல் உண்டும் இவனுக்கு.

மெண்ணு மெண்ணு முழுங்கி ஒருபடியா இப்படி சங்கதின்னிட்டு சொன்னான்.

எங்கலே பாப்பம்னுட்டு பாத்தா…பெரிய மஞ்ச முள்ளங்கீக்கிழங்கு கணக்கா வீங்கிக் கிடக்கு! கண்ணாடியா மின்னுது.

அட பெயித்தியாரப்பயலே, ஆரம்பத்திலேயே சொல்லப்படாதா, இப்பிடி வீங்கிப்போச்சே, உழுவ மீனு மாதிரியில்ல ஆயிட்டுன்னு சொல்லி, பெயல கட்டுல்ல படுக்க வச்சி. பக்கத்து ஊருக்கு கொண்டு போனாவ.

பக்கத்து ஊருல, 'பார்வை' பாக்குதவரு இருக்காரு. இவுக போன நேரம் அவரு இல்லே. அவரோட சம்சாரந்தான் இருந்திச்சு. அந்தம்மாவும் 'பார்வை' பாக்கும்.

வர்றவுகளுக்கு அவதான் பார்வை பாத்துக்கிட்டிருந்தா. இவனோ வெடலைப் பெய; பொம்பளையிட்ட எப்டிக் காண்பிக்கிறதுன்னுட்டு தாத்தாவுக்கு யோசனை. சரி என்ன செய்ய. ஆபத்துக்குப் பாவமில்லன்னுட்டு அவகிட்ட இப்பிடி இப்பிடி சங்கதி; 'நோக்காதண்டி' ஆயிட்டது. நீங்கதாம் பாக்கணும்னு சொன்னாரு தாத்தா.

அதுலயா முள்ளு குத்தியிருக்கு. அதாம் அப்பிடி வீங்கியிருக்கு. அப்படீன்னா… நீங்க வேற ஆளத்தான் பாக்கணும்னு சொல்லிட்டா.

அம்மா தாயி ஒரு பக்கமும் தூக்கிட்டுப் போக முடியாது. இங்க கொண்டாந்ததே பரவாயில்ல. நீங்கதாம் காப்பாத்தணும்னு கால்லே விழாத குறையாக் கெஞ்சினாரு. அவ கிழவின்னாலும் குத்தமில்ல. கொஞ்ச வயசுக்காரி. கிழவனார் தாத்தா சொன்னதுல இருந்து மனசுக்குள்ள 'நோக்காத் தண்டியா…நோக்காத்தண்டியா – அப்பிடின்னா பாக்கணுமே அதன்னு ஆசை!

சரி கொண்டாங்கன்னா.

கட்டுலோட தூக்கிட்டு வந்தாங்க. பயலெப் பாத்தா. பாத்ததுமே பிடிச்சுப் போச்சு. சரி இருக்கட்டும்னு நெனச்சி, தன்னோட கண்ணெ துணியால கட்டிக்கிட்டு, அவனோட கண்ணெயும் கட்டச் சொல்லிட்டு வேப்பங் கொழய சுழத்தி வீசி வீசி மந்திரம் சொல்ல ஆரம்பிச்சா.

மந்திரம் வர்றதுக்கு பதிலா வாய்லேர்ந்து நோக்காத்தண்டி நோக்காத்தண்டின்னுட்டுதான் வருது!

அய்யோ நோக்காதண்ணியா அத நாம் பாக்கணுமேன்னுதான் மந்திரம் வருது.

ஒன்றரை மணிநேரம் வேப்பங்கொழை அடிச்சாச்சி! மந்திரமும் ஓதியாச்சு.

வீக்கங் குறைஞ்சிருக்கா; வலி நின்னுருக்கான்னு கேட்டா.

வீக்கங் கொறயல. வலியும் நிக்கலேன்னு சொன்னதும் ‘சரி இதுக்கு வேற பக்குவந்தாம் செய்யணும். எல்லாரும் முதல்ல சத்தோடம் வெளியே நில்லுங்கன்னா. எல்லாரும் வெளியேப் போயாச்சு. கதவ ஒருச்சாச்சு வச்சிக்கிட்டா. தன்னோட கண்கட்ட அவுத்துட்டு, ஒரு ‘கோழி ரோமம்’ எடுத்தா.

வீங்குனதும்பேர்ல அப்படியோ பட்டதும் படலையோன்னு மேலும் கீழுமா ரோசுனா. அந்த வலியிலேயும் பயலுக்கு அப்படியே சொகமா இருக்கவும் கொஞ்சங் கொஞ்சமா ‘உசுருத்தலத்துக்கு’ உசுரு வர ஆரம்பிச்சது. விரிய விரியவும் சலம் தன்னப்போல ஒடஞ்சு வெளியேறவும் பயலுக்கு வலிக்கவும் செய்யுது. சொகமாவும் இருக்கு. அப்பிடியே பெறத்தால கையிரண்டையும் கட்டில் சட்டத்துல ஊனிக்கிட்டு முக்குதாம் மொனங்குதாம்;

மறி மோத்திரத்த குடிச்ச கெடாக்கணக்கா சத்தங் கொடுக்காம்! வெளியில நின்ன தாத்தாவுக்கு வாயெல்லாம் பல்லு!! சலத்தோட முள்ளு வெளியில வாரது மாதிரி அவருக்கு மனசுல தோணுது.

ஆனா இங்க செலந்தா வந்திருக்கு. முள்ளெக் காணோம். முக்காவாசி செலம் வந்திட்டதும் பயலுக்கு வலி குறைஞ்சிட்டது. முள்ள இனி பிதுக்கித்தாம் எடுக்கணும். உயிர்த்தலத்த பிதுக்கினா தாங்கமாட்டாம். திரும்பவும் கோழி ரோமத்தால தடவிக்கொடுத்தா. பிறவு அப்படியே நாக்கால தடவவும் பயலுக்கு வலிக்கு சூடா ஒத்தனங் கொடுத்த்து போல எதமா இருந்திச்சு. முள்ளு வர்ற மாதிரித் தெரியல. பல்லுபடாம பதனமா வலி தெரியாம இதமா சுவைச்சு உறிஞ்சி துப்புனா. சின்ன ரோமத்தண்டி விழுந்து கிடந்த்து. இப்ப எப்பிடி இருக்குன்னு கேட்டா.

செத்த தேவலன்னாம்

எப்பிடித் தச்சது முள்ளுன்னு கேட்டா

வெவரம் எல்லாத்தையும் ஒண்ணு விடாமச் சொன்னாம். ஒரு முள்ளுதாம் தச்சதாம்னு கேட்டு எல்லாப்பக்கத்தையும் பாத்தா.

தாத்தா சொன்னது சரிதாம்னு பட்டது அவளுக்கு

இது விச முள்ளு. இன்னும் நாலு நேரமாவது மந்திரிக்கணும். போயிட்டு மூணாம்பக்கம் வான்னு சொல்லி ஒரு பச்சிலையை அறைச்சிப் போடுன்னு சொல்லிக் கொடுத்தா.

இப்ப வலியில்ல. ஆனாலும் மூணாம் பக்கம் மந்திரிக்கப் போனோம்.

விச முள்ளுல்லா. கூடவே நாலு தரம் மந்திரிச்சாம்.

மந்திரிக்க மந்திரிக்கதாம் தெரிஞ்சது நீர் முள்ளோட அருமை அவனுக்கு.

கதை சொல்லத்தொடங்கியதும் பெரியவருக்கு சிரிப்பாணி அள்ளியது. பேச்சு முதலில் நீர் முள்ளுச்செடி பற்றி வந்தது. நான் அதைப் பார்த்ததில்லை என்றேன்.அய்யோ அது கெட்ட கழுதெயில்லா; அது பண்ணுன கூத்தைக் கேளுங்க என்று தொடங்கினார் பெரியவர்.‘இப்படித்தாம் பாருங்க, எங்க ஊர்ல ஒரு ‘செவ்வாளப்பய’ சரியான வெடுவாச்சுட்டி. எருமை மாட்ட மேய்ச்சுட்டு வந்து தண்ணியில அடிச்சாம்.எருமக் களுதைக தண்ணிக்குள்ள எறங்கினா சாமானியமா வெளியேறுமா சவம். அத வெளியேத்துததுக்குள்ளே மனுசம் படுற பாடு…குளத்து கரையில ஒத்தக் கல்லு காங்க முடியாது. சுத்தி சுத்திப் பெறக்கி எரும மாட்டே எறியதேம்னு சொல்ல.

தண்ணிக்குள்ள வீசிக்கிட்டே இருந்தா எங்கென இருக்கும் கல்லு!பய..நல்லா வேகமா நீஞ்சுவானாம். எல்லாத்தையும் களைஞ்சு எறிஞ்சுட்டு, நாளு வெரல் அகலத்துல உள்ள கோமணத்த மட்டும் வச்சுக்கிட்டு தண்ணிக்குள்ள பாஞ்சாம். அந்த இடத்துல தண்ணீக்குள்ளார ‘நீருமுள்ளுச் செடி’ இருந்தது அவனுக்குத் தெரியாது.கோமணத்துல ‘சுருக்’குன்னதும் சுள்ளாச்சுருக்குதாம் போலிருக்குன்னு நெனச்சு கவனிக்காம விட்டுட்டாம்.(சுள்ளாஞ்சுருக்கு – துணிகளின் மேல் ஒட்டிக் கொள்ளும் ஒருவகை புல்லின் விதை. துணியின் மீது ஒட்டிக் கொண்டு அசைவின் போது சுருக்கென்று உடம்பில் தைக்கும். இதனால் கெடுதி இல்லை; உபத்திரவம்தான்)இந்த நீர்முள்ளுச் செடியோட முள்ளு, ரோமத்தை விட கொஞ்…சம் கனம்; அவ்வளவுதான். மஞ்சள் நிறத்துல இருக்கும். பய நிறமும் மஞ்சள்; அதனால் ஒண்ணும் தெரியல சரியா. அதோட நல்ல விளையாட்டுப் பருவம்; கக்கத்துலல்லாம் அப்பத்தாம் ரோமம் முளைக்கிற வயசுன்னு வச்சுக்கிடுங்களேம்.

ஒரு நாளாச்சி, ரெண்டு நாளாச்சு, மூணு நாளாச்சு பொதுபொதுண்ணு வீங்கிருச்சு. கோமணம் வய்க்க முடியல! பய மேலுக்கு குதுகுதுன்னு வந்துட்டு.யாரிட்ட காணிப்பான், காணிக்க கூடிய இடமா?அண்ணைக்கி பெயலால மாட்டுக்குப் போக முடியல. இழுத்து மூடிப்படுத்துக்கிட்டு முக்கிக்கிட்டு மொனங்கிக்கிட்டும் கெடக்காம்.ஏலே; எந்தி; நேரங்காணாதான்னு அவம் வீட்டுத்தாத்தா வந்து உசுப்பினாரு. தாத்தாகிட்ட கொஞ்சம் ஒட்டுதல் உண்டும் இவனுக்கு.மெண்ணு மெண்ணு முழுங்கி ஒருபடியா இப்படி சங்கதின்னிட்டு சொன்னான்.எங்கலே பாப்பம்னுட்டு பாத்தா…பெரிய மஞ்ச முள்ளங்கீக்கிழங்கு கணக்கா வீங்கிக் கிடக்கு! கண்ணாடியா மின்னுது.அட பெயித்தியாரப்பயலே, ஆரம்பத்திலேயே சொல்லப்படாதா, இப்பிடி வீங்கிப்போச்சே, உழுவ மீனு மாதிரியில்ல ஆயிட்டுன்னு சொல்லி, பெயல கட்டுல்ல படுக்க வச்சி. பக்கத்து ஊருக்கு கொண்டு போனாவ.

பக்கத்து ஊருல, ‘பார்வை’ பாக்குதவரு இருக்காரு. இவுக போன நேரம் அவரு இல்லே. அவரோட சம்சாரந்தான் இருந்திச்சு. அந்தம்மாவும் ‘பார்வை’

பாக்கும்.வர்றவுகளுக்கு அவதான் பார்வை பாத்துக்கிட்டிருந்தா. இவனோ வெடலைப் பெய; பொம்பளையிட்ட எப்டிக் காண்பிக்கிறதுன்னுட்டு தாத்தாவுக்கு யோசனை. சரி என்ன செய்ய. ஆபத்துக்குப் பாவமில்லன்னுட்டு அவகிட்ட இப்பிடி இப்பிடி சங்கதி; 'நோக்காதண்டி' ஆயிட்டது. நீங்கதாம் பாக்கணும்னு சொன்னாரு தாத்தா.அதுலயா முள்ளு குத்தியிருக்கு. அதாம் அப்பிடி வீங்கியிருக்கு. அப்படீன்னா… நீங்க வேற ஆளத்தான் பாக்கணும்னு சொல்லிட்டா.அம்மா தாயி ஒரு பக்கமும் தூக்கிட்டுப் போக முடியாது. இங்க கொண்டாந்ததே பரவாயில்ல. நீங்கதாம் காப்பாத்தணும்னு கால்லே விழாத குறையாக் கெஞ்சினாரு. அவ கிழவின்னாலும் குத்தமில்ல. கொஞ்ச வயசுக்காரி. கிழவனார் தாத்தா சொன்னதுல இருந்து மனசுக்குள்ள 'நோக்காத் தண்டியா…நோக்காத்தண்டியா – அப்பிடின்னா பாக்கணுமே அதன்னு ஆசை!சரி கொண்டாங்கன்னா.கட்டுலோட தூக்கிட்டு வந்தாங்க. பயலெப் பாத்தா. பாத்ததுமே பிடிச்சுப் போச்சு.

சரி இருக்கட்டும்னு நெனச்சி, தன்னோட கண்ணெ துணியால கட்டிக்கிட்டு, அவனோட கண்ணெயும் கட்டச் சொல்லிட்டு வேப்பங் கொழுய சுழத்தி வீசி வீசி மந்திரம் சொல்ல ஆரம்பிச்சா.மந்திரம் வர்றதுக்கு பதிலா வாய்லேர்ந்து நோக்காத்தண்டி நோக்காத்தண்டின்னுட்டுதான் வருது!அய்யோ நோக்காதண்ணியா அத நாம் பாக்கணுமேன்னுதான் மந்திரம் வருது.ஒன்றரை மணிநேரம் வேப்பங்கொழை அடிச்சாச்சி! மந்திரமும் ஓதியாச்சு.வீக்கங் குறைஞ்சிருக்கா; வலி நின்னுருக்கான்னு கேட்டா.வீக்கங் கொறயல. வலியும் நிக்கலேன்னு சொன்னதும் 'சரி இதுக்கு வேற பக்குவந்தாம் செய்யணும். எல்லாரும் முதல்ல சத்தோடம் வெளியே நில்லுங்கன்னா. எல்லாரும் வெளியேப் போயாச்சு. கதவ ஒருச்சாச்சு வச்சிக்கிட்டா. தன்னோட கண்கட்ட அவுத்துட்டு, ஒரு 'கோழி ரோமம்' எடுத்தா.வீங்குனதும்பேர்ல அப்படியோ பட்டதும் படலையோன்னு மேலும் கீழுமா ரோசுனா. அந்த வலியிலேயும் பயலுக்கு அப்படியே சொகமா இருக்கவும் கொஞ்சங் கொஞ்சமா 'உசுருத்தலத்துக்கு' உசுரு வர ஆரம்பிச்சது. விரிய விரியவும் சலம் தன்னப்போல ஒடஞ்சு வெளியேறவும் பயலுக்கு வலிக்கவும் செய்யுது.

சொகமாவும் இருக்கு. அப்பிடியே பெறத்தால கையிரண்டையும் கட்டில் சட்டத்துல ஊனிக்கிட்டு முக்குதாம் மொனங்குதாம்;மறி மோத்திரத்த குடிச்ச கெடாக்கணக்கா சத்தங் கொடுக்காம்! வெளியில நின்ன தாத்தாவுக்கு வாயெல்லாம் பல்லு!! சலத்தோட முள்ளு வெளியில வாரது மாதிரி அவருக்கு மனசுல தோணுது.ஆனா இங்க செலந்தா வந்திருக்கு. முள்ளெக் காணோம். முக்காவாசி செலம் வந்திட்டதும் பயலுக்கு வலி குறைஞ்சிட்டது. முள்ள இனி பிதுக்கித்தாம் எடுக்கணும். உயிர்த்தலத்த பிதுக்கினா தாங்கமாட்டாம்.

திரும்பவும் கோழி ரோமத்தால தடவிக்கொடுத்தா. பிறவு அப்படியே நாக்கால தடவவும் பயலுக்கு வலிக்கு சூடா ஒத்தனங் கொடுத்து போல எதமா இருந்திச்சு.

முள்ளு வர்ற மாதிரித் தெரியல. பல்லுபடாம பதனமா வலி தெரியாம இதமா சுவைச்சு உறிஞ்சி துப்புனா. சின்ன ரோமத்தண்டி விழுந்து கிடந்த்து. இப்ப எப்பிடி இருக்குன்னு கேட்டா.செத்த தேவலன்னாம்எப்பிடித் தச்சது முள்ளுன்னு கேட்டாவெவரம் எல்லாத்தையும் ஒண்ணு விடாமச் சொன்னாம். ஒரு முள்ளுதாம் தச்சதாம்னு கேட்டு எல்லாப்பக்கத்தையும் பாத்தா.

தாத்தா சொன்னது சரிதாம்னு பட்டது அவளுக்குஇது விச முள்ளு. இன்னும் நாலு நேரமாவது மந்திரிக்கணும். போயிட்டு மூணாம்பக்கம் வான்னு சொல்லி ஒரு பச்சிலையை அறைச்சிப் போடுன்னு சொல்லிக் கொடுத்தா.இப்ப வலியில்ல. ஆனாலும் மூணாம் பக்கம் மந்திரிக்கப் போனோம்.விச முள்ளுல்லா. கூடவே நாலு தரம் மந்திரிச்சாம்.மந்திரிக்க மந்திரிக்கதாம் தெரிஞ்சது நீர் முள்ளோட அருமை அவனுக்கு.

--------------

இருதலைமணியன்

(18+ வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் – நாட்டுப்புற பாலியல் கதைகள் நூலின் இருந்து).

ஆண்பிள்ளை ஒருத்தனுக்கு ரெண்டு 'இது' இருந்தது. பிறவியிலேயே அவனுக்கு இப்படி அமைஞ்சிருந்த்து. ரொம்ப அபூர்வந்தான் இது.

அஞ்சிதலை நாகம் ஏழுதலை நாகம் இப்பிடி இருக்கது போல அபூர்வமா இப்படி கோடியில ஒருத்தனுக்கு அமையுமோ என்னவோ

இன்னொரு அதிசயம், அவனுக்கு இப்பிடி இருந்ததுனாலயோ என்னவோ ரெண்டு ஆள் பலமும் வீரியமும் இருந்த்து.

ஒருத்தரு சொன்னாரு 'இருக்கும். ரெண்டு 'இது' இருந்தா ரெண்டாள் பலம் இருக்கத்தானே செய்யும்! அவரு சொன்னது ஏடாசியா நெசமான்னு தெரியலன்னாலும் எல்லாரும் சிரிச்சாங்க.

இப்பிடி இருந்ததுனால அவனுக்கு 'இருதலைமணியன்'னு பட்டப் பேரு ஏற்பட்டுப்போச்சு!

எல்லோரும் அவனெ ரொம்ப கேலி பண்ணுனதுனால அவம் ஊரெ வுட்டே காணாம போய்ட்டாம். ரொம்ப தூர ஊர்ல போயி, யாரும் முகந்தெரியாத இடத்துல போயி வேல செஞ்சி பிழைக்கிறதுன்னு ஆயிட்டது.

அங்கே யாருக்கும் இது தெரியாம இருக்கும்படியா பாத்துக்கிட்டாம்.

பய வளந்து இளவட்டு ஆனாம். பாக்கவும் லெட்சணமா இருந்தாம்.

இப்பிடி இருக்கையில, அவனும் மனுசம்தானே, அவனுக்கு பொம்பளை ஆசை வந்தது.

வராதா பின்ன என்று கூட்டத்துல ஒருத்தர் சொன்னார்.

வேல செஞ்சி சம்பாதிச்ச பணத்துல கொஞ்சம் மிச்சம் வச்சி, ஒரு நா 'தேவிடியாக்குடி' போனாம்.

அங்கே ஒருத்தி பாத்துக்கிட்டா அத.

அவளுக்கு இது அதிசயமா இருந்தது. வித்தியாசமா இருந்தது. அதனால அவ அவன வெளியவிடாம ராத்திரிபூரா தங்கிட்டயே வச்சிக்கிட்டா.

காலையில ஆத்துக்கு அவ குளிக்கப்போன எடத்துல தனக்கு வேண்டப்பட்ட சிநேகிதக்காரிக்கிட்ட இதெ சொல்லிச் சொல்லி சந்தோசப்பட்டா.

சிநேகிதக்காரிக்கும் இப்படியாப்பட்ட காரியங்கள்ள ரொம்ப பிரியம். அதனால அவ, நா இப்பவே ஓங்கூட வர்றேம். நானும் அதெப் பாக்கேண்டாமான்னு புறப்பட்டுட்டா.

அவ அத பாத்து அனுபவிச்சுட்டு அவளோட சேத்திக்காரி நாலு பேரு கிட்ட சொன்னா.

ஆக இப்பிடி இந்த ரகசியம் தீயாப் பரவி இந்த விசயத்துல ரொம்ப பிரியமான பொம்பளைகளுக்கெல்லாம் தெரிஞ்சி, பயலுக்கு ஒரே கிறுக்கு ஆயிட்டுது.

இருக்காதா பின்னே என்றார் ஒருத்தர்.

இப்பல்லாம் அவன் வேலைக்கே போறதில்ல

அவனோட 'சங்கதி' விஷயம் அந்த நாட்டோட அரண்மன அந்தப்புரத்துக்குள்ளேயும் போயிட்டு. மகாராணிக்கு ரொம்ப வேண்டப்பட்ட ஒரு சேடிப் பொண்ணு பாத்து வந்து சொல்லிட்டா.

இப்ப மகாராணிக்கும் அதெப் பாக்கணும்னு ஆயிட்டது.

அந்த சேடிப்பொண்ணு மூலமாவே மகாராணி அவனுக்கு ரகசியமா தாக்கல் சொல்லி அனுப்பிச்சா.

அவம் பதறிப் போயிட்டாம். இதேதுடா சங்கட்டம். வம்புல போயி மாட்டுவம் போலுக்கேன்னு நெனச்சி அவகிட்ட ஏத்தா நீ என்னமோ ஆசெப்பட்ட வந்தே போனேன்னு இருக்காம இதெப் போயி அரண்மனையில மகாராணியிட்ட பத்த வெச்சிட்டயெ. அப்படியாப்பட்ட இடத்துக்கெல்லாம் நாம போவலாமா?

அதுக பேன் எடுத்தாலும் எடுக்கும், காத அத்தாலும் அத்துருமே. என்னால முடியாது ஆத்தா. நா வர மாட்டேன்னாம்.

நீ ஒண்ணும் பயப்படவேண்டாம். மகாராணிக்கு இதுல எல்லாம் பிரியம் சாஸ்த்தி. ஒன்னெ 'பொன்னுங்கண்ணுமா' வச்சிக்கிடுவா. சும்மா வா; அங்கே வந்துட்டே ராசாக்கணக்கா இருக்கலாம்னா.

ஏத்தா என்னே ஆளவிடுன்னு சொல்லிப்பாத்தாம்.

இந்தா பாரு இது மகாராணியோட ஆக்கின. நீ வல்லேன்னா இப்ப ஒந்தலைக்கு கத்திதாம் காத்துக்கிட்டிருக்கு. தப்பிக்க முடியாது பாத்துக்க.

அங்க வந்து இருக்க ஒனக்கு என்ன கொள்ள. நல்..லா தின்னுட்டு பொலிகாள போல இருக்க வலிக்கா உனக்கு? மரியாதையா எந்திரிச்சி எம் பொறத்தால வான்னா.

நல்லா ரோசிச்சுப் பாத்தாம். இங்க இப்பிடி அரையுங் கொறையுமா தின்னுக்கிட்டு இந்த முண்டெக கூட லோலுப்பட்டுக்கிட்டு இருக்கத விட அங்கென போயி ராசாக்கணக்க இருக்கலாம்னு தோணிச்சி. சரீன்னுட்டாம்.

பொண்ணு வேசம் போட்டு ராத்திரியோட ராத்திரியா சேடிப்பொண்ணு கூடவே ராணியோட அந்தப்புரம் போயிச் சேந்தாம்.

அப்ப ராசா நகரத்துல இல்ல. வேட்டையாடப் போயிருந்தாரு. வேட்டையாடப் போனா அங்க கொஞ்ச நா தங்கி இருந்துட்டுதாம் வருவாரு. அதனால இங்க இவம்பாடு வேட்டையா இருந்திச்சி.

சாதாரண விசயமா இருந்தா பரவா இல்லாம இருக்கும். இது அதிசயமான விசயமாச்சே. எப்பிடியோ பொட்டைச்சிக மத்தீயில கிசுகிசுப்பாயி இது இன்னொரு ராணிக்குத் தெரிஞ்சு போச்சி. அவளும் ராசாவுக்குப் பிரியமான ஒரு மகாராணிதாம்.

அவ மாத்திரம் என்ன.. நான் பாக்கேண்டாமான்னு கேட்டனுப்பிச்சா

இது நாம்பாத்துக் கொண்டாந்தது. நா வச்சிருக்கேம். ஒனக்கென்ன? வேணும்னா நீ பாத்து ஒண்ணெ கொண்டாந்து வச்சிக்கயேம்னா

அது என்ன அம்புட்டு லேசாக் கிடச்சிருமா. அதெ எப்பிடிக் கண்டு புடிக்கது!

அதென்னமோ எனக்குத் தெரியாது. எனக்கு வேணும். அது எப்பிடித்தாம் இருக்குதுன்னு நாம் பாக்கணும்னு சொல்லி அனுப்பிச்சா அந்த இன்னொரு ராணி.

இப்பிடியே இவுகளுக்குள்ள ஒரு ‘எசலிப்பு’ ஏற்பட்டு, ராசா வேட்டையிலிருந்து திரும்புறதுக்கு முன்னாடி அவரு காது வரைக்கும் போயிட்டுது சண்டை. ராசாவுக்கு கோவமான கோவமில்ல’. அண்ட கடாரம் முட்டிப் போச்சி

‘தாயோளிது’ ஏம் அரமனைக்குள்ளாற வந்து அப்பிடி ஒரு பய வந்து இருக்க அவனுக்கு என்ன ரெண்டு ‘இதா’ இருக்குன்னு கேட்டாரு.

ஆமா ராசா…அப்பிடித்தாம் கேள்வி; அவனுக்கு ரெண்டுதாம் இருக்கும்னாங்க.

சே..இது மோசக் கேடுல்லா வந்து சேந்திருக்கு. அவனப் புடுச்சி அப்பிடியே அதும்மேல யானைய விட்டு மிதிக்க வச்சிக் கொன்னுப்புடுங்கன்னு ஆக்கின அனுப்பிச்சிட்டாரு.

இது எப்பிடியோ மகாராணிக்கு வேண்டியவன் ஒருத்தன் அங்கிருந்து ரகசியமாச் சொல்லி அனுப்பிச்சி ‘இருதலைமணியனை’ தப்பி ஓடி போகச் சொல்லிட்டா ராணி.

பயல் எங்கே போனானோ தெரியல. தல மறைவாயிட்டாம். ஏதோ வேலை செஞ்சி பொழக்க முடிஞ்சதே தவிர, முந்திய மாதிரி பொம்பளைகிட்ட போயி 'நல்லாப் பொல்லா' இருக்க முடியல; இருந்தாத்தாம் தெரிஞ்சி போகுமே.

ராசா முரசு அறஞ்சி தேசம் பூராவும் அறிவிச்சிட்டாரு. இன்ன இன்ன மாதிரி அடயாளம் உள்ள இளந்தாரிப்பயல புடுச்சி யாரு தர்றாங்களோ அவர்களுக்கு பதினாயிரம் களஞ்சிப் பொன் தர்றதாக!

வேலை செய்ய மாச்சப் பட்டவெனெல்லாம் மந்தை,சந்தை,வெளிக்கிருக்குத இடம் இப்பிடி எவனுக்கு ரெண்டு இது இருக்குன்னு தேடிக்கிட்டு அலையுதாங்க.

சும்மாவா பதினாயிரங்களஞ்சி பொன்னுல்லா!

இந்தப்பய யாரு கண்ணுலயும் காங்காம அலைஞ்சி திரிஞ்சதுல உடம்பு பூரா முடி காடா வளந்து போச்சு. ஒரு நா நாசுவம் கிட்ட போயி 'ஏடே எனக்கு உடம்பு சவரம் பண்ணனும். நா ஆத்துல இந்த மரத்துக்குக் கீழ இருக்கேம். வந்து செஞ்சயனா ஒனக்கு ஒரு களஞ்சிப் பொன்னு தருவேம்னு சொல்ல நாசுவனும் சரி போங்க வர்றேம்னாம்.

இவம் போயி மரத்து எணல்ல மறைவான இடம் பாத்து மணல்ல 'ஒண்ணைப்' பொதச்சு வச்சி உக்காந்துக்கிட்டு இருந்தாம் கண்டுபிடிச்சிரக்கூடாதேன்னு. நாசுவன் கிண்ணத்துல தண்ணி எடுத்துக்கிட்டு வந்து எதுர்க்க மணல்ல உக்காந்துக்கிட்டு தண்ணிய விட்டு நல்ல இவன தேச்சிவிட்டாம்.

பயலுக்கு 'பாத்து' ரொம்ப நாளாச்சி. அதுலயும் வேத்து மனுசன் கைப்பட்டதும் தேச்சதும் சேந்து, மணலுக்குள்ள தெரியாம இருக்க பொதச்சு வச்சிருந்தது 'படார்'னு வேகமா எந்திரிச்சதுல நாசுவம் கண்ணுல மணலு விழ, அவம் சத்தம் போட்டு 'யப்பா…நீதானா அது'ன்னு கேட்டுட்டாம்.

பிடிச்சானே ஓட்டம்.

யய்யா எனக்கு கண்ணுல மண்ணு விழுந்தாலும் குத்தமில்ல. பதினாயிரங் களஞ்சி பொன்னு வேண்டாம். அந்த ஒத்த களஞ்சி பொன்னாவது குடுத்துட்டு போரும்னு இவம் பொறத்தாலயே ஓட, அங்க ஆத்துல குளிச்சிட்டு வேட்டியக் காயப் போட்டுட்டு இருந்தவங்கள்லாம் என்ன ஏதுன்னு கேக்க…

'அய்யோ போகுதே பதினாயிரங் களஞ்சிப் பொன்னு போகுதேன்னு' இவம் கூப்பாடு போட, அங்கே ஒரே அவக்காடு ஆயிட்டு.

'பெறகென்ன…போனவம் போனவந்தாம்'

ராசா அவனத் தேடிட்டிருக்காம். ராணியும் தேடிட்டிருக்கா.

பாத்தாச் சொல்லுங்க. பதினாயிரம் களஞ்சியம் பொன்னு கெடக்கும்.

ஆண்பிள்ளை ஒருத்தனுக்கு ரெண்டு ‘இது’ இருந்தது. பிறவியிலேயே அவனுக்கு இப்படி அமைஞ்சிருந்த்து. ரொம்ப அபூர்வந்தான் இது.அஞ்சிதலை நாகம் ஏழுதலை நாகம் இப்பிடி இருக்கது போல அபூர்வமா இப்படி கோடியில ஒருத்தனுக்கு அமையுமோ என்னவோஇன்னொரு அதிசயம், அவனுக்கு இப்பிடி இருந்ததுனாலயோ என்னவோ ரெண்டு ஆள் பலமும் வீரியமும் இருந்த்து.ஒருத்தரு சொன்னாரு ‘இருக்கும். ரெண்டு ‘இது’ இருந்தா ரெண்டாள் பலம் இருக்கத்தானே செய்யும்! அவரு சொன்னது ஏடாசியா நெசமான்னு தெரியலன்னாலும் எல்லாரும் சிரிச்சாங்க.இப்பிடி இருந்ததுனால அவனுக்கு ‘இருதலைமணியன்’னு பட்டப் பேரு ஏற்பட்டுப்போச்சு!எல்லோரும் அவனெ ரொம்ப கேலி பண்ணுனதுனால அவம் ஊரெ வுட்டே காணாம போய்ட்டாம். ரொம்ப தூர ஊர்ல போயி, யாரும் முகந்தெரியாத இடத்துல போயி வேல செஞ்சி பிழைக்கிறதுன்னு ஆயிட்டது.அங்கே யாருக்கும் இது தெரியாம இருக்கும்படியா பாத்துக்கிட்டாம்.பய வளந்து இளவட்டு ஆனாம்.

பாக்கவும் லெட்சணமா இருந்தாம்.இப்பிடி இருக்கையில, அவனும் மனுசம்தானே, அவனுக்கு பொம்பளை ஆசை வந்தது.வராதா பின்ன என்று கூட்டத்துல ஒருத்தர் சொன்னார்.வேல செஞ்சி சம்பாதிச்ச பணத்துல கொஞ்சம் மிச்சம் வச்சி, ஒரு நா ‘தேவிடியாக்குடி’ போனாம்.அங்கே ஒருத்தி பாத்துக்கிட்டா அத.அவளுக்கு இது அதிசயமா இருந்தது. வித்தியாசமா இருந்தது. அதனால அவ அவன வெளியவிடாம ராத்திரிபூரா தங்கிட்டயே வச்சிக்கிட்டா.காலையில ஆத்துக்கு அவ குளிக்கப்போன எடத்துல தனக்கு வேண்டப்பட்ட சிநேகிதக்காரிக்கிட்ட இதெ சொல்லிச் சொல்லி சந்தோசப்பட்டா.சிநேகிதக்காரிக்கும் இப்படியாப்பட்ட காரியங்கள்ள ரொம்ப பிரியம். அதனால அவ, நா இப்பவே ஒங்கூட வர்றேம். நானும் அதெப் பாக்கேண்டாமான்னு புறப்பட்டுட்டா.அவ அத பாத்து அனுபவிச்சுட்டு அவளோட சேத்திக்காரி நாலு பேரு கிட்ட சொன்னா.ஆக இப்பிடி இந்த ரகசியம் தீயாப் பரவி இந்த விசயத்துல ரொம்ப பிரியமான பொம்பளைகளுக்கெல்லாம் தெரிஞ்சி, பயலுக்கு ஒரே கிறுக்கு ஆயிட்டுது.இருக்காதா பின்னே என்றார் ஒருத்தர்.இப்பல்லாம் அவன் வேலைக்கே போறதில்லஅவனோட ‘சங்கதி’ விஷயம் அந்த நாட்டோட அரண்மன அந்தப்புரத்துக்குள்ளேயும் போயிட்டு.

மகாராணிக்கு ரொம்ப வேண்டப்பட்ட ஒரு சேடிப் பொண்ணு பாத்து வந்து சொல்லிட்டா.இப்ப மகாராணிக்கும் அதெப் பாக்கணும்னு ஆயிட்டது.அந்த சேடிப்பொண்ணு மூலமாவே மகாராணி அவனுக்கு ரகசியமா தாக்கல் சொல்லி அனுப்பிச்சா.அவம் பதறிப் போயிட்டாம். இதேதுடா சங்கட்டம். வம்புல போயி மாட்டுவம் போலுக்கேன்னு நெனச்சி அவகிட்ட ஏத்தா நீ என்னமோ ஆசெப்பட்ட வந்தே போனேன்னு இருக்காம இதெப் போயி அரண்மனையில மகாராணியிட்ட பத்த வெச்சிட்டயெ. அப்படியாப்பட்ட இடத்துக்கெல்லாம் நாம போவலாமா?அதுக பேன் எடுத்தாலும் எடுக்கும், காத அத்தாலும் அத்துருமே. என்னால முடியாது ஆத்தா. நா வர மாட்டேன்னாம்.நீ ஒண்ணும் பயப்படவேண்டாம். மகாராணிக்கு இதுல எல்லாம்

பிரியம் சாஸ்த்தி. ஒன்னெ 'பொன்னுங்கண்ணுமா' வச்சிக்கிடுவா. சும்மா வா; அங்கே வந்துட்டே ராசாக்கணக்கா இருக்கலாம்னா.ஏத்தா என்னே ஆளவிடுன்னு சொல்லிப்பாத்தாம்.இந்தா பாரு இது மகாராணியோட ஆக்கின. நீ வல்லேன்னா இப்ப ஒந்தலைக்கு கத்திதாம் காத்துக்கிட்டிருக்கு. தப்பிக்க முடியாது பாத்துக்க.அங்க வந்து இருக்க ஒனக்கு என்ன கொள்ள.

நல்லா தின்னுட்டு பொலிகாள போல இருக்க வலிக்கா உனக்கு? மரியாதையா எந்திரிச்சி எம் பொறத்தால வான்னா.நல்லா ரோசிச்சுப் பாத்தாம். இங்க இப்பிடி அரையுங் கொறையுமா தின்னுக்கிட்டு இந்த முண்டெக கூட லோலுப்பட்டுக்கிட்டு இருக்கத விட அங்கென போயி ராசாக்கணக்க இருக்கலாம்னு தோணிச்சி. சரீன்னுட்டாம்.பொண்ணு வேசம் போட்டு ராத்திரியோட ராத்திரியா சேடிப்பொண்ணு கூடவே ராணியோட அந்தப்புரம் போயிச் சேந்தாம்.அப்ப ராசா நகரத்துல இல்ல. வேட்டையாடப் போயிருந்தாரு. வேட்டையாடப் போனா அங்க கொஞ்ச நா தங்கி இருந்துட்டுதாம் வருவாரு. அதனால இங்க இவம்பாடு வேட்டையா இருந்திச்சி.சாதாரண விசயமா இருந்தா பரவா இல்லாம இருக்கும். இது அதிசயமான விசயமாச்சே. எப்பிடியோ பொட்டைச்சிக மத்தீயில கிசுகிசுப்பாயி இது இன்னொரு ராணிக்குத் தெரிஞ்சு போச்சி. அவளும் ராசாவுக்குப் பிரியமான ஒரு மகாராணிதாம்.அவ மாத்திரம் என்ன.. நான் பாக்கேண்டாமான்னு கேட்டனுப்பிச்சாஇது நாம்பாத்துக் கொண்டாந்தது. நா வச்சிருக்கேம். ஒனக்கென்ன? வேணும்னா நீ பாத்து ஒண்ணெ கொண்டாந்து வச்சிக்கயேம்னாஅது என்ன அம்புட்டு லேசாக் கிடச்சிருமா.

அதெ எப்பிடிக் கண்டு புடிக்கது!அதென்னமோ எனக்குத் தெரியாது. எனக்கு வேணும். அது எப்பிடித்தாம் இருக்குதுன்னு நாம் பாக்கணும்னு சொல்லி அனுப்பிச்சா அந்த இன்னொரு ராணி.இப்பிடியே இவுகளுக்குள்ள ஒரு 'எசலிப்பு' ஏற்பட்டு, ராசா வேட்டையிலிருந்து திரும்புறதுக்கு முன்னாடி அவரு காது வரைக்கும் போயிட்டுது சண்டை. ராசாவுக்கு கோவமான கோவமில்ல'. அண்ட கடாரம் முட்டிப் போச்சி'தாயோளிது' ஏம் அரமனைக்குள்ளாற வந்து அப்பிடி ஒரு பய வந்து இருக்க அவனுக்கு என்ன ரெண்டு 'இதா' இருக்குன்னு கேட்டாரு.ஆமா ராசா…அப்பிடித்தாம் கேள்வி; அவனுக்கு ரெண்டுதாம் இருக்கும்னாங்க.சே..இது மோசக் கேடுல்லா வந்து சேந்திருக்கு. அவனப் புடுச்சி அப்பிடியே அதும்மேல யானைய விட்டு மிதிக்க வச்சிக் கொன்னுப்புடுங்கன்னு ஆக்கின அனுப்பிச்சிட்டாரு.இது எப்பிடியோ மகாராணிக்கு வேண்டியவன் ஒருத்தன் அங்கிருந்து ரகசியமாச் சொல்லி அனுப்பிச்சி 'இருதலைமணியனை' தப்பி ஓடி போகச் சொல்லிட்டா ராணி.பயல் எங்கே போனானோ தெரியல. தல மறைவாயிட்டாம். ஏதோ வேலை செஞ்சி பொழக்க முடிஞ்சதே தவிர, முந்திய மாதிரி பொம்பளைகிட்ட போயி 'நல்லாப் பொல்லா' இருக்க முடியல; இருந்தாத்தாம் தெரிஞ்சி போகுமே.ராசா முரசு அறஞ்சி தேசம் பூராவும் அறிவிச்சிட்டாரு.

இன்ன இன்ன மாதிரி அடயாளம் உள்ள இளந்தாரிப்பயல புடுச்சி யாரு தர்றாங்களோ அவர்களுக்கு பதினாயிரம் களஞ்சிப் பொன் தர்றதாக!வேலை செய்ய மாச்சப் பட்டவெனெல்லாம் மந்தை,சந்தை,வெளிக்கிருக்குத இடம் இப்பிடி எவனுக்கு ரெண்டு இது இருக்குன்னு தேடிக்கிட்டு அலையுதாங்க.சும்மாவா பதினாயிரங்களஞ்சி பொன்னுல்லா!இந்தப்பய யாரு கண்ணுலயும் காங்காம அலைஞ்சி திரிஞ்சதுல உடம்பு பூரா முடி காடா வளந்து போச்சு. ஒரு நா நாசுவம் கிட்ட போயி 'ஏடே எனக்கு உடம்பு சவரம் பண்ணனும். நா ஆத்துல இந்த மரத்துக்குக் கீழ இருக்கேம். வந்து செஞ்சயனா ஒனக்கு ஒரு களஞ்சிப் பொன்னு தருவேம்னு சொல்ல நாசுவனும் சரி போங்க வர்றேம்னாம்.இவம் போயி மரத்து எணல்ல மறைவான இடம் பாத்து மணல்ல 'ஒண்ணைப்' பொதச்சு வச்சி உக்காந்துக்கிட்டு இருந்தாம் கண்டுபிடிச்சிரக்கூடாதேன்னு. நாசுவன் கிண்ணத்துல தண்ணி எடுத்துக்கிட்டு வந்து எதுர்க்க மணல்ல உக்காந்துக்கிட்டு தண்ணிய விட்டு நல்ல இவன தேச்சிவிட்டாம்.பயலுக்கு 'பாத்து' ரொம்ப நாளாச்சி. அதுலயும் வேத்து மனுசன் கைப்பட்டதும் தேச்சதும் சேந்து, மணலுக்குள்ள தெரியாம இருக்க பொதச்சு வச்சிருந்த்து 'படார்'னு வேகமா எந்திரிச்சதுல நாசுவம் கண்ணுல மணலு விழ, அவம் சத்தம் போட்டு 'யப்பா…நீதானா அது'ன்னு கேட்டுட்டாம்.பிடிச்சானே ஓட்டம்.யய்யா எனக்கு கண்ணுல மண்ணு விழுந்தாலும் குத்தமில்ல.

பதினாயிரங் களஞ்சி பொன்னு வேண்டாம். அந்த ஒத்த களஞ்சி பொன்னாவது குடுத்துட்டு போரும்னு இவம் பொறத்தாலயே ஓட, அங்க ஆத்துல குளிச்சிட்டு வேட்டியக் காயப் போட்டுட்டு இருந்தவங்கள்லாம் என்ன ஏதுன்னு கேக்க…'அய்யோ போகுதே பதினாயிரங் களஞ்சிப் பொன்னு போகுதேன்னு' இவம் கூப்பாடு போட, அங்கே ஒரே அவக்காடு ஆயிட்டு.'பெறகென்ன…போனவம் போனவந்தாம்'ராசா அவனத் தேடிட்டிருக்காம். ராணியும் தேடிட்டிருக்கா.பாத்தாச் சொல்லுங்க. பதினாயிரம் களஞ்சியம் பொன்னு கெடக்கும்.

----------------

தாச்சண்யம்

யாரும் வர்றதுக்குள்ளெ சாப்பிட்டு முடிச்சிறணுமேண்ணு தான் மீனம்மா தினோமும் நினைக்கிறது. அது யாரவது ஒர்த்தர் வராம இருக்க மாட்டாங்க.

நேரமும் வந்ஹ்டு அப்பிடி அமைஞ்சி போகுதே.

அடையிற நேரத்துக்குத் தான் காட்லெயிருந்து வர முடியுது. பின்னெ வந்து.. நாலும் பாத்து காச்சி முடிக்கணும்.

'ம்; வாங்கெ ' என்று குரல் கொடுத்தாள்.

உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து புறப்பட்டார் நண்டு நாய்க்கர்.

நடமாடி வர்றமா.. தரித்தெறிஞ்சாலும் நாய்ககரின் காலுக்குப் பார்வை தெரியும்.

முன்னாலெ வந்து அமத்தலா உக்காந்து கும்பாவிலுள்ள கம்மஞ்சோத்து நடுவிலெ அமுக்கு அமுக்கி பள்ளம் செய்தார். மீனம்மா ஓரகப்பைக் கறியை கொண்டு வந்து அந்தப் பள்ளத்திலெ ஊத்தி ரெப்புனா. ஆளுக்கு ஓரகப்பைக் ககறிக்கு மேலே எப்பவுங்கெடயாது. பலசரக்கும் கறி புளியும் விக்கிற வெலையிலெ என்னமுஞ் செய்ய ஏலுதா.

இதுக்குள்ளெதான் ஒப்பெத்தணும். மத்தப்படி.. மோரு தண்ணீங்கெற பெறப்பு எப்பவுங்கெடையாது.

புருசம் பெஞ்சாதி, மூணு பிள்ளெக. பிள்ளெக தீப்பெட்டி ஒட்டிச் சம்பாரிக்கி. அவ காட்லெ வேல கெடச்சா உண்டும்; இல்லாட்டி பிள்ளெகளோட பெட்டியடைக்க உக்காந்துருவ.

அவருக்கு இருப்பு வாசத் திண்ணெ தான். எப்படிக் கூடியும், ஓராளாவது நெல்யம் , பாக்க வந்துரும், கொஞ்சம் , வெத்திலைப் பாக்கு, ஒரு பொடிப்ப்ட்டை, கால்ரூவா தெச்சணை. கால்ரூவாதான் .. ண்ணாலும் சும்மாப்போகுதா ? கறிக்குத் தேங்கா வாங்கிக்கிடலாமில்லெ.

அந்தப் பொடிப் பட்டை தான் உசிரு.

காலைலெ சிலது நாளைக்கு, நீத்துப் பாகம் மட்டுந்தாம். ராத்திரிக்கு பருக்க மிஞ்சினா கலைலெ ஒருவா கஞ்சியும் கெடைக்கும்.பெறவு.. வெளக்கு வைக்கிற நேரத்துக்குச் சாப்பிடுற ஒரு நேரத்துச் சாப்பாடுதாம்.

துட்டு பெறண்டா மதியத்துக்குஒரு ‘சுடுதண்ணி ‘ கெடச்சாலுங் கெடைக்கும்.மித்த நேரமெல்லாம் நகள்ரது பல்லிலெ இள்கிற இந்த ஒரு சிமிட்டாப் பொடியிலெதாம்.

எப்படித் தாந் தொட்டுந்தொடாமலும் மந்திரிச்சாலும் கறி காங்க மாட்டேங்கு. கேட்டாலுங் கெடைக்காது. வழக்கமா செய்யிராப்லெ ‘மிச்ச சோத்துக்கு தண்ணியெ விட்டு கரைச்சி உப்புக் கல்லு ஒண்ணெ வாயிலெ போட்டுக் கடிச்சிக்கிட்டு கும்பாவோட தூக்கிக் குடிக்க வேண்டியது தானா.. இண்ணைக்கி யாரும் வர மாட்டாங்களா.. கடவுளே..

திடார்ண்ணு அங்கு விலாஸ் போயிலை வாடை வருது!; ‘வாருமய்யா சுப்பையாச் செட்டியாரே ‘

சாப்பிடுற பிள்ளைக தெகைஞ்சி திரும்பிப் பார்த்தா சுப்பையாச் செட்டியாரு வாசப் படியேறி வர்றது தெரியுது. ‘ வாங்க அண்ணாச்சி, வாங்க ‘ சம்பிரதாயத்துக்குச் சொன்னாள் மீனம்மா.

‘ஆமாம்மா ‘

பிள்ளையள் குறுஞ்சிரிப்பாணியா தலெயெக் கவுந்துக்கிருது.

‘ம் சாப்பாடு நடக்குதாக்கும்; நடக்கட்டும் நடக்கட்டும். ‘

‘உக்காருங்க அண்ணாச்சி ‘

வந்தவர் உரல்லெ உக்காந்துக்கிறார்.

‘மீனம்மா , கொஞ்சம் கறி ‘

வந்தவர் திரும்பி கும்பாவைப் பார்த்தார்.

மீனம்மா அரை அகப்பையோ காலகப்பையோ கொண்டாந்து கும்பாவுலெ ஒரு இடு வச்சி கறி ஊத்தினது, அது நண்டு நாய்க்கருக்கு மட்டுந்தா தெரியும்.

யாரும் வர்றதுக்குள்ளெ சாப்பிட்டு முடிச்சிறணுமேண்ணு தான் மீனம்மா தினோமும் நினைக்கிறது. அது யாரவது ஒர்த்தர் வராம இருக்க மாட்டாங்க.நேரமும் வந்ஹ்டு அப்பிடி அமைஞ்சி போகுதே.அடையிற நேரத்துக்குத் தான் காட்லெயிருந்து வர முடியுது. பின்னெ வந்து.. நாலும் பாத்து காச்சி முடிக்கணும்.‘ம்; வாங்கெ ‘ என்று குரல் கொடுத்தாள்.உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து புறப்பட்டார் நண்டு நாய்க்கர்.நடமாடி வர்றமா.. தரித்தெறிஞ்சாலும் நாய்ககரின் காலுக்குப் பார்வை தெரியும்.முன்னாலெ வந்து அமத்தலா உக்காந்து கும்பாவிலுள்ள கம்மஞ்சோத்து நடுவிலெ அமுக்கு அமுக்கி பள்ளம் செய்தார். மீனம்மா ஓரகப்பைக் கறியை கொண்டு வந்து அந்தப் பள்ளத்திலெ ஊத்தி ரெப்புனா. ஆளுக்கு ஓரகப்பைக் ககறிக்கு மேலே எப்பவுங்கெடயாது. பலசரக்கும் கறி புளியும் விக்கிற வெலையிலெ என்னமுஞ் செய்ய ஏலுதா.இதுக்குள்ளெதான் ஒப்பெத்தணும்.

மத்தப்படி.. மோரு தண்ணீங்கெற பெறப்பு எப்பவுங்கெடையாது.புருசம் பெஞ்சாதி, மூணு பிள்ளெக. பிள்ளெக தீப்பெட்டி ஒட்டிச் சம்பாரிக்கி. அவ காட்லெ வேல கெடச்சா உண்டும்; இல்லாட்டி பிள்ளெகளோட பெட்டியடைக்க உக்காந்துருவ.அவருக்கு இருப்பு வாசத் திண்ணெ தான். எப்படிக் கூடியும், ஓராளாவது நெல்யம் , பாக்க வந்துரும், கொஞ்சம் , வெத்திலைப் பாக்கு, ஒரு பொடிப்பட்டை, கால்ரூவா தெச்சணை. கால்ரூவாதான் .. ண்ணாலும் சும்மாப்போகுதா ? கறிக்குத் தேங்கா வாங்கிக்கிடலாமில்லெ.அந்தப் பொடிப் பட்டை தான் உசிரு.காலைலெ சிலது நாளைக்கு, நீத்துப் பாகம் மட்டுந்தாம்.

ராத்திரிக்கு பருக்க மிஞ்சினா கலைலெ ஒருவா கஞ்சியும் கெடைக்கும்.பெறவு.. வெளக்கு வைக்கிற நேரத்துக்குச் சாப்பிடுற ஒரு நேரத்துச் சாப்பாடுதாம்.துட்டு பெறண்டா மதியத்துக்குஒரு ‘சுடுதண்ணி ‘ கெடச்சாலுங் கெடைக்கும்.மித்த நேரமெல்லாம் நகள்ரது பல்லிலெ இள்கிற இந்த ஒரு சிமிட்டாப் பொடியிலெதாம்.எப்படித் தாந் தொட்டுந்தொடாமலும் மந்திரிச்சாலும் கறி காங்க மாட்டேங்கு. கேட்டாலுங் கெடைக்காது. வழக்கமா செய்யிராப்லெ ‘மிச்ச சோத்துக்கு தண்ணியெ விட்டு

கரைச்சி உப்புக் கல்லு ஒண்ணெ வாயிலெ போட்டுக் கடிச்சிக்கிட்டு கும்பாவோட தூக்கிக் குடிக்க வேண்டியது தானா.. இண்ணைக்கி யாரும் வர மாட்டாங்களா.. கடவுளே..திடார்ண்ணு அங்கு விலாஸ் போயிலை வாடை வருது!; 'வாருமய்யா சுப்பையாச் செட்டியாரே 'சாப்பிடுற பிள்ளைக தெகைஞ்சி திரும்பிப் பார்த்தா சுப்பையாச் செட்டியாரு வாசப் படியேறி வர்றது தெரியுது.

' வாங்க அண்ணாச்சி, வாங்க ' சம்பிரதாயத்துக்குச் சொன்னாள் மீனம்மா.'ஆமாம்மா 'பிள்ளையள் குறுஞ்சிரிப்பாணியா தலெயெக் கவுந்துக்கிருது.'ம் சாப்பாடு நடக்குதாக்கும்; நடக்கட்டும் நடக்கட்டும். "உக்காருங்க அண்ணாச்சி 'வந்தவர் உரல்லெ உக்காந்துக்கிறார்.'மீனம்மா , கொஞ்சம் கறி 'வந்தவர் திரும்பி கும்பாவைப் பார்த்தார்.மீனம்மா அரை அகப்பையோ காலகப்பையோ கொண்டாந்து கும்பாவுலெ ஒரு இடு வச்சி கறி ஊத்தினது, அது நண்டு நாய்க்கருக்கு மட்டுந்தா தெரியும்.

---------

வெள்ளைச் சேவலும் தங்கப் புதையலும்

ஒரு பணக்காரருக்குக் கலயம் நிறைய தங்கக் காசுப் புதையல் கிடைத்தது. அந்த ஊர்க்காட்டின் தரை அப்படி. பூர்வீகத்தில் அந்த மண்ணில் அரண்மனைகள் இருந்ததாகவும், வசதியான ராஜ குடும்பங்கள் வாழ்ந்ததாகவும், மக்களிடம் கதைகள் உண்டு.

வீடு கட்ட வானக்கால் தோண்டும்போதோ, கலப்பை கட்டி முங்க உழும்போதோ, இப்படி பூமி புதையலோடு சிரிக்கும். சுற்றுமுற்றும் பார்ப்பார்கள், யாராவது பார்க்கிறார்களா என்று. யாரும் இல்லாவிட்டால் உழுவதை நிறுத்திவிட்டு, முங்க உழும்போது கட்டும் கல்லை அவிழ்த்து, அந்த இடத்தில் அதையே ஒரு அடையாளமாக வைத்துவிட்டு, வேறு இடத்தில் உழ ஆரம்பிப்பார்கள்!

உழவுதான் ஓடுமே தவிர, மனசு தவித்துக்கொண்டு இருக்கும். குறிப்பிட்ட நேரத்தை ஒப்பேத்திவிட்டு ஏரை மட்டும் நிலத்தில் விட்டுவிட்டு, கேட்கிறவர்களுக்கு ஏதேனும் பொருத்தமான ஒரு சாக்கைச் சொல்லி விட்டு, மாடுகளைப் பத்திக்கொண்டுவந்து தொழுவத்தில் கட்டிவிட்டு வீட்டுக்குள் வந்தால், "என்னெ, மாட்டுக்குக் கூளம்கூடப் போடாம வர்றீங்க?" என்று மனைவி கேட்பாள். "என்னெ சீக்கிரமா வந்திட்டீக... உடம்புக்குச் சரியில்லையா?" என்றும் கேட்பாள். அவர் மனைவியைப் பார்த்துச் சிரிப்பார். 'என்ன சிரிப்புமானம்?' என்பதுபோலப் பார்ப்பாள். 'இந்த மூதியிட்ட சொல்லலாமா வேண்டாமா. முதக்காரியம் ஊரெல்லாம் கிடுகட்டி அடிச்சிருவாளே. சரியான ஓட்டைவாய் ஆச்சே... என்ன செய்ய?' என்று மனசுக்குள் மருகுவார். சமயம் ஏற்படும்போது சொல்லலாம் என்று பல்லைக் கடித்துக்கொண்டு, மனசை இறுக்கிக்கொள்ளுவார். படுவேகமாகக் கொஞ்ச தூரம் ஓடிவிட்டு வந்தால்தான் சரியாகும்போல!

பானையடிக்குப் போய்த் தலை வழியா மளமள என்று ஒரு பத்துப் பதினைந்து போகிணி பச்சைத் தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றிக்கொண்டார். 'பக்கத்து ஊருக்கு ஏதாவது சோலி இருக்காம இந்நேரம் குளிக்க மாட்டாரெ' என்று மனைவிக்கு யோசனை. 'சரீ… சரீ; கிளை மேலே ஆடினாலும் துட்டு வாங்க தரைக்கு வந்துதானெ ஆகணும்' என்று நிதானப்படுத்திக்கொண்டாள் வீட்டுக்காரி.

தலையைத் துவட்டி, வேட்டியை மாற்றிக்கொண்டவர், அடுப்பங் கூடத்துக்குள் வராமல், வீட்டுக்குப் பின்னால் மேயும் கோழிகளைப் போய்ப் பார்த்துக்கொண்டு இருந்தார். 'சனிக்கிழமை சனிக்கிழமைதானெ கோழியடிக்கிறது; இன்னெக்கி புதங்கிழமைதான. அதுக்குள்ளெ கோழிக்கறி ஆசை வந்துட்டதா?' என்று நினைத்துக்கொண்டு, "என்னெ, அங்கே போயி மேயிற கோழிகளெப் பார்த்துக்கிட்டு..?" என்று கேட்டுக்கொண்டே அவர் பக்கம் போகிறாள்.

"வெள்ளைச் சேவல் எங்கே?" என்று கேட்கவும், "என்னத்துக்கு இப்பொ வெள்ளைச் சேவல்; பொதையல் கிதையல் தட்டுப்பட்டு இருக்கா?" என்று கேட்கவும், இவர் பளிச்சென்று திடுக்கிட்ட மாதிரி அவள் முகத்தைப் பார்க்கவும், இவர் சிரிக்க… அவள் சிரிக்க… "அட! ஒண்ணுமில்லெ… ஒரு வேளை புதையல் கிடைச்சிட்டதூனு வச்சிக்க, அந்நேரத்துக்கு வெள்ளெச் சேவலைப் போயித் தேடணுமெ. இப்பவே தயார் பண்ணிவச்சிக்கிட்டா நல்லது இல்லையா?" என்று கேட்கிறார். இவள், "பொதையல்தானெ, நமக்குக் கட்டாயம் கிடைக்கும்" என்று இளக்காரமாகச் சொல்ல, "அட கோட்டிக்காரீ… அப்பிடியா நெனைக்கெ. பாத்துக்கிட்டே இரு" என்று சொல்லீட்டு, வெள்ளெச் சேவல் கண்ணுக்குத் தட்டுப்பட்டதும், போயி நார்க் கட்டிலில் படுத்துக்கொண்டு, பகல் கனவு காண ஆரம்பித்துவிட்டார்.

தீபம் பொருத்தியதும் எழுந்திருந்து அடுப்படிக்கும் பட்டாசாலைக்கும் கையைப் பின் பக்கம் கட்டிக்கொண்டு லாத்தலாக நடந்துகொண்டே இருந்தார்.

வட்டிலையும் செம்பில் தண்ணீரையும் கொண்டுவந்து வைத்ததும், "ம்… என்ன சாப்பாடு இன்னிக்கி?" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார். வெதுவெதுப்பான குதிரைவாலிப் பருக்கை பொலுபொலு என்று வட்டிலில் விழுந்தது. மனசுக்குள் இவர் 'எதையெல்லாமோ சர்க்காரிலெ தடை பண்ணுதாம்; இந்தக் குதிரைவாலிச் சோத்துக்கு ஒரு தடை போட மாட்டெங்கானே?' என்று நினைத்துக்கொண்டார். பருப்புக் கறி ஊற்றி சொட்டு நல்லெண்ணெயை விட்டாள்.

"ரசத்தைக் கொண்டா" என்றார் பல்லைக் கடித்துக்கொண்டு. ரசத்தைத் தாராளமாக விட்டதும், பிசைந்து, பிழிந்து பிழிந்து, ஒரு உருண்டைக்கு ஒரு சுண்டைக்காய் வத்தலை (எண்ணெயில் பொருட்டியது) வாயில் போட்டு மென்று சாப்பிட்டு, வட்டிலோடு ரசத்தை எடுத்துக் குடித்தார். மறு சோறு வாங்கிக்கொள்ளவில்லை. போதும் என்று எழுந்துகொண்டார்.

‘பொட்டியாருக்கு இன்னைக்குச் சோறு செல்லலை. இருக்கட்டும், என்னதாம்னு பாப்பொம்’ என்று பொண்டாட்டி சொல்லிக்கொண்டாள்.

சோறு மாத்திரமா செல்லலை; தூக்கமும் பிடிக்கலை அவருக்கு.

சுருக்கிவைத்த தீபம் ஒரு புள்ளிபோல எரிந்துகொண்டு இருந்தது. நேரம் நகர்ந்துகொண்டு இருந்தது. யார் முதலில் கண் அசந்தார்கள் என்று தெரியவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் பொட்டியார்தான் பசக்கென்று முழித்து எழுந்தார். வெளியில் வந்து வானத்தில் வெள்ளிகளைச் சரி பார்த்தார்.

ஒண்ணுக்கு இருந்தார். பானையடிக்குப் போனார். மேல் துண்டைத் தண்ணீரில் நனைத்து அளவு தெரிந்து பிழிந்தார். படல் மேல் உட்காந்து தூங்கிக்கொண்டு இருந்த வெள்ளைச் சேவல் மேலே பக்குவமாகப் போட்டதும், அதுக்கு இயல்பான கூக்குரல் எழுப்புவதை மறந்து அமைதி காத்தது. அப்படியே சுருட்டிக்கொண்டு, கொட்டு மண்வெட்டியை எடுத்துத் தோளில் சாத்திக்கொண்டு, சத்தம் இல்லாமல் நாதாங்கியை நீக்கிக் கதவைப் பொன்னம் போலத் திறந்து அதே படிக்குச் சாத்தி விட்டுப் படியிறங்கினார்.

‘பெத்தநாச்சியா’ என்று மனசுக்குள் சொல்லிக் கும்பிட்டுக்கொண்டார்.

பார்வதி அம்மன், காளியம்மன், பிள்ளையார் என்று கோயில்களைக் கடக்கும்போது, மனசுக்குள் நினைத்துக் கும்பிட்டுக்கொண்டார். வர வர இருட்டுக்குக் கண் பழகிக்கொண்டது. சுவர்க்கோழிகளின் சத்தத்தை எல்லாம் கடந்து, வெள்ளிகள் தந்த வெளிச்சத்தில் வேகமாக நடந்தார்.

காட்டுக்கு வந்ததும், ஒரே அருக்கு, யாராவது பெறத்தாலெ வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்தபோது, வர்ற மாதிரிதான் தெரிந்தது. அப்பப்போ நின்று கவனித்தார்.

‘ஏ பாதகத்தி இவள்ளில்லா!’ சிரித்துக்கொண்டார். அவளும் சிரித்துக்கொண்டே வந்தாள்.

”ஏ பாவி மனுசா! எங்கிட்டெ ஒரு வார்த்தெ சொல்லப்பிடாதா, நானும் சேர்ந்தே வந்திருக்கலாம்லா?” என்றாள் வீட்டுக்காரி.

”இது என்னதுரீ; வாச்சாத்தா! யோசனைக்காரிதாம். கொட்டு மம்பட்டியவிட வாச்சாத்து தாம் தோண்ட வழி!”

”தனீயா வர்றமில்லா; பேயிக்கும் ஆச்சி, ஆளுக்கும் ஆச்சி.”

பேயை ஜெயிக்க மட்டும் இல்லை; ஆளை ஜெயிக்கவும் இரும்பு வேணும்தான்!

ரெண்டு பேரும் சேர்ந்து தோண்டினார்கள். ஒரு சர்வப் பானை கிடைத்தது. அதனுள் தங்கக் காசுகளும் நகைகளும் இருந்தன.

”சேவலை எடும்; பத்திரம்.” அவள் பிடித்துக் கொள்ள… இவர் சேவலின் தலையைத் துண்டித்து, ரத்தப் பலி காண்பித்து, புதையல் இருந்த பள்ளத்தில் சேவலைப் போட்டு மூடினார்கள்.

புதையல் வீடு வந்து சேர்ந்தது.

அதுக்குப் பிறகுதான் அந்த மாற்றங்கள் எல்லாம் நிகழ்ந்தன. எந்த வீட்டுக்குளெல்லாம் ‘லட்சுமி தேவி’ நுழைந்தாளோ, அந்த விநாடியில் இருந்து அந்த வீட்டார்களின் முகம் காண்பித்துக் கொடுத்துவிடும். தொங்கப் போட்டுக்கொண்டு நடந்த தலைகள் நிமிர்ந்துவிடும். யாரையும் எதிர் கண் பார்ப்பார்கள். கும்பிடு போட்டால் தலை மட்டும் அசைப்பார்கள். லட்சத்தில் சிலர்தான்- ‘தகர வீட்டு தொரசாமி நாயக்கர்’போல – விதிவிலக்காக இருப்பார்கள்.

புதையல் கிடைத்த நாளில் இருந்து வீட்டுக்காரியின் நச்சரிப்புத் தாள முடியலை. இனி, எத்தனை நாளைக்குத்தாம் இப்படி வெறுங் கழுத்தோடயே இருப்பேன். வெறுங்கழுத்தோட என்று அழுத்திச் சொல்லுவாள். ”அடியே கோட்டிக்காரி, நகை செய்யத்துட்டு எங்கெயிருந்து வந்ததுன்னு யாரும் கேட்டா, என்ன பதில் சொல்லுவெ?”

”பிறகு எப்பதாம் நகை செஞ்சிப் போட்டுக்கிறது; செத்ததுக்குப் பிறகா?”

”பொறூ பொறூ, ஒனக்கில்லாத நகையா” என்று செல்லங் கொஞ்சுவார்.

வீட்டில் எல்லாரும் அசந்து தூங்கிய பிறகு, இவர்கள் இருவர் மாத்திரம் விளக்கை எடுத்துக்கொண்டு அரங்கு வீட்டுக்குள் வருவார்கள். அங்கே நாலு முக்குகளிலும் ஆள் உசரத்துக்கு வரிசையாக அடுக்குப் பானைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கியிருக்கும். முத்தாத்தா காலத்துப் பானைகள். தூரப் போட மனசு வராமல், அப்படி அடுக்கிவைத்துஇருப்பார்கள். பெரும்பாலான பானைகளில் ஒன்றும் இருக்காது! பெட்டி வகைகள் புழக்கத்துக்கு வராத காலம். எப்பவாவது நல்லதுகளுக்கு உடுத்திக்கொள்ள என்று வைத்திருக்கும் சேலை துணிமணிகள் எல்லாம் அந்த அடுக்குப் பானைகளுக்குள்தான் வைத்துக்கொள்கிறது.

ஒவ்வொரு முக்கிலும் (மூலை) உள்ள பானை அடுக்குகளுக்கும் கீழாக ‘கீழ்ப்பான’ என்று உண்டு. பூமியைத் தோண்டி ஒரு பானையைப் பதித்துவைத்து இருப்பார்கள். அதற்கு மூடியாக ஒரு சச்சதுரக்கல் அல்லது பலகையைப் பதித்து அதன் மேல் பிரிமணை, அதுக்கு மேல் அடுக்குப் பானையின் முதல் பானை. புதைக்கப்பட்ட பானைதான் அந்தக் காலத்துப் பாதுகாப்புப் பெட்டகம். இவற்றில் யாருக்கும் தெரியாமல் வைக்கப்படும் பூசணங்கள் புசணம் பத்திப் போவதும், காலவசத்தால் அப்படியே புதுந்துபோய், யாருக்கோ புதையலாகக் கிடைப்பதும் உண்டு.

பொட்டியாரும் மனைவியும் கொண்டுவந்த தங்க நாணயங்களையும் நகைகளையும் அந்தப் புதை பானையில் கொண்டுவந்துதான் ராவோடு ராவாக வைத்தார்கள்.

சமயம் வாய்க்கும்போது எல்லாம் யாருக்கும் தெரியாமல் எடுத்துப் பார்ப்பதும், தடவிப்பார்ப்பதும், அதேபடிக்கு வைத்துவிடுவதும் நடந்துகொண்டு வந்தது.

பழுத்த மாம்பழத்தை எவ்வள நேரம்தான் முகர்ந்து பார்ப்பதும், மோவாயில் வைத்துத் தடவியும் பார்த்துக்கொண்டு இருப்பது.

ஒருநாள், அந்த அம்மாவுக்குக் கழுத்தில் 'பொன்னுக்கு வீங்கி' என்ற நோய் (வீக்கம்) வந்துவிட்டது. வழக்கமாக அது குழந்தைகளுக்குத்தான் வருமாம்.அதைப் பார்த்தவர்கள் சொன்னது; ”யாரிட்டெயாவது ஒரு வாரம் பத்து நாள்னு ஒரு தங்கச் சங்கிலி வாங்கிப் போட்டுக்கொ, சரியாப் போயிரும்.”

” அடுக்குப் பானைக்குள்ள மலைபோல தங்கம் கிடக்கும்போது, ஊராரிட்டெப் போய் என்னத்துக்கு தங்கச் சங்கிலிக்குத் தொண்ணாந்துக்கிட்டு இருக்கணும்” என்று பொட்டியாரிடம் பல்லைக் கடித்துக்கொண்டு கிசு கிசுத்தாள்.

ஞாயம்தான் ஞாயம்தான்; அதென்ன நினைச்சவுடன் திட்டிக்கிற காரியமா.

அன்றைக்கு அதில் இருந்த ஒரு அய்ந்தாறு தங்க நாணயங்களை எடுத்து முந்தித் தலைப் பில் முடிந்துகொண்டாள். எதுக்கு என்று கேட்டதுக்கு தலைக்கடியில் வச்சிப் படுத்துக் கிடத்தாம் என்று அவரை முழங்கையால் செல்லமாக ஒரு இடிவைத்துச் சிரித்தாள்.

நகை செய்யும் ஆசாரியாரிடம் தந்து, 'அவசரமாக ஒரு எட்டுப் பிடி அளவில் நாலு வடம் சங்கிலி வேணும்' என்று தந்தார்கள். அந்தக் காலத்தில் இருந்தே பூர்வீகமாக வீட்டில் இருந்த காசுகள் என்றார்கள்.

பழியாகப் பக்கத்திலேயே இருந்து வாங்கிக் கொண்டு வந்தார்கள்.

இந்தப் பக்கம் வந்ததும், ”இப்பவே கழுத்தில் போட்டுக்கிடவா?” என்று கேட்டதும், ”தங்கமாப் போட்டுக்கிடலாம்” என்றார் பொட்டியார். ”தங்க ஊசியும் தங்க நூலும் இருந்தால், இந்த வாயை இறுக்கித் தச்சிரலாம்” என்றார். ”வாயைத் திறக்க மாட்டேம்; பயப்படாதீங்க” என்றாள்.

தங்கக் காப்பு செய்து போட்டுக்கொண்டவன் கதை எல்லாருக்கும் தெரிந்ததுதான். புதையல் கிடைத்த அன்று பணியார மழை பெய்தது போன்ற கதைகள் எல்லாம் சும்மா உண்டாவது இல்லையே!

போதாக்குறைக்கு உதிட்டிரனுடைய (தருமன்) சாபம் வேற இருக்கே. ரகசியம் ராத்தங்குமா இவர்களிடம். எப்படியும் வெளி வந்துவிட்டது. அரசாங்கத்தில் இருந்து அதிகாரிகள், காவலர்கள் என்று வந்து பாத்திரத்தோடு புதையலும் நகைகளும் போயேபோச்சி.

ஆனால், முதலில் – ஆரம்பத்தில் சொன்ன பணக்காரருக்குக் கிடைத்த புதையல் கதை வேற மாதிரி. அதைச் சொல்ல வந்தபோதுதான், இந்தக் கதை குறுக்கே வந்துவிட்டது. அதனால் குற்றமில்லை.

இந்தப் பணக்காரருக்கு ஊருக்குள்ளே மகா கஞ்சன் என்று பேர். ஒரு பேச்சுப் பேசினால்கூட, வார்த்தை செலவாகுமே என்று நினைத்துப் பேசவே துட்டுக் கேட்கக்கூடியவர்.

இப்பேர்ப்பட்ட ஒருவருக்குத்தான் அந்தப் புதையல் கிடைத்தது. புலங்களில் இருந்து, எல்லாரும் வேலை முடிந்து சாயந்திரம் வீடு திரும்பிக்கொண்டு இருப்பார்கள். அப்பப் பார்த்துத்தான் இவர் தனது புலங்களைப் பார்க்க ஒரு சிறிய வாச்சாத்தை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு, அதன் மேலே மேல் துண்டைப் போட்டுக்கொண்டு புறப்படுவார்.

எந்தெந்தப் பாதை வழியாக மக்கள் வீட்டுக்குத் திரும்பி வருவார்கள் என்று தெரியும். அதுகளைத் தவிர்த்துவிட்டு, இவர்  குறுக்குப் பாதைகள் வழியாகத்தான் போகிறது. வழக்கமான பாதை வழியாகப் போனால், தெரிந்தவர்கள் யாராவது வந்தால், பேச்சுக் கொடுப்பார்கள். பேச்சு வைத்துக்கொண்டால், பொழுது வீணாகிவிடும் என்று.

தன்னுடைய புலத்தில் கால்வைத்ததும், அவருடைய சுடுமூஞ்சி தன்நிலைக்கு வந்துவிட்டது; பெத்த குழந்தையைத் தொட்டவுடன் எந்த அப்பனுக்கும் முகம் மலர்ச்சி அடையுமெ, அதுபோல.

அந்தப் புலத்தைப் பெற அவர்பட்ட பாட்டைச் சொல்ல இது நேரம் இல்லை. நேராக வன்னி மரத்தெப் பார்த்துப் போனார். அது மரம் மட்டும் இல்லை; மரப்புதர். பஞ்ச பாண்டவர்கள்அக்ஞாத வாசம் போவதற்கு முன்னால் அவர்களுடைய ஆயுதங்களை இப்படியாப்பட்ட ஒரு வன்னிப் புதருக்குள்தான் ஒளித்துவைத்துவிட்டுப் போயிருக்க வேண்டும்.

பாரதம் வாசிக்கும் ரசிகனுக்கு வேண்டுமானால், இந்த வன்னிப் புதர் புனிதமாகத் தெரியலாம். கரிசல் காட்டுச் சம்சாரிக்கு இது, களையிலும் களை. மகா பெரிய களை.

தன்னுடைய புலத்தினுள் விட்டிருக்கும் ஒரு கனமான வேரை வெட்டும்போதுதான் அப்படி ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது.

கவிஞர்கள் என்றால், அது லட்சுமி தேவியின் சிரிப்பொலி என்றுவிடுவார்கள். இவர் பாவம், என்னத்தைக் கண்டார். சந்தேகம் வந்து விரலைவிட்டு நோண்டிப் பார்த்தார். ”ஆத்தா, நீ இங்கதாம் இருக்கியா?” என்று சொல்லிக்கொண்டார். எல்லாரும் செய்வதுபோல சுற்றுமுற்றும் பார்த்தார். பொழுது மலை வாயிக்குள் இறங்கிவிட்டு இருந்தது.

வாச்சாத்தால் அந்த வேரைப் பதமாக வெட்டினார். பிறந்து விழுந்த பிள்ளையை எடுப்பதுபோல இதமாக எடுத்தார். அந்த உலோகக் கலயத்துக்குள் கையைவிட்டு எடுத்துப்பார்த்தார். ஆண்டுகள் எத்தனை ஆனாலும் பொன்னின் கண்களின் பிரகாசம் மினுமினுப்பு அப்படியே இருந்தது.

துணையாக யாரும் இல்லாதது நல்லதாய்ப்போச்சி. 'கல்விக்குத்தான் இருவர், களவுக்கு ஒருவர்' என்று தெரியாமலா சொன்னான்.

ரத்தப் பலி கொடுக்கிறது எல்லாம் செலவுதானெ என்று நினைத்தார். போனாப் போகுது என்று ஒரு வன்னி மரத்து முள்ளில் இடது கைப் பெருவிரலை அழுத்தி, சொட்டு ரத்தத்தை அந்த வன்னி மர வேரில்வைத்துக் கும்பிட்டுவிட்டுக் குழியை மூடிவிட்டு, வந்த அதே குறுக்குப் பாதை வழியாக இருட்டோடு இருட்டாக வீடு வந்து சேர்ந்தார்.

அவருடைய பொண்டாட்டி கண்ணை மூடியதில் இருந்து, மூணு வேளையும் கம்மங் கஞ்சிதான். பிள்ளை குட்டி என்ற அல்லல் இல்லை. ராத்திரி ஒரு வேளைக்கு பக்கத்து வீட்டு வரிசைச் சொக்காரர்களின் வீடுகளில் இருந்து ஏதாவது ஒரு தொடு கறி வரும். அதெத் தொட்டு ராத்திரிப் பொழுது கழிந்துவிடும்.

சொக்காரர்களில் – தாயாதிகள் – இவர் நடுவுள்ளவர். ஒருத்தருக்குள் ஒருவர் யாரோடு யாரும் பேசிக்கொள்வது இல்லை. (பேசினால் சண்டைதான் வரும் என்பதால், பேசிக்கொள்வது இல்லை!)

சொக்காரர்கள் வீட்டுப் பெண்பிள்ளைகள் மாத்திரம் வந்து இவரோடு பேசுவார்கள்; வீட்டைத் தூத்து சுத்தம் பண்ணுவார்கள்; தலைவாசலைச் சேர்த்தே சாணி தெளிப்பார்கள். நாளைக்கு இவர் செத்துப் போனால், இவர்களுக்கு சொத்தில் பங்கு வருமெ; அதனாலுங்கூட. "எதாவது வேணும்னாக் கேளுங்க சித்தப்பா" அல்லது பெரியப்பா என்று அந்தப் பெண் பிள்ளைகள் கேட்டால், இவர் எங்கேயோ ஒரு திசையில் பார்த்துக் கொண்டு கழுத்து வலிக்காரன் போலத் தலை அசைப்பார்.

புதையல் வீட்டுக்கு வந்ததும் தலைகீழ் மாற்றம் நிகழ்ந்தது!

அரங்கு வீட்டு அடுக்குப் பானை மிடா ஒன்றில் ஒளித்துவைத்துக்கொண்டு, அதில் இருந்து மடி நிறையக் கட்டிக்கொண்டுபோனார். திரும்ப வந்தபோது 'ஏழுமலை வெங்கடேசப் பெருமான்போல 'நகைக்காச்சி மரம்போல' 'உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை' நகைகளாகப் பூட்டிக்கொண்டு வந்து நின்றார்.

கனமாக ரெண்டு வடத்தில் அரைஞாண் கயிறு, பத்து விரல்களுக்கும் மோதிரங்கள், முறுக்குவடத்தில் மைனர் செயின். புலி நகம் சேர்த்த செயின், நரிப்பல்கொண்ட செயின், கனமான வலக்காப்புகள் இவையெல்லாம் போக, வாய் திறந்தால் பற்கள் எல்லாம் தங்கம்!

வரிசை வீடுகளில் உள்ள தாயாதிகள் எல்லாம் அரண்டுபோய்விட்டார்கள்!

பேச்சுவார்த்தை இல்லாதவர்கள் எல்லாம் பேசிக்கொண்டால் என்ன என்று தோன்றிவிட்டது.

அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகள் எல்லாம் வந்து 'பெரியப்பா… சித்தப்பா; சித்தப்பா… பெரியப்பா' என்று  கொண்டாடினார்கள். சமையல் செய்துவைத்தார்கள். சமையல் செய்து கொண்டுவந்தார்கள். எப்பப் பார்த்தாலும் வீடு கலகலப்பாகி விட்டது.

"லேய், அந்த முடிவானுக்கு வந்த வாழ்வைப் பாத்தியா" என்று ஒரு கிழவர் கேட்க, இன்னொரு கிழவர் "அவனுக்கு என்னப்பா, தங்கத்திலேயே அதெக்கூட செய்து மாட்டிக்கிடுவான்!" என்று சொல்லிச் சிரித்தார்கள்.

ஒரு நல்லது நடந்தா இன்னொரு அல்லதும் நடக்கும் என்பார்கள். அப்படியேதான் நடந்தது. ஒருநாள் ராத்திரி படுத்தவர், எழுந்திருக்கவே இல்லை!

"அடடா, எப்பேர்ப்பட்ட சாவு!" என்று தாயாதிகள் எல்லோரும் வந்து இளவு கொண்டாடினார்கள்.

அவருக்கு, மேலே விழுந்து அழுவதற்குப் பெத்த தாயோ, பெண்டாட்டியோ, மகள்களோ கிடையாது. பிடாங்கு வேட்டுப் போட்டு, சிங்காரித்த தேரின் முன்னே சிலம்பாட்டங்களுடன் கொட்டு முழங்க அட்டகாசமாக 'காட்டுக்கு'க் கொண்டுபோக ஏற்பாடுகள் நடந்துகொண்டு இருந்தன.

பளபளக்கும் தங்கக்காசே நெற்றியில் மினுங்கியது. இப்பேர்ப்பட்ட 'கப்பலுக்கு' வெறும் பச்சரிசியை மஞ்சள் தேய்த்து வாய்க்கரிசியாகப் போட்டால் எப்படி, தங்கத்தினாலேயே வாய்க்கரிசி செய்து கொண்டுவர ஏற்பாடாகிவிட்டது.

பேசாத தாயாதி – சொக்காரர்கள் – எல்லாம் பேசி மகிழ்ந்தார்கள். அவருடைய அரங்கு வீட்டுக்கு ஒன்றுபோல் புகுந்து தேடியதில் வேண்டிய அளவு தங்கம் கிடைத்தது.

எல்லாரும் வாய்க்கரிசி போடணும், எல்லாரும் கொள்ளி வைக்கணும் என்றார்கள். கொள்ளிவைத்தவர்களுக்குத்தான் அவருடைய சொத்தில் பங்கு கிடைக்கும் என்பது நியதி.

சாவு ஊர்வலம் காட்டை நெருங்கிக்கொண்டு இருந்தது. சூழ்நிலை, மனப்புழுக்கங்களையும்விட இறுக்கமாக இருந்தது.

மேகம் இருட்டிக்கொண்டு வந்தது. சுடுகாட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஆல மரத்துக்குக்கிட்டே வந்ததும் தேரை மூன்று சுற்று சுற்றுவார்கள். அப்படிச் சுற்றி முடிக்கும் இடத்தில் இருந்து சுடுகாடு கிட்டதான். அந்த சுடுகாட்டுப் புளிய மரத்தடிக்கு குறுக்குப் பாதை வழியாகப் பெண்டுபிள்ளைகளின் கூட்டம் வந்து சேர்ந்து இருந்தது. கடைசி சாத்திரங்களை வேடிக்கை பார்க்கத் தயாராக.

அந்தச் சமயத்தில்தான், அந்தப் பாவி கல் மழை சரமாரியாக வானத்தில் இருந்து சோ என்ற இரைச்சலுடன், விசிறி அடித்தது. அந்த இடத்தில் வைத்துதான் இறந்தவர்களுக்கு அணிவிக்கப்பட்ட நகைகளைக் கழற்றுவார்கள். கழற்றிக்கொண்டு இருக்கும்போதுதான் கல் மழை வந்தது.

இந்தக்கல் மழையின் அடிகளில் இருந்து எப்படித் தப்பிப்பது, எங்கே பதுங்குவது என்று தெரியாமல், தேரின் கீழே பதுங்கியவர் களும் ஓடி ஒளிந்தவர்களுமாகக், கந்து கந்தாகச் சிதறினார்கள். அப்படி ஓடியவர்களில் பலர் ஆல மரத்தடிக்கும் புளிய மரத்தடிக்கும் தஞ்சம் புகுந்தார்கள்.

மழை வெறித்ததும் வந்து பார்த்தால், எந்த நகையையும் காணோம்!

நாம் போடணும்... நீ போடணும் என்று போட்டி போட்டுக்கொண்டு, தங்க வாய்க்கரிசிகளை வாங்கியவர்களையும் காணோம்.

திரும்பவும் மழை இருட்டிக்கொண்டு வந்தது.

”என்ன செய்ய முதலாளீ?” என்று குடிமகன், அம்பலக்காரரிடம் கேட்டான்.

”இடுப்புல சூரிக்கத்தி வச்சிருக்கயில்லா; பக்கத்து வாழைத் தோப்புக்குள்ளெ போயி பத்து தலைவாழை இலைகளெ அறுத்துட்டு வா” என்றார்.

”கல்லு மழை இலைகளைக் கந்து கந்தாக்கி இருக்குமே சாமி” என்றான்.

”அப்பிடி இருந்தாலுமே ஒண்ணுக்கு மேலெ ஒண்ணு போட்டு மூட்டத்தெப் பூசி கொள்ளி வச்சிரலாம்.”

”ஒத்த ஈக்குஞ்செக் காணலையே; யாரு கொள்ளிவைக்கது?”

”நீதான்டா வைக்கணும்; ‘குடிமகன்’னு உனக்கு உலகத்துல அதுக்குத்தானெ பேரு வச்சிருக்கு. தைரியமாக் கொள்ளி வையி; அவரோட (போக்காளி) சொத்துல உனக்கும் பங்கு நா வாங்கித் தருவேம்; ஊரு கூடி ஒனக்கு இதெச் செய்யும்” என்று உறுதி தந்தார்.

- எல்லாமே நடந்து முடிந்தன.

காடுவிட்டு வீடு வந்து சேர்ந்த ஊர் மக்கள் அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

”ஆமா, அந்த நகைகள் எல்லாம் என்னவா ஆயிருக்கும்?”

‘மையோட்டம்’ போட்டுப் பார்த்தாத்தாம் தெரியும் என்று சொல்லிச் சத்தம் இல்லாமல் சிரித்துக்கொண்டார்கள்.

‘பதினாறு’ கழியட்டும் என்று காத்து இருந்தார்கள்.

போக்காளியின் நெருங்கிய சொக்காரர்கள் மட்டும் தங்களுக்குள் இப்படிச் சொல்லிக்கொண்டார்கள்.

”எப்படி வந்ததோ அப்படியே போயிருச்சி… கடவுள்னு ஒருத்தர்பாத்துக் கிட்டெதானெ இருக்காரு!”

ஒரு பணக்காரருக்குக் கலயம் நிறைய தங்கக் காசுப் புதையல் கிடைத்தது. அந்த ஊர்க்காட்டின் தரை அப்படி. பூர்வீகத்தில் அந்த மண்ணில் அரண்மனைகள் இருந்ததாகவும், வசதியான ராஜ குடும்பங்கள் வாழ்ந்ததாகவும், மக்களிடம் கதைகள் உண்டு.வீடு கட்ட வானக்கால் தோண்டும்போதோ, கலப்பை கட்டி முங்க உழும்போதோ, இப்படி பூமி புதையலோடு சிரிக்கும். சுற்றுமுற்றும் பார்ப்பார்கள், யாராவது பார்க்கிறார்களா என்று. யாரும் இல்லாவிட்டால் உழுவதை நிறுத்திவிட்டு, முங்க உழும்போது கட்டும் கல்லை அவிழ்த்து, அந்த இடத்தில் அதையே ஒரு அடையாளமாக வைத்துவிட்டு, வேறு இடத்தில் உழ ஆரம்பிப்பார்கள்!உழவுதான் ஓடுமே தவிர, மனசு தவித்துக்கொண்டு இருக்கும். குறிப்பிட்ட நேரத்தை ஒப்பேத்திவிட்டு ஏரை மட்டும் நிலத்தில் விட்டுவிட்டு, கேட்கிறவர்களுக்கு ஏதேனும் பொருத்தமான ஒரு சாக்கைச் சொல்லி விட்டு, மாடுகளைப் பத்திக்கொண்டுவந்து தொழுவத்தில் கட்டிவிட்டு வீட்டுக்குள் வந்தால், ”என்னெ, மாட்டுக்குக் கூளம்கூடப் போடாம வர்றீங்க?” என்று மனைவி கேட்பாள்.

”என்னெ சீக்கிரமா வந்திட்டீக… உடம்புக்குச் சரியில்லையா?” என்றும் கேட்பாள். அவர் மனைவியைப் பார்த்துச் சிரிப்பார். ‘என்ன சிரிப்புமானம்?’ என்பதுபோலப் பார்ப்பாள். ‘இந்த மூதியிட்ட சொல்லலாமா வேண்டாமா. முதக்காரியம் ஊரெல்லாம் கிடுகட்டி அடிச்சிருவாளே. சரியான ஓட்டைவாய் ஆச்சே… என்ன செய்ய?’ என்று மனசுக்குள் மருகுவார். சமயம் ஏற்படும்போது சொல்லலாம் என்று பல்லைக் கடித்துக்கொண்டு, மனசை இறுக்கிக்கொள்ளுவார். படுவேகமாகக் கொஞ்ச தூரம் ஓடிவிட்டு வந்தால்தான் சரியாகும்போல!பானையடிக்குப் போய்த் தலை வழியா மளமள என்று ஒரு பத்துப் பதினைந்து போகிணி பச்சைத் தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றிக்கொண்டார். ‘பக்கத்து ஊருக்கு ஏதாவது சோலி இருக்காம இந்நேரம் குளிக்க மாட்டாரெ’ என்று மனைவிக்கு யோசனை. ‘சரீ… சரீ; கிளை மேலே ஆடினாலும் துட்டு வாங்க தரைக்கு வந்துதானெ ஆகணும்’ என்று நிதானப்படுத்திக்கொண்டாள் வீட்டுக்காரி.தலையைத் துவட்டி, வேட்டியை மாற்றிக்கொண்டவர், அடுப்பங் கூடத்துக்குள் வராமல், வீட்டுக்குப் பின்னால் மேயும் கோழிகளைப் போய்ப் பார்த்துக்கொண்டு இருந்தார்.

சனிக்கிழமை சனிக்கிழமைதானெ கோழியடிக்கிறது; இன்னெக்கி புதங்கிழமைதான. அதுக்குள்ளெ கோழிக்கறி ஆசை வந்துட்டதா?’ என்று நினைத்துக்கொண்டு, ”என்னெ, அங்கே போயி மேயிற கோழிகளெப் பார்த்துக்கிட்டு..?” என்று கேட்டுக்கொண்டே அவர் பக்கம் போகிறாள்.”வெள்ளைச் சேவல் எங்கே?” என்று கேட்கவும், ”என்னத்துக்கு இப்பொ வெள்ளைச் சேவல்; பொதையல் கிதையல் தட்டுப்பட்டு இருக்கா?” என்று கேட்கவும், இவர் பளிச்சென்று

திடுக்கிட்ட மாதிரி அவள் முகத்தைப் பார்க்கவும், இவர் சிரிக்க… அவள் சிரிக்க… ”அட! ஒண்ணுமில்லெ… ஒரு வேளை புதையல் கிடைச்சிட்டதூனு வச்சிக்க, அந்நேரத்துக்கு வெள்ளெச் சேவலைப் போயித் தேடணுமெ. இப்பவே தயார் பண்ணிவச்சிக்கிட்டா நல்லது இல்லையா?” என்று கேட்கிறார். இவள், ”பொதையல்தானெ, நமக்குக் கட்டாயம் கிடைக்கும்” என்று இளக்காரமாகச் சொல்ல, ”அட கோட்டிக்காரீ… அப்பிடியா நெனைக்கெ. பாத்துக்கிட்டே இரு” என்று சொல்லீட்டு, வெள்ளெச் சேவல் கண்ணுக்குத் தட்டுப்பட்டதும், போயி நார்க் கட்டிலில் படுத்துக்கொண்டு, பகல் கனவு காண ஆரம்பித்துவிட்டார்.தீபம் பொருத்தியதும் எழுந்திருந்து அடுப்படிக்கும் பட்டாசாலைக்கும் கையைப் பின் பக்கம் கட்டிக்கொண்டு லாத்தலாக நடந்துகொண்டே இருந்தார்.

வட்டிலையும் செம்பில் தண்ணீரையும் கொண்டுவந்து வைத்ததும், ”ம்… என்ன சாப்பாடு இன்னிக்கி?” என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார். வெதுவெதுப்பான குதிரைவாலிப் பருக்கை பொலுபொலு என்று வட்டிலில் விழுந்தது. மனசுக்குள் இவர் ‘எதையெல்லாமோ சர்க்காரிலெ தடை பண்ணுதாம்; இந்தக் குதிரைவாலிச் சோத்துக்கு ஒரு தடை போட மாட்டெங்கானே?’ என்று நினைத்துக்கொண்டார். பருப்புக் கறி ஊற்றி சொட்டு நல்லெண்ணெயை விட்டாள்.”ரசத்தைக் கொண்டா” என்றார் பல்லைக் கடித்துக்கொண்டு. ரசத்தைத் தாராளமாக விட்டதும், பிசைந்து, பிழிந்து பிழிந்து, ஒரு உருண்டைக்கு ஒரு சுண்டைக்காய் வத்தலை (எண்ணெயில் பொருட்டியது) வாயில் போட்டு மென்று சாப்பிட்டு, வட்டிலோடு ரசத்தை எடுத்துக் குடித்தார். மறு சோறு வாங்கிக்கொள்ளவில்லை. போதும் என்று எழுந்துகொண்டார்.‘பொட்டியாருக்கு இன்னைக்குச் சோறு செல்லலை. இருக்கட்டும், என்னதாம்னு பாப்பொம்’ என்று பொண்டாட்டி சொல்லிக்கொண்டாள்.சோறு மாத்திரமா செல்லலை; தூக்கமும் பிடிக்கலை அவருக்கு.சுருக்கிவைத்த தீபம் ஒரு புள்ளிபோல எரிந்துகொண்டு இருந்தது.

நேரம் நகர்ந்துகொண்டு இருந்தது. யார் முதலில் கண் அசந்தார்கள் என்று தெரியவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் பொட்டியார்தான் பசக்கென்று முழித்து எழுந்தார். வெளியில் வந்து வானத்தில் வெள்ளிகளைச் சரி பார்த்தார்.ஒண்ணுக்கு இருந்தார். பானையடிக்குப் போனார். மேல் துண்டைத் தண்ணீரில் நனைத்து அளவு தெரிந்து பிழிந்தார். படல் மேல் உட்காந்து தூங்கிக்கொண்டு இருந்த வெள்ளைச் சேவல் மேலே பக்குவமாகப் போட்டதும், அதுக்கு இயல்பான கூக்குரல் எழுப்புவதை மறந்து அமைதி காத்தது. அப்படியே சுருட்டிக்கொண்டு, கொட்டு மண்வெட்டியை எடுத்துத் தோளில் சாத்திக்கொண்டு, சத்தம் இல்லாமல் நாதாங்கியை நீக்கிக் கதவைப் பொன்னம் போலத் திறந்து அதே படிக்குச் சாத்தி விட்டுப் படியிறங்கினார்.‘பெத்தநாச்சியா’ என்று மனசுக்குள் சொல்லிக் கும்பிட்டுக்கொண்டார்.பார்வதி அம்மன், காளியம்மன்,

பிள்ளையார் என்று கோயில்களைக் கடக்கும்போது, மனசுக்குள் நினைத்துக் கும்பிட்டுக்கொண்டார். வர வர இருட்டுக்குக் கண் பழகிக்கொண்டது.

சுவர்க்கோழிகளின் சத்தத்தை எல்லாம் கடந்து, வெள்ளிகள் தந்த வெளிச்சத்தில் வேகமாக நடந்தார்.காட்டுக்கு வந்ததும், ஒரே அருக்கு, யாராவது பெறத்தாலெ வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்தபோது, வர்ற மாதிரிதான் தெரிந்தது. அப்பப்போ நின்று கவனித்தார்.'ஏ பாதகத்தி இவள்ளில்லா!' சிரித்துக்கொண்டார். அவளும் சிரித்துக்கொண்டே வந்தாள்."ஏ பாவி மனுசா! எங்கிட்டெ ஒரு வார்த்தெ சொல்லப்பிடாதா, நானும் சேர்ந்தே வந்திருக்கலாம்லா?" என்றாள் வீட்டுக்காரி."இது என்னதுரீ; வாச்சாத்தா! யோசனைக்காரிதாம். கொட்டு மம்பட்டியவிட வாச்சாத்து தாம் தோண்ட வழி!""தனீயா வர்றமில்லா; பேயிக்கும் ஆச்சி, ஆளுக்கும் ஆச்சி."பேயை ஜெயிக்க மட்டும் இல்லை; ஆளை ஜெயிக்கவும் இரும்பு வேணும்தான்!ரெண்டு பேரும் சேர்ந்து தோண்டினார்கள். ஒரு சர்வப் பானை கிடைத்தது. அதனுள் தங்கக் காசுகளும் நகைகளும் இருந்தன."சேவலை எடும்; பத்திரம்." அவள் பிடித்துக் கொள்ள… இவர் சேவலின் தலையைத் துண்டித்து, ரத்தப் பலி காண்பித்து, புதையல் இருந்த பள்ளத்தில் சேவலைப் போட்டு மூடினார்கள்.புதையல் வீடு வந்து சேர்ந்தது.அதுக்குப் பிறகுதான் அந்த மாற்றங்கள் எல்லாம் நிகழ்ந்தன. எந்த வீட்டுக்குளெல்லாம் 'லட்சுமி தேவி' நுழைந்தாளோ, அந்த விநாடியில் இருந்து அந்த வீட்டார்களின் முகம் காண்பித்துக் கொடுத்துவிடும். தொங்கப் போட்டுக்கொண்டு நடந்த தலைகள் நிமிர்ந்துவிடும். யாரையும் எதிர் கண் பார்ப்பார்கள். கும்பிடு போட்டால் தலை மட்டும் அசைப்பார்கள்.

லட்சத்தில் சிலர்தான்- 'தகர வீட்டு தொரசாமி நாயக்கர்'போல – விதிவிலக்காக இருப்பார்கள்.புதையல் கிடைத்த நாளில் இருந்து வீட்டுக்காரியின் நச்சரிப்புத் தாள முடியலை. இனி, எத்தனை நாளைக்குத்தாம் இப்படி வெறுங் கழுத்தோடயே இருப்பேன். வெறுங்கழுத்தோட என்று அழுத்திச் சொல்லுவாள். "அடியே கோட்டிக்காரி, நகை செய்யத்துட்டு எங்கெயிருந்து வந்ததுன்னு யாரும் கேட்டா, என்ன பதில் சொல்லுவெ?""பிறகு எப்பதாம் நகை செஞ்சிப் போட்டுக்கிறது; செத்ததுக்குப் பிறகா?""பொறூ பொறூ, ஒனக்கில்லாத நகையா" என்று செல்லங் கொஞ்சுவார்.வீட்டில் எல்லாரும் அசந்து தூங்கிய பிறகு, இவர்கள் இருவர் மாத்திரம் விளக்கை எடுத்துக்கொண்டு அரங்கு வீட்டுக்குள் வருவார்கள். அங்கே நாலு முக்குகளிலும் ஆள் உசரத்துக்கு வரீசையாக அடுக்குப் பானைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கியிருக்கும். முத்தாத்தா காலத்துப் பானைகள். தூரப் போட மனசு வராமல், அப்படி அடுக்கிவைத்துஇருப்பார்கள். பெரும்பாலான பானைகளில் ஒன்றும் இருக்காது! பெட்டி வகைகள் புழக்கத்துக்கு வராத காலம். எப்பவாவது நல்லதுகளுக்கு உடுத்திக்கொள்ள என்று வைத்திருக்கும் சேலை துணிமணிகள் எல்லாம் அந்த

அடுக்குப் பானைகளுக்குள்தான் வைத்துக்கொள்கிறது.ஒவ்வொரு முக்கிலும் (மூலை) உள்ள பானை அடுக்குகளுக்கும் கீழாக 'கீழ்ப்பான' என்று உண்டு.

பூமியைத் தோண்டி ஒரு பானையைப் பதித்துவைத்து இருப்பார்கள். அதற்கு மூடியாக ஒரு சச்சதுரக்கல் அல்லது பலகையைப் பதித்து அதன் மேல் பிரிமணை, அதுக்கு மேல் அடுக்குப் பானையின் முதல் பானை. புதைக்கப்பட்ட பானைதான் அந்தக் காலத்துப் பாதுகாப்புப் பெட்டகம். இவற்றில் யாருக்கும் தெரியாமல் வைக்கப்படும் பூசணங்கள் புசணம் பத்திப் போவதும், காலவசத்தால் அப்படியே புதுந்துபோய், யாருக்கோ புதையலாகக் கிடைப்பதும் உண்டு.பொட்டியாரும் மனைவியும் கொண்டுவந்த தங்க நாணயங்களையும் நகைகளையும் அந்தப் புதை பானையில் கொண்டுவந்துதான் ராவோடு ராவாக வைத்தார்கள்.சமயம் வாய்க்கும்போது எல்லாம் யாருக்கும் தெரியாமல் எடுத்துப் பார்ப்பதும், தடவிப்பார்ப்பதும், அதேபடிக்கு வைத்துவிடுவதும் நடந்துகொண்டு வந்தது.பழுத்த மாம்பழத்தை எவ்வள நேரம்தான் முகர்ந்து பார்ப்பதும், மோவாயில் வைத்துத் தடவியும் பார்த்துக்கொண்டு இருப்பது.ஒருநாள், அந்த அம்மாவுக்குக் கழுத்தில் 'பொன்னுக்கு வீங்கி' என்ற நோய் (வீக்கம்) வந்துவிட்டது. வழக்கமாக அது குழந்தைகளுக்குத்தான் வருமாம்.அதைப் பார்த்தவர்கள் சொன்னது; ”யாரிட்டெயாவது ஒரு வாரம் பத்து நாள்னு ஒரு தங்கச் சங்கிலி வாங்கிப் போட்டுக்கொ, சரியாப் போயிரும்."" அடுக்குப் பானைக்குள்ள மலைபோல தங்கம் கிடக்கும்போது, ஊராரிட்டெப் போய் என்னத்துக்கு தங்கச் சங்கிலிக்குத் தொண்ணாந்துக்கிட்டு இருக்கணும்" என்று பொட்டியாரிடம் பல்லைக் கடித்துக்கொண்டு கிசு கிசுத்தாள்.

ஞாயம்தான் ஞாயம்தான்; அதென்ன நினைச்சவுடன் திட்டிக்கிற காரியமா.அன்றைக்கு அதில் இருந்த ஒரு அய்ந்தாறு தங்க நாணயங்களை எடுத்து முந்தித் தலைப் பில் முடிந்துகொண்டாள். எதுக்கு என்று கேட்டதுக்கு தலைக்கடியில் வச்சிப் படுத்துக் கிடத்தாம் என்று அவரை முழங்கையால் செல்லமாக ஒரு இடிவைத்துச் சிரித்தாள்.நகை செய்யும் ஆசாரியாரிடம் தந்து, 'அவசரமாக ஒரு எட்டுப் பிடி அளவில் நாலு வடம் சங்கிலி வேணும்' என்று தந்தார்கள். அந்தக் காலத்தில் இருந்தே பூர்வீகமாக வீட்டில் இருந்த காசுகள் என்றார்கள்.பழியாகப் பக்கத்திலேயே இருந்து வாங்கிக் கொண்டு வந்தார்கள்.இந்தப் பக்கம் வந்ததும், ”இப்பவே கழுத்தில் போட்டுக்கிடவா?" என்று கேட்டதும், ”தங்கமாப் போட்டுக்கிடலாம்" என்றார் பொட்டியார். ”தங்க ஊசியும் தங்க நூலும் இருந்தால், இந்த வாயை இறுக்கித் தச்சிரலாம்" என்றார். ”வாயைத் திறக்க மாட்டேம்; பயப்படாதீங்க" என்றாள்.தங்கக் காப்பு செய்து போட்டுக்கொண்டவன் கதை எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

புதையல் கிடைத்த அன்று பணியார மழை பெய்தது போன்ற கதைகள் எல்லாம் சும்மா உண்டாவது இல்லையே!போதாக்குறைக்கு உதிட்டிரனுடைய (தருமன்) சாபம் வேற இருக்கே. ரகசியம் ராத்தங்குமா இவர்களிடம். எப்படியும் வெளி வந்துவிட்டது.

அரசாங்கத்தில் இருந்து அதிகாரிகள், காவலர்கள் என்று வந்து பாத்திரத்தோடு புதையலும் நகைகளும் போயேபோச்சி.ஆனால், முதலில் – ஆரம்பத்தில் சொன்ன பணக்காரருக்குக் கிடைத்த புதையல் கதை வேற மாதிரி. அதைச் சொல்ல வந்தபோதுதான், இந்தக் கதை குறுக்கே வந்துவிட்டது. அதனால் குற்றமில்லை.இந்தப் பணக்காரருக்கு ஊருக்குள்ளே மகா கஞ்சன் என்று பேர். ஒரு பேச்சுப் பேசினால்கூட, வார்த்தை செலவாகுமே என்று நினைத்துப் பேசவே துட்டுக் கேட்கக்கூடியவர்.இப்பேர்ப்பட்ட ஒருவருக்குத்தான் அந்தப் புதையல் கிடைத்தது. புலங்களில் இருந்து, எல்லாரும் வேலை முடிந்து சாயந்திரம் வீடு திரும்பிக்கொண்டு இருப்பார்கள். அப்பப் பார்த்துத்தான் இவர் தனது புலங்களைப் பார்க்க ஒரு சிறிய வாச்சாத்தை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு, அதன் மேலே மேல் துண்டைப் போட்டுக்கொண்டு புறப்படுவார்.

எந்தெந்தப் பாதை வழியாக மக்கள் வீட்டுக்குத் திரும்பி வருவார்கள் என்று தெரியும். அதுகளைத் தவிர்த்துவிட்டு, இவர் குறுக்குப் பாதைகள் வழியாகத்தான் போகிறது. வழக்கமான பாதை வழியாகப் போனால், தெரிந்தவர்கள் யாராவது வந்தால், பேச்சுக் கொடுப்பார்கள். பேச்சு வைத்துக்கொண்டால், பொழுது வீணாகிவிடும் என்று.தன்னுடைய புலத்தில் கால்வைத்ததும், அவருடைய சுடுமூஞ்சி தன்நிலைக்கு வந்துவிட்டது; பெத்த குழந்தையைத் தொட்டவுடன் எந்த அப்பனுக்கும் முகம் மலர்ச்சி அடையுமெ, அதுபோல.அந்தப் புலத்தைப் பெற அவர்பட்ட பாட்டைச் சொல்ல இது நேரம் இல்லை. நேராக வன்னி மரத்தெப் பார்த்துப் போனார். அது மரம் மட்டும் இல்லை; மரப்புதர். பஞ்ச பாண்டவர்கள்அக்ஞாத வாசம் போவதற்கு முன்னால் அவர்களுடைய ஆயுதங்களை இப்படியாப்பட்ட ஒரு வன்னிப் புதருக்குள்தான் ஒளித்துவைத்துவிட்டுப் போயிருக்க வேண்டும்.பாரதம் வாசிக்கும் ரசிகனுக்கு வேண்டுமானால், இந்த வன்னிப் புதர் புனிதமாகத் தெரியலாம். கரிசல் காட்டுச் சம்சாரிக்கு இது, களையிலும் களை. மகா பெரிய களை.தன்னுடைய புலத்தினுள் விட்டிருக்கும் ஒரு கனமான வேரை வெட்டும்போதுதான் அப்படி ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது.கவிஞர்கள் என்றால், அது லட்சுமி தேவியின் சிரிப்பொலி என்றுவிடுவார்கள். இவர் பாவம், என்னத்தைக் கண்டார். சந்தேகம் வந்து விரலைவிட்டு நோண்டிப் பார்த்தார்.

”ஆத்தா, நீ இங்கதாம் இருக்கியா?” என்று சொல்லிக்கொண்டார். எல்லோரும் செய்வதுபோல சுற்றுமுற்றும் பார்த்தார். பொழுது மலை வாயிக்குள் இறங்கிவிட்டு இருந்தது.வாச்சாத்தால் அந்த வேரைப் பதமாக வெட்டினார். பிறந்து விழுந்த பிள்ளையை எடுப்பதுபோல இதமாக எடுத்தார். அந்த உலோகக் கலயத்துக்குள் கையைவிட்டு எடுத்துப்பார்த்தார். ஆண்டுகள் எத்தனை ஆனாலும் பொன்னின் கண்களின் பிரகாசம் மினுமினுப்பு அப்படியே இருந்தது.துணையாக யாரும் இல்லாதது நல்லதாய்ப்போச்சி. ‘கல்விக்குத்தான் இருவர், களவுக்கு ஒருவர்’ என்று தெரியாமலா சொன்னான்.ரத்தப் பலி கொடுக்கிறது எல்லாம் செலவுதானெ என்று நினைத்தார்.

போனாப் போகுது என்று ஒரு வன்னி மரத்து முள்ளில் இடது கைப் பெருவிரலை அழுத்தி, சொட்டு ரத்தத்தை அந்த வன்னி மர வேரில்வைத்துக் கும்பிட்டுவிட்டுக் குழியை மூடிவிட்டு, வந்த அதே குறுக்குப் பாதை வழியாக இருட்டோடு இருட்டாக வீடு வந்து சேர்ந்தார்.அவருடைய பொண்டாட்டி கண்ணை மூடியதில் இருந்து, மூணு வேளையும் கம்மங் கஞ்சிதான். பிள்ளை குட்டி என்ற அல்லல் இல்லை. ராத்திரி ஒரு வேளைக்கு பக்கத்து வீட்டு வரிசைச் சொக்காரர்களின் வீடுகளில் இருந்து ஏதாவது ஒரு தொடு கறி வரும். அதைத் தொட்டு ராத்திரிப் பொழுது கழிந்துவிடும்.சொக்காரர்களில் – தாயாதிகள் – இவர் நடுவுள்ளவர். ஒருத்தருக்குள் ஒருவர் யாரோடு யாரும் பேசிக்கொள்வது இல்லை.

(பேசினால் சண்டைதான் வரும் என்பதால், பேசிக்கொள்வது இல்லை!)சொக்காரர்கள் வீட்டுப் பெண்பிள்ளைகள் மாத்திரம் வந்து இவரோடு பேசுவார்கள்; வீட்டைத் தூத்து சுத்தம் பண்ணுவார்கள்; தலைவாசலைச் சேர்த்தே சாணி தெளிப்பார்கள். நாளைக்கு இவர் செத்துப் போனால், இவர்களுக்கு சொத்தில் பங்கு வருமெ; அதனாலுங்கூட. "ஏதாவது வேணும்னாக் கேளுங்க சித்தப்பா" அல்லது பெரியப்பா என்று அந்தப் பெண் பிள்ளைகள் கேட்டால், இவர் எங்கேயோ ஒரு திசையில் பார்த்துக் கொண்டு கழுத்து வலிக்காரன் போலத் தலை அசைப்பார்.புதையல் வீட்டுக்கு வந்ததும் தலைகீழ் மாற்றம் நிகழ்ந்தது!அரங்கு வீட்டு அடுக்குப் பானை மிடா ஒன்றில் ஒளித்துவைத்துக்கொண்டு, அதில் இருந்து மடி நிறையக் கட்டிக்கொண்டுபோனார். திரும்ப வந்தபோது 'ஏழுமலை வெங்கடேசப் பெருமான்போல 'நகைக்காச்சி மரம்போல' 'உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை' நகைகளாகப் பூட்டிக்கொண்டு வந்து நின்றார்.கனமாக ரெண்டு வடத்தில் அரைஞாண் கயிறு, பத்து விரல்களுக்கும் மோதிரங்கள், முறுக்குவடத்தில் மைனர் செயின். புலி நகம் சேர்த்த செயின், நரிப்பல்கொண்ட செயின், கனமான வலக்காப்புகள் இவையெல்லாம் போக, வாய் திறந்தால் பற்கள் எல்லாம் தங்கம்!வரிசை வீடுகளில் உள்ள தாயாதிகள் எல்லாம் அரண்டுபோய்விட்டார்கள்!பேச்சுவார்த்தை இல்லாதவர்கள் எல்லாம் பேசிக்கொண்டால் என்ன என்று தோன்றிவிட்டது.அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகள் எல்லாம் வந்து 'பெரியப்பா… சித்தப்பா; சித்தப்பா… பெரியப்பா' என்று கொண்டாடினார்கள். சமையல் செய்துவைத்தார்கள்.

சமையல் செய்து கொண்டுவந்தார்கள். எப்பப் பார்த்தாலும் வீடு கலகலப்பாகி விட்டது."லேய், அந்த முடிவானுக்கு வந்த வாழ்வைப் பாத்தியா" என்று ஒரு கிழவர் கேட்க, இன்னொரு கிழவர் "அவனுக்கு என்னப்பா, தங்கத்திலேயே அதெக்கூட செய்து மாட்டிக்கிடுவான்!" என்று சொல்லிச் சிரித்தார்கள்.ஒரு நல்லது நடந்தா இன்னொரு அல்லதும் நடக்கும் என்பார்கள். அப்படியேதான் நடந்தது. ஒருநாள் ராத்திரி படுத்தவர், எழுந்திருக்கவே இல்லை!"அடடா, எப்பேர்ப்பட்ட சாவு!" என்று தாயாதிகள் எல்லோரும் வந்து இளவு கொண்டாடினார்கள்.அவருக்கு, மேலே விழுந்து அழுவதற்குப் பெத்த

தாயோ, பெண்டாட்டியோ, மகள்களோ கிடையாது. பிடாங்கு வேட்டுப் போட்டு, சிங்காரித்த தேரின் முன்னே சிலம்பாட்டங்களுடன் கொட்டு முழங்க அட்டகாசமாக 'காட்டுக்கு'க் கொண்டுபோக ஏற்பாடுகள் நடந்துகொண்டு இருந்தன.பளபளக்கும் தங்கக்காசே நெற்றியில் மினுங்கியது. இப்பேர்ப்பட்ட 'கப்பலுக்கு' வெறும் பச்சரிசியை மஞ்சள் தேய்த்து வாய்க்கரிசியாகப் போட்டால் எப்படி, தங்கத்தினாலேயே வாய்க்கரிசி செய்து கொண்டுவர ஏற்பாடாகிவிட்டது.பேசாத தாயாதி – சொக்காரர்கள் – எல்லாம் பேசி மகிழ்ந்தார்கள். அவருடைய அரங்கு வீட்டுக்கு ஒன்றுபோல் புகுந்து தேடியதில் வேண்டிய அளவு தங்கம் கிடைத்தது.எல்லாரும் வாய்க்கரிசி போடணும், எல்லாரும் கொள்ளி வைக்கணும் என்றார்கள். கொள்ளிவைத்தவர்களுக்குத்தான் அவருடைய சொத்தில் பங்கு கிடைக்கும் என்பது நியதி.சாவு ஊர்வலம் காட்டை நெருங்கிக்கொண்டு இருந்தது.

சூழ்நிலை, மனப்புழுக்கங்களையும்விட இறுக்கமாக இருந்தது.மேகம் இருட்டிக்கொண்டு வந்தது. சுடுகாட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஆல மரத்துக்குக்கிட்டே வந்ததும் தேரை மூன்று சுற்று சுற்றுவார்கள். அப்படிச் சுற்றி முடிக்கும் இடத்தில் இருந்து சுடுகாடு கிட்டதான். அந்த சுடுகாட்டுப் புளிய மரத்தடிக்கு குறுக்குப் பாதை வழியாகப் பெண்டுபிள்ளைகளின் கூட்டம் வந்து சேர்ந்து இருந்தது. கடைசி சாத்திரங்களை வேடிக்கை பார்க்கத் தயாராக.அந்தச் சமயத்தில்தான், அந்தப் பாவி கல் மழை சரமாரியாக வானத்தில் இருந்து சோ என்ற இரைச்சலுடன், விசிறி அடித்தது. அந்த இடத்தில் வைத்துதான் இறந்தவர்களுக்கு அணிவிக்கப்பட்ட நகைகளைக் கழற்றுவார்கள். கழற்றிக்கொண்டு இருக்கும்போதுதான் கல் மழை வந்தது.இந்தக்கல் மழையின் அடிகளில் இருந்து எப்படித் தப்பிப்பது, எங்கே பதுங்குவது என்று தெரியாமல், தேரின் கீழே பதுங்கியவர் களும் ஓடி ஒளிந்தவர்களுமாகக், கந்து கந்தாகச் சிதறினார்கள். அப்படி ஓடியவர்களில் பலர் ஆல மரத்தடிக்கும் புளிய மரத்தடிக்கும் தஞ்சம் புகுந்தார்கள்.மழை வெறித்ததும் வந்து பார்த்தால், எந்த நகையையும் காணோம்!நாம் போடணும்… நீ போடணும் என்று போட்டி போட்டுக்கொண்டு, தங்க வாய்க்கரிசிகளை வாங்கியவர்களையும் காணோம்.திரும்பவும் மழை இருட்டிக்கொண்டு வந்தது."என்ன செய்ய முதலாளீ?" என்று குடிமகன், அம்பலக்காரரிடம் கேட்டான்.

"இடுப்புல சூரிக்கத்தி வச்சிருக்கயில்லா; பக்கத்து வாழைத் தோப்புக்குள்ளெ போயி பத்து தலைவாழை இலைகளெ அறுத்துட்டு வா" என்றார்."கல்லு மழை இலைகளைக் கந்து கந்தாக்கி இருக்குமே சாமி" என்றான்."அப்பிடி இருந்தாலுமே ஒண்ணுக்கு மேலெ ஒண்ணு போட்டு மூட்டத்தெப் பூசி கொள்ளி வச்சிரலாம்.""ஒத்த ஈக்குஞ்செக் காணலையே; யாரு கொள்ளிவைக்கது?""நீதான்டா வைக்கணும்; 'குடிமகன்'னு உனக்கு உலகத்துல அதுக்குத்தானெ பேரு வச்சிருக்கு. தைரியமாக் கொள்ளி வையி; அவரோட (போக்காளி) சொத்துல உனக்கும் பங்கு நா வாங்கித்

தருவேம்; ஊரு கூடி ஒனக்கு இதெச் செய்யும்” என்று உறுதி தந்தார்.- எல்லாமே நடந்து முடிந்தன.காடுவிட்டு வீடு வந்து சேர்ந்த ஊர் மக்கள் அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.”ஆமா, அந்த நகைகள் எல்லாம் என்னவா ஆயிருக்கும்?”‘மையோட்டம்’ போட்டுப் பார்த்தாத்தாம் தெரியும் என்று சொல்லிச் சத்தம் இல்லாமல் சிரித்துக்கொண்டார்கள்.‘பதினாறு’ கழியட்டும் என்று காத்து இருந்தார்கள்.போக்காளியின் நெருங்கிய சொக்காரர்கள் மட்டும் தங்களுக்குள் இப்படிச் சொல்லிக்கொண்டார்கள்.”எப்படி வந்ததோ அப்படியே போயிருச்சி… கடவுள்னு ஒருத்தர்பாத்துக் கிட்டெதானெ இருக்காரு!”

---------------

பாலம்

அந்தக்காலத்தில், இப்போது போன்ற நவீன வகான வசதிகள் ஏற்படாத காலம். காசிக்குப் போகிறவர்களெல்லாம் நடந்தேதாம் போகணும். போய்த் திரும்புகிறதென்பது பெரிய்யபாடு. காசி என்றால் அந்த ஒரு சேத்திரம் மட்டுமல்ல; அதைத் தொடுத்துப் பல சேத்திரங்களுக்கும் போகிறது என்றும் உண்டு. போய்த் திரும்ப மாசக் கணக்கு என்றில்லை. வருசக்கணக்கும் ஆகிவிடும். அதுவும் வயோதிகக் காலம் என்று ஆகிவிட்டால் அவ்வளவுதாம்; ஒரு நாடு என்று போகிறவர்கள் திருநாடு (மோட்சம் (சாவு) வைணவ வழக்குச் சொல். திருநாடு) போய்ச் சேர்ந்து விடுகிறதும் உண்டு.சுலோசன முதலியாருக்கு ஒரு சொந்தக்கார அம்மையார் இருந்தார். விதவை, பிள்ளை குட்டி கிடையாது. வயதும் ஆகிவிட்டது. காசிச் சேத்திரம் போய் உயிரை விட்டால் நேராய்க் கைலாசமே போய்ச் சேர்ந்துவிடலாம் என்று புறப்பட்டார். தன்னிடம் இருந்ததை எல்லாம் ஒரு பொட்டலமாக்கிக் கட்டித் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான சுலோசன முதலியாரிடம் தந்து, திரும்ப வந்தால் வாங்கிக்கிறேன் என்று தந்துவிட்டுப் போனவர்தாம். வருசங்கள் பல ஆகிவிட்டன.இனி ஆள் வராது என்று ஆகிவிட்டது. அந்தப் பொட்டலத்தை என்ன செய்ய என்று தெரியவில்லை. அப்படி அதில் என்ன பிரமாதமாய் இருக்கப் போகிறது என்று அவிழ்த்துப் பார்த்தால்… வைர வைடூரியம் பதித்த தங்க நகைகள், தங்கக் காசுகள் என்று விலை மதிக்கமுடியாத முதல் இருந்தது. அந்தப் பொட்டணம் அங்கே இதுவரை யாரும் சட்டை பண்ணாத ஒரு இடத்தில், அவருடைய அவ்வளவு பெரிய வீட்டில், ஒரு அறையின் மூலையில் பரணில் கேட்பார் அற்றுக் கிடந்தது.சரி; இன்னுங் கொஞ்சநாள் காத்திருந்து பார்ப்போம் என்று பார்த்தார் முதலியார். நாட்கள் வருசங்கள் என்று காலம் போய்க்கொண்டே இருந்தது. அந்த அம்மையாருக்கு வேற அக்குதொக்கு என்று யாரும் கிடையாது. இருந்தால் அவர்களிடமாவது கூப்பிட்டுத் தந்துவிடலாம். என்ன செய்ய, யாரிட்டெக் கேட்க என்று தட்டளியுதார்.அந்த ஊரில் முதலியார் மதிக்கிற ஒரு சாமியார் இருந்தார். அவரைப் பெரிய்ய சித்தர், யோகி என்றெல்லாம் சொல்லுவார்கள். இந்த மாதிரியான சித்தர்கள் யோகிகள் சமாச்சாரமெல்லாம் ரொம்ப விநோதமாக இருக்கும். அவர்கள் வாயைத்

திறக்கமாட்டார்கள். திறந்து பேசினால் என்ன சொல்லுகிறார் என்று அதை விளக்கிச் சொல்ல அதுபோல இன்னொரு சாமியாரிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேணும்! முதலியார் போய்ச் சேர்ந்த நேரம், அந்தச் சாமியார் கண்ணை மூடி உட்கார்ந்து கொண்டிருந்தார். இவருக்கு என்ன செய்ய என்று தெரியவில்லை. வந்து நின்று ரொம்ப நேரம் ஆகிவிட்டது. சரி, போய்ட்டு இன்னொரு சமயம் வருவோம் என்று திரும்பி ஒரு எட்டு எடுத்து வைத்திருப்பார். 'யாருடா' என்ற குரல் கேட்டது.சாமீ; அடியேன் வந்திருக்கேம் என்று சொல்லி, நெடுஞ்சாங்கிடையாக் கால்லெ விழுந்து சேவித்தார்.எழுந்து கும்பிட்டுக்கொண்டே நின்றார். சாமியார், என்ன ஏது என்று கேட்காமல், பேசாமல் கம்மென்று முதலியாரைப் பார்த்துக்கொண்டே இருந்தார். சரி; சாமியார் கேக்கமாட்டார். நாமதாம் சொல்லணும் என்று விசயத்தை ஆதியோட அந்தமாய் நடந்ததையெல்லாத்தையும் சொல்லி முடித்துவிட்டு, 'சாமி, இப்போ அந்தப் பொட்டணத்தை நா என்ன செய்யட்டும்' என்று கேட்டார்.'ஆத்துல கொண்டு போடு போ' என்றாராம்! முதலியார் மனசுக்குள்ளே சிரிப்பு ஒரு பக்கம்; வருத்தம் ஒரு பக்கம். இந்தக் கோட்டிக்காரச் சாமியார் இப்படி சொல்லீட்டாரே என்று.வெள்ளம் போற ஆத்துல போடுறதா. வெறும் ஆத்துல போடுறதா என்று கேட்கலாமா என்று தோணணதாம்.அது வேற கோவப்பட்டு ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லீட்டா என்ன செய்ய சரீன்னு சொல்லி, திரும்ப ஒரு கும்பிடு போட்டுட்டு வந்துட்டார். தாமிரபரணி ஆத்துக்கு அந்தப் பக்கம் உள்ள ஊர்ல முதலியாருக்கு நஞ்சை நிலங்கள் இருந்தன. அந்த ஆண்டு நெல் நல்ல விளைச்சல். அறுவடை முடிந்த நெல் மூட்டைகள் வண்டிகள்ளெ பாரம் ஏத்தி ஆத்தைக் கடந்து வந்தபோது, வெள்ளம் ஆத்துல பெருவாரியா வந்து, ஆட்கள், வண்டி மாடுகள், நெல் மூட்டைகள் என்று எல்லாம் ஆத்தோடு போய்விட்டன. முதலியாருடைய நெல்வண்டிகள் மட்டுமில்லை; பல பேருடைய நெல் மூட்டைகளும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டன.எல்லோருக்குமே அப்பதான் தெரிந்தது. ஒரு பாலம் கட்டி இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்காது என்று சரி; இப்போ பாலம் கட்டணும். சர்க்கார் அனுமதி தந்தது; கொஞ்சம் உதவியும் கிடைத்தது. தன்னிடமிருந்த பணத்தையும் போடலாம். மீதிக்கு என்ன செய்ய. அப்பதான் ஞாபகம் வந்ததாம். அந்தச் சாமியார் சொன்ன 'ஆத்துல கொண்டுப் போடுடா' என்ற வாசகம்.பாலத்துக்குச் சுலோசன முதலியார் வாணம் (அஸ்திவாரம்) தோண்ட ஆரம்பிக்கும்போது சிந்துபூந்துறையிலுள்ள பெரிய மனிதர்களை அழைத்திருக்கிறார். அப்படி வந்தவர்களில் ஒரு வயது முதிர்ந்த பெரியவர் சொன்னார். 'நாஞ் சின்ன புள்ளெயா இருந்தப்பொ இங்கே ஒரு பாலம் இருந்தது. அந்தப் பாலம் ஒரு பேமழை வெள்ளத்துல அடிச்சிட்டுப் போயிட்டது'.முதலியாருக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருந்தது.அந்தக் காலத்தில் சிமெண்டு கிடையாது காரைதான். காரைச் சாந்துக்குப் கடுக்காய், கருப்பட்டி, பதநீர் சேர்த்து குழைத்துப் பக்குவப்படுத்திக் கட்டினால் பாறை போல் உறுதியாக நிற்கும். அப்படி கட்டப்பட்டதுதான் இந்த சுலோசன முதலியார் பாலம்.நாடு வெள்ளை ஆட்சியிடமிருந்து நம்மவர்களுக்குக் கை மாறிய பிறகு வாகன

போக்குவரத்து எல்லாம் அதிகமாகியதால் அகலமான பாலம் தேவைப்பட்டது. சுலோச முதலியார் பாலம் ரொம்ப பழையது. அதை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிய ஒரு அகலமான பாலம் கட்டுவது என அரசு தீர்மானித்தது. பாலத்தை இடிக்க ஆரம்பித்தவர்கள்; இடிக்கவே முடியவில்லை. இடிக்கக் காண்டிராக்ட் எடுத்தவர் மேலிடத்தில் போய் சொன்னார். பெரிய பெரிய இன்சினீயர்களெல்லாம் வந்து பார்த்துவிட்டு, இது இடிக்கவேண்டிய பாலமில்லை. ரொம்ப உறுதியாக நிற்கிறது. இதன் பக்கத்திலேயே இதை ஒட்டி ஒரு பாலம் கட்டி இதோடு சேர்த்து அகலமாக்கிவிடலாம் என்று சொல்லி, அதேபடி சேர்த்துவிட்டார்கள். இன்றும் சுலோசன முதலியார் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறது இந்தப் பாலம்.

--------------

புன்சிரிப்பு

‘மைலாப்பூர், மைலாப்பூர்,’ – ‘அடையார், மைலாப்பூர்!’

‘மைலாப்பூர் நாசமாகப் போக!’ என்றார் ஸ்ரீமான் பவானந்தர், கோபத்துடன். எவ்வளவு நேரம்தான் காத்துக்கொண்டிருக்கிறார் அவரும். ஓர் அமிஞ்சக்கரை பஸ்ஸூம் வரவில்லை. அதற்குள் இருபது மைலாப்பூர் பஸ்களும், முப்பது திருவல்லிக்கேணி பஸ்களும் வந்து போயிருக்கும். ஓர் அமிஞ்சிக்கரைகூடக் கிடையாது! ‘ என்ன, அந்தப் பக்கத்துப் பஸ் விடுவதையே நிறுத்திவிட்டார்களா?’ என்றுகூட நினைத்தார் பவானந்தர்.

அவருடைய அதிருப்தி, இனி அரை நிமிஷம்கூட பொறுத்திருக்க முடியாது என்ற நிலைமைக்கு வந்துவிட்டது. கையிலிருந்த குடையை, ‘இந்தப் பாழைப்ப்போன பசங்கள்!’ அவருடைய கோபத்துக்குப் பாத்திரமான அந்தப் ‘பசங்கள்’ அந்தச் சமயம் அவருடைய எதிரிலிருந்திருந்தால், அவர்கள் கதி என்னவாயிருக்கும் என்பதை, கீழே தரையில் ஆறங்குலம் ஆழம் தொளைத்திருந்த அந்தக் குடை நிரூபித்தது.

திடீரென்று அவருடைய கோபம் மறைந்தது. பளிச்சென்று பூத்த புன்னகையால் பிரகாசித்தது முகம். எதிரே ஒரு யுவதி, பதினான்கு, பதினைந்து வயதிருக்கும். நல்ல அழகிய முகம். அவள் அணிந்திருந்த ஆகாய நீலப் புடவை மனத்திற்கு ஒரு ரம்யமான கிளர்ச்சியையும், கவர்ச்சியையும் உண்டுபண்ணிற்று. அவளுடைய பாதங்களை அரைகுறையாய் மூடியிருந்த கான்பூர் சரிகைச் செருப்புகளும்,

அவளுடைய கையில் தொங்கிய ஸில்க் பையும் நவீன நாகரிக ஓட்டத்தில் அவள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறாள் என்பதை நிரூபித்துக் காட்டின.

அவளுடைய இடது மணிக்கட்டை அலங்கரித்த, காலணா அளவைவிடச் சிறியதான தங்கக்

கடிகாரம் இவ்வளவிற்கும் ஒரு சிகரம் வைத்தாற்போல் இருந்தது.

ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்து நின்றார் பவானந்தர். அவளுடைய அழகிலே, அந்தக் கவர்ச்சியிலே அப்படியே லயித்துவிட்ட அவருடைய மனம், அவருடைய கற்பனையோட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டது.

அந்தப் பெண்ணின் கூட வந்தவரை ஏறிட்டுப் பார்த்தார். வயோதிபர். அறுபது வயதிருக்கும். ஒரு வேளை பாட்டனாரோ என்னவோ! தகப்பனாராகவும் இருக்கலாம்.

அந்த யுவதியும், 'பாட்டனாரு'ம் இவருக்குப் பக்கத்தில் வந்து, பத்தடி

தூரத்தில் நின்றனர். அவர்களும் பஸ்ஸுக்காகத்தான் காத்துக்

கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த இடத்திற்கோ?

அன்று காலையில் வீட்டைவிட்டு வரும்போது அவருடைய சகோதரி சொன்னதை நினைத்தார்.

வழக்கம்போல் அவருடைய குழந்தையை எடுத்து முத்தமிட்டுக் கொண்டார்.

அப்பொழுதுதான் அவருடைய சகோதரி சொன்னாள். 'எத்தனை நாள் இந்தத் தாயில்லாக்

குழந்தையை வச்சுக்கிட்டு நான் அவஸ்தைப்படுவேன்?' என்று.

குழந்தைக்கு இரண்டு வயதாகிறது. குழந்தை பிறக்கும்போது தாயை விரட்டிவிட்டது. உலகத்தில் பொறுமையைச் சோதிக்குமு; விஷயங்களில் தாயில்லாக் குழந்தையை வளர்ப்பது எப்படிப்பட்டது என்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

அதுவும் தருமத்துக்காக, செய்துதான் ஆகவேண்டுமென்ற நியதியில்லாதவர்கள் அதை

எப்படி அனுபவிக்க முடியும்?

இதெல்லாம் ஒன்றன்மேல் ஒன்றாகத் தோன்றின அவருக்கு.

அப்பொழுது தூரத்தில் ஒரு பஸ் வந்த சத்தத்தைக் கேட்டுத் திரும்பினார் பவானந்தர். அது ஒருவேளை அமிஞ்சக்கரை வண்டியாயிருந்தால் என்ன பண்ணுவது?

அல்லது அந்தக் கட்டழகி போகவேண்டியதாயிருந்தால்…? ஆவலோடு பஸ்ஸை நிமிர்ந்து பார்த்தார்.

'தில்லக்கேணி! தில்லக்கேணி!'

நல்லவேளை! ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் பவானந்தர். பஸ்ஸும் போய்விட்டது. அந்த யுவதி போகவில்லை.

அந்தச் சமயம் அவள் பக்கம் திரும்பினார். அவருள்ளம் சடக்கென்று கர்வத்துடன் ஓங்கியது. திருப்தியுடனும், ஆத்மாபிமானத்துடனும், தன்னுடைய ஜரிகை அங்க வஸ்திரத்தில் ஒட்டிய தூசியைத் தட்டினார்.

அகஸ்மாத்தாகத் திரும்பிய அந்தப் பெண் இவரைக் கண்டு ஒரு புன்னகை வீசினாள். இவர் கர்வம் – ஆமாம், இவரைக் கண்டுதான் அவள் புன்சிரிப்புச் சிரித்தாள்! அதில் சந்தேகமில்லை.

பவானந்தரின் கற்பனையோட்டம் வெகு தீவிரமாக ஓடிக் கனவு லோகத்தில் போய்க் கலந்தது.

அவரும்தான் இவ்வளவு காலமாக – முப்பது வருஷமாக ஆடியோடிச் சம்பாதித்தாய் விட்டது. கொஞ்சமாவது சுகப்பட வேண்டாமா! லட்சக்கணக்கில் சேர்த்து குவிந்து கிடக்கிறது பாங்கியில். பட்டணத்திலேயே பத்துப் பங்களாக்கள். ஒவ்வொன்றும் பதினாயிரக் கணக்கில் பெறும். இவ்வளவு நாள் சம்பாதித்துத் தான் அதை அனுபவிக்க வேண்டாமா?

எல்லாம் ரொம்ப எளிதாக முடித்துவிடலாம். வியாபாரம் தானே, என்ன பிரமாதம்? அவருக்குக் கீழ் இவ்வளவு காமலாக உழைத்த மானேஜர் மன்னார்சாமி இருக்கிறான். ரொம்ப நாணயஸ்தன். கொஞ்சங்கூடக் குறை சொல்ல இடமில்லை இத்தனை வருஷமாக. ஒரு
சின்ன ஏற்பாடு பண்ணிவிட்டால் அவன் பேருக்கே கடையை எழுதி வைத்துவிடலாம். குழந்தையிருக்கிறது. அதற்கும் ஒரு வழியிருக்கிறது. கிராமத்தில் தம்பியிருக்கிறான். ரொம்ப நாளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறான். குழந்தையைத் தன் வீட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்று. அவனுக்குத்தான் பிள்ளையில்லை.

அவனுக்கும் சில ஆயிரத்தை எழுதி வைத்துவிட்டால் போகிறது. அந்தத் தொல்லையும் ஒழிந்தது.

இனிமேல் பாக்கி சகோதரிதான். அவளும்தான் சில நாளாக முனகுகிறாள். ஏதோ பதினாயிரம் ரூபாயையும் ஒரு பங்களாவையும் அவள் பேருக்கு வைத்துவிட்டால் அவளுக்குத் திருப்தியாய் விடும். இனி வேறென்ன...?

'மைலாப்பூர்! மைலாப்பூர்!'

இருபத்தைந்தாவது பஸ் மைலாப்பூருக்கு. ஆனால் அதைப்பற்றி கவலைப்படவில்லை அவர். அவருடைய கவனமெல்லாம் அந்தப் பெண்ணின்மேல் இருந்தது.

அதோ காலையெடுத்து வைக்கிறாளே! அதில், மைலாப்பூர் போய்விடப் போகிறாளோ?

அவருடைய மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. அந்த ஒரு வினாடியும் அவருக்கு

ஒரு யுகமாய் இருந்தது.

நல்லவேளை! 'அது இல்லையம்மா! இங்கே வா' என்று வயோதிபர் அந்தப் பெண்ணை நிறுத்தியதும்தான், பவானந்தருக்கு மீண்டும் உயிர் வந்தது.

'அம்மா' என்று கூப்பிட்டாரே, அதனால் அவருடைய ஹேஷ;யம் நிச்சயம்தான்.

பாட்டனார்தான்!

பவானந்தருக்கு அப்போது தேவலோகத்துக்குத் தூக்கிக் கொண்டு போவது போலிருந்தது. தன்னை மறந்த இன்பத்தில் மயங்கித் திளைத்துத் தவித்தார்.

அந்தக் கிழவனுடன் உடனே பேசி எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டுமென்று ஆவலுடன் துடித்தது அவருடைய நெஞ்சு.

ஒருவேளை மறுத்தால் என்ன? ஆனால், இரும்பு வியாபாரி பவானந்தரைத் தெரியாதவர் யாரேனுமுண்டா? அவருடைய ஏராள ஆஸ்தியே உலகப் பிரசித்தியாயிற்றே! அவர் வாய் திறந்து கேட்டால் பெண் கொடுக்க மறுப்பவர்; கூட உண்டா என்ன?

நிமிர்ந்து நின்று தன்னை ஒரு தடவை குனிந்து பார்த்துக் கொண்டார். மீசையில் கை தானாகவே போயிற்று.

ஐம்பது வயது என்ன ஒரு பெரிய வயதா என்ன? காலையிலும் மாலையிலும் தினசரி பீச்சுக்கரையில் நான்கு மைல் நடக்கவில்லையா, கொஞ்சங்கூடக் களைப்பின்றி?

பார்த்தால் என்ன ஐம்பது வயது என்றா சொல்ல முடியும்? அன்றியும் பணமல்லவா இருக்கிறது….

அவருடைய பகற் கனவு உச்ச ஸ்தாயியை அடைந்தது.

உடனே, விவாகம் ஆனதும், பெங்களூரில் ஓர் அழகிய மாளிகை வாங்கிவிட வேண்டும். ஒரு புதிய அந்த வருஷத்திய மாடல் மோட்டார் வண்டி. பட்டணத்தில் எல்லாவற்றையும் ஒரு வழியாக ஏற்பாடு பண்ணிவிட்டுப் பெங்களூரோடு, அந்தக் கட்டழகியுடன் சுகவாசம். பாங்கியில் பணம், காலில் ஒட்டிய தூசியால் இட்டதைத் தலையால் தாங்கிச் செய்ய வேலையாட்கள்! வேறு என்ன வேண்டும்?

கட்டாயம் அந்தப் பெண்ணிற்குச் சங்கீதம் தெரிந்திருக்கும். இவ்வளவு நாகரிகத்துடன் இருப்பவர்களுக்கு வீணை தெரிந்திருக்க வேண்டும். அவருக்கும் ரொம்ப நாளாக ஓர் ஆசை. யாருக்காவது வீணை கற்றுக் கொடுத்துத் தினசரி மாலையில் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று. அதுவும் பூர்த்தியாகிவிடும். அவருடைய அதிர்ஷ;டத்துக்குக் குறுக்கே பிறந்தவர் யார்…?

சடக்கென்று விழித்துக் கொண்டவர்போல் திரும்பினார் பவானந்தர். அந்தோ! மாம்பலம் போகும் பஸ் அவருடைய ‘கட்டழகி’யைச் சுமந்துகொண்டு ‘புர்’ என்ற சப்தத்துடன் கிளம்பிற்று. கனவில் லயித்திருந்த அவர் பஸ் வந்ததையும் அந்தப் பெண் ஏறிக் கொண்டதையும் கவனிக்கவில்லை.

மறைந்து கொண்டிருக்கும் வண்டியிலிருந்து அந்த யுவதி மூன்றாவது முறையாக அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

திடுக்கிட்டுத் திரும்பினார், பவானந்தர். பின்புறமிருந்த வெற்றிலை பாக்குக் கடைக் கண்ணாடியில் பிரதிபலித்தது அவருடைய முகம். அவருடைய நெற்றியில் வலது புருவத்துக்கு மேலும், முகத்தில் வலது கன்னத்திலும் ஒரு தம்பிடியகலம் குங்குமப் பொட்டு!

அன்று காலையில் வழக்கம்போல் அவர் குழந்தையையெடுத்து முத்தமிட்டுக் கொள்ளும்போது, அதன் நெற்றியிலிருந்த குங்குமத்தைக் கவனிக்கவில்லை என்பது அப்போதுதான் நினைவு வந்தது. அதோடு அந்த யுவதி சிரித்த காரணமும் அவருக்கு விளங்கி விட்டது!

‘மைலாப்பூர், மைலாப்பூர்,’ – ‘அடையார், மைலாப்பூர்!’‘மைலாப்பூர் நாசமாகப் போக!’ என்றார் ஸ்ரீமான் பவானந்தர், கோபத்துடன்.எவ்வளவு நேரம்தான் காத்துக்கொண்டிருக்கிறார் அவரும். ஓர் அமிஞ்சக்கரைபஸ்ஸூம் வரவில்லை. அதற்குள் இருபது மைலாப்பூர் பஸ்களும், முப்பதுதிருவல்லிக்கேணி பஸ்களும் வந்து போயிருக்கும். ஓர் அமிஞ்சிக்கரைகூடக்கிடையாது! ‘ என்ன, அந்தப் பக்கத்துப் பஸ் விடுவதையே நிறுத்திவிட்டார்களா?’என்றுகூட நினைத்தார் பவானந்தர்.அவருடைய அதிருப்தி, இனி அரை நிமிஷம்கூட பொறுத்திருக்க முடியாது என்றநிலைமைக்கு வந்துவிட்டது.

கையிலிருந்த குடையை, ‘இந்தப் பாழைய்ப்போனபசங்கள்!’ அவருடைய கோபத்துக்குப் பாத்திரமான அந்தப் ‘பசங்கள்’ அந்தச்சமயம் அவருடைய எதிரிலிருந்திருந்தால், அவர்கள் கதி என்னவாயிருக்கும்என்பதை, கீழே தரையில் ஆறங்குலம் ஆழம் தொளைத்திருந்த அந்தக் குடைநிரூபித்தது.திடீரென்று அவருடைய கோபம் மறைந்தது. பளிச்சென்று பூத்த புன்னகையால்பிரகாசித்தது முகம். எதிரே ஒரு யுவதி, பதினான்கு, பதினைந்து வயதிருக்கும்.நல்ல அழகிய முகம். அவள் அணிந்திருந்த ஆகாய நீலப் புடவை மனத்திற்கு ஒருரம்யமான கிளர்ச்சியையும், கவர்ச்சியையும் உண்டுபண்ணிற்று.

அவளுடையபாதங்களை அரைகுறையாய் மூடியிருந்த கான்பூர் சரிகைச் செருப்புகளும்,அவளுடைய கையில் தொங்கிய ஸில்க் பையும் நவீன நாகரிக ஓட்டத்தில் அவள்எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறாள் என்பதை நிரூபித்துக் காட்டின.அவளுடைய இடது மணிக்கட்டை அலங்கரித்த, காலணா அளவைவிடச் சிறியதான தங்கக்கடிகாரம் இவ்வளவிற்கும் ஒரு சிகரம் வைத்தாற்போல் இருந்தது.ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்து நின்றார் பவானந்தர். அவளுடைய அழகிலே,அந்தக் கவர்ச்சியிலே அப்படியே லயித்துவிட்ட அவருடைய மனம், அவருடையகற்பனையோட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டது.அந்தப் பெண்ணின் கூட வந்தவரை ஏறிட்டுப் பார்த்தார். வயோதிபர். அறுபதுவயதிருக்கும்.

ஒரு வேளை பாட்டனாரோ என்னவோ! தகப்பனாராகவும் இருக்கலாம்.அந்த யுவதியும், ‘பாட்டனாரு’ம் இவருக்குப் பக்கத்தில் வந்து, பத்தடிதூரத்தில் நின்றனர். அவர்களும் பஸ்ஸூக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த இடத்திற்கோ?அன்று காலையில் வீட்டைவிட்டு வரும்போது அவருடைய சகோதரி சொன்னதை நினைத்தார்.வழக்கம்போல் அவருடைய குழந்தையை எடுத்து முத்தமிட்டுக் கொண்டார்.அப்பொழுதுதான் அவருடைய சகோதரி சொன்னாள். ‘எத்தனை நாள் இந்தத் தாயில்லாக்குழந்தையை வச்சுக்கிட்டு நான் அவஸ்தைப்படுவேன்?’ என்று.குழந்தைக்கு இரண்டு வயதாகிறது.

குழந்தை பிறக்கும்போது தாயை விரட்டிவிட்டது.உலகத்தில் பொறுமையைச் சோதிக்குமு; விஷயங்களில் தாயில்லாக் குழந்தையைவளர்ப்பது எப்படிப்பட்டது என்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.அதுவும் தருமத்துக்காக, செய்துதான் ஆகவேண்டுமென்ற நியதியில்லாதவர்கள் அதைஎப்படி அனுபவிக்க முடியும்? இதெல்லாம் ஒன்றன்மேல் ஒன்றாகத் தோன்றின அவருக்கு.அப்பொழுது தூரத்தில் ஒரு பஸ் வந்த சத்தத்தைக் கேட்டுத் திரும்பினார்பவானந்தர். அது ஒருவேளை அமிஞ்சக்கரை வண்டியாயிருந்தால் என்ன பண்ணுவது?அல்லது அந்தக் கட்டழகி போகவேண்டியதாயிருந்தால்...? ஆவலோடு பஸ்ஸைநிமிர்ந்து பார்த்தார்.‘தில்லக்கேணி! தில்லக்கேணி!’நல்லவேளை! ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் பவானந்தர். பஸ்ஸும் போய்விட்டது.அந்த யுவதி போகவில்லை.அந்தச் சமயம் அவள் பக்கம் திரும்பினார்.

அவருள்ளம் சடக்கென்று கர்வத்துடன்ஓங்கியது. திருப்தியுடனும், ஆத்மாபிமானத்துடனும், தன்னுடைய ஜரிகை அங்கவஸ்திரத்தில் ஒட்டிய தூசியைத் தட்டினார்.அகஸ்மாத்தாகத் திரும்பிய அந்தப் பெண் இவரைக் கண்டு ஒரு புன்னகை வீசினாள்.இவர் கர்வம் – ஆமாம், இவரைக் கண்டுதான் அவள் புன்சிரிப்புச் சிரித்தாள்! அதில் சந்தேகமில்லை.பவானந்தரின் கற்பனையோட்டம் வெகு தீவிரமாக ஓடிக் கனவு லோகத்தில் போய்க்கலந்தது.அவரும்தான் இவ்வளவு காலமாக – முப்பது வருஷமாக ஆடியோடிச் சம்பாதித்தாய்விட்டது. கொஞ்சமாவது சுகப்பட வேண்டாமா! லட்சக்கணக்கில் சேர்த்து குவிந்துகிடக்கிறது பாங்கியில். பட்டணத்திலேயே பத்துப் பங்களாக்கள். ஒவ்வொன்றும்பதினாயிரக் கணக்கில் பெறும். இவ்வளவு நாள் சம்பாதித்துத் தான் அதைஅனுபவிக்க வேண்டாமா?எல்லாம் ரொம்ப எளிதாக முடித்துவிடலாம்.

வியாபாரம் தானே, என்ன பிரமாதம்?அவருக்குக் கீழ் இவ்வளவு காமலாக உழைத்த மானேஜர் மன்னார்சாமி இருக்கிறான்.ரொம்ப நாணயஸ்தன். கொஞ்சங்கூடக் குறை சொல்ல இடமில்லை இத்தனை வருஷமாக. ஒருசின்ன ஏற்பாடு பண்ணிவிட்டால் அவன் பேருக்கே கடையை எழுதி வைத்துவிடலாம்.குழந்தையிருக்கிறது. அதற்கும் ஒரு வழியிருக்கிறது. கிராமத்தில்தம்பியிருக்கிறான். ரொம்ப நாளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறான். குழந்தையைத்தன் வீட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்று. அவனுக்குத்தான் பிள்ளையில்லை.அவனுக்கும் சில ஆயிரத்தை எழுதி வைத்துவிட்டால் போகிறது. அந்தத் தொல்லையும்ஒழிந்தது.

இனிமேல் பாக்கி சகோதரிதான். அவளும்தான் சில நாளாக முனகுகிறாள். ஏதோபதினாயிரம் ரூபாயையும் ஒரு பங்களாவையும் அவள் பேருக்கு வைத்துவிட்டால்அவளுக்குத் திருப்தியாய் விடும். இனி வேறென்ன...?‘மைலாப்பூர்! மைலாப்பூர்!’இருபத்தைந்தாவது பஸ் மைலாப்பூருக்கு. ஆனால் அதைப்பற்றி கவலைப்படவில்லைஅவர். அவருடைய கவனமெல்லாம் அந்தப் பெண்ணின்மேல் இருந்தது.அதோ காலையெடுத்து வைக்கிறாளே! அதில், மைலாப்பூர் போய்விடப்

போகிறாளோ?அவருடைய மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. அந்த ஒரு வினாடியும் அவருக்குஒரு யுகமாய் இருந்தது.நல்லவேளை! 'அது இல்லையம்மா! இங்கே வா' என்று வயோதிபர் அந்தப் பெண்ணைநிறுத்தியதும்தான், பவானந்தருக்கு மீண்டும் உயிர் வந்தது.'அம்மா' என்று கூப்பிட்டாரே, அதனால் அவருடைய ஹேஷ;யம் நிச்சயம்தான்.பாட்டனார்தான்!பவானந்தருக்கு அப்போது தேவலோகத்துக்குத் தூக்கிக் கொண்டு போவதுபோலிருந்தது. தன்னை மறந்த இன்பத்தில் மயங்கித் திளைத்துத் தவித்தார்.அந்தக் கிழவனுடன் உடனே பேசி எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டுமென்றுஆவலுடன் துடித்தது அவருடைய நெஞ்சு.

ஒருவேளை மறுத்தால் என்ன? ஆனால், இரும்பு வியாபாரி பவானந்தரைத் தெரியாதவர்யாரேனுமுண்டா? அவருடைய ஏராள ஆஸ்தியே உலகப் பிரசித்தியாயிற்றே! அவர் வாய்திறந்து கேட்டால் பெண் கொடுக்க மறுப்பவர்; கூட உண்டா என்ன?நிமிர்ந்து நின்று தன்னை ஒரு தடவை குனிந்து பார்த்துக் கொண்டார். மீசையில்கை தானாகவே போயிற்று.ஐம்பது வயது என்ன ஒரு பெரிய வயதா என்ன? காலையிலும் மாலையிலும் தினசரிபீச்சுக்கரையில் நான்கு மைல் நடக்கவில்லையா, கொஞ்சங்கூடக் களைப்பின்றி? பார்த்தால் என்ன ஐம்பது வயது என்றா சொல்ல முடியும்? அன்றியும் பணமல்லவாஇருக்கிறது….அவருடைய பகற் கனவு உச்ச ஸ்தாயியை அடைந்தது.உடனே, விவாகம் ஆனதும், பெங்களூரில் ஓர் அழகிய மாளிகை வாங்கிவிட வேண்டும்.ஒரு புதிய அந்த வருஷத்திய மாடல் மோட்டார் வண்டி. பட்டணத்தில்எல்லாவற்றையும் ஒரு வழியாக ஏற்பாடு பண்ணிவிட்டுப் பெங்களூரோடு, அந்தக்கட்டழகியுடன் சுகவாசம். பாங்கியில் பணம், காலில் ஒட்டிய தூசியால் இட்டதைத்தலையால் தாங்கிச் செய்ய வேலையாட்கள்! வேறு என்ன வேண்டும்? கட்டாயம் அந்தப் பெண்ணிற்குச் சங்கீதம் தெரிந்திருக்கும். இவ்வளவுநாகரிகத்துடன் இருப்பவர்களுக்கு வீணை தெரிந்திருக்க வேண்டும். அவருக்கும்ரொம்ப நாளாக ஓர் ஆசை.

யாருக்காவது வீணை கற்றுக் கொடுத்துத் தினசரிமாலையில் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று. அதுவும்பூர்த்தியாகிவிடும். அவருடைய அதிர்ஷ;டத்துக்குக் குறுக்கே பிறந்தவர் யார்…?சடக்கென்று விழித்துக் கொண்டவர்போல் திரும்பினார் பவானந்தர். அந்தோ!மாம்பலம் போகும் பஸ் அவருடைய 'கட்டழகி'யைச் சுமந்துகொண்டு 'புர்' என்றசப்தத்துடன் கிளம்பிற்று. கனவில் லயித்திருந்த அவர் பஸ் வந்ததையும் அந்தப்பெண் ஏறிக் கொண்டதையும் கவனிக்கவில்லை.மறைந்து கொண்டிருக்கும் வண்டியிலிருந்து அந்த யுவதி மூன்றாவது முறையாகஅவரைப் பார்த்துச் சிரித்தாள்.திடுக்கிட்டுத் திரும்பினார், பவானந்தர்.

பின்புறமிருந்த வெற்றிலைபாக்குக் கடைக் கண்ணாடியில் பிரதிபலித்தது அவருடைய முகம். அவருடையநெற்றியில் வலது புருவத்துக்கு மேலும், முகத்தில் வலது கன்னத்திலும் ஒருதம்பிடியகலம் குங்குமப் பொட்டு!அன்று காலையில் வழக்கம்போல்

அவர் குழந்தையையெடுத்து முத்தமிட்டுக்கொள்ளும்போது, அதன் நெற்றியிலிருந்த குங்குமத்தைக் கவனிக்கவில்லை என்பதுஅப்போதுதான் நினைவு வந்தது. அதோடு அந்த யுவதி சிரித்த காரணமும் அவருக்குவிளங்கி விட்டது!

----------

தமிள் படிச்ச அளகு

குற்றாலத்தில்ஒரு நாள், ரசிகமணி டி.கே.சி. அவர்களைப் பார்க்க ஒருத்தர் வந்தார்.

வந்தவர் செந்தமிழில் எங்களிடம் “அய்யா அவர்களைப் பார்க்க வந்திருப்பதாகச்” சென்னார்.

அவர் பேசுகிற விதமே அப்படி என்று தெரிந்தது.ரசிகமணி அவர்கள் இதை ரெம்ப அனுபவிப்பார்கள் என்று எங்களுக்குக் குஷி!

அவரை அழைத்துக் கொண்டு போய் விட்டோம். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சுத்தமான தமிழில் வெளுத்து வாங்கினார் மன்னன்.

ஆ….ஹா என்பது போலத் தலையை ஆட்டி, மீசைக்குள்ளேயே சிரித்துக் கொண்டு ரசித்துகொண்டு ரசிகமணி அவர்கள் ” ரசித்த” விதம், எங்களுக்கு அனுபவிக்கும் படியாக இருந்தது! வந்தவர் பேசி முடிந்ததும் ரெம்ப குளுமையா, ” வீட்ல சம்சாரத்துட்டயும் இப்படித்தான் பேசுவீளோ?” என்று கேட்டார்கள் ரசிகமணி! டி.கே.சி. சிரிக்காமல் கேட்டுவிட்டார். எங்களுக்குச் சிரிப்பை அடக்கப் பிரயாசைப்பட வேண்டியதிருந்தது.

இடைச்செவலுக்கு வந்த பிறகும் அந்தக் “காட்சி”, ரசிகமணி அவர்கள் கேட்ட ஞாயமான கேள்வி மனசில் கேட்டுக் கொண்டேயிருந்தது. இதை கு.அழகிரிசாமியின் மாமனாரான சந்திரகிரியிடம் அப்படியே – குற்றாலத்தில் நடந்ததைச் சொன்னேன். உடனே அவர் என்னிடம் ஒரு நாட்டுக்கதையைச் சொன்னார்.

ஒரு ஊரில், அளகு என்ற பையனை வெளியூருக்குத் தமிழ் படிக்கப் பண்டிதரிடம் அனுப்பினார்கள். அவன் ரெம்ப நாள் தமிழ் படித்து முடித்துவிட்டு ஊருக்கு வந்தான். அம்மா அப்பாவைப் பார்த்ததும், “அன்னாய், தாதாய்” என்றான் மகிழ்ச்சியுடன், பெற்றவர்களுக்கு “திக்” கென்றது!

“என்ன சொல்லுகிறான் பயல்” என்று திகைத்தார்கள்,”ஏலே அளகு, என்ன சொல்லுதே?” என்று கேட்டார்கள். திரும்பவும் அவன் அதே தோரணையில் ” அன்னாய் தாதாய்” என்று சொல்லிவிட்டு “அயிற்சி மிக்கது, அடிசில் புக்கி, சிறிதே அயனம் கொணர்க” என்றான்.

பெத்த தகப்பன் பதறித்தான் போனான்!

“அட பாவிப் பயலே! ஒன்னே தமிள் படிக்கதான்லே அனுப்ச்சோம்; நீ என்ன பாசையெல்லாமோ போசுதயே!”

அந்த ஊருக்குப் பக்கத்தில் எப்பவோ ஒரு லாட சன்யாசியை கொள்ளைக்காரர்கள் வழிப்பறி செய்து கொன்று போட்டுவிட்டார்கள். தொலைதூர வடநாட்டிலிருந்து வந்த அந்த லாட சன்யாசி போயாக மாறி யாரையாவது பிடிப்பான். அந்த லாட சன்னாசிப் பேய் பிடித்த ஆள் பேசுவது இப்படித்தான் யாருக்கும் விளங்காது, தங்கள் பிள்ளைக்கும் அதே பேய்தான் – தனியாக நடந்து வந்தபோது – பிடித்துவிட்டது என்று வருத்தப் பட்டார்கள்.

போய்களுக்கு எருக்கம் மிளாரு கொண்டு வந்து நாளு சாத்து சாத்தினால் ” போறேன் போறேன்” என்று அலறிக் கொண்டு போய்விடும். ஆகையால், எருக்கம் மிளாறு கொண்டு வரச் சொன்னார்கள்.

ஊரே கூடிவிட்டது, எல்லாருக்கும் வருத்தம் தான், ” ஆசயாய்ப் படிக்கப் போன பிள்ளையை, இப்படி பேய் வந்து பிடித்து ஆட்டுகிறதே” என்று,

ரெம்ப தூரத்திலிருந்து நடந்தே வந்த பையன்; பசிகூட அமத்த முடியலையே என்று அம்மாவுக்கு வருத்தம். காலையிலிருந்து மத்தியானம் வரை அவன் கதவைத் தட்டித் தட்டி ” அன்னாய் தாதாய், அன்னாய் தாதாய்” என்று அழைத்து அழைத்து அழுத்துப் போனான்.

பொழுது இறங்கியது. பசி பிராணன் போனது. அவனை அறியாமலேயே சத்தம் போட்டான் இப்படி ” ஆத்தோவ் வகுறு பசிக்கி, கஞ்சி ஊத்து” – மாறி மாறி சொன்னான் பலமாக!

பெற்றவ்ர்களின் காதில் தேன் வந்து பாய்வது போல இருந்தது. பையனை எருக்கம் மிளாரினால் அடிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சந்தோஷம் அவர்களுக்கு, ” நம்ம பெரியாட்கள் செய்த புண்ணியம், நம்ம பையனுக்குத் திரும்பவும் நல்லா பேச வந்திட்டது”, என்று சொல்லி ஆறுதல் அடைந்தார்களாம்.

புத்தகம் : கரிசல் காட்டுக் கடுதாசி.

ஆசிரியர் : கி.ராஜநாரயணன்.

பதிப்பகம்: அகரம்.

குற்றாலத்தில்ஒரு நாள், ரசிகமணி டி.கே.சி. அவர்களைப் பார்க்க ஒருத்தர் வந்தார்.வந்தவர் செந்தமிழில் எங்களிடம் “அய்யா அவர்களைப் பார்க்க வந்திருப்பதாகச்” சென்னார்.அவர் பேசுகிற விதமே அப்படி என்று தெரிந்தது.ரசிகமணி அவர்கள் இதை ரெம்ப அனுபவிப்பார்கள் என்று எங்களுக்குக் குஷி!அவரை அழைத்துக் கொண்டு போய் விட்டோம். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு

சுத்தமான தமிழில் வெளுத்து வாங்கினார் மன்னன்.ஆ....ஹா என்பது போலத் தலையை ஆட்டி, மீசைக்குள்ளேயே சிரித்துக் கொண்டு ரசித்துகொண்டு ரசிகமணி அவர்கள் " ரசித்த" விதம், எங்களுக்கு அனுபவிக்கும் படியாக இருந்தது! வந்தவர் பேசி முடிந்ததும் ரெம்ப குளுமையா, " வீட்ல சம்சாரத்துட்டயும் இப்படித்தான் பேசுவீளோ?" என்று கேட்டார்கள் ரசிகமணி! டி.கே.சி. சிரிக்காமல் கேட்டுவிட்டார். எங்களுக்குச் சிரிப்பை அடக்கப் பிரயாசைப்பட வேண்டியதிருந்தது.இடைச்செவலுக்கு வந்த பிறகும் அந்தக் "காட்சி", ரசிகமணி அவர்கள் கேட்ட ஞாயமான கேள்வி மனசில் கேட்டுக் கொண்டேயிருந்தது. இதை கு.அழகிரிசாமியின் மாமனாரான சந்திரகிரியிடம் அப்படியே – குற்றாலத்தில் நடந்ததைச் சொன்னேன். உடனே அவர் என்னிடம் ஒரு நாட்டுக்கதையைச் சொன்னார்.

ஒரு ஊரில், அளகு என்ற பையனை வெளியூருக்குத் தமிழ் படிக்கப் பண்டிதரிடம் அனுப்பினார்கள். அவன் ரெம்ப நாள் தமிழ் படித்து முடித்துவிட்டு ஊருக்கு வந்தான். அம்மா அப்பாவைப் பார்த்ததும், "அன்னாய், தாதாய்" என்றான் மகிழ்ச்சியுடன், பெற்றவர்களுக்கு "திக்" கென்றது!"என்ன சொல்லுகிறான் பயல்" என்று திகைத்தார்கள்,"ஏலே அளகு, என்ன சொல்லுதே?" என்று கேட்டார்கள். திரும்பவும் அவன் அதே தோரணையில் " அன்னாய் தாதாய்" என்று சொல்லிவிட்டு "அயிற்சி மிக்கது, அடிசில் புக்கி, சிறிதே அயனம் கொணர்க" என்றான்.பெத்த தகப்பன் பதறித்தான் போனான்!"அட பாவிப் பயலே! ஒன்னே தமிள் படிக்கதான்லே அனுப்ச்சோம்; நீ என்ன பாசையெல்லாமோ போசுதயே!"அந்த ஊருக்குப் பக்கத்தில் எப்பவோ ஒரு லாட சன்யாசியை கொள்ளைக்காரர்கள் வழிப்பறி செய்து கொன்று போட்டுவிட்டார்கள். தொலைதூர வடநாட்டிலிருந்து வந்த அந்த லாட சன்யாசி போயாக மாறி யாரையாவது பிடிப்பான். அந்த லாட சன்னாசிப் பேய் பிடித்த ஆள் பேசுவது இப்படித்தான் யாருக்கும் விளங்காது, தங்கள் பிள்ளைக்கும் அதே பேய்தான் – தனியாக நடந்து வந்தபோது – பிடித்துவிட்டது என்று வருத்தப் பட்டார்கள்.போய்களுக்கு எருக்கம் மிளாரு கொண்டு வந்து நாளு சாத்து சாத்தினால் " போறேன் போறேன்" என்று அலறிக் கொண்டு போய்விடும். ஆகையால், எருக்கம் மிளாறு கொண்டு வரச் சொன்னார்கள்.

ஊரே கூடிவிட்டது, எல்லாருக்கும் வருத்தம் தான், " ஆசயாய்ப் படிக்கப் போன பிள்ளையை, இப்படி பேய் வந்து பிடித்து ஆட்டுகிறதே" என்று,ரெம்ப தூரத்திலிருந்து நடந்தே வந்த பையன்; பசிகூட அமத்த முடியலையே என்று அம்மாவுக்கு வருத்தம். காலையிலிருந்து மத்தியானம் வரை அவன் கதவைத் தட்டித் தட்டி " அன்னாய் தாதாய், அன்னாய் தாதாய்" என்று அழைத்து அழைத்து அழுத்துப் போனான்.பொழுது இறங்கியது. பசி பிராணன் போனது. அவனை அறியாமலேயே சத்தம் போட்டான் இப்படி " ஆத்தோவ் வகுறு பசிக்கி, கஞ்சி ஊத்து" – மாறி மாறி சொன்னான் பலமாக! பெற்றவ்ர்களின் காதில் தேன் வந்து பாய்வது போல இருந்தது. பையனை எருக்கம் மிளாரினால் அடிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சந்தோஷம் அவர்களுக்கு,

" நம்ம பெரியாட்கள் செய்த புண்ணியம், நம்ம பையனுக்குத் திரும்பவும் நல்லா பேச வந்திட்டது", என்று சொல்லி ஆறுதல் அடைந்தார்களாம்.

----------------

இல்லாள்

விடிகாலை நேரமாகத்தான் இருக்கும். அவளுடைய இடது கை அவருடைய பரந்த புஜங்களைத் தடவி, "என்னங்க…" என்றாள்.

"ம்…" என்றுகொண்டே அவர் நெளிர்விட ஆயத்தமானபோது, அதை நிறுத்த முற்படுவதுபோல அவருடைய உடம்போடு பிணைந்து பின்னிக்கொள்வது ஒரு சுகம்.

"என்ன இது, சின்னப் பிள்ளைபோல…" என்றார்.

"இன்னிக்கும் ஒரு கனவு கண்டேன்" என்றாள்.

"சொல்லு சொல்லு… கேப்போம்" என்றார்.

ஜானு சொல்லத் தொடங்கினாள். இரண்டாம் சாமக்கோழி கூவியது. போர்த்திக்கொண்டு இருந்த வேட்டியை உடுத்திக்கொள்வோமா என்று நினைத்தார்.

"அம்மாவும் நானும், எங்க வீட்டு அடுப்பங்கூடத்துக்கு மேற்கே உள்ள தரையில் ஈச்சம் பாய்களை விரித்துப் படுத்திருக்கோம். பகல் மாதிரி நிலா காயுது. ராப்பாடியின் குரலும் உடுக்குச் சத்தமும் கீழத் தெரு மூலையில இருந்து கேக்குது. எனக்கு மெனா (முழிப்பு) வந்துட்டது. பக்கத்தில் கட்டிப்போட்டு இருந்த பள்ளை ஆடு கலைஞ்சி எந்திரிச்சு நின்னது. அம்மா குறட்டைபோட்டுத் தூங்கிக்கிட்டு இருக்கா. வழக்கமா வர்ற அதே பாம்புதான் வந்தது. நேரெ வந்து அம்மாவோட சேலையெக் கடிச்சி இழுக்கு. அதெ விரட்டுறதுக்குக் கையெ ஓங்க நினைக்கேம்; கையி வர மாட்டேங்கு. சத்தம் போட நினைக்கேம்… தொண்டையில இருந்து சத்தம் எழும்ப மாட்டேங்கு. ஆடு சத்தம் கொடுக்கு. பாம்பு ஆட்டெப் பாத்துப் படமெடுத்து சீத்தடிக்கி! மாட்டுத்தொழுக் கதவெத் தட்டுற சத்தம் கேட்டது. நா முழிச்சிட்டேம்; நீங்கதாம் இங்கெ குறட்டைவிட்டுத் தூங்கிக்கிட்டு இருக்கீக!"

சிரிப்பு வந்தது அவருக்கு; அடக்கிக்கொண்டார். அவளோடு இந்த வீட்டுலேயே குப்பை கொட்டி இருபத்தி அஞ்சி வருசத்துக்கும் மேலெ ஆகப்போகுது. அவளோட பாம்புக் கனவுகள் கேட்கச் சுவாரஸ்யமாக இருக்கும். ஆனால், ஒரு கனவுகூட இந்த வீட்டில் நடந்ததாக இருக்காது. இதை அவர் ஒருநாள்கூட அவளிடம் சொல்லிக் காட்டியது இல்லை.

அதுக்குக் காரணம் இருந்தது. அவளாகவே அந்த வீட்டைவிட்டு இந்த வீட்டுக்கு விரும்பி வந்தவள். எப்பவாவது அவசியம் கருதி 'அந்த வீடு' என்று வாய் தவறி அவர் வாயில் இருந்து பேச்சு வந்தாலே, "வேண்டாம்; அந்த வீட்டுப் பேச்சு" என்று முகத்தில்

அறைந்ததுபோலச் சொல்வதே அவள்தான். கனவைச் சொல்லும்போது மட்டும் அவளுடைய வீடு வரும். கனவுக்குக் கனவு அந்த வீடுதான் வரும்!

ஒருநாள்… நடுச் சாமம் இருக்கும். சோமய்யா தொழு வீட்டின் உள் திண்ணையில் படுத்துஇருந்தார். கனமான கதவு. தாழ்ப்பாள் உண்டு என்றாலும், பூட்டுவது இல்லை. திறக்கும்போதே அந்தக் கதவு திண்ணையை உரசிக்கொண்டுதான் திறக்கும். அதோடு, அதன் குடுமி மெல்லியராகம் இசைக்கும். சின்ன அலுக்கட்டம் என்றாலே சோமய்யாவுக்கு மெனா வந்துவிடும்.

அப்போதுதான் அவர் 'சோத்துத் தூக்கம்' முடிந்து எழுந்து, உழவு மாடுகளுக்கு எல்லாம் கூளம் போட்டுவிட்டு வந்து திண்ணையில் சாய்ந்தார். ஒரு வித்தியாசமான மெல்லிய மணம் மூக்கைத் தொட்டது.

விடலைப் பிள்ளைகள் தனித்துப் படுத்திருந்தால், 'மோகினிப் பேய் தேடி வரும்' என்று சோமய்யா கேள்விப்பட்டு இருக்கிறார், கதைகளில்.

இப்போது நிஜமாகவே யாரோ வந்து இருக்கிறார்கள். ஒருவேளை அவளாக இருக்குமோ?

அப்போது ஒரு மேல் காற்றுப் பருவம். பெரும்பாலான வீடுகள் மட்டுமல்ல… தொழுவங்கள் அத்தனையும் கூரைகளால் வேயப்பட்டவையே. எப்படித் தீ எழுந்து பரவியது என்று தெரியவில்லை. சோமய்யா தன்னுடைய மாடுகள் அனைத்தையும் அவிழ்த்து, தெருவில் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, உழவுக் காளைகள், வண்டி மாடுகளையும் அவிழ்த்துக் கொண்டுபோய், கம்மாக்கரை மரங்களின் வேர்களில் கட்டிவைத்துவிட்டு, ஊருக்குள் ஓடி வந்தார். மொத்த இருட்டும் மறைந்து, ஊருக்குள் அப்படி ஒரு வெளிச்சம். கூரை வீட்டுக் காரர்கள் அத்தனை பேரும் கையில் ஈரச் சாக்குடன் அவரவர் வீட்டைச் சுற்றி வருகிறார்கள். ஓலைக் கூரை வீட்டுக்காரர்களுக்குத்தான் பதைபதைப்பு அதிகம். தட்டைக் கூரைக் காரர்களுக்கு அவ்வளவு பயம் இல்லை. சீகைக் கூரைக்காரர்களுக்குப் பயமே இல்லை. நெருப்புப் பிடித்தாலும் பற்றி எரியாது. ஜானு வின் வீட்டு மாட்டுத் தொழுவில் அப்போது தான் நெருப்புத் தொற்றியது. கம்மந்தட்டையால் நிறைந்த கூரை. அங்கே அந்த வீட்டு ஆண்களில் முக்கியமானவர்களைக் காணோம். வீட்டுக்குள் சாமான்களை ஒதுங்கவைத்துக்கொண்டு இருப்பார்கள்போல் இருக்கு. அது இவர்களுக்குப் பகையாளிகளின் வீடு. பேச்சுவார்த்தை கிடையாது. ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்தால் பார்க்காததுபோலப் போவார்கள். இதுக்கும் அவர்கள் தாயாதிகள் இல்லை… சம்மந்தக்காரர்கள்தான். வெறும் சம்மந்தக்காரர்கள் என்று சொல்லுவது இல்லை. கொழுத்த சம்மந்தக்காரர்கள்.

இந்தப் பகை ரெண்டு தலைமுறையாக இருந்து வருகிறது. இதனால், இவர்களுக்குள் நடந்திருக்க வேண்டிய நல்ல சம்மந்தங்கள் எல்லாம் தட்டிப்போயிருக்கின்றன.

ஊர்களில் இப்படி இருப்பது வழக்கம்தான். இவன் மிதித்துச் சென்ற காலடித் தடத்தில் அவன் மிதிக்க மாட்டான். மாட்டுச் சந்தையில் அவன் பார்த்த மாட்டை, இவன் பார்க்க மாட்டான்!

ஆனால், களத்தில் விதை தானியங்கள் மழையில் நனைகிறது என்றால், பகையாளியாக இருந்தாலும் ஓடிப் போய் உதவுவார்கள் என்றாலும், அதன் பிறகும் பேசிக்கொள்ள மாட்டார்கள்!

சோமய்யா ஓட்டமும் நடையுமாகத் தெரு வழியாக வந்துகொண்டு இருந்தார். தெரு எல்லாம் அவிழ்த்துவிடப்பட்ட மாடுகள். ஜானுவின் தொழுவாசல் கதவு மூடப்பட்டு இருந்தது. காலால் ஓங்கி உதைத்துத் தள்ளினார். அந்தக் கதவுக்கு கல் அடைதான் உண்டு, பூட்டு இல்லை.

உள்ளே போன பிறகுதாம் தெரிந்தது... பாய்ச்சல் உழவுக்காளை மட்டும் கயிற்றை அத்துக்கொண்டு, மருண்டு அங்கும் இங்கும் திரிந்துகொண்டு இருந்தது. மற்ற மாடுகளும் அவிழ்த்துவிடப்படாமல் கலைந்த பார்வையில் திகைத்துக்கொண்டு இருந்தன. ஜானு வீட்டார், என்ன செய்ய என்று பார்த்துக்கொண்டு இருப்பது தெரிந்தது.

யோசிக்க நேரம் இல்லை. அவர்களோடு பேசிக்கொள்ளவும் முடியாது. முறிந்துபோன நீண்ட வண்டிவாரி ஒன்று கிடந்தது. அதை எடுத்தார். வாகாக அமைந்ததால் அதைக் கண் இமைக்கும் நேரத்தில் அதன் கழுத்தில்வைத்தார். உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது! என்னதான் பாய்ச்சல் மாடாக இருந்தாலும், அதையும் மூக்கணாங்கயிறு பூரி வேலையில் கட்டி வசத்தியாச்சே. கழுத்தின் மேல்வைத்த அந்த வண்டிவாரி அதுக்கு மோக்கால் (நுகந்தடி) போல் தெரிந்தது போலும். கடமை ஞாபகம் வந்துவிட்டது போலிருக்கு!

அப்படியே கிட்டத்தில் போய் கபக் என்று மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக்கொண்டார். வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த ஜானு வீட்டுக்காரர்களின் பதைப்பான முகம் மாறி சிரிப்பாக ஆனது. மற்றவர்கள் ஓடி வந்து கட்டு மாடுகளை அவிழ்த்து தெருவுக்கு ஓட்டினார்கள். அதுவரைக்கும் சோமு மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக்கொண்டு இருந்தார். அப்போதுதான் அந்தக் காட்சி கிடைத்தது பார்க்க. தொழுவையும் வீட்டையும் இணைக்கும் ஒரு சிறிய அறையில், அப்போதுதான் சடங்கான அந்தச் சின்னப் பொண்ணு ஜானு, சோமுவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அவள் முகம் அப்போதுதான் அரைத்த மஞ்சள் உருண்டைபோல் இருந்தது. அவள் பார்வை மின்னல் இறங்குவதுபோல அவருக்குள் இறங்கியது. வீட்டார்கள் அங்கே இல்லை என்றால், இன்னொரு தடவை பார்க்கலாம். அந்தச் சிரிப்பு முகம் மனசில் இருந்து அழிய மாட்டேங்கு.

ஊரில் பற்றிய தீ அணைந்த பிறகும் இந்தத் தீ அணைவேனா என்கிறது.

அன்று அவர்களின் தொழுக் கதவை இவர் ஓங்கி மிதித்துத் தள்ளித் திறந்துகொண்டு வேகமாகப் புகுந்தார். இன்று இவள் மொள்ளத் தொட்டுக் கதவைத் திறக்க, ராகம் பாடிக்கொண்டே திறந்தது. கண்டுகொண்டார் உடனே, இவள்தான் என்று. அப்படியே அலேக்காகத் தூக்கித் திண்ணையில் வைத்துக்கொண்டார். அதன் பிறகு என்ன என்று தெரியவில்லை; கை கால் இயங்கவோ வாய்கள் பேசவோ மாட்டேன் என்கிறது.

இந்த நேரத்தை எப்படி உடைப்பது. ஜானு சத்தம் இல்லாமல் அழ ஆரம்பித்தாள். கண்ணீரைத் துடைக்க நினைத்துக் கை நீண்டால், நீட்டிய கைக்கு அடி கிடைக்கிறது!

பாய்ச்சல் மாட்டை அடக்கிய கை இது. நேரம் நகர்ந்துகொண்டு இருக்கிறது. இருட்டு காணாமல் போய் முகம் தெரிய ஆரம்பித்தது. திறந்து இருந்த கதவு வழியாக வாசல் தெளிக்க சாணி எடுக்க முதல் ஆளாக வந்தது சோமய்யாவின் அம்மாப் பாட்டி.

பேராண்டியின் இருப்பு பாட்டியைத் திடுக்கிடவைத்தாலும் பிறகு சிரிப்பை வரவழைத்தது. கதவு திறந்துகிடந்ததால் கள்ளம் இல்லே என்று அறிந்து கொண்டாள். பக்கத்தில் வந்து, தொங்கிய முகத்தின் நாடியைத் தொட்டுத் தூக்கி, அடையாளம் கண்டாள். பேரனைப் பார்த்துச் சத்தம் இல்லாமல் சிரித்தாள். ”இனி, இங்கே வேண்டாம்; வா வீட்டுக்கு. எந்திரிரா நீயும்” என்று சொல்லி, ரெண்டு பேரையும் பக்கத்திலேயே உள்ள இவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். உள்ளே நுழையும்போதே

”சீதா கல்யாணமே

சீராமன் கல்யாணமே” என்று

உரத்துப் பாடினாள் பாட்டி.

”பைசா செலவு இல்லாமல் பொண்ணைக் கொண்டுவந்துட்டெடா சோமா” என்றார் தாத்தா.

உடனே, அம்பலக்காரரைக் கூப்பிட்டு அனுப்பி, இன்ன மாதிரி சங்கதி, பெண் பிள்ளையைத் தேட வேண்டாம் பத்திரமாக இங்கே இருக்கிறாள் என்று சொல்லி அனுப்பினார்கள் என்றாலும், அங்கே மவுனமே பதிலாக இருந்தது.

‘ ‘மவுனம் சம்மதத்துக்கு அடையாளம்’ என்று இதை வைத்துத்தான் பெரியவர்கள் சொல்லியிருப்பார்கள் போலிருக்கு’ என்று பேசிக்கொண்டார்கள். வீட்டிலேயே வைத்து ‘கட்டுத் தாலி’ கட்டிக்கொள்ளப்பட்டது. சோமுவின் வீட்டில் பெரியவர்கள், ஜானுவின் அழகைக் கண்டு மெச்சவில்லை; அவளுடைய திடமான உடம்பைக் கண்டுதான் திருப்திப்பட்டுக்கொண்டார்கள். விலை கொடுக்காமல், சந்தையிலிருந்து அரும்பாடுபட ஒரு நல்ல மாடு கிடைத்துவிட்டதெ.

வாய் திறந்து சொல்லாவிட்டாலும், உள் மனசு சொல்லிக்கொண்டது.

கோடை உழவுக் காலத்தில் ஒருநாள்…

கம்மாய் கரை நிழலில் உழவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டே பலதும் பேசுவார்கள்.

அப்போது, பாய்ச்சல் மாடுகளைப்பற்றிப் பேச்சு வந்தது.

”மாடுகளுக்கு நாம எவ்வளவு சவுகரியம் செய்து கொடுத்திருக்கோம். நமக்கு இருக்கிறதைப்போலவே மழையில் நனையாமல் இருக்க வீடு… நேரங்கண்டு கூளம்வைக்கிறது, பருத்திக்கொட்டை புண்ணாக்கு, தவிடு, பச்சைப் புல்லு, சத்துள்ள நாத்துக்கூளம் எப்பிடி எல்லாம் கவனிச்சிக்கிடுதோம். பிரியமா தட்டித் தடவிக்கொடுக்கோம். என்ன செய்தும் என்ன… பாய்ச்சல், கள்ளப் பாய்ச்சல் அதுகளை விட்டுப் போக மாட்டேங்குதெ” – இப்படிச் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே இதுகளைக் கேட்டுக்கொண்டே பாப்புத் தாத்தா வந்தார், ”என்ன சொல்றாம் பேராண்டி?” என்றுகொண்டே.

பாப்புத் தாத்தா கரை மரத்தடிக்கு வந்துவிட்டாலே கலகலப்பு வந்துவிடும். கொரு பேசுவதில் சமர்த்தன்.

”என்னத்தடா சவுகரியம் பண்ணிக்கொடுக்கீக? பேப்பய புள்ளைகளா. உயிர் ராசிகளுக்கே உண்டான சொகத்தை அனுபவிக்கவிடாம காயடிச்சிப் போடுதீக. சவுகரியம் பண்ணிக்கொடுக்கீகளா…” – சிரிப்புப் பரவியது.

இன்னும் சொன்னார், டேய், பாய்ச்சல்ங்கிறது அதோட உரிமைடா. அதெக் கூடாதுன்னு சொல்ல நீ யாரு?

கள்ளப் பாய்ச்சலும் அப்படித்தாம். மனுசர்கள்ளெ தீவிரவாதி, பயங்கரவாதிகள்னு இருக்காங்கள்லெ அதுபோலத்தான்டா” என்றார்.

பின்னொரு நாள் சொன்னார்,

”சம்பளம் இல்லாத வேலையாள், வேலை நிறுத்தம் பண்ணாத வேலையாள் என்கிறதுஎல்லாம் இந்த மாடுகள்தாம். நம்ம வீட்டுப் பொம்பளைக எப்படியெல்லாம் ராவாப் பகலா வேலை செய்யுதுக; சம்பளமா கொடுக்கோம். அப்பிடித்தான்டா” என்றார்.

பொம்பளைகளை மாட்டோடு சேர்த்துச் சொன்னது அங்கே சிலருக்குச் சம்மதம் இல்லை.

ஜானு இந்த வீட்டுக்கு வந்த பிறகு, அவளுடைய அம்மா அங்கே ‘சட்டடியாகப்’ படுத்துவிட்டாள்.

மகளைப் பிரிந்த ஏக்கம்; கொஞ்ச நாளைக்கு அப்படித்தான் இருக்கும், பிறகு சரியாயிரும் என்றுதான் நினைத்தார்கள். காய்ச்சல், மண்டையடி என்று ஒருநாள்கூடப் படுத்த உடம்பு இல்லை. விழுந்தால் காடு… அடைந்தால் வீடு என்று மாடாய் உழைத்த உடம்பு. முரட்டுப் பாசமும் முரட்டு விரோதமும்தான் தெரியும். அவரவர் வீட்டுப்

பெரியவர்கள் சொன்னதும் செய்ததும்தான் இவர்களுக்கு வழிகாட்டி. அபூர்வமாக ஜானு போன்ற யாராவது ஒரு மனுஷி தோன்றித்தான் வழக்குகளை உடைப்பார்கள். மற்றவர்கள் தங்கள் தங்கள் மனசுக்குள் நிகழ்த்திப் பார்த்து மகிழ்ந்த பகல் கனவை, இப்படி ஒரு பெண் வந்து நிறைவேற்றிக்கொண்டாளே என்கிற உள் பொறாமை இருந்தாலும், வாய் திறந்து மெச்ச மாட்டார்கள். திட்டிக்கொண்டே இருப்பார்கள்.

பெரிய குடும்பங்களில், எந்த விசயங்களும் தாமதமாகத்தான் வெளியே தெரியும். அவற்றை முதலில் தெரிந்துகொள்கிறவர்களும், சொல்கிறவர்களும் தினமும் காலை மாலை வேளைகளில் பனை நார்ப் பெட்டியில் கஞ்சி, சோறு என்று வாங்க வரும் குடிமகள்களும் ஏகாலிகளும்தான். ஜானுவின் அம்மா படுத்ததும் இறந்ததும் அப்படித்தான் இவர்களுக்குத் தகவல் தெரிந்தது.

அம்மாவின் சாவுச் செய்தி கேட்டதும் நடுநடுங்கிப் போனாள். அடுத்து அவளைத் தாமரிக்க முடியவில்லை. சுவரில் முட்டி மோதுகிறதும் தூணைக் கட்டிக்கொண்டு அழுவதும்…

பலர் இவளிடம் துக்கம் விசாரிக்க வந்தார்கள். யாருக்கும் இவள் சரியா ‘இளவுகொடுக்க’வில்லை. அளகம்மா வந்த பிறகுதான் சேர்த்துப் பிடித்துக் கதறினாள். அளகம்மா இவளுக்குச் சித்தி முறை. வராதவ வந்திருக்கிறாள். இளவு விசாரிக்க வந்தவர்களை வா என்று சொல்லுவது இல்லை. போகும்போதும் போயிட்டு வர்றேம் என்றும் சொல்லுவது இல்லை.

ஒருநிலையில், அழுகை அமர்ந்த பிறகு பேச்சு தொடங்கியது.

”சித்தி, அம்மாவுக்கு இவ்வளவுக்கு ஆன பிறகும் எனக்குச் சொல்லி அனுப்பணும்னு யாருக்குமே தோணலையா?”

கேள்வி சரியானதுதாம். ஆனால், பதில் சொல்ல முடியாது. பிறகு சித்தி சொன்னாள்,

”ஆத்துமா பிரியிறதுக்கு முன்னாடி கண்ணுக பறவையாடுனது ஆரையோ தேடுதுன்னாங்க. எனக்குத் தெரியும். ஆறு பொட்டப் பிள்ளைக பெத்தாலும், கடைக்குட்டி நீதாம். ஒம்மேலெதாம் அவளுக்கு உசுரு.

அய்யோன்னு இருந்தது எனக்கு. ஜானகி எந்திரி. எடுக்கிறதுக்கு முந்தி பெத்த தாயோட முகத்தெ ஒரு தபா வந்து பாத்துக்கோம்மா” என்றாள். தலையைக் குலுக்கி.

”வேண்டாஞ் சித்தி; இனி அங்கெ எனக்கு என்ன இருக்கு, அம்மாவே போன பிறகு” என்று சொல்லி கொஞ்சம் நிறுத்தி,

”அம்மா எங்கனவுல வருவா; நாம் பாத்துக்கிடுவேம்” என்று தேம்பினாள்.

அப்போது பிடாங்கு வேட்டின் சத்தம் கேட்டது. தன்னை அறியாமலேயே ஜானு எழுந்தவள், மீண்டும் உட்கார்ந்தாள்.

சோமய்யா சொன்னார், ”ஜானு எந்தி… போயி அம்மா முகத்தெப் பாத்துட்டு வந்துரு.”

அதைத் தொடர்ந்து பெரியவர்களும் அவளை வற்புறுத்தினார்கள்.

சித்தி, ஜானகியின் கையைப் பிடித்தாள். எல்லோருமே அவளை அனுப்ப எழுந்திருந்தார்கள். திரும்பவும் ஒரு அழுகை அலை வந்து போனது.

ஜானுவுக்கு அடி எடுத்துவைக்கத் தயக்கம், ஆயாசம். சித்தி கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டாள்.

எல்லோரும் வீட்டுத் தலைவாசலோடு நின்றுகொண்டார்கள். சித்தியும் ஜானுவும் படி இறங்குவதற்கும், அங்கே பெருத்த அழுகையோடு ‘தேர்’ நகர்வதற்கும் சரியாக இருந்தது. சித்திக்குத்தான் அதிகம் அதிர்ச்சியாக இருந்தது. எப்படியும் கூட்டிக்கொண்டு வந்துவிடுவதாகச் சொல்லிவிட்டு வந்தும், இப்படிப் புறப்பட்டுப்போனால் என்ன அர்த்தம்.

தெரு நடுவில் நின்ற ஜானு,

‘நீ போ சித்தி’ என்று சொல்லிவிட்டாள்.

சித்தி போய்விட்டாள்.

தேர் மறையும் வரை பார்த்துக்கொண்டே இருந்த ஜானு முகம் திருப்பி வீட்டைப் பார்த்தாள். (அவர்கள் உள்ளே போயிருந்தார்கள்) இனி, இது நம்முடைய வீடா என்பதுபோல் இருந்தது அவள் பார்த்தது!

விடிகாலை நேரமாகத்தான் இருக்கும். அவளுடைய இடது கை அவருடைய பரந்த புஜங்களைத் தடவி, ”என்னங்க…” என்றாள்.”ம்…” என்றுகொண்டே அவர் நெளிர்விட ஆயத்தமானபோது, அதை நிறுத்த முற்படுவதுபோல அவருடைய உடம்போடு பினைந்து பின்னிக்கொள்வது ஒரு சுகம்.”என்ன இது, சின்னப் பிள்ளைபோல…” என்றார்.”இன்னிக்கும் ஒரு கனவு கண்டேன்” என்றாள்.”சொல்லு சொல்லு… கேப்போம்” என்றார்.ஜானு சொல்லத் தொடங்கினாள். இரண்டாம் சாமக்கோழி கூவியது. போர்த்திக்கொண்டு இருந்த வேட்டியை உடுத்திக்கொள்வோமா என்று நினைத்தார்.”அம்மாவும் நானும், எங்க வீட்டு அடுப்பங்கூடத்துக்கு மேற்கே உள்ள தரையில் ஈச்சம் பாய்களை விரித்துப் படுத்திருக்கோம். பகல் மாதிரி நிலா காயுது. ராப்பாடியின் குரலும் உடுக்குச் சத்தமும் கீழத் தெரு மூலையில இருந்து கேக்குது. எனக்கு மெனா (முழிப்பு) வந்துட்டது.

பக்கத்தில் கட்டிப்போட்டு இருந்த பள்ளை ஆடு கலைஞ்சி எந்திரிச்சு நின்னது. அம்மா குறட்டைபோட்டுத் தூங்கிக்கிட்டு இருக்கா. வழக்கமா வர்ற அதே பாம்புதான் வந்தது. நேரெ வந்து அம்மாவோட சேலையெக் கடிச்சி இழுக்கு. அதெ விரட்டுறதுக்குக் கையெ ஓங்க நினைக்கேம்; கையி வர மாட்டேங்கு. சத்தம் போட

நினைக்கேம்… தொண்டையில இருந்து சத்தம் எழும்ப மாட்டேங்கு. ஆடு சத்தம் கொடுக்கு. பாம்பு ஆட்டெப் பாத்துப் படமெடுத்து சீத்தடிக்கி! மாட்டுத்தொழுக் கதவெத் தட்டுற சத்தம் கேட்டது. நா முழிச்சிட்டேம்; நீங்கதாம் இங்கெ குறட்டைவிட்டுத் தூங்கிக்கிட்டு இருக்கீக!"சிரிப்பு வந்தது அவருக்கு; அடக்கிக்கொண்டார். அவளோடு இந்த வீட்டுலேயே குப்பை கொட்டி இருபத்தி அஞ்சி வருசத்துக்கும் மேலெ ஆகப்போகுது. அவளோட பாம்புக் கனவுகள் கேட்கச் சுவாரஸ்யமாக இருக்கும். ஆனால், ஒரு கனவுகூட இந்த வீட்டில் நடந்ததாக இருக்காது. இதை அவர் ஒருநாள்கூட அவளிடம் சொல்லிக் காட்டியது இல்லை.அதுக்குக் காரணம் இருந்தது. அவளாகவே அந்த வீட்டைவிட்டு இந்த வீட்டுக்கு விரும்பி வந்தவள். எப்பவாவது அவசியம் கருதி 'அந்த வீடு' என்று வாய் தவறி அவர் வாயில் இருந்து பேச்சு வந்தாலே, "வேண்டாம்; அந்த வீட்டுப் பேச்சு" என்று முகத்தில் அறைந்ததுபோலச் சொல்வதே அவள்தான். கனவைச் சொல்லும்போது மட்டும் அவளுடைய வீடு வரும். கனவுக்குக் கனவு அந்த வீடுதான் வரும்!ஒருநாள்… நடுச் சாமம் இருக்கும். சோமய்யா தொழு வீட்டின் உள் திண்ணையில் படுத்துஇருந்தார். கனமான கதவு.

தாழ்ப்பாள் உண்டு என்றாலும், பூட்டுவது இல்லை. திறக்கும்போதே அந்தக் கதவு திண்ணையை உரசிக்கொண்டுதான் திறக்கும். அதோடு, அதன் குடுமி மெல்லியராகம் இசைக்கும். சின்ன அலுக்கட்டம் என்றாலே சோமய்யாவுக்கு மெனா வந்துவிடும்.அப்போதுதான் அவர் 'சோத்துத் தூக்கம்' முடிந்து எழுந்து, உழவு மாடுகளுக்கு எல்லாம் கூளம் போட்டுவிட்டு வந்து திண்ணையில் சாய்ந்தார். ஒரு வித்தியாசமான மெல்லிய மணம் மூக்கைத் தொட்டது.விடலைப் பிள்ளைகள் தனித்துப் படுத்திருந்தால், 'மோகினிப் பேய் தேடி வரும்' என்று சோமய்யா கேள்விப்பட்டு இருக்கிறார், கதைகளில்.இப்போது நிஜமாகவே யாரோ வந்து இருக்கிறார்கள். ஒருவேளை அவளாக இருக்குமோ?அப்போது ஒரு மேல் காற்றுப் பருவம். பெரும்பாலான வீடுகள் மட்டுமல்ல… தொழுவங்கள் அத்தனையும் கூரைகளால் வேயப்பட்டவையே. எப்படித் தீ எழுந்து பரவியது என்று தெரியவில்லை. சோமய்யா தன்னுடைய மாடுகள் அனைத்தையும் அவிழ்த்து, தெருவில் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, உழவுக் காளைகள், வண்டி மாடுகளையும் அவிழ்த்துக் கொண்டுபோய், கம்மாக்கரை மரங்களின் வேர்களில் கட்டிவைத்துவிட்டு, ஊருக்குள் ஓடி வந்தார். மொத்த இருட்டும் மறைந்து, ஊருக்குள் அப்படி ஒரு வெளிச்சம். கூரை வீட்டுக் காரர்கள் அத்தனை பேரும் கையில் ஈரச் சாக்குடன் அவரவர் வீட்டைச் சுற்றி வருகிறார்கள்.

ஓலைக் கூரை வீட்டுக்காரர்களுக்குத்தான் பதைபதைப்பு அதிகம். தட்டைக் கூரைக் காரர்களுக்கு அவ்வளவு பயம் இல்லை. சீகைக் கூரைக்காரர்களுக்குப் பயமே இல்லை. நெருப்புப் பிடித்தாலும் பற்றி எரியாது. ஜானு வின் வீட்டு மாட்டுத் தொழுவில் அப்போது தான் நெருப்புத் தொற்றியது. கம்மந்தட்டையால் நிறைந்த கூரை. அங்கே அந்த வீட்டு ஆண்களில் முக்கியமானவர்களைக் காணோம். வீட்டுக்குள் சாமான்களை

ஒதுங்கவைத்துக்கொண்டு இருப்பார்கள்போல் இருக்கு. அது இவர்களுக்குப் பகையாளிகளின் வீடு. பேச்சுவார்த்தை கிடையாது. ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்தால் பார்க்காததுபோலப் போவார்கள். இதுக்கும் அவர்கள் தாயாதிகள் இல்லை… சம்மந்தக்காரர்கள்தான். வெறும் சம்மந்தக்காரர்கள் என்று சொல்லுவது இல்லை. கொழுத்த சம்மந்தக்காரர்கள்.இந்தப் பகை ரெண்டு தலைமுறையாக இருந்து வருகிறது. இதனால், இவர்களுக்குள் நடந்திருக்க வேண்டிய நல்ல சம்மந்தங்கள் எல்லாம் தட்டிப்போயிருக்கின்றன.ஊர்களில் இப்படி இருப்பது வழக்கம்தான். இவன் மிதித்துச் சென்ற காலடித் தடத்தில் அவன் மிதிக்க மாட்டான். மாட்டுச் சந்தையில் அவன் பார்த்த மாட்டை, இவன் பார்க்க மாட்டான்!ஆனால், களத்தில் விதை தானியங்கள் மழையில் நனைகிறது என்றால், பகையாளியாக இருந்தாலும் ஓடிப் போய் உதவுவார்கள் என்றாலும், அதன் பிறகும் பேசிக்கொள்ள மாட்டார்கள்!சோமய்யா ஓட்டமும் நடையுமாகத் தெரு வழியாக வந்துகொண்டு இருந்தார். தெரு எல்லாம் அவிழ்த்துவிடப்பட்ட மாடுகள். ஜானுவின் தொழுவாசல் கதவு மூடப்பட்டு இருந்தது. காலால் ஓங்கி உதைத்துத் தள்ளினார். அந்தக் கதவுக்கு கல் அடைதான் உண்டு, பூட்டு இல்லை.உள்ளே போன பிறகுதாம் தெரிந்தது… பாய்ச்சல் உழவுக்காளை மட்டும் கயிற்றை அத்துக்கொண்டு, மருண்டு அங்கும் இங்கும் திரிந்துகொண்டு இருந்தது.  மற்ற மாடுகளும் அவிழ்த்துவிடப்படாமல் கலைந்த பார்வையில் திகைத்துக்கொண்டு இருந்தன. ஜானு வீட்டார், என்ன செய்ய என்று பார்த்துக்கொண்டு இருப்பது தெரிந்தது.

யோசிக்க நேரம் இல்லை. அவர்களோடு பேசிக்கொள்ளவும் முடியாது. முறிந்துபோன நீண்ட வண்டிவாரி ஒன்று கிடந்தது. அதை எடுத்தார். வாகாக அமைந்ததால் அதைக் கண் இமைக்கும் நேரத்தில் அதன் கழுத்தில்வைத்தார். உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது! என்னதான் பாய்ச்சல் மாடாக இருந்தாலும், அதையும் மூக்கணாங்கயிறு பூரி வேலையில் கட்டி வசத்தியாச்சே. கழுத்தின் மேல்வைத்த அந்த வண்டிவாரி அதுக்கு மோக்கால் (நுகந்தடி) போல் தெரிந்தது போலும். கடமை ஞாபகம் வந்துவிட்டது போலிருக்கு!அப்படியே கிட்டத்தில் போய் கபக் என்று மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக்கொண்டார். வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த ஜானு வீட்டுக்காரர்களின் பதைப்பான முகம் மாறி சிரிப்பாக ஆனது. மற்றவர்கள் ஓடி வந்து கட்டு மாடுகளை அவிழ்த்து தெருவுக்கு ஓட்டினார்கள். அதுவரைக்கும் சோமு மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக்கொண்டு இருந்தார். அப்போதுதான் அந்தக் காட்சி கிடைத்தது பார்க்க. தொழுவையும் வீட்டையும் இணைக்கும் ஒரு சிறிய அறையில், அப்போதுதான் சடங்கான அந்தச் சின்னப் பொண்ணு ஜானு, சோமுவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு இருந்தாள்.அவள் முகம் அப்போதுதான் அரைத்த மஞ்சள் உருண்டைபோல் இருந்தது. அவள் பார்வை மின்னல் இறங்குவதுபோல அவருக்குள் இறங்கியது. வீட்டார்கள் அங்கே இல்லை என்றால், இன்னொரு தடவை

பார்க்கலாம். அந்தச் சிரிப்பு முகம் மனசில் இருந்து அழிய மாட்டேங்கு.ஊரில் பற்றிய தீ அணைந்த பிறகும் இந்தத் தீ அணைவேனா என்கிறது.அன்று அவர்களின் தொழுக் கதவை இவர் ஓங்கி மிதித்துத் தள்ளித் திறந்துகொண்டு வேகமாகப் புகுந்தார்.

இன்று இவள் மொள்ளத் தொட்டுக் கதவைத் திறக்க, ராகம் பாடிக்கொண்டே திறந்தது. கண்டுகொண்டார் உடனே, இவள்தான் என்று. அப்படியே அலேக்காகத் தூக்கித் திண்ணையில் வைத்துக்கொண்டார். அதன் பிறகு என்ன என்று தெரியவில்லை; கை கால் இயங்கவோ வாய்கள் பேசவோ மாட்டேன் என்கிறது.இந்த நேரத்தை எப்படி உடைப்பது. ஜானு சத்தம் இல்லாமல் அழ ஆரம்பித்தாள். கண்ணீரைத் துடைக்க நினைத்துக் கை நீண்டால், நீட்டிய கைக்கு அடி கிடைக்கிறது!பாய்ச்சல் மாட்டை அடக்கிய கை இது. நேரம் நகர்ந்துகொண்டு இருக்கிறது. இருட்டு காணாமல் போய் முகம் தெரிய ஆரம்பித்தது. திறந்து இருந்த கதவு வழியாக வாசல் தெளிக்க சாணி எடுக்க முதல் ஆளாக வந்தது சோமய்யாவின் அம்மாப் பாட்டி.பேராண்டியின் இருப்பு பாட்டியைத் திடுக்கிடவைத்தாலும் பிறகு சிரிப்பை வரவழைத்தது. கதவு திறந்துகிடந்ததால் கள்ளம் இல்லே என்று அறிந்து கொண்டாள். பக்கத்தில் வந்து, தொங்கிய முகத்தின் நாடியைத் தொட்டுத் தூக்கி, அடையாளம் கண்டாள். பேரனைப் பார்த்துச் சத்தம் இல்லாமல் சிரித்தாள். ”இனி, இங்கே வேண்டாம்; வா வீட்டுக்கு. எந்திரிரா நீயும்” என்று சொல்லி, ரெண்டு பேரையும் பக்கத்திலேயே உள்ள இவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். உள்ளே நுழையும்போதே”சீதா கல்யாணமேசீராமன் கல்யாணமே” என்றுஉரத்துப் பாடினாள் பாட்டி.”பைசா செலவு இல்லாமல் பொண்ணைக் கொண்டுவந்துட்டெடா சோமா” என்றார் தாத்தா.உடனே, அம்பலக்காரரைக் கூப்பிட்டு அனுப்பி, இன்ன மாதிரி சங்கதி, பெண் பிள்ளையைத் தேட வேண்டாம் பத்திரமாக இங்கே இருக்கிறாள் என்று சொல்லி அனுப்பினார்கள் என்றாலும், அங்கே மவுனமே பதிலாக இருந்தது.‘

‘மவுனம் சம்மதத்துக்கு அடையாளம்’ என்று இதை வைத்துத்தான் பெரியவர்கள் சொல்லியிருப்பார்கள் போலிருக்கு’ என்று பேசிக்கொண்டார்கள். வீட்டிலேயே வைத்து ‘கட்டுத் தாலி’ கட்டிக்கொள்ளப்பட்டது. சோமுவின் வீட்டில் பெரியவர்கள், ஜானுவின் அழகைக் கண்டு மெச்சவில்லை; அவளுடைய திடமான உடம்பைக் கண்டுதான் திருப்திப்பட்டுக்கொண்டார்கள். விலை கொடுக்காமல், சந்தையிலிருந்து அரும்பாடுபட ஒரு நல்ல மாடு கிடைத்துவிட்டதெ.வாய் திறந்து சொல்லாவிட்டாலும், உள் மனசு சொல்லிக்கொண்டது.கோடை உழவுக் காலத்தில் ஒருநாள்…கம்மாய் கரை நிழலில் உழவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டே பலதும் பேசுவார்கள்.அப்போது, பாய்ச்சல் மாடுகளைப்பற்றிப் பேச்சு வந்தது.”மாடுகளுக்கு நாம எவ்வளவு சவுகரியம் செய்து கொடுத்திருக்கோம். நமக்கு இருக்கிறதைப்போலவே மழையில் நனையாமல் இருக்க வீடு… நேரங்கண்டு கூளம்வைக்கிறது, பருத்திக்கொட்டை புண்ணாக்கு, தவிடு, பச்சைப் புல்லு, சத்துள்ள நாத்துக்கூளம் எப்பிடி எல்லாம் கவனிச்சிக்கிடுதோம். பிரியமா

தட்டித் தடவிக்கொடுக்கோம். என்ன செய்தும் என்ன… பாய்ச்சல், கள்ளப் பாய்ச்சல் அதுகளை விட்டுப் போக மாட்டேங்குதெ” – இப்படிச் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே இதுகளைக் கேட்டுக்கொண்டே பாப்புத் தாத்தா வந்தார், ”என்ன சொல்றாம் பேராண்டி?” என்றுகொண்டே.பாப்புத் தாத்தா கரை மரத்தடிக்கு வந்துவிட்டாலே கலகலப்பு வந்துவிடும். கொரு பேசுவதில் சமர்த்தன்.”என்னத்தடா சவுகரியம் பண்ணிக்கொடுக்கீக? பேப்பய புள்ளைகளா. உயிர் ராசிகளுக்கே உண்டான சொகத்தை அனுபவிக்கவிடாம காயடிச்சிப் போடுதீக. சவுகரியம் பண்ணிக்கொடுக்கீகளா…” – சிரிப்புப் பரவியது.இன்னும் சொன்னார், டேய், பாய்ச்சல்ங்கிறது அதோட உரிமைடா. அதெக் கூடாதுன்னு சொல்ல நீ யாரு?கள்ளப் பாய்ச்சலும் அப்படித்தாம். மனுசர்கள்ளெ தீவிரவாதி, பயங்கரவாதிகள்னு இருக்காங்கள்லெ அதுபோலத்தான்டா” என்றார்.

பின்னொரு நாள் சொன்னார்,”சம்பளம் இல்லாத வேலையாள், வேலை நிறுத்தம் பண்ணாத வேலையாள் என்கிறதுஎல்லாம் இந்த மாடுகள்தாம். நம்ம வீட்டுப் பொம்பளைக எப்படியெல்லாம் ராவாப் பகலா வேலை செய்யுதுக; சம்பளமா கொடுக்கோம். அப்பிடித்தான்டா” என்றார்.பொம்பளைகளை மாட்டோடு சேர்த்துச் சொன்னது அங்கே சிலருக்குச் சம்மதம் இல்லை.ஜானு இந்த வீட்டுக்கு வந்த பிறகு, அவளுடைய அம்மா அங்கே ‘சட்டடியாகப்’ படுத்துவிட்டாள்.மகளைப் பிரிந்த ஏக்கம்; கொஞ்ச நாளைக்கு அப்படித்தான் இருக்கும், பிறகு சரியாயிரும் என்றுதான் நினைத்தார்கள். காய்ச்சல், மண்டையடி என்று ஒருநாள்கூடப் படுத்த உடம்பு இல்லை. விழுந்தால் காடு… அடைந்தால் வீடு என்று மாடாய் உழைத்த உடம்பு. முரட்டுப் பாசமும் முரட்டு விரோதமும்தான் தெரியும். அவரவர் வீட்டுப் பெரியவர்கள் சொன்னதும் செய்ததும்தான் இவர்களுக்கு வழிகாட்டி. அபூர்வமாக ஜானு போன்ற யாராவது ஒரு மனுஷி தோன்றித்தான் வழக்குகளை உடைப்பார்கள். மற்றவர்கள் தங்கள் தங்கள் மனசுக்குள் நிகழ்த்திப் பார்த்து மகிழ்ந்த பகல் கனவை, இப்படி ஒரு பெண் வந்து நிறைவேற்றிக்கொண்டாளே என்கிற உள் பொறாமை இருந்தாலும், வாய் திறந்து மெச்ச மாட்டார்கள். திட்டிக்கொண்டே இருப்பார்கள்.

பெரிய குடும்பங்களில், எந்த விசயங்களும் தாமதமாகத்தான் வெளியே தெரியும். அவற்றை முதலில் தெரிந்துகொள்கிறவர்களும், சொல்கிறவர்களும் தினமும் காலை மாலை வேளைகளில் பனை நார்ப் பெட்டியில் கஞ்சி, சோறு என்று வாங்க வரும் குடிமகள்களும் ஏகாலிகளும்தான். ஜானுவின் அம்மா படுத்ததும் இறந்ததும் அப்படித்தான் இவர்களுக்குத் தகவல் தெரிந்தது.அம்மாவின் சாவுச் செய்தி கேட்டதும் நடுநடுங்கிப் போனாள். அடுத்து அவளைத் தாமரிக்க முடியவில்லை. சுவரில் முட்டி மோதுகிறதும் தூணைக் கட்டிக்கொண்டு அழுவதும்…பலர் இவளிடம் துக்கம் விசாரிக்க வந்தார்கள். யாருக்கும் இவள் சரியா ‘இளவுகொடுக்க’வில்லை. அளகம்மா வந்த பிறகுதான் சேர்த்துப் பிடித்துக் கதறினாள். அளகம்மா இவளுக்குச் சித்தி முறை.

வராதவ வந்திருக்கிறாள். இளவு விசாரிக்க வந்தவர்களை வா என்று சொல்லுவது இல்லை. போகும்போதும் போயிட்டு வர்றேம் என்றும் சொல்லுவது இல்லை.ஒருநிலையில், அழுகை அமர்ந்த பிறகு பேச்சு தொடங்கியது."சித்தி, அம்மாவுக்கு இவ்வளவுக்கு ஆன பிறகும் எனக்குச் சொல்லி அனுப்பணும்னு யாருக்குமே தோணலையா?"கேள்வி சரியானதுதாம். ஆனால், பதில் சொல்ல முடியாது. பிறகு சித்தி சொன்னாள்,"ஆத்துமா பிரியிறதுக்கு முன்னாடி கண்ணுக பறவையாடுனது ஆரையோ தேடுதுன்னாங்க. எனக்குத் தெரியும். ஆறு பொட்டப் பிள்ளைக பெத்தாலும், கடைக்குட்டி நீதாம்.

ஒம்மேலெதாம் அவளுக்கு உசுரு.அய்யோன்னு இருந்தது எனக்கு. ஜானகி எந்திரி. எடுக்கிறதுக்கு முந்தி பெத்த தாயோட முகத்தெ ஒரு தபா வந்து பாத்துக்கோம்மா" என்றாள். தலையைக் குலுக்கி."வேண்டாஞ் சித்தி; இனி அங்கெ எனக்கு என்ன இருக்கு, அம்மாவே போன பிறகு" என்று சொல்லி கொஞ்சம் நிறுத்தி,"அம்மா எங்கனவுல வருவா; நாம் பாத்துக்கிடுவேம்" என்று தேம்பினாள்.அப்போது பிடாங்கு வேட்டின் சத்தம் கேட்டது. தன்னை அறியாமலேயே ஜானு எழுந்தவள், மீண்டும் உட்கார்ந்தாள்.சோமய்யா சொன்னார், "ஜானு எந்தி… போயி அம்மா முகத்தெப் பாத்துட்டு வந்துரு."அதைத் தொடர்ந்து பெரியவர்களும் அவளை வற்புறுத்தினார்கள்.சித்தி, ஜானகியின் கையைப் பிடித்தாள். எல்லோருமே அவளை அனுப்ப எழுந்திருந்தார்கள். திரும்பவும் ஒரு அழுகை அலை வந்து போனது.ஜானுவுக்கு அடி எடுத்துவைக்கத் தயக்கம், ஆயாசம். சித்தி கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டாள்.எல்லோரும் வீட்டுத் தலைவாசலோடு நின்றுகொண்டார்கள். சித்தியும் ஜானுவும் படி இறங்குவதற்கும், அங்கே பெருத்த அழுகையோடு 'தேர்' நகர்வதற்கும் சரியாக இருந்தது. சித்திக்குத்தான் அதிகம் அதிர்ச்சியாக இருந்தது.

எப்படியும் கூட்டிக்கொண்டு வந்துவிடுவதாகச் சொல்லிவிட்டு வந்தும், இப்படிப் புறப்பட்டுப்போனால் என்ன அர்த்தம்.தெரு நடுவில் நின்ற ஜானு,'நீ போ சித்தி' என்று சொல்லிவிட்டாள்.சித்தி போய்விட்டாள்.தேர் மறையும் வரை பார்த்துக்கொண்டே இருந்த ஜானு முகம் திருப்பி வீட்டைப் பார்த்தாள். (அவர்கள் உள்ளே போயிருந்தார்கள்) இனி, இது நம்முடைய வீடா என்பதுபோல் இருந்தது அவள் பார்த்தது!

-------------

கோமதி

கோமதிசெட்டியாருக்கு வயசு முப்பது. அவனது பெற்றோர்கள் அவனுக்கு பெண்குழந்தை

என்று நினைத்துத்தான் கோமதி என்று பெயர் வைத்தார்கள். அவனுக்குமுன் பிறந்த

ஏழும் அசல் பெண்கள். இவனுக்கு சிறு பிராயத்திலிருந்தே ஜடைபோட்டு பூ வைத்துக் கொள்வதிலும், வளை அணிந்து கொள்வதிலும் கொள்ளை ஆசை. உருவம் ஆணாக இருந்தாலும்,

இயல்பு அச்சு அசல் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி, நீட்டி தலை அசைத்துப் பேசுவது அவனுக்கு குழந்தையாக இருக்கும்போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண்குழந்தைகளோடுதான் விருப்பமாக விளையாடப் போவான்.ஆண்களோடு விளையாடவேண்டியது ஏற்பட்டுவிட்டால் வீடுகட்டி, கல்யாணம் பண்ணி விளையாடும் விளையாட்டில்தான் பிரியம் அதிகம். அதிலும் மணப்பெண்ணாக தன்னை வைப்பதென்றால்தான், விளையாட வரச் சம்மதிப்பான்.

வயசு ஆகஆக அவன் ஆண்களோடு சேர்ந்து பழகுவதையேவிட்டுவிட்டான். பெண்கள் இருக்கும்

இடங்களில்தான் சதா அவனைப் பார்க்கலாம். ஏதாவது அதிசயமான சங்கதியைக் கேள்விப்பட்டால் பட்டென்று கையைத்தட்டி இடதுகை மணிக் கட்டின் மேல் வலது முழங்கையை ஊன்றி ஆள்காட்டி விரலைக் கொக்கிபோல் வளைத்துத் தன் மூக்கின்மேல்

ஒட்டவைத்துக் கொள்வான். அகலமான கருஞ்சாந்துப் பொட்டை வைத்து வெற்றிலை போட்டுக்கொண்டு கீழ் உதட்டைத் துருத்தியும், நாக்கை நாக்கை நீட்டியபடியும் சிகப்பாகப் பிடித்திருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக்கொள்வான். தலைமுடியை அள்ளிச் சொருகி ‘கொப்பு’ வைத்து பூவைத்துக்கொள்ளுவான். அவன் அணிந்திருக்கும்

பாடி பெண்கள் அணிந்துகொள்ளும் ஜம்பரின் மாடலில் அமைந்திருக்கும். மேலே போட்டுக்கொள்ளும் துண்டை அடிக்கடி மாராப்பை சரி பண்ணுவதுபோல் இழுத்து இழுத்து

விட்டுக்கொண்டு இடுப்பை இடதும் வலதும் ஆட்டி அசல் பெண்களைப்போல் கையை ஒய்யாரமாக வீசி நடப்பான். எவ்வன புருஷர்களைக் கண்டுவிட்டால் கோமதிக்கு எங்கோ இல்லாத வெட்கம் வந்துவிடும்.

பெண்கள் இவனை வித்தியாசமாகவே நினைப்பது இல்லை. நடத்துவதும் இல்லை. இவன் எங்கு

சென்றாலும் இவனைப் பிரியமாக வைத்துக்கொள்வார்கள். ஆண் பெண் சம்பந்தமான பால்

உணர்ச்சி கதைகளைச் சொல்லி அவர்களை மகிழ்விப்பான். மனசைத் தொடும்படியான

ஒப்பாரிகளைப் பாடி அவர்களின் கண்ணீரை வரவழைப்பான். ஆனால் ஒரு இடத்தில் நிலைத்து

இருக்கமாட்டா. ஒரு வீட்டில் சிலநாள் இருப்பான்; திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல்

இன்னொரு வீட்டிற்குப் போய்விடுவான்.

இவனுக்கு ஒரே ஒரு கலை அற்புதமாகக் கைவந்திருந்தது. சமையல் பண்ணுவதில் இவனுக்கு

நிகர் இவனேதான். விருந்து நாட்களில் கோமதி கோமதி என்று இவனுக்கு ஏகப்பட்ட

கிராக்கி.

*********

ஒரு தடவை தூரத்து ஊரிலுள்ள தனது பந்துக்கள் வீட்டுக் கல்யாணத்திற்குப் போகும்படி நேர்ந்தது இவனுக்கு. கல்யாணவீட்டுக்கு வந்திருந்த பெண்களில், பிரசித்தி பெற்ற ரகுபதி நாயக்கரின் வீட்டுப் பெண்களும் வந்திருந்தார்கள்.அவர்களுடைய அழகையும் நகை ஆபரணங்களையும் உடைகளையும் உல்லாசமான பேச்சுக்களையும் கண்டு கோமதி அப்படியே சொக்கிப்போய் விட்டான்!

ரகுபதி நாயக்கரின் இளையபேத்தி குமாரி சுலோ இவனைக் கண்டதும், இவனுடைய அங்க

அசைவுகளையும் தளுக்கையும் கண்டு தன் வைர வளையல் குலுங்கக் கைகொட்டிக் கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அடக்கமுடியாமல் கண்களில் பொங்கிய கண்ணீரைத்

துடைத்துக் கொண்டாள். சிரிப்பை அடக்க அவள் அவனோடு பேச்சுக் கொடுத்தாள். ரகுபதி

நாயக்கரின் வீட்டுப் பெண்களுக்கு இவனைப் பற்றி அங்கிருந்த ஒருத்தி விஸ்தாரமாகச்

சொல்லி அறிமுகம் செய்து வைத்தாள்.

பெண்கள் விலகி உட்கார்ந்து அவனைத் தங்கள் அருகே உட்கார வைத்துக்கொண்டார்கள்.

பட்டுச் சேலைகளின் சரசரப்பும் வியர்வையோடு கலந்த மல்லிகைப் பூவின் சுகந்த

நெடியும் கோமதியைக் கிறங்க அடித்தது. பெண்கள் ஒருவருக்கொருவர் காதோடு காதாக

பேசிக்கொண்டு சிரிக்கும் ஒலி, வளையல் ஒலியோடு போட்டியிட்டது. கோமதி ஏதோ

வாய்திறந்து பேச ஆரம்பித்தபோது சுலோ குனிந்து தன் காதை அவன் வாய் அருகே

நீட்டினாள்.

"யக்கா, இந்தச் சேலை என்ன விலை?"

சுலோ சிரித்தாள். சிரித்துவிட்டு, "இதோ – இது ஐநூறு ரூபாய் விலை – " அவள் வாயிலிருந்து ஒரு மதுரமான வாடை வீசியது.

"யக்கா, உனக்கு இந்தச் சேலை ரொம்ப நல்லாயிருக்கு."

சுலோ மீண்டும் சிரித்தாள். பெண்மைக்கே உரிய நாணம் கலந்த சப்தமில்லாத குமிழ்ச் சிரிப்பு வந்து அவளைக் குலுக்கியது.

"நீ எங்க வீட்டுக்கு வாரையா? சமையல் செய்ய?"

சரி, என்ற பாவனையில் தலையை ஆட்டினான் கோமதி.

கோமதிக்கு, சுலோ தன் வலதுகை நிறைய அணிந்திருந்த வளையல்கள்மீதுதான் கண்ணாக

இருந்தது.

அந்த வளையல்கள்தான் அவளுடைய சங்குபோன்ற வெண்ணிறமான கைக்கு எவ்வளவு பொருத்தமாக இருந்தது. ரகுபதி நாயக்கரின் வீட்டுப்பெண்கள் எல்லோருமே அப்படித்தான் ஒரு

கையில் வைர வளையல்களும் ஒரு கையில் கருவளையல்களும் அணிந்திருப்பார்கள். அந்த

வீட்டுப் பெண்களை நினைத்தாலே சிவந்த உதடுகளும் வெண்மையான பற்களுமே ஞாபகத்துக்கு

வரும்.

இப்போது இருக்கும் ரகுபதி நாயக்கரின் பேரனான ரகுபதி நாயக்கர் தன்

குடும்பத்திலுள்ள அழகை மேலும் மேலும் வளர்த்துச் செழுமைப்படுத்தினார். தன்னுடைய

அழகுமிகுந்த நான்கு புத்திரர்களுக்கும் ஆந்திரதேசத்துக்குச் சென்று தங்க

விக்ரகங்களைப்போலுள்ள எட்டு ஸ்திரி ரத்தினங்களைக் கொண்டுவந்து ஆளுக்கு இரண்டு

பேரை கல்யாணம் பண்ணி வைத்தார். தன் குடும்பத்திலிருந்து வெளியே கொடுக்கவேண்டிய

பெண்களுக்கும் அவர் அழகுமிகுந்த மாப்பிள்ளைகளையே தேர்ந்தெடுப்பார். இந்த

மாப்பிள்ளைகளுக்கு சொத்து இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. அழகுமிகுந்த பெண்ணையும் கொடுத்து அவனுக்கு வேண்டிய சொத்தையும் எழுதி வைப்பார். எவ்வளவு எடுத்துக் கொடுத்தாலும் குறைவுபடாத சம்பத்து இருந்தது அவர்கள் குடும்பத்திற்கு. இப்பேர்ப்பட்ட ஒரு இடத்துக்குத்தான் கோமதி சமையல் உத்தியோகத்துக்குப் பெட்டி படுக்கையுடன் போய்ச் சேர்ந்தான். பக்கத்து வீட்டிலுள்ள பெண்களெல்லாம் இவனைப் பார்க்க வந்து விட்டார்கள். இவனுடைய நடையையும், நீட்டிப் பேசுகிற பேச்சையும், அசைவுகளையும் கண்ட பெண்கள் சிரித்து ரஸித்தார்கள். உற்சாகமூட்டினார்கள். அன்று எல்லோருக்கும் ஒரு பெரிய விருந்தே நடந்தது. அவன் படைத்த உணவை ருசிபார்த்தபின்தான் பெண்களுக்கு அவன் மீதுள்ள இளப்பம் ஓரளவு நீங்கியது. அவனை பரிவாகவும் இரங்கத்தக்க ஒரு ஜீவனாகவும், தங்களோடு, தங்கள் இனத்தோடு சேர்ந்த ஒரு ஆத்மாவாகவும் நடத்தினார்கள்.

சாப்பிட்டு முடித்த ரகுபதி நாயக்கர், இந்தப் புது சமையல்காரனை பார்க்கவேண்டுமென்று சொல்லி மாடியிலுள்ள தன்பகுதிக்கு வரவழைத்தார். கோமதி பயந்து ஒரு பூனைபோல் மெல்ல நுழைந்து அவர் எதிரே வந்து நின்றான். இவனைப் பார்த்ததுதான் தாமதம். ரகுபதி நாயக்கர் ஆகாயத்தை நோக்கி கடகடவென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டார். அவருடைய வெண்ணிறமான மீசையோடு பற்களின் ஒளி போட்டியிட்டது.

கோமதி உண்மையாகவே பயந்து போனான். அவனுடைய பயத்தைக் கண்டு ரகுபதி நாயக்கர் இன்னும் உரக்கச் சிரித்தார். வீட்டுப்பெண்கள் எல்லாம் சிறிது தள்ளி நின்று இதை வேடிக்கை பார்த்தார்கள்.

“பலே, பலே; வா இங்கே. உன் பேர் என்ன?”

”கோமதி”

“கோமதியா! பேஷ் பேஷ்....!” என்று முழங்காலில் கையால் தட்டிக்கொண்டு மீண்டும்

அந்த கடகடத்த சிரிப்பையும் அவிழ்த்து விட்டார் ரகுபதிநாயக்கர். பின்பு எழுந்து, தன் பீரோவைத் திறந்து ஒரு ஜோடி பட்டுக்கரை வேஷ்டிகளை எடுத்து “இந்தா, பிடி” என்று கொடுத்தனுப்பினார்.

வேறு யாராவது இருந்தால் இந்த வெகுமதியைக் கண்டு மகிழ்ந்து போயிருப்பார்கள். ஆனால் கோமதி அந்த வேஷ்டிகளை கடைசிவரையும் உடுத்தவே இல்லை.

*********

ஒரு நாள் பகல் உணவுக்குப்பிறகு ‘அந்தப்புர’த்தில் பெண்கள் எல்லோரும் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார்கள். சிலர் பதினைந்தாம் புலியும், சிலர் தாயமும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கோமதி, ஒரு பெண்ணுக்குத் தலையில் பேன் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு திடீரென்று என்ன உற்சாகம் வந்ததோ தெரியவில்லை. தன் இனிமையான பெண் குரலில் சோகம் ததும்ப ஒரு ஒப்பாரியைப் பாடினான். உணர்ச்சியோடு பாடினான். விதவைக்கோலம் பூண்டுவிட்ட ஒரு பெண் சொல்லுவதாக பாவம்:

“கருப்பும் சிகப்புமாய் – நான்
கலந்துடுத்தும் நாளையிலே
சிகப்பும் கருப்புமாய் – நான்
சேர்ந்துடுத்தும் நாளையிலே
நீலமும் பச்சையுமாய் – நான்
நிரந்துடுத்தும் நாளையிலே
கைக்களையன் சேலையை – என்
கழுத்திலிட்டுப் போனியளே
கைக்களையன் சேலை: எந்தன்
கழுத்தை அறுக்காதோ
ஈழுவன் சேலை: எந்தன்
இடுப்பை முறிக்காதோ”

அங்கிருந்த விதவைப்பெண்கள் இதைக் கேட்டவுடன் அழுதே விட்டார்கள். சுமங்கலிகள்

மௌனமாகக் கண்ணீர் வடித்தார்கள். உடனே கோமதி கருவளையைப் பற்றிய ஒரு வேடிக்கையான

நாடோடி பாடல் ஒன்றைப் பாடி அபிநயம் பிடிக்கத் தொடங்கினான்.

“சோளம் இடிக்கையிலே

சொன்னயடி ஒரு வார்த்தை: – “ஐயோ

கையைப் பிடிக்காதிங்கோ – என்

கருவளைவி சேதமாகும்…….”

’கொல்’லென்று பெண்கள் சிரித்தார்கள்; வடித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே

சிரித்தார்கள்.

*********

அதிகாலையில் பரபரப்பாகவும் உற்சாகமாகவும் கோமதி வேலை செய்துகொண்டு இருந்தான்.

பெண்கள் குளிக்கும் அறைகளில் கொண்டுபோய் வெந்நீர் ரொப்புவதும், சோப்புகளும்

துவாலைகளைக் கொண்டு கொடுப்பதும் அவர்களுக்கு முதுகு தேய்த்துவிடுவதுமாக

வழக்கமான வேலைகளில் பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தான். அவனுடைய சுதாரிப்புக்கு

இன்று ஒரு காரணமுண்டு. சுலோவின் அண்ணன் ரகு பட்டணத்திலிருந்து இன்று மாலை

லீவுக்கு வருகிறான். தன் அண்ணனைப் பற்றி சுலோ கோமதியிடம் பல சந்தர்ப்பங்களில்

சொல்லக் கேட்டிருக்கிறான்… அவருக்கு என்னென்ன சமையல் வகைகள் பிடிக்கும்

என்றெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தான் கோமதி.

அந்த மாலை நேரம் இப்போதே வந்துவிடக்கூடாதா என்றிருந்தது. பிறபகல் நத்தைபோல்

ஊர்ந்து அந்த மாலைநேரமும் வந்தது. போர்டிகோவுக்குள் கார் வந்து நின்றதும்

முன்பக்கம் பெண்களெல்லாம் வந்தார்கள். கோமதி மட்டும் கதவு இடுக்குவழியே

ஒளிந்துகொண்டு பார்த்தான். சுலோ ஓடிச்சென்று காரின் பின்கதவைத் திறந்தாள்.

ஆணழகனான ரகு ஆஜானுபாகுவாக இறங்கி ஜம் என்று நின்றான். பெண்கள் அவனுக்கு

திருஷ்டி சுற்றி கழித்து அவன் உள்ளே வர விலகி நின்றார்கள். ரகுவைப் பார்த்த

கோமதிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. முதலில் அதிர்ச்சியாயிருந்தது.

மலமலவென்று கண்களை மூடித் திறந்தான். திடீரென்று எங்கேயும் இல்லாத வெட்கம்

வந்து அவனைச் சூழ்ந்துகொண்டது. ஒருவரும் பார்ப்பதற்குள் உள்ளே ஒரே

ஓட்டமாகப்போய் குளிப்பறைக்குள் போய்க் கதவை பூட்டிக்கொண்டான்.

இரவு சாப்பாட்டின்போது ரகுவுக்கு சுலோவே பரிமாறினாள். கோமதி மறைவில் நின்றுகொண்டு ரகு சுவைத்துச் சாப்பிடுவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். "சாப்பாடெல்லாம் புதுமாதிரி இருக்கிறதே. இப்போது சமையலுக்கு யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான். 'புது ஆள்

வந்திருக்கிறதண்ணா' என்று சொல்லிக்கொண்டே பின்புறம் பார்த்தாள். கோமதி மறைந்துகொண்டு தன்னைப்பற்றி சொல்லவேண்டாம் என்று ஜாடை செய்தான். சுலோவும் சிரித்துக்கொண்டே ரகுவுக்குத் தோன்றாமல் வேறு பேச்சுக்கு மாற்றிவிட்டாள்.

ரகு மாடிக்குப் போனபிறகு சுலோ கோமதியைக் கூப்பிட்டு, "அண்ணா உன்னைப் பார்த்தால்

மிகவும் சந்தோஷப்படுவான்; மண்டு! நீ ஏன் வேண்டாம் என்று சொன்னாய்? பாலை

எடுத்துக்கொண்டு வா" என்று சொல்லிவிட்டு அண்ணாவின் அறைக்குப் போய்விட்டாள்.

கோமதிக்கு உடம்பெல்லாம் வேர்த்து படபடவென்று வந்தது. தன்னைச் சிறிது

ஆசுவாசப்படுத்திக்கொண்டு நிலைக்கண்ணாடியின் முன்போய் நின்று தன்னை நன்றாகப்

பார்த்து, தலையிலுள்ள பூவை சரிப்படுத்திக் கொண்டான். பால் டம்ளரை ஒரு தட்டில்

எடுத்துக் கொண்டு மாடியை நோக்கி இப்பொழுதுதான் புதுப்பெண் முதல் இரவுக்குப்

போகிறதைப்போல் அடிமேல் அடிவைத்து ஏறிச் சென்றான். தட்டோடு கை நடுங்கியதால்

எங்கே பால் கொட்டி விடுமோ என்று நினைத்து தம்ளரை ஒரு கையால் பிடித்துக்கொண்டே

போனான்.

"கோமதி… கோமதி.. உள்ளே வாயேன்" என்று சுலோ கூப்பிட்டாள்.

"யார் கோமதி?" என்று கேட்டான் ரகு.

"அதுதான்; நான் அப்போ சொல்லவில்லையா; சமையலுக்கு ஒரு புது ஆள்

வந்திருக்கிறதென்று?"

”ஓஹோ; சரிதான்” என்று சொல்லிக்கொண்டு தலையை ஆட்டிக் கொண்டான். “யாரோ பெண்பிள்ளை

போலிருக்கிறது” என்று எண்ணிக்கொண்டு சுலோவைப் பார்த்தவாறு தன் பேச்சைத்

தொடர்ந்தான்.

கோமதி மெதுவாகப் பக்கத்தில் வந்து நின்றான்.

“அண்ணா பாலை எடுத்துக்கொள்”

ரகு திரும்பிப் பார்த்தான். முகத்தைச் சுழித்தான். இந்த ரஸவிஹாரத்தை அவன் ஆண்மை

நிறைந்த உள்ளத்தால் தாங்கமுடியவில்லை. சுலோவை இதெல்லாம் என்ன என்ற முறையில்

கோபத்தோடு பார்த்தான். சுலோ கலகலவென்று சிரித்தாள். கருங்கல் தரையில் கண்ணாடி

வளையல்கள் தொடர்ந்து விழுந்து உடைவதுபோல் இருந்தது அவளுடைய சிரிப்பு.

இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை கோமதிக்கு. அவமானம்

தாங்கவில்லை. தட்டை மேஜைமீது வைத்துவிட்டு கையால் முகத்தை மூடிக்கொண்டு

மூஸ்மூஸ் என்று அழ ஆரம்பித்துவிட்டான். ரகு கோமதியை நோக்கி “சீ போ வெளியே”

என்று கத்தினான். கோமதி துயரம் தாங்காமல் வெளியே ஓடுவதைப் பார்க்கப் பரிதாபமாக

இருந்தது.

*********

”என்ன காரியம் செய்து விட்டாயண்ணா”

சுலோவிற்கு மனசு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. தான் விளையாட்டாக நினைத்தது

இப்படி அண்ணாவுக்கு எரிச்சலை உண்டுபண்ணிவிடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

கோமதியை நினைத்து மிகவும் துக்கப்பட்டாள்.

“இரக்கப்படத் தகுந்த ஒரு ஜென்மத்திடம் இப்படிக் கொடுமையாக நடந்து கொள்ளலாமா?”

என்று கேட்டாள். ரகுவுக்கும் 'பாவம்' நாம் ஏன் இப்படி நடந்துகொண்டோம் என்று பட்டது. "தான் இனிமேல் அவனிடம் சுமுகமாக நடந்துகொள்வதாகக்' கூறினான்.

அன்றிரவு தனக்குச் சாப்பாடே வேண்டாம் என்றுவிட்டு வெறும் தரையில்

படுத்துக்கொண்டான் கோமதி.

*********

மறுநாள் சுலோ கோமதிக்கு எவ்வளவோ சமாதானம் சொல்ல வேண்டி இருந்தது. என்ன

சொல்லியும் கோமதிக்கு மனசு சமாதானப்படவில்லை. ரகு வந்து கோமதியிடம் சிரித்துப்

பேசியதும் கோமதிக்கு எல்லாம் சரியாகப் போய்விட்டது. பழைய கோமதி ஆனான்.

குளிப்பறையில் ரகுவுக்கு தண்ணீர் எடுத்து வைத்தான். சோப்பும் துவாலையும் கொண்டு

வைத்தான். ரகுவும் சந்தோஷமாகக் குளிக்க வந்தான்.

"சரி, நீ போகலாம்; நான் குளித்துக்கொள்கிறேன்" என்றான் ரகு.

"உங்களுக்கு நான் முதுகு தேய்க்கிறேனே.....!" என்று குழைந்தான் கோமதி.

"வேண்டாம் வேண்டாம்; நானே தேய்த்துக்கொள்வேன்" என்று சொல்லி, பிடரியைப்

பிடித்து தள்ளாத குறையாக கோமதியை வெளியேற்றி கதவைப் பூட்டிகொண்டான் ரகு. அந்தக்

கதவுக்குமேல் ஒரு சிறு பாட்டு ஜன்னல் ஒன்றிருந்தது. பக்கத்திலிருந்த பெரிய ஆட்டுரல்மேல் ஏறி அந்த ஜன்னல் வழியாய்க் குளிப்பறைக்குள் திருட்டுத்தனமாக வேறு எதையோ பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான் கோமதி, சுலோ இந்த நாடகத்தையெல்லாம் ஒன்று விடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்களில் பிதுங்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அப்பால் போய்விட்டாள்.

*********

'சாப்பிடுங்கள்; இன்னுங்கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கோமதி பலமாக

உபசரித்துக்கொண்டே ரகுவுக்குப் பரிமாறினான்.

"வேண்டாம்; வேண்டாம் போதும்; போதும்" என்று சொல்லும்வரை திணற அடித்தான். தன்

மனதுக்குப் பிடித்தவர்களை தான் சமைத்ததை தன் கையாலேயே பரிமாறி அவர்கள் உண்பதைக்

காண்பதில் எப்பவுமே கோமதிக்கு பரம திருப்தி. அதோடு சுலோவும் சேர்ந்துகொண்டு

ரகுவைத் திண்டாட வைத்து வேடிக்கை பார்த்தாள்.

“சுலோ, இந்தப் பயலுக்கு நீ ரொம்பவும் இளக்காரம் கொடுக்கிறாய். இவனைக் கண்டாலே

எனக்குப் பிடிக்கவில்லை. நான் இவனை வெறுக்கிறேன்” என்று ரகு இங்கிலீஷில்

சொன்னான்.

’ஐயோ பாவம்; அண்ணா, அப்படியெல்லாம் சொல்லாதே’ என்று பதிலுக்குச் சொன்னாள்.

சொல்லிவிட்டு சுலோ கோமதியின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். இவர்கள் இரண்டு

பேரும் பேசிக்கொண்டது கோமதிக்கு விளங்கவில்லையானாலும் தன் சமையலைப் பற்றியும்

தன்னைப்பற்றியும்தான் தன் எஜமானர்கள் புகழ்ந்து பேசிக்கொள்கிறார்கள் என்று

எண்ணி மகிழ்ந்தான் கோமதி.

அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு மாடிக்குப் போனபின் கோமதி பெண்களின்

குளிப்பறைக்குப் பக்கத்தில் தனக்கென்று ஒதுக்கப்பட்ட தன்னுடைய தனித்த அறையில்

வெற்றிலைப் பாக்கு, புகையிலைகளைப் போட்டு முழக்கிக்கொண்டிருந்தான். சந்தோஷத்தை

அவனால் அடக்க முடியவில்லை. குரலெடுத்துப் பாடவேண்டும்போல் இருந்தது.

*********

இரவுச் சாப்பாடு முடிந்தது. வழக்கம்போல் கோமதி ரகுவுக்கு பால் எடுத்துக்கொண்டு

போனான். ரகு தனியாக உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். பக்கத்தில் கொண்டு

வந்து வைத்துவிட்டு எதிரேயுள்ள கண்ணாடியில் தன் முகத்தை இப்படியும் அப்படியுமாக

ஒரு தடவை பார்த்துக்கொண்டான். மீண்டும் பக்கத்தில் வந்து உராய்ந்துகொண்டு

“பாலைச் சாப்பிடுங்கோன்னா; ஆறிப்போகிறது” என்று கொஞ்சலாகச் சொன்னான். சொன்னதோடு

அவன் நின்றிருந்தாலும் ரகுவிற்கு கோபம் வந்திருக்காது; நாடியை வேறு தொட்டுத்

தாங்கினான். ரகு பேனாவை எறிந்துவிட்டு அப்படியே கோமதியின் செவிட்டில் ஓங்கி ஒரு
அறை விட்டான். இதை கோமதி எதிர்பார்க்கவில்லை. கன்னத்தைக் கையால் பொத்திக்கொண்டு
ரகுவைப் பார்த்து சிரிக்க முயன்றான்; சிரிக்கமுடியவில்லை. பீதியும் சிரிப்பும்
மாறிமாறி முகத்தில் தோன்றி இறுதியில் பீதி முற்றி பயங்கரமாக முகம் மாறியது. இது
ரகுவுக்கு இன்னும் ஆவேசத்தை உண்டு பண்ணியது. தன் வலது காலை உயர்த்தி ஓங்கி அவன்
நெஞ்சில் உதைத்துத் தள்ளினான்.

“ஓ” என்று பயங்கர ஊளையுடன் தடால் என்று தரையில் விழுந்தான் கோமதி.

பக்கத்தறையிலிருந்த சுலோ ஓடிவந்து ரகுவை தடுக்காவிட்டால் கோமதி என்னாவாகி
இருப்பானோ.

அன்று இரவு மூன்று பேர்களும் தூங்கவில்லை. குளிப்பறைக்குப் பக்கத்திலிருந்த
அறையிலிருந்து இரவு பூராவும் ஒப்பாரி வைத்து அழும் சோகக்குரல் கேட்டுக்கொண்டே
இருந்தது.

மறுநாள் ரகு ஏதோ அவசர ஜோலியாக பட்டணத்துக்குப் புறப்பட்டு விட்டான். சுலோவின்
முகத்தில் அருளே இல்லை. இதை ரகு கவனித்தான். கோமதி தன் அறையிலிருந்து வரவே
இல்லை.

எல்லோரிடமும் சொல்லிக்கொள்ள வந்தபோது ஸ்திரிகள் கூட்டத்தில் கோமதி இல்லாதது
கண்டு, “அவன் எங்கே; கோமதி” என்று கேட்டான் ரகு.

”அவனுக்கு உடம்புக்கு சரியில்லை போலிருக்கிறது. இன்று வெளியிலேயே காணோம்” என்று
சொன்னார்கள். சுலோ ஒன்றுமே தெரியாததுபோல் மௌனமாக இருந்தாள். ரகு கையில் ஒரு
பொட்டலத்துடன் கோமதியின் இருப்பிடம் சென்றான்.

“கோமதி! யேய் கோமதி; கதவைத் திற” என்று அன்போடு கேட்டான். கோமதியும் கதவைத்

திறந்தான். தலைவிரிகோலமாக கண்கள் வீங்கப் பார்க்கப் பாவமாக இருந்தான்.

“இந்தா இதை வைத்துக்கொள்” என்று அந்தப் பொட்டலத்தை கோமதியிடம் கொடுத்தான் ரகு.

அதை தலைகுனிந்தவாறே மௌனமாக வாங்கிக்கொண்டான். “அதில் என்ன இருக்கிறது என்று

பார்!”

கோமதி பொட்டலத்தை அவிழ்த்தான். நிறைய செவந்தி பூக்களும், அருமையான கருவளைகளும்

இருந்தன. பெண்களெல்லோரும் சிரித்தார்கள். கோமதியும் சிரித்தான்; அவன் கண்களில்

கண்ணீர் வந்தது.

ரகு ஊருக்குச் சென்று பல நாட்கள் ஆகிவிட்டது. கோமதி எல்லா வேலைகளையும்

முன்போலவே செய்கிறானென்றாலும் அவன் முன் போல கலகலப்பாக இல்லை. தனியாக ஏதாவது

ஓரிடத்தில் இருந்து கொண்டு எதையோ பறிகொடுத்தவன்போல் எதையாவது பார்த்துக்

கொண்டிருப்பான். மனதை அறுக்கும் பெருமூச்சுக்களை அடிக்கடி விடுவான். உடம்பு

மெலிந்துவிட்டது. சுலோ இதையெல்லாம் மௌனமாக கவனித்துக்கொண்டு வந்தாள்.

ஒருநாள் இரவு இரண்டுமணி இருக்கும். சுலோ தற்செயலாகக் கண்விழித்தாள். கீழே

கோமதியின் அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ‘ஏன்?’ என்று

பார்க்கவேண்டும்போல் இருந்தது. மெதுவாக இறங்கி வந்தாள். பார்த்தாள். கோமதியைக்

காணோம். உள்ளே ஒரு பெண் மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

திகிலும் ஆச்சரியமாகவும் இருந்தது.

யார் இந்தப் பெண்; கோமதி எங்கே?

அரவமில்லாமல் சுலோ பக்கவசத்திலிருந்த ஜன்னல் வழியாகப் போய்ப் பார்த்தாள்.

அந்தப் பெண் முழங்காலைக் கட்டிகொண்டு உட்கார்ந்திருந்தாள். கைகள் நிறைய

கருவளைகள் போட்டுக் கொண்டிருந்தாள். தலையில் ஜடைநிறைய செவ்வந்திப் பூக்கள்.

அவள் எதிரே ரகுவின் படம் இருந்தது! சுலோ முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அந்த

பெண்ணின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக இறங்கிக்கொண்டிருந்தது. முன்னால்

குனிந்து வளையல்கள் மீது முகத்தைக் கவிழ்ந்துகொண்டாள் அந்தப் பெண். அவளுடைய

கண்களின் நீர்ப்பட்டு அந்தக் கருவளைகள் நனைந்து அதிலிருந்து பிரகாசமான

வைரங்களைப் போல் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

எதிரேயுள்ள ஜன்னல் வழியாக இப்பொழுது நன்றாகப் பார்க்க முடிந்தது சுலோவால்.

அடையாளம் கண்டுகொண்டாள். சேலையுடுத்திக்கொண்டிருந்த அது வேறு யாருமில்லை.

கோமதிதான்!

சுலோ திடுக்கிட்டுப் போனாள். பீதியால் நிலைகொள்ள முடியவில்லை. திரும்பி

மாடிப்படி ஏற காலைத் தூக்கி வைக்க முயன்றாள் – முடியவில்லை, அப்படியே

உட்கார்ந்துவிட்டாள்.

செட்டியாருக்கு வயசு முப்பது. அவனது பெற்றோர்கள் அவனுக்கு பெண்குழந்தைஎன்று நினைத்துத்தான் கோமதி என்று பெயர் வைத்தார்கள். அவனுக்குமுன் பிறந்தஏழும் அசல் பெண்கள். இவனுக்கு சிறு பிராயத்திலிருந்தே ஜடைபோட்டு பூ வைத்துக் கொள்வதிலும், வளை அணிந்து கொள்வதிலும் கொள்ளை ஆசை. உருவம் ஆணாக இருந்தாலும்,இயல்பு அச்சு அசல் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி, நீட்டி தலை அசைத்துப் பேசுவது அவனுக்கு குழந்தையாக இருக்கும்போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண்குழந்தைகளோடுதான் விருப்பமாக விளையாடப் போவான்.ஆண்களோடு விளையாடவேண்டியது ஏற்பட்டுவிட்டால் வீடுகட்டி, கல்யாணம் பண்ணி விளையாடும் விளையாட்டில்தான் பிரியம் அதிகம். அதிலும் மணப்பெண்ணாக தன்னை வைப்பதென்றால்தான், விளையாட வரச் சம்மதிப்பான்.வயசு ஆகஆக அவன் ஆண்களோடு சேர்ந்து பழகுவதையேவிட்டுவிட்டான். பெண்கள் இருக்கும்இடங்களில்தான் சதா அவனைப் பார்க்கலாம். ஏதாவது அதிசயமான சங்கதியைக் கேள்விப்பட்டால் பட்டென்று கையைத்தட்டி இடதுகை மணிக் கட்டின் மேல் வலது முழங்கையை ஊன்றி ஆள்காட்டி விரலைக் கொக்கிபோல் வளைத்துத் தன் மூக்கின்மேல்ஒட்டவைத்துக் கொள்வான்.

அகலமான கருஞ்சாந்துப் பொட்டை வைத்து வெற்றிலை போட்டுக்கொண்டு கீழ் உதட்டைத் துருத்தியும், நாக்கை நாக்கை நீட்டியபடியும் சிகப்பாகப் பிடித்திருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக்கொள்வான். தலைமுடியை அள்ளிச் சொருகி ‘கொப்பு’ வைத்து பூவைத்துக்கொள்ளுவான். அவன் அணிந்திருக்கும்பாடி பெண்கள்

அணிந்துகொள்ளும் ஜம்பரின் மாடலில் அமைந்திருக்கும். மேலே போட்டுக்கொள்ளும் துண்டை அடிக்கடி மாராப்பை சரி பண்ணுவதுபோல் இழுத்து இழுத்துவிட்டுக்கொண்டு இடுப்பை இடதும் வலதும் ஆட்டி அசல் பெண்களைப்போல் கையை ஒய்யாரமாக வீசி நடப்பான். எவ்வன புருஷர்களைக் கண்டுவிட்டால் கோமதிக்கு எங்கோ இல்லாத வெட்கம் வந்துவிடும்.பெண்கள் இவனை வித்தியாசமாகவே நினைப்பது இல்லை. நடத்துவதும் இல்லை. இவன் எங்குசென்றாலும் இவனைப் பிரியமாக வைத்துக்கொள்வார்கள். ஆண் பெண் சம்பந்தமான பால்உணர்ச்சி கதைகளைச் சொல்லி அவர்களை மகிழ்விப்பான். மனசைத் தொடும்படியானஒப்பாரிகளைப் பாடி அவர்களின் கண்ணீரை வரவழைப்பான். ஆனால் ஒரு இடத்தில் நிலைத்துஇருக்கமாட்டா. ஒரு வீட்டில் சிலநாள் இருப்பான்; திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல்இன்னொரு வீட்டிற்குப் போய்விடுவான்.இவனுக்கு ஒரே ஒரு கலை அற்புதமாகக் கைவந்திருந்தது. சமையல் பண்ணுவதில் இவனுக்குநிகர் இவனேதான்.

விருந்து நாட்களில் கோமதி கோமதி என்று இவனுக்கு ஏகப்பட்டகிராக்கி.*********ஒரு தடவை தூரத்து ஊரிலுள்ள தனது பந்துக்கள் வீட்டுக் கல்யாணத்திற்குப் போகும்படி நேர்ந்தது இவனுக்கு. கல்யாணவீட்டுக்கு வந்திருந்த பெண்களில், பிரசித்தி பெற்ற ரகுபதி நாயக்கரின் வீட்டுப் பெண்களும் வந்திருந்தார்கள்.அவர்களுடைய அழகையும் நகை ஆபரணங்களையும் உடைகளையும் உல்லாசமான பேச்சுக்களையும் கண்டு கோமதி அப்படியே சொக்கிப்போய் விட்டான்! ரகுபதி நாயக்கரின் இளையபேத்தி குமாரி சுலோ இவனைக் கண்டதும், இவனுடைய அங்கஅசைவுகளையும் தளுக்கையும் கண்டு தன் வைர வளையல் குலுங்கக் கைகொட்டிக் கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அடக்கமுடியாமல் கண்களில் பொங்கிய கண்ணீரைத்துடைத்துக் கொண்டாள். சிரிப்பை அடக்க அவள் அவனோடு பேச்சுக் கொடுத்தாள். ரகுபதிநாயக்கரின் வீட்டுப் பெண்களுக்கு இவனைப் பற்றி அங்கிருந்த ஒருத்தி விஸ்தாரமாகச்சொல்லி அறிமுகம் செய்து வைத்தாள்.பெண்கள் விலகி உட்கார்ந்து அவனைத் தங்கள் அருகே உட்கார வைத்துக்கொண்டார்கள்.பட்டுச் சேலைகளின் சரசரப்பும் வியர்வையோடு கலந்த மல்லிகைப் பூவின் சுகந்தநெடியும் கோமதியைக் கிறங்க அடித்தது. பெண்கள் ஒருவருக்கொருவர் காதோடு காதாகபேசிக்கொண்டு சிரிக்கும் ஒலி, வளையல் ஒலியோடு போட்டியிட்டது.

கோமதி ஏதோவாய்திறந்து பேச ஆரம்பித்தபோது சுலோ குனிந்து தன் காதை அவன் வாய் அருகேநீட்டினாள்."யக்கா, இந்தச் சேலை என்ன விலை?"சுலோ சிரித்தாள். சிரித்துவிட்டு, "இதோ – இது ஐநூறு ரூபாய் விலை – " அவள்வாயிலிருந்து ஒரு மதுரமான வாடை வீசியது."யக்கா, உனக்கு இந்தச் சேலை ரொம்ப நல்லாயிருக்கு."சுலோ மீண்டும் சிரித்தாள். பெண்மைக்கே உரிய நாணம் கலந்த சப்தமில்லாத குமிழ்ச்சிரிப்பு வந்து அவளைக் குலுக்கியது."நீ எங்க வீட்டுக்கு வாரையா? சமையல் செய்ய?"சரி, என்ற பாவனையில் தலையை ஆட்டினான்

கோமதி.கோமதிக்கு, சுலோ தன் வலதுகை நிறைய அணிந்திருந்த வளையல்கள்மீதுதான் கண்ணாகஇருந்தது.அந்த வளையல்கள்தான் அவளுடைய சங்குபோன்ற வெண்ணிறமான கைக்கு எவ்வளவு பொருத்தமாக இருந்தது. ரகுபதி நாயக்கரின் வீட்டுப்பெண்கள் எல்லோருமே அப்படித்தான் ஒருகையில் வைர வளையல்களும் ஒரு கையில் கருவளையல்களும் அணிந்திருப்பார்கள். அந்தவீட்டுப் பெண்களை நினைத்தாலே சிவந்த உதடுகளும் வெண்மையான பற்களுமே ஞாபகத்துக்குவரும்.இப்போது இருக்கும் ரகுபதி நாயக்கரின் பேரனான ரகுபதி நாயக்கர் தன்குடும்பத்திலுள்ள அழகை மேலும் மேலும் வளர்த்துச் செழுமைப்படுத்தினார்.

தன்னுடையஅழகுமிகுந்த நான்கு புத்திரர்களுக்கும் ஆந்திரதேசத்துக்குச் சென்று தங்கவிக்ரகங்களைப்போலுள்ள எட்டு ஸ்திரி ரத்தினங்களைக் கொண்டுவந்து ஆளுக்கு இரண்டுபேரை கல்யாணம் பண்ணி வைத்தார். தன் குடும்பத்திலிருந்து வெளியே கொடுக்கவேண்டியபெண்களுக்கும் அவர் அழகுமிகுந்த மாப்பிள்ளைகளையே தேர்ந்தெடுப்பார். இந்தமாப்பிள்ளைகளுக்கு சொத்து இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. அழகுமிகுந்தபெண்ணையும் கொடுத்து அவனுக்கு வேண்டிய சொத்தையும் எழுதி வைப்பார். எவ்வளவுஎடுத்துக் கொடுத்தாலும் குறைவுபடாத சம்பத்து இருந்தது அவர்கள் குடும்பத்திற்கு.இப்பேர்ப்பட்ட ஒரு இடத்துக்குத்தான் கோமதி சமையல் உத்தியோகத்துக்குப் பெட்டிபடுக்கையுடன் போய்ச் சேர்ந்தான். பக்கத்து வீட்டிலுள்ள பெண்களெல்லாம் இவனைப்பார்க்க வந்து விட்டார்கள். இவனுடைய நடையையும், நீட்டிப் பேசுகிற பேச்சையும்,அசைவுகளையும் கண்ட பெண்கள் சிரித்து ரஸித்தார்கள். உற்சாகமூட்டினார்கள். அன்றுஎல்லோருக்கும் ஒரு பெரிய விருந்தே நடந்தது. அவன் படைத்த உணவைருசிபார்த்தபின்தான் பெண்களுக்கு அவன் மீதுள்ள இளப்பம் ஓரளவு நீங்கியது. அவனைபரிவாகவும் இரங்கத்தக்க ஒரு ஜீவனாகவும், தங்களோடு, தங்கள் இனத்தோடு சேர்ந்த ஒருஆத்மாவாகவும் நடத்தினார்கள்.சாப்பிட்டு முடித்த ரகுபதி நாயக்கர், இந்தப் புது சமையல்காரனைபார்க்கவேண்டுமென்று சொல்லி மாடியிலுள்ள தன்பகுதிக்கு வரவழைத்தார்.

கோமதிபயந்து ஒரு பூனைபோல் மெல்ல நுழைந்து அவர் எதிரே வந்து நின்றான். இவனைப்பார்த்ததுதான் தாமதம். ரகுபதி நாயக்கர் ஆகாயத்தை நோக்கி கடகடவென்று சிரிக்கஆரம்பித்துவிட்டார். அவருடைய வெண்ணிறமான மீசையோடு பற்களின் ஒளி போட்டியிட்டது.கோமதி உண்மையாகவே பயந்து போனான். அவனுடைய பயத்தைக் கண்டு ரகுபதி நாயக்கர்இன்னும் உரக்கச் சிரித்தார். வீட்டுப்பெண்கள் எல்லாம் சிறிது தள்ளி நின்று இதைவேடிக்கை பார்த்தார்கள்."பலே, பலே; வா இங்கே. உன் பேர் என்ன?""கோமதி""கோமதியா! பேஷ் பேஷ்....!" என்று முழங்காலில் கையால் தட்டிக்கொண்டு மீண்டும்அந்த கடகடத்த சிரிப்பையும் அவிழ்த்து விட்டார்

ரகுபதிநாயக்கர். பின்பு எழுந்து,தன் பீரோவைத் திறந்து ஒரு ஜோடி பட்டுக்கரை வேஷ்டிகளை எடுத்து "இந்தா, பிடி"என்று கொடுத்தனுப்பினார்.வேறு யாராவது இருந்தால் இந்த வெகுமதியைக் கண்டு மகிழ்ந்து போயிருப்பார்கள்.ஆனால் கோமதி அந்த வேஷ்டிகளை கடைசிவரையும் உடுத்தவே இல்லை.

ஒரு நாள் பகல் உணவுக்குப்பிறகு 'அந்தப்புர'த்தில் பெண்கள் எல்லோரும் சாவகாசமாகஉட்கார்ந்திருந்தார்கள். சிலர் பதினைந்தாம் புலியும், சிலர் தாயமும்விளையாடிக்கொண்டிருந்தார்கள். கோமதி, ஒரு பெண்ணுக்குத் தலையில் பேன்பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு திடீரென்று என்ன உற்சாகம் வந்ததோதெரியவில்லை. தன் இனிமையான பெண் குரலில் சோகம் ததும்ப ஒரு ஒப்பாரியைப்பாடினான். உணர்ச்சியோடு பாடினான். விதவைக்கோலம் பூண்டுவிட்ட ஒரு பெண்சொல்லுவதாக பாவம்:"கருப்பும் சிகப்புமாய் – நான்கலந்துடுத்தும் நாளையிலேசிகப்பும் கருப்புமாய் – நான்சேர்ந்துடுத்தும் நாளையிலேநீலமும் பச்சையுமாய் – நான்நிரந்துடுத்தும் நாளையிலேகைக்களையன் சேலையை – என்கழுத்திலிட்டுப் போனியளேகைக்களையன் சேலை: எந்தன்கழுத்தை அறுக்காதோஈழுவன் சேலை: எந்தன்இடுப்பை முறிக்காதோ"அங்கிருந்த விதவைப்பெண்கள் இதைக் கேட்டவுடன் அழுதே விட்டார்கள். சுமங்கலிகள்மௌனமாகக் கண்ணீர் வடித்தார்கள். உடனே கோமதி கருவளையைப் பற்றிய ஒரு வேடிக்கையானநாடோடி பாடல் ஒன்றைப் பாடி அபிநயம் பிடிக்கத் தொடங்கினான்."சோளம் இடிக்கையிலேசொன்னயடி ஒரு வார்த்தை: – "ஐயோகையைப் பிடிக்காதிங்கோ – என்கருவளைவி சேதமாகும்……."'கொல்'லென்று பெண்கள் சிரித்தார்கள்; வடித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டேசிரித்தார்கள்.

அதிகாலையில் பரபரப்பாகவும் உற்சாகமாகவும் கோமதி வேலை செய்துகொண்டு இருந்தான்.பெண்கள் குளிக்கும் அறைகளில் கொண்டுபோய் வெந்நீர் ரொப்புவதும், சோப்புகளும்துவாலைகளைக் கொண்டு கொடுப்பதும் அவர்களுக்கு முதுகு தேய்த்துவிடுவதுமாகவழக்கமான வேலைகளில் பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தான். அவனுடைய சுதாரிப்புக்குஇன்று ஒரு காரணமுண்டு. சுலோவின் அண்ணன் ரகு பட்டணத்திலிருந்து இன்று மாலைலீவுக்கு வருகிறான். தன் அண்ணனைப் பற்றி சுலோ கோமதியிடம் பல சந்தர்ப்பங்களில்சொல்லக் கேட்டிருக்கிறான்… அவருக்கு என்னென்ன சமையல் வகைகள் பிடிக்கும்என்றெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தான் கோமதி.அந்த மாலை நேரம் இப்போதே வந்துவிடக்கூடாதா என்றிருந்தது. பிறபகல் நத்தைபோல்ஊர்ந்து அந்த மாலைநேரமும் வந்தது. போர்டிகோவுக்குள் கார் வந்து நின்றதும்முன்பக்கம் பெண்களெல்லாம் வந்தார்கள். கோமதி மட்டும் கதவு இடுக்குவழியேஒளிந்துகொண்டு பார்த்தான். சுலோ ஓடிச்சென்று காரின் பின்கதவைத் திறந்தாள்.ஆணழகனான ரகு ஆஜானுபாகுவாக இறங்கி ஜம் என்று நின்றான். பெண்கள் அவனுக்குதிருஷ்டி சுற்றி கழித்து அவன் உள்ளே வர விலகி

நின்றார்கள். ரகுவைப் பார்த்தகோமதிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. முதலில் அதிர்ச்சியாயிருந்தது.மலமலவென்று கண்களை மூடித் திறந்தான். திடீரென்று எங்கேயும் இல்லாத வெட்கம்வந்து அவனைச் சூழ்ந்துகொண்டது.

ஒருவரும் பார்ப்பதற்குள் உள்ளே ஒரேஓட்டமாகப்போய் குளிப்பறைக்குள் போய்க் கதவை பூட்டிக்கொண்டான்.இரவு சாப்பாட்டின்போது ரகுவுக்கு சுலோவே பரிமாறினாள். கோமதி மறைவில் நின்றுகொண்டு ரகு சுவைத்துச் சாப்பிடுவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். “சாப்பாடெல்லாம் புதுமாதிரி இருக்கிறதே. இப்போது சமையலுக்கு யார் இருக்கிறார்கள்?” என்று கேட்டான். ‘புது ஆள்வந்திருக்கிறதண்ணா’ என்று சொல்லிக்கொண்டே பின்புறம் பார்த்தாள். கோமதி மறைந்துகொண்டு தன்னைப்பற்றி சொல்லவேண்டாம் என்று ஜாடை செய்தான். சுலோவும் சிரித்துக்கொண்டே ரகுவுக்குத் தோன்றாமல் வேறு பேச்சுக்கு மாற்றிவிட்டாள்.ரகு மாடிக்குப் போனபிறகு சுலோ கோமதியைக் கூப்பிட்டு, “அண்ணா உன்னைப் பார்த்தால்மிகவும் சந்தோஷப்படுவான்; மண்டு! நீ ஏன் வேண்டாம் என்று சொன்னாய்? பாலைஎடுத்துக்கொண்டு வா” என்று சொல்லிவிட்டு அண்ணாவின் அறைக்குப் போய்விட்டாள்.கோமதிக்கு உடம்பெல்லாம் வேர்த்து படபடவென்று வந்தது. தன்னைச் சிறிதுஆசுவாசப்படுத்திக்கொண்டு நிலைக்கண்ணாடியின் முன்போய் நின்று தன்னை நன்றாகப்பார்த்து, தலையிலுள்ள பூவை சரிப்படுத்திக் கொண்டான். பால் டம்ளரை ஒரு தட்டில்எடுத்துக் கொண்டு மாடியை நோக்கி இப்பொழுதுதான் புதுப்பெண் முதல் இரவுக்குப்போகிறதைப்போல் அடிமேல் அடிவைத்து ஏறிச் சென்றான். தட்டோடு கை நடுங்கியதால்எங்கே பால் கொட்டி விடுமோ என்று நினைத்து தம்ளரை ஒரு கையால் பிடித்துக்கொண்டேபோனான்.“கோமதி... கோமதி.. உள்ளே வாயேன்” என்று சுலோ கூப்பிட்டாள்.“யார் கோமதி?” என்று கேட்டான் ரகு.“அதுதான்; நான் அப்போ சொல்லவில்லையா; சமையலுக்கு ஒரு புது ஆள்வந்திருக்கிறதென்று?””ஓஹோ; சரிதான்” என்று சொல்லிக்கொண்டு தலையை ஆட்டிக் கொண்டான். “யாரோ பெண்பிள்ளைபோலிருக்கிறது” என்று எண்ணிக்கொண்டு சுலோவைப் பார்த்தவாறு தன் பேச்சைத்தொடர்ந்தான்.கோமதி மெதுவாகப் பக்கத்தில் வந்து நின்றான்.

“அண்ணா பாலை எடுத்துக்கொள்”ரகு திரும்பிப் பார்த்தான். முகத்தைச் சுழித்தான். இந்த ரஸவிஹாரத்தை அவன் ஆண்மைநிறைந்த உள்ளத்தால் தாங்கமுடியவில்லை. சுலோவை இதெல்லாம் என்ன என்ற முறையில்கோபத்தோடு பார்த்தான். சுலோ கலகலவென்று சிரித்தாள். கருங்கல் தரையில் கண்ணாடிவளையல்கள் தொடர்ந்து விழுந்து உடைவதுபோல் இருந்தது அவளுடைய சிரிப்பு.இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை கோமதிக்கு. அவமானம்தாங்கவில்லை. தட்டை மேஜைமீது வைத்துவிட்டு கையால் முகத்தை மூடிக்கொண்டுமூஸ்மூஸ் என்று அழ ஆரம்பித்துவிட்டான். ரகு கோமதியை நோக்கி “சீ போ வெளியே”என்று கத்தினான். கோமதி துயரம் தாங்காமல் வெளியே ஓடுவதைப்

பார்க்கப் பரிதாபமாகஇருந்தது.*********”என்ன காரியம் செய்து விட்டாயண்ணா”சுலோவிற்கு மனசு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. தான் விளையாட்டாக நினைத்ததுஇப்படி அண்ணாவுக்கு எரிச்சலை உண்டுபண்ணிவிடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.கோமதியை நினைத்து மிகவும் துக்கப்பட்டாள்.“இரக்கப்படத் தகுந்த ஒரு ஜென்மத்திடம் இப்படிக் கொடுமையாக நடந்து கொள்ளலாமா?”என்று கேட்டாள். ரகுவுக்கும் ‘பாவம்’ நாம் ஏன் இப்படி நடந்துகொண்டோம் என்று பட்டது. “தான் இனிமேல் அவனிடம் சுமுகமாக நடந்துகொள்வதாகக்’ கூறினான்.அன்றிரவு தனக்குச் சாப்பாடே வேண்டாம் என்றுவிட்டு வெறும் தரையில்படுத்துக்கொண்டான் கோமதி.

மறுநாள் சுலோ கோமதிக்கு எவ்வளவோ சமாதானம் சொல்ல வேண்டி இருந்தது. என்னசொல்லியும் கோமதிக்கு மனசு சமாதானப்படவில்லை. ரகு வந்து கோமதியிடம் சிரித்துப்பேசியதும் கோமதிக்கு எல்லாம் சரியாகப் போய்விட்டது. பழைய கோமதி ஆனான்.குளிப்பறையில் ரகுவுக்கு தண்ணீர் எடுத்து வைத்தான். சோப்பும் துவாலையும் கொண்டுவைத்தான். ரகுவும் சந்தோஷமாகக் குளிக்க வந்தான்.“சரி, நீ போகலாம்; நான் குளித்துக்கொள்கிறேன்” என்றான் ரகு.“உங்களுக்கு நான் முதுகு தேய்க்கிறேனே…..!” என்று குழைந்தான் கோமதி.“வேண்டாம் வேண்டாம்; நானே தேய்த்துக்கொள்வேன்” என்று சொல்லி, பிடரியைப்பிடித்து தள்ளாத குறையாக கோமதியை வெளியேற்றி கதவைப் பூட்டிகொண்டான் ரகு. அந்தக்கதவுக்குமேல் ஒரு சிறு பாட்டு ஜன்னல் ஒன்றிருந்தது. பக்கத்திலிருந்த பெரிய ஆட்டுரல்மேல் ஏறி அந்த ஜன்னல் வழியாய்க் குளிப்பறைக்குள் திருட்டுத்தனமாக வேறு எதையோ பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான் கோமதி, சுலோ இந்த நாடகத்தையெல்லாம் ஒன்று விடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்களில் பிதுங்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அப்பால் போய்விட்டாள

சாப்பிடுங்கள்; இன்னுங்கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள்” என்று கோமதி பலமாகஉபசரித்துக்கொண்டே ரகுவுக்குப் பரிமாறினான்.“வேண்டாம்; வேண்டாம் போதும்; போதும்” என்று சொல்லும்வரை திணற அடித்தான். தன்மனதுக்குப் பிடித்தவர்களை தான் சமைத்ததை தன் கையாலேயே பரிமாறி அவர்கள் உண்பதைக்காண்பதில் எப்பவுமே கோமதிக்கு பரம திருப்தி. அதோடு சுலோவும் சேர்ந்துகொண்டுரகுவைத் திண்டாட வைத்து வேடிக்கை பார்த்தாள்.“சுலோ, இந்தப் பயலுக்கு நீ ரொம்பவும் இளக்காரம் கொடுக்கிறாய். இவனைக் கண்டாலேஎனக்குப் பிடிக்கவில்லை. நான் இவனை வெறுக்கிறேன்” என்று ரகு இங்கிலீஷில்சொன்னான்.’ஐயோ பாவம்; அண்ணா, அப்படியெல்லாம் சொல்லாதே’ என்று பதிலுக்குச் சொன்னாள்.சொல்லிவிட்டு சுலோ கோமதியின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். இவர்கள் இரண்டுபேரும் பேசிக்கொண்டது கோமதிக்கு விளங்கவில்லையானாலும் தன் சமையலைப் பற்றியும்தன்னைப்பற்றியும்தான் தன்

எஜமானர்கள் புகழ்ந்து பேசிக்கொள்கிறார்கள் என்றுஎண்ணி மகிழ்ந்தான் கோமதி.அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு மாடிக்குப் போனபின் கோமதி பெண்களின்குளிப்பறைக்குப் பக்கத்தில் தனக்கென்று ஒதுக்கப்பட்ட தன்னுடைய தனித்த அறையில்வெற்றிலைப் பாக்கு, புகையிலைகளைப் போட்டு முழக்கிக்கொண்டிருந்தான். சந்தோஷத்தைஅவனால் அடக்க முடியவில்லை. குரலெடுத்துப் பாடவேண்டும்போல் இருந்தது.

இரவுச் சாப்பாடு முடிந்தது. வழக்கம்போல் கோமதி ரகுவுக்கு பால் எடுத்துக்கொண்டுபோனான். ரகு தனியாக உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். பக்கத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டு எதிரேயுள்ள கண்ணாடியில் தன் முகத்தை இப்படியும் அப்படியுமாகஒரு தடவை பார்த்துக்கொண்டான். மீண்டும் பக்கத்தில் வந்து உராய்ந்துகொண்டு"பாலைச் சாப்பிடுங்கோன்னா; ஆறிப்போகிறது" என்று கொஞ்சலாகச் சொன்னான். சொன்னதோடுஅவன் நின்றிருந்தாலும் ரகுவிற்கு கோபம் வந்திருக்காது; நாடியை வேறு தொட்டுத்தாங்கினான். ரகு பேனாவை எறிந்துவிட்டு அப்படியே கோமதியின் செவிட்டில் ஓங்கி ஒருஅறை விட்டான். இதை கோமதி எதிர்பார்க்கவில்லை. கன்னத்தைக் கையால் பொத்திக்கொண்டுரகுவைப் பார்த்து சிரிக்க முயன்றான்; சிரிக்கமுடியவில்லை. பீதியும் சிரிப்பும்மாறிமாறி முகத்தில் தோன்றி இறுதியில் பீதி முற்றி பயங்கரமாக முகம் மாறியது. இதுரகுவுக்கு இன்னும் ஆவேசத்தை உண்டு பண்ணியது. தன் வலது காலை உயர்த்தி ஓங்கி அவன்நெஞ்சில் உதைத்துத் தள்ளினான்."ஓ" என்று பயங்கர ஊளையுடன் தடால் என்று தரையில் விழுந்தான் கோமதி.பக்கத்தறையிலிருந்த சுலோ ஓடிவந்து ரகுவை தடுக்காவிட்டால் கோமதி என்னாவாகிஇருப்பானோ.அன்று இரவு மூன்று பேர்களும் தூங்கவில்லை. குளிப்பறைக்குப் பக்கத்திலிருந்தஅறையிலிருந்து இரவு பூராவும் ஒப்பாரி வைத்து அழும் சோகக்குரல் கேட்டுக்கொண்டேஇருந்தது.மறுநாள் ரகு ஏதோ அவசர ஜோலியாக பட்டணத்துக்குப் புறப்பட்டு விட்டான். சுலோவின்முகத்தில் அருளே இல்லை. இதை ரகு கவனித்தான். கோமதி தன் அறையிலிருந்து வரவேஇல்லை.எல்லோரிடமும் சொல்லிக்கொள்ள வந்தபோது ஸ்திரிகள் கூட்டத்தில் கோமதி இல்லாததுகண்டு, "அவன் எங்கே; கோமதி" என்று கேட்டான் ரகு."அவனுக்கு உடம்புக்கு சரியில்லை போலிருக்கிறது. இன்று வெளியிலேயே காணோம்" என்றுசொன்னார்கள்.

சுலோ ஒன்றுமே தெரியாததுபோல் மௌனமாக இருந்தாள். ரகு கையில் ஒருபொட்டலத்துடன் கோமதியின் இருப்பிடம் சென்றான்."கோமதி! யேய் கோமதி; கதவைத் திற" என்று அன்போடு கேட்டான். கோமதியும் கதவைத்திறந்தான். தலைவிரிகோலமாக கண்கள் வீங்கப் பார்க்கப் பாவமாக இருந்தான்."இந்தா இதை வைத்துக்கொள்" என்று அந்தப் பொட்டலத்தை கோமதியிடம் கொடுத்தான் ரகு.அதை தலைகுனிந்தவாறே மௌனமாக வாங்கிக்கொண்டான். "அதில் என்ன இருக்கிறது

என்றுபார்!"கோமதி பொட்டலத்தை அவிழ்த்தான். நிறைய செவந்தி பூக்களும், அருமையான கருவளைகளும்இருந்தன. பெண்களெல்லோரும் சிரித்தார்கள். கோமதியும் சிரித்தான்; அவன் கண்களில்கண்ணீர் வந்தது.ரகு ஊருக்குச் சென்று பல நாட்கள் ஆகிவிட்டது. கோமதி எல்லா வேலைகளையும்முன்போலவே செய்கிறானென்றாலும் அவன் முன் போல கலகலப்பாக இல்லை. தனியாக ஏதாவதுஓரிடத்தில் இருந்து கொண்டு எதையோ பறிகொடுத்தவன்போல் எதையாவது பார்த்துக்கொண்டிருப்பான். மனதை அறுக்கும் பெருமூச்சுக்களை அடிக்கடி விடுவான். உடம்புமெலிந்துவிட்டது. சுலோ இதையெல்லாம் மௌனமாக கவனித்துக்கொண்டு வந்தாள்.ஒருநாள் இரவு இரண்டுமணி இருக்கும். சுலோ தற்செயலாகக் கண்விழித்தாள். கீழேகோமதியின் அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

'ஏன்?' என்றுபார்க்கவேண்டும்போல் இருந்தது. மெதுவாக இறங்கி வந்தாள். பார்த்தாள். கோமதியைக்காணோம். உள்ளே ஒரு பெண் மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.திகிலும் ஆச்சரியமாகவும் இருந்தது.யார் இந்தப் பெண்; கோமதி எங்கே?அரவமில்லாமல் சுலோ பக்கவசத்திலிருந்த ஜன்னல் வழியாகப் போய்ப் பார்த்தாள்.அந்தப் பெண் முழங்காலைக் கட்டிகொண்டு உட்கார்ந்திருந்தாள். கைகள் நிறையகருவளைகள் போட்டுக் கொண்டிருந்தாள். தலையில் ஜடைநிறைய செவ்வந்திப் பூக்கள்.அவள் எதிரே ரகுவின் படம் இருந்தது! சுலோ முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அந்தபெண்ணின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக இறங்கிக்கொண்டிருந்தது. முன்னால்குனிந்து வளையல்கள் மீது முகத்தைக் கவிழ்ந்துகொண்டாள் அந்தப் பெண். அவளுடையகண்களின் நீர்ப்பட்டு அந்தக் கருவளைகள் நனைந்து அதிலிருந்து பிரகாசமானவைரங்களைப் போல் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.எதிரேயுள்ள ஜன்னல் வழியாக இப்பொழுது நன்றாகப் பார்க்க முடிந்தது சுலோவால்.அடையாளம் கண்டுகொண்டாள். சேலையுடுத்திக்கொண்டிருந்த அது வேறு யாருமில்லை.கோமதிதான்!சுலோ திடுக்கிட்டுப் போனாள். பீதியால் நிலைகொள்ள முடியவில்லை. திரும்பிமாடிப்படி ஏற காலைத் தூக்கி வைக்க முயன்றாள் – முடியவில்லை, அப்படியேஉட்கார்ந்துவிட்டாள்.

------------------

கன்னிமை

சொன்னால் நம்பமுடியாதுதான்! நாச்சியாரம்மாவும் இப்படி மாறுவாள் என்று நினைக்கவேயில்லை.

அவள் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரி. நாங்கள் எட்டுப்பேர் அண்ணன் தம்பிகள். 'பெண்ணடி'யில்லை என்று என் தாய் அவளைத் தத்து எடுத்துத் தன் மகளாக்கிக்

கொண்டாள்.

அம்மாவைவிட எங்களுக்குத்தான் சந்தோஷம் ரொம்ப. இப்படி ஒரு அருமைச் சகோதரி யாருக்குக் கிடைப்பாள்? அழகிலும் சரி, புத்திசாலித்தனத்திலும் சரி அவளுக்கு

நிகர் அவளேதான்.

அவள் 'மனுஷி'யாகி எங்கள் வீட்டில் கன்னிகாத்த அந்த நாட்கள் எங்கள்

குடும்பத்துக்கே பொன் நாட்கள்.

வேலைக்காரர்களுக்குக்கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால்தான் திருப்தி.

நிறைய்ய மோர்விட்டுக் கம்மஞ்சோற்றைப் பிசைந்து கரைத்து மோர் மிளகு வத்தலைப் பக்குவமாக எண்ணெயில் வறுத்துக் கொண்டுவந்து விடுவாள். சருவச் சட்டியிலிருந்து வெங்கலச் செம்பில் கடகடவென்று ஊற்ற, அந்த மிளகு வத்தலை எடுத்து வாயில் போட்டு நொறு நொறுவென்று மென்றுகொண்டே, அண்ணாந்து கஞ்சியை விட்டுக்கொண்டு அவர்கள் ஆனந்தமாய்க் குடிக்கும்போது பார்த்தால், 'நாமும் அப்படிக் குடித்தால் நன்றாக இருக்கும்போலிருக்கிறதே!' என்று தோன்றும்.

ஒரு நாளைக்கு உருத்த பச்சை வெங்காயம் கொண்டுவந்து 'கடித்துக்' கொள்ள

கொடுப்பாள். ஒரு நாளைக்குப் பச்சை மிளகாயும், உப்பும். பச்சை மிளகாயின்

காம்பைப் பறித்துவிட்டு அந்த இடத்தில் சிறிது கம்மங்கஞ்சியைத் தொட்டு அதை

உப்பில் தோய்ப்பார்கள். உப்பு அதில் தாராளமாய் ஒட்டிக்கொள்ளும். அப்படியே

வாயில் போட்டுக்கொண்டு கசமுச என்று மெல்லுவார்கள். அது, கஞ்சியைக் 'கொண்டா

கொண்டா' என்று சொல்லுமாம்! இரவில் அவர்களுக்கு வெதுவெதுப்பாகக் குதிரைவாலிச் சோறுபோட்டு தாராளமாஅ பருப்புக்கறி விட்டு நல்லெண்ணெயும் ஊற்றுவாள். இதுக்குப் புளி ஊற்றி அவித்த சீனியவரைக்காய் வெஞ்சனமாகக் கொண்டுவந்து வைப்பாள். இரண்டாந்தரம் சோற்றுக்குக் கும்பா நிறைய ரஸம். ரஸத்தில் ஊறிய உருண்டை உருண்டையான குதிரைவாலிப் பருக்கைகளை அவர்கள் கை நிறைய எடுத்துப் பிழிந்து உண்பார்கள்.

வேலைக்காரர்களுக்கு மட்டுமில்லை, பிச்சைக்காரர்களுக்குக்கூட நாச்சியாரம்மா

என்றால் 'குலதெய்வம்'தான். அவளுக்கு என்னவோ அப்படி அடுத்தவர்களுக்குப்

படைத்துப் படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்தி.

அவள் வாழ்க்கைப்பட்டு, புருஷன் வீட்டுக்குப் போனபிறகு எங்கள் நாக்குகள் எல்லாம்

இப்போது சப்பிட்டுப் போய்விட்டது. உயர்ந்த ஜாதி நெத்திலியைத் தலைகளைக் கிள்ளி நீக்கிவிட்டுக் காரம் இட்டு வறுத்துக் கொடுப்பாள். இப்போது யாருமில்லை எங்களுக்கு. அந்தப் பொன்முறுவல் பக்குவம் யாருக்கும் கைவராது. பருப்புச்சோற்றுக்கு உப்புக்கண்டம் வறுத்துக் கொடுப்பாள். ரஸ சாதத்துக்கு முட்டை அவித்துக் காரமிட்டுக் கொடுப்பாள். திரண்ட கட்டி வெண்ணெயை எடுத்துத் தின்னக் கொடுப்பாள், அம்மாவுக்குத் தெரியாமல்.

அவள் அப்பொழுது எங்கள் வீட்டிலிருந்தது வீடு நிறைந்திருந்தது. தீபம்போல் வீடு நிறைஒளி விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தாள்.

மார்கழி மாசம் பிறந்துவிட்டால் வீட்டினுள்ளும் தெருவாசல் முற்றத்திலும் தினமும் வகை வகையான கோலங்கள் போட்டு அழகுபடுத்துவாள். அதிகாலையில் எழுந்து நீராடி திவ்யப்பிரபந்தம் பாடுவாள். இப்பொழுதும் பல திருப்பாவைப் பாடல்களை என்னால் பாராமல் ஒப்புவிக்கமுடியும். சிறுவயசில் அவளால் பிரபந்தப் பாடல்களைப் பாடக் கேட்டுக்கேட்டு எங்கள் எல்லோர்க்கும் அது மனப்பாடம் ஆகிவிட்டது.

அப்பொழுது எங்கள் வீட்டில் மரத் திருவிளக்கு என்று ஒன்று இருந்தது. அது அவ்வளவும் மரத்தினாலேயே ஆனது. தச்சன் அதில் பல இடங்களில் உளிகளைப் பதித்து நேர்கோடுகளால் ஆன கோலங்களைப் போட்டிருந்தான். மொங்காங்கட்டையின் வடிவத்தில் நிற்கும் பெரிதான பற்கள் இருக்கும். அதில் உயரத்துக்குத் தகுந்தபடி ஏற்றவும் இறக்கவும் வசதியாக இருக்கும்படியாக ‘ட’ வடிவத்தில் ஒரு துளையிட்ட சக்கையில் ‘சல்ல முத்த’ என்று சொல்லப்படும் மாட்டுச்சாண உருண்டையின் மீது மண் அகல்விளக்கு வைக்கப்பட்டு எரியும். சாணி உருண்டை தினமும் விளக்கு இடும் போதெல்லாம் மாற்றிவிட்டுப் புதிதாக வைக்கப்படும். அப்புறம் x மாதிரி ஒரு போர்வைப் பலகை கொண்டு இரவு வெகு நேரம் வரைக்கும் பெண்கள் புடைசூழ இவள் உரக்க ராகமிட்டு வாசிப்பாள். வாசித்துக்கொண்டே வரும்போது இவளும் மற்றப் பெண்களும் கண்ணீர் விடுவார்கள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டே தொண்டை கம்மத் திரும்பவும் ராகமிட்டு வசனத்தைப் பாடுவாள். அவர்கள் கண்ணீர் விடுவதையும் மூக்கைச் சிந்துவதையும் நான் படுக்கையில் படுத்துக்கொண்டு பேசாமல் இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருப்பேன்.

அவள் வாசிப்பதை என் காதுகள் வாங்கிக்கொள்ளாது. என் கண்களே பார்க்கவும் செய்யும்; ‘கேட்க’வும் செய்யும்.

விளக்கின் ஒளியில்தான் அவள் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கிறாள். அழகுக்கும் விளக்கின் ஒளிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. கறிக்கு உப்பைப்போல் அழகுக்கும் அதி ருசி கூட்டுகிறதுபோலும் விளக்கு.

தானாகக் கண்கள் சோர்ந்து மூடிக்கொண்டுவிடும்.

அதிகாலையில் ரங்கையா வந்து என்னை எழுப்பினான். ராமர், லக்ஷ்மணர், சீதை மூவரும் எங்கள் தெருவின் முடிவிலுள்ள கிழக்காகப் பார்த்த ஒரு வீட்டிலிருந்து இறங்கிக் காட்டுக்குப் போகிறார்கள். பார்வதி அம்மன் கோயிலைத் தாண்டி, பள்ளிக்கூடத்தையும் கடந்து, கம்மாய்க்கரை வழியாக அந்த மூவரும் போகிறாள். எனக்குத் தொண்டையில் வலிக்கிறாற்போல் இருக்கிறது. முகத்தைச் சுளிக்க முடியவில்லை. ரங்கையா தோள்களைப் பிடித்துப் பலமாக உலுக்கியதால் விழித்துவிட்டேன். சே! நன்றாக விடிந்துவிட்டிருக்கிறது. ரங்கையா சிரித்துக்கொண்டு நின்றிருந்தான், கிளம்பு கிளம்பு என்று ஜரூர்ப்படுத்தினான்.

நாச்சியாரம்மா செம்பு நிறையத் தயிர் கொண்டுவந்து வைத்தாள், இருவரும்

வயிறுமுட்டக் குடித்துவிட்டுக் கிளம்பினோம்.

ரங்கையா எங்கள் மச்சினன்; ‘வீட்டுக்கு மேல்’ வரப்போகும் மாப்பிள்ளை.

நாச்சியாரம்மாவை இவனுக்குத்தான் கொடுக்க இருக்கிறோம். இவனும்

நாச்சியாரம்மாபேரில் உயிரையே வைத்திருக்கிறான்; அவளும் அப்படித்தான்.

‘புல்லை’யையும் ’மயிலை’ யையும் பிடித்து ரங்கையா வண்டி போட்டான். அவை இரண்டும் எங்கள் தொழுவில் பிறந்தவை. ஒன்று இரண்டு; இன்னொன்று நாலு பல். பாய்ச்சலில் புறப்பட்டது வண்டி. ஊணுக் கம்பைப் பிடித்துத்தொத்தி, அவற்றில் இரண்டைக் கைக்கு ஒன்றாகப் பிடித்துக்கொண்டு குனிந்து நின்றுகொண்டேன். சட்டத்தில் இரும்பு வளையங்கள் அதிர்ந்து குலுங்கிச் சத்தம் எழுப்பியது. வண்டியின் வேகத்தினால் ஏற்பட்ட குலுக்கலில் உடம்பு அதிர்ந்தது. கல்லாஞ்சிரட்டைத் தாண்டி வண்டியின் அறைத் தடத்துக்குள் காளைகள் நிதானங்கொண்டு நடை போட்டன.

நடுவோடைப் பாதையிலுள்ள வன்னிமரத்தருகில் வண்டியை அவிழ்த்து, காளைகளை

மேய்ச்சலுக்காக ஓடைக்குக் கொண்டு போனோம்.

காட்டில் பருத்தி எடுக்கும் பெண்கள் காட்டுப் பாடல்கள் பாடிக்

கொண்டிருந்தார்கள். அவர்களிடையே நாச்சியாரம்மாவும் நிரை போட்டுப் பருத்தி

எடுத்துக் கொண்டிருந்தாள். பருத்தி ‘��

�ாடாய்’ வெடித்துக் கிடந்தது; பச்சை

வானத்தில் நட்சத்திரங்களைப்போலே. ரங்கையா தன் மடியிலிருந்த கம்பரக் கத்தியால்

கருவைக் குச்சியைச் சீவி, பல் தேய்க்கத் தனக்கு ஒன்று வைத்துக்கொண்டு எனக்கு

ஒன்று கொடுத்தான். போக இன்னொன்று தயார் செய்து வைத்துக்கொண்டான்!

நேரம், கிடை எழுப்புகிற நேரத்துக்கும் அதிகமாகிவிட்டது. காளைகள் வயிறு முட்டப் புல்மேய்ந்து விட்டு வன்னிமர நிழலில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன.

நாச்சியாரம்மா, பருத்தியைக் கருவமரத்து நிழலில் கூறுவைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். மடிப் பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடு பருத்தி என்று பகிர்ந்து போட, பள்ளுப் பெண்கள் சந்தோஷமாக நாச்சியாரம்மாவை வாழ்த்திக்கொண்டே வாங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் வேறு யார் வந்து கூறுவைத்துக் கொடுத்தாலும் ஒப்பமாட்டார்கள். நாச்சியாரம்மாதான் வேணும் அவர்களுக்கு.

கிஸ்தான் தாட்டுக்களில் பகிர்ந்த பருத்தி அம்பாரத்தைப் பொதியாக்கட்டி வண்டியில் பாரம் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டோம். பள்ளுப்பெண்கள் முன்கூட்டிப் புறப்பட்டுப் போய் விட்டார்கள் – நாச்சியாரம்மாவும் நானும் வண்டியில் ஏறிக்கொண்டு பருத்திப் பொட்டணங்களின்மேல் உட்கார்ந்துகொண்டு ஊணுக்கம்புகளைப் பிடித்துக்கொண்டோம். ரங்கையா வண்டியை விரட்டினான்.

வருகிற பாதையில் மடியில் பகிர்ந்த பருத்தியோடு நடந்து வருகிற பெண்டுகளின் கூட்டத்தைக் கடந்துகொண்டே வந்தது வண்டி. அவர்கள் வேண்டுமென்று குடிகாரர்களைப்போல் தள்ளாடி நடந்துகொண்டே வேடிக்கைப் பாடல்களைப் பாடிக்கொண்டும் ஒருவருக்கொருவர் கேலிசெய்து தள்ளிக்கொண்டும் வந்தார்கள். தொட்டெரம்மா கோயில் பக்கத்தில் வந்ததும் ரங்கையா கயிறுகளை முழங்கைகளில் சுற்றி இழுத்து வண்டியை நிறுத்தினான். தொட்டெரம்மா கோயிலின் இலந்தைமுள் கோட்டையின்மேல் நாச்சியாரம்மா ஒரு கூறு பருத்தியை எடுத்து இரு கைகளிலும் ஏந்திப் பயபக்தியோடு அந்த முள்கோட்டையின் மீது போட்டாள். பின்னால் வந்துக்கொண்டிருந்த பள்ளுப்பெண்கள் குலவையிட்டார்கள். ரங்கையா கயிற்றை நெகிழ்ந்து விட்டதும் புல்லையும் மயிலையும் வால்களை விடைத்துக்கொண்டு பாய்ந்து புறப்பட்டது.

********

ஊரெல்லாம் ஒரே சலசலப்பு. என்ன ஆகுமோ என்ற பயம். தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான் ரங்கையா. ‘என்ன ஆச்சி?’ என்று அவனைக் கேட்பதுபோல் பார்த்தோம் யாவரும். அவன் என்னை மட்டிலும் ‘ராஜா, இங்கே வா’ என்று தனியாகக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னான்.

எங்கள் ஊரில், சுந்தரத்தேவன் என்று ஒரு பெரிய போக்கிரி இருந்தான். ஏழுதடவை

ஜெயிலுக்குப் போனவன். மூன்று கொலைகள் செய்தவன். அதில் ஒன்று இரட்டைக் கொலை. அவனுடைய மகனை, எங்கள் தகப்பனார் எங்கள் புஞ்சையில் ‘வாங்கித்திங்க’

பருத்திச்சுளை எடுத்தான் என்றதுக்கு ஊனுக்கம்பால் அடி நொறுக்கி எடுத்து

விட்டார். பையனைக் கட்டிலில் வைத்து எடுத்துக்கொண்டு வந்து அவனுடைய வீட்டில் கிடத்தியிருக்கிறார்கள். சுந்தரத்தேவன் வெட்டரிவாளை எடுத்துக்கொண்டு வந்து எங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறான். விஷயம் இதுதான். ரங்கையா போய் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை அவன்.

நாச்சியாரம்மா சுந்தரத்தேவன் வீட்டை நோக்கிப் போனாள். அவள் அங்கு போயிருப்பாள் என்று நாங்கள் முதலில் நினைக்கவில்லை; பிறகுதான் தெரியவந்தது.

அங்கு அவள் போனபோது ஒரே கூட்டம். அழுகைச் சத்தம். நாச்சியாரம்மா நுழைந்ததும் பரபரப்பு உண்டானது. பெண்கள் பணிவாக வழிவிட்டு விலகி நின்றனர். அடிப்பட்ட சிற��

�வ்னை அந்தக் கட்டிலிலேயே கிடந்த்தியிருந்தது. இரத்த உறவு கொண்ட பெண்கள் ஓவென்று அழுதுகொண்டிருந்தார்கள். சிறுவனின் தாய் கதறியது உள்ளத்தை உலுக்குவதாக இருந்தது. நாச்சியாரம்மா சிலையானாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது. அவள் சுந்தரத்தேவனை ஏறிட்டுப் பார்த்தாள். பின்பு கட்டிலின்

சட்டத்தில் உட்கார்ந்தாள். தன் முந்தானையாள் கண்ணீரை ஒத்திக்கொண்டு

அச்சிறுவனின் இரத்தம் உறைந்த முகத்தைத் துடைத்தாள். சுந்தரத்தேவன் கட்டிலின்

பக்கத்தில் நெருங்கி அரிவாளைத் தரையில் ஊன்றி ஒற்றைக் கால் மண்டியிட்டு

உட்கார்ந்துகொண்டு இடது முழங்கையைக் கட்டிலின் சட்டத்தில் ஊன்றி முகத்தில்

ஐந்து விரல்களால் விரித்து மூடிக்கொண்டு ஒரு குழந்தைபோல் குமுறி அழுதான்.

நாச்சியாரம்மா சிறுவனை மூர்ச்சை தெளிவித்தாள். வீட்டிலிருந்த புளித்த மோரை

வருத்திச் சிறிது கொடுத்துத் தெம்பு உண்டாக்கினாள். மஞ்சணத்தி இலைகளைப்

பறித்துக்கொண்டு வரச் சொன்னாள். அதை வதக்கித் தன் கையாலேயே ஒத்தடம் கொடுத்தாள்.

சுவரொட்டி இலைகளை வாட்டிப் பக்குவப்படுத்திக் காயங்களைக் கட்டினாள். பின்பு

வீட்டுக்கு வந்து, பத்துப் பக்கா நெல் அரிசியும், இரண்டு கோழிகளையும்

கொடுத்தனுப்பினாள். நாங்கள் ஊமைகளைப்போல் ஒன்றுமே பேசாமல் அவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தோம்.

எங்கள் தகப்பனாரோ, இப்பொழுதுதான் ஒன்றுமே நடக்காதது போல் தலையில் கட்டிய லேஞ்சியோடு நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு சுவர்நிழலில் சூரித்தட்டை வீசிக்கொண்டிருந்தார். இடையிடையே வாயில் ஊறும் வெற்றிலை எச்சியை இரண்டு விரல்களை உதட்டில் அழுத்திப் பதித்துக்கொண்டு பீச்சித் துப்புவார். அது கம்மந்தட்டைகளையெல்லாம் தாண்டித் தூரப்போய் விழும்.

********

எல்லாப் பெண்களையும்போல் நாச்சியாரம்மாவுக்கும் ஒருநாள் கல்யாணம் நிச்சயமானது. அந்தக்காலத்துப் பெண்கள் தங்களுக்குக் கல்யாணம் நிச்சயமானவுடன் அழுவார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்று இன்றுவரைக்கும் நான் யாரிடமும் காரனம் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால், அதில் ஒரு 'தேவ ரகஸியம்' ஏதோ இருக்கிறது என்று மட்டும் நிச்சயம். நாச்சியாரம்மாவும் ஒரு மூணுநாள் உட்கார்ந்து கண்ணீர் வடித்து 'விசனம்' காத்தாள்.

வழக்கம்போல் மூன்றுநாள் கல்யாணம். அந்த மூன்று நாளும் அவள் 'பொண்ணுக்கு இருந்த' அழகைச் சொல்லிமுடியாது. கல்யாணம் முடிந்த நாலாம்நாள் அவள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து மறுவீடு போகிறாள். சுமங்கலிகள் அவளுக்கு ஆரத்தி எடுத்தார்கள். ஆரத்தி சுற்றிக்கொண்டே அவர்கள் பாடினார்கள். அந்தப் பாடலின்

ஒவ்வொரு கடேசி அடியும் கீழ்க்கண்டவாறு முடியும்-

*'மாயம்ம லக்ஷ்மியம்ம போயிராவே…'

(எங்கள் தாயே லக்ஷ்மி தேவியே போய் வருவாய்)*

அந்தக் காட்சி இன்னும் என் மனசில் பசுமையாக இருக்கிறது. அவளை நாங்கள் உள்ளூரில்தான் கட்டிக்கொடுத்திருக்கிறோம். ஐந்து வீடுகள் தள்ளித்தான் அவளுடைய புக்ககம். அவளுக்கு நாங்கள் விடை கொடுத்து அனுப்புவது என்பதில் அர்த்தமில்லைதான். ஆனால் ஏதோ ஒன்றுக்கு நிச்சயமாக விடை கொடுத்தனுப்பி இருக்கிறோம்.

அந்த ஒன்று இப்பொழுது எங்கள் நாச்சியாரம்மாவிடம் இல்லை. அது அவளிடமிருந்துபோயே போய்விட்டது.

---

2

ஆம் அது ரொம்ப உண்மை.

ராஜா அடிக்கடி சொல்லுவான். இப்பொழுதுதான் தெரிகிறது எனக்கு.

நான் நாச்சியாரம்மாவைக் கல்யாணம் செய்து அடைந்து கொண்டேன். ஆனால் அவளிடமிருந்து எதையோ பிரித்துவிட்டேன்.

அவள் இப்பொழுது ரெட்டிப்புக் கலகலப்பாக உண்மையாகவே இருக்கி�

��ாள். என்

குடும்பத்தைப் பிரகாசிக்கச் செய்கிறாள். எங்கள் கல்யாணத்துக்கு முன்பு எனக்கு இருந்த நாச்சியாரம்மாள்; இப்பொழுது இருக்கும் என் நாச்சியாரம்மாள்; நான் அந்த அவளைத்தான் மிகவும் நேசிக்கிறேன்.

இப்பொழுது மூணு குழந்தைகள் எங்களுக்கு, தொடர்ந்த பிரசவம். இது அவளைப் பாதித்திருப்பது உண்மைதான். குழந்தைகளையும், குடும்பத்தையுமே சதா கவனிக்கும் சுயநலமி ஆகிவிட்டாள்.

எங்கோ ஓர் இடத்தில் கோளாறாகிவிட்டது. சந்தேகமே இல்லை. ஓய்வு ஒழிச்சலில்லாமல் முன்னைவிடப் பலமடங்கு அவள் இப்பொழுது உடைக்கிறாள். உழைத்து ஓடாய்த் தேய்ந்து வருகிறாள் என்னவள். ஒருநாளில் அவள் தூங்குகிற நேரம் மிகவும் அற்பம். என்ன பொறுமை, என்ன பொறுமை!

குழந்தைக்கு முலையூட்டிவிட்டு விலகிய மாராப்பைக்கூடச் சரி செய்து கொள்ளாமல் தூளியில் இட்டு ஆட்டும் இந்த இவளா அவள்?

ஏகாலிக்கும், குடிமகளுக்கும் சோறுபோட எழுந்திருக்கும்போது முகம் சுளிக்கிறாள். குழந்தைக்குப் பாலூட்டும்போதோ, அல்லது தான் சாப்பிட உட்காரும்போதோ பார்த்துத்தான் அவர்கள் சோறு வாங்கிப் போக வருகிறார்கள் தினமும் என்று புகார் செய்கிறாள். பிச்சைக்காரர்களுக்கு 'வாய்தாப்' போடுகிறாள். வேலைக்காரகளின்மேல் எரிந்து விழுகிறாள். 'அப்பப்பா என்ன தீனி தின்கின்றான்கள் ஒவ்வொருத்தரும்' என்று வாய்விட்டே சொல்ல ஆரம்பித்துவிட்டாள்.

குடுகுடுப்பைக்காரன் இப்பொழுதெல்லாம் அட்டகாசமாக வந்து எங்கள் தலைவாசலில் வெகுநேரம் புகழ்வதில்லை. பெருமாள் மாட்டுக்காரன் தன் மாட்டுக்கு

கம்மஞ்சோற்றையும் பருத்திக்கொட்டையையும் தவிட்டையும் கலந்து வைக்கும் அந்த 'நாச்சியார்' எங்கே போனாள் என்று தேடிக்கொண்டிருக்கிறான்.

கல்யாணத்துக்கு முன் நாச்சியாரு, நின்ற கண்ணிப்பிள்ளை சேகரித்து மெத்தைகள், தலையணைகள் தைப்பாள். மெத்தை உறைகளிலும் தலையணை உறைகளிலும் பட்டு நூலால் வேலைப்பாடுகள் செய்வாள். அவள் தனியாக உட்கார்ந்துகொண்டு நிம்மதியாகவும் நிதானமாகவும் யோசித்து யோசித்துச் செய்யும் அந்தப் பின்னல் வேலைகளில், தன் கன்னிப் பருவத்தின் எண்ணங்களையும் கனவுகளையுமே அதில் பதித்துப் பின்னுவதுபோல் தோன்றும். இடையிடையே அவளுக்குள் அவளாகவே குறுநகை செய்து கொள்வாள். சில சமயம் வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டுப் பார்வை எந்தப் பொருள்பேரிலும் படியாமல் 'பார்த்து'க்கொண்டே இருப்பாள். அப்புறம் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மீண்டும் தையலில் மூழ்குவாள்.

ஒருநாள் நாச்சியாருவின் வீட்டுக்குப் போயிருந்தேன். எனக்கு ஒரு புதிய ஏர்வடம் தேவையாக இருந்தது. அவர்களுடைய வீட்டில் அப்பொழுது களத்து ஜோலியாக எல்லாரும் வெளியே போயிருந்தார்கள். அடுப்பங்கூடத்தை ஒட்டி ஒரு நீளமான ஓடு வேய்ந்த கட்டிடம். அதில் 'குறுக்க மறுக்க' நிறையக் குலுக்கைகள். குதிரைவாலி, நாத்துச்சோளம், வரகு, காடைக்கண்ணி முதலிய தானியங்கள் ரொம்பி இருக்கும். புதிய ஏர் வடங்கள் ஓட்டின் கைமரச் சட்டங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. தொங்கிய கயிறுகளுக்கு மத்தியில், மண் ஓட்டில் ஓட்டை போட்டுக் கோர்த்திருந்தார்கள். ஏர்வடத்தைக் கத்தரிக்கக் கயிறு வழியாக இறங்கி மண் ஓட்டுக்கு வந்ததும் எலிகள் கீழே விழுந்துவிடும். ஆள் புழக்கம் அங்கு அதிகமிராததால் தேள்கள் நிறைய இருக்கும். பதனமாகப் பார்த்துக் குலுக்கை மேல் ஏறி நின்றேன். மத்தியான வெயிலால் ஓட்டின் வெக்கை தாள முடியாததாக இருந்தது. தற்செயலாக மறுபக்கம் திரும்பிப் பார்த்தேன். அங்கே தரையில் நாச்சியாரு ஒரு தலைப்பலகையை வைத்துக்கொண்டு தூங்கி க்கொண்டிருந்தாள்! மார்பின்மீது விரித்துக் கவிழ்க்கப்பட்ட 'அல்லி அரசாணி மாலை'ப் புத்தகம். பக்கத்தில் வெங்கலப் பல்லாங்குழியின் மீது குவிக்கப்பட்ட சோழிகள். ஜன்னலில் ஒரு செம்பு, பக்கத்தில் ஒரு சினுக்குவலி, இரண்டு பக்கமும் பற்கள் உள்ள ஒரு மரச்சீப்பு, ஒரு ஈருவாங்கி, ஒரு உடைந்த முகம்பார்க்கும் கண்ணாடி முதலியன இருந்தன. அவள் அயர்ந்து

தூங்கிக்கொண்டிருந்தாள். பால் நிறைந்து கொண்டே வரும் பாத்திரத்தில் பால்நுரைமீது பால் பீச்சும்போது ஏற்படும் சப்தத்தைப்போல் மெல்லிய குறட்டை ஒலி.

அவள் தூங்கும் வைபவத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அடர்ந்த நீண்டு வளைந்த ரெப்பை ரோமங்களைக் கொண்ட மூடிய அவள் கண்கள் அவ்வளவு அழகாய் இருந்தது. மெதுவாக இறங்கிப் போய் அந்த மூடிய கண்களில் புருவத்துக்கும் ரெப்பை ரோமங்களுக்கும் மத்தியில் முத்தமிட வேண்டும்போல் இருந்தது.

சொல்லி வைத்ததுபோல் நாச்சியாரு கண்களைத் திறந்தாள். தூக்கத்தினால் சிவந்த விழிகள் இன்னும் பார்க்க நன்றாக இருந்தது. குலுக்கைமேல் இருந்த என்னை அதே கணம் பார்த்துவிட்டாள். 'இது என்ன வேடிக்கை?' என்பதுபோல் சிரித்துப் பார்த்தாள்.

அவள் எழுந்த வேகத்தில் புஸ்தகம் அவளுடைய காலடியில் விழுந்தது. விழுந்த புஸ்தகத்தைத் தொட்டு வேகமாக இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு அதை எடுத்து ஜன்னலில் வைத்தாள். பின்பு லஜ்ஜையோடு சிரித்துத் தலைகவிந்துகொண்டே, நழுவும் மார்பு சேலையை வலதுகையினால் மார்போடு ஒட்ட வைத்துக்கொண்டு மெதுவாக அந்த இடத்தை விட்டு நழுவினாள்.

கல்யாணத்துக்கு முன்பிருந்தே நாங்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்துகொண்டோம். யாரும் அறியாமல் தொலைவில் இருந்துகொண்டே ரகசியமாக ஒட்டிப் பழகினோம். இதயங்கள் அப்படி ஒன்றி ஊசலாடின. பேசாத ரகசியங்கள்தான் எங்களுக்குள் எத்தனை!

எனக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமென்று நான் உணர்த்தாமலே அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆச்சரியப்படும்படி அவைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கும் அப்போது.

********

ஒரு நாள் கோவில்பட்டியிலிருந்து ராத்திரி வந்தேன். அன்று வீட்டிற்கு நிறையச் சாமான்கள் வாங்க வேண்டியிருந்தது. காலம் முன்னைமாதிரி இல்லை. ஒரும்பாகிவிட்டது.

முன்னெல்லாம் கொஞ்ச ரூபாயில் நிறையச் சாமான்கள் வாங்கிக்கொண்டு வரலாம். இப்போதோ நிறைய ரூபாய்கள் கொண்டுபோய் கொஞ்ச சாமான்களையே வாங்கமுடிகிறது.

வந்ததும் வராததுமாய்ச் சாமான்களையெல்லாம் வண்டியிலிருந்து இறக்கி வைத்துவிட்டுப் பணப்பையையும் கச்சாத்துகளையும் நாச்சியாருவிடம் கொடுத்துவிட்டு அப்படியே வந்து கட்டிலில் வீழ்ந்தேன். உடம்பெல்லாம் அடித்துப்போட்டதுமாதிரி வலி.

கண்கள் ஜிவ்வென்று உஷ்ணத்தைக் கக்கிக்கொண்டிருந்தது. மண்டைப் பொருத்தோடுகளில் ஆக்ரா இறக்கியது போல் தெறி. கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டேன். குழந்தைகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தன. அரிக்கன் லாம்பை சரியாகத் துடைத்துத் திரியைக் கத்தரித்து விடாததாலோ என்னவோ சுடர் பிறைவடிவில் எரிந்துகொண்டிருந்தது. சிம்னியில் புகைபிடிக்க ஆரம்பித்திருந்தது.

அந்த வெளிச்சத்தில் அவள் கச்சாத்துக்களிலிருந்த தொகைகளைக் கூட்டிக்கொண்டும்,

மீதிப்பணத்தை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டுமிருந்தாள்.

கணக்கில் ஒரு ஐந்து ரூபாய் சொச்சம் உதைத்தது. அந்த ரூபாய்க்கான கணக்கு என்ன என்று என்னிடம் கேட்டாள்.

’எல்லாத்தையும் எடுத்துவை

கணக்கு எங்கெயும் போய்விடாது;

காலையில் பாத்துக்கலாம், எல்லாம்.’

அவள் பிடிவாதமாகக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எனக்கு கண்களைத் திறக்க முடியவில்லை. மூடிக்கொண்டே இருக்கவேண்டும்போல் இருந்தது. என்னுடைய நெற்றி ஒரு இதமான விரல்களின் ஒத்தடத்துக்கு ஏங்கியது. மூக்கு மயிர் கருகும்படியான உஷ்ணக்காற்றை நான் வெளிவிட்டுக் கொண்டிருந்தேன். நல்ல உயர்ந்த காய்ச்சல்.

சூழ்நிலையின் பிரக்ஞை வட்டம் சுருங்கிக்கொண்டே வந்தது. சின்ன, மெல்லிய

சப்தங்கள்கூடக் கோரமாகக் கேட்டன. கண்களைத் திறந்து நாச்சியாரு என்ன செய்கிறாள் என்று திரும்பிப் பார்த்தேன். அவள் ரூபாய் அணா பைசாவில் மூழ்கியிருந்தாள்.

குளிர்ந்த காற்றுப்பட்டதால் கண்கள் நீரை நிறைத்தன, துடைத்துக்கொள்ளக் கையை எடுக்க இஷ்டமில்லை. அதை இமைகளாலேயே மூடி வெளியேற்றினேன். மீண்டும் நாச்சியாருவையே பார்த்தேன். அவளுடைய ரவிக்கையின் அவிழ்க்கப்பட்ட முடிச்சு முடியப்படாமலே தொங்கின. கூந்தல் வாரிச் சேர்க்கப்படாததால் கற்றைகள் முன்முகத்தில் வந்து விழுந்து கிடந்தன.

என்ன ஆனந்தமான ‘சொகம்’ இந்தக் கண்களை மூடிக்கொண்டே இருப்பதினால்!
கானல்

அலைகளைப்போல் என் உடம்பிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் உஷ்ண அலைகள் கண்ணால் பார்க்கமுடியாமலிர்ந்தாலும் தெரிந்தது. நான் எரிந்துக்கொண்டிருக்கும் ஒரு சிதைக்குள் படுத்திருப்பதுபோல் குளிருக்கு அடக்கமாக இருந்தது. உயர்ந்த காய்ச்சலின் போதை இடைவிடாது மீட்டப்படும் சுருதிபோல் லயிப்பு மயமாக இருந்தது. இந்த ஆனந்தத்தில் பங்குகொள்ள எனக்கு ஒரு துணைவேண்டும்போல் இருந்தது. அவள் எங்கே? அவள்தான்; என் அருமை நாச்சியாரு.

‘நாச்சியாரு, என் பிரியே! நீ எங்கிருக்கிறாய்?’

சொன்னால் நம்பமுடியாதுதான்! நாச்சியாரம்மாவும் இப்படி மாறுவாள் என்றுநினைக்கவேயில்லை.அவள் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரி. நாங்கள் எட்டுப்பேர் அண்ணன் தம்பிகள்.‘பெண்ணடி’யில்லை என்று என் தாய் அவளைத் தத்து எடுத்துத் தன் மகளாக்கிக்கொண்டாள்.அம்மாவைவிட எங்களுக்குத்தான் சந்தோஷம் ரொம்ப. இப்படி ஒரு அருமைச் சகோதரி யாருக்குக் கிடைப்பாள்? அழகிலும் சரி, புத்திசாலித்தனத்திலும் சரி அவளுக்குநிகர் அவளேதான்.அவள் ‘மனுஷி’யாகி எங்கள் வீட்டில் கன்னிகாத்த அந்த நாட்கள் எங்கள்குடும்பத்துக்கே பொன் நாட்கள்.வேலைக்காரர்களுக்குக்கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால்தான் திருப்தி.நிறைய்ய மோர்விட்டுக் கம்மஞ்சோற்றைப் பிசைந்து கரைத்து மோர் மிளகு வத்தலைப் பக்குவமாக எண்ணெயில் வறுத்துக் கொண்டுவந்து விடுவாள். சருவச் சட்டியிலிருந்து வெங்கலச் செம்பில் கடகடவென்று ஊற்ற, அந்த மிளகு வத்தலை எடுத்து வாயில் போட்டு நொறு நொறுவென்று மென்றுகொண்டே, அண்ணாந்து கஞ்சியை விட்டுக்கொண்டு அவர்கள் ஆனந்தமாய்க் குடிக்கும்போது பார்த்தால், ‘நாமும் அப்படிக் குடித்தால் நன்றாக இருக்கும்போலிருக்கிறதே!’ என்று தோன்றும்.ஒரு நாளைக்கு உருத்த பச்சை வெங்காயம் கொண்டுவந்து ‘கடித்துக்’ கொள்ளகொடுப்பாள்.

ஒரு நாளைக்குப் பச்சை மிளகாயும், உப்பும். பச்சை மிளகாயின்காம்பைப் பறித்துவிட்டு அந்த இடத்தில் சிறிது கம்மங்கஞ்சியைத் தொட்டு அதைஉப்பில் தோய்ப்பார்கள். உப்பு அதில் தாராளமாய் ஒட்டிக்கொள்ளும். அப்படியேவாயில் போட்டுக்கொண்டு கசமுச என்று மெல்லுவார்கள். அது, கஞ்சியைக் ‘கொண்டாகொண்டா’ என்று சொல்லுமாம்! இரவில் அவர்களுக்கு வெதுவெதுப்பாகக் குதிரைவாலிச் சோறுபோட்டு தாராளமாஅ பருப்புக்கறி விட்டு நல்லெண்ணெயும் ஊற்றுவாள். இதுக்குப் புளி ஊற்றி அவித்த சீனியவரைக்காய் வெஞ்சனமாகக் கொண்டுவந்து வைப்பாள். இரண்டாந்தரம் சோற்றுக்குக் கும்பா நிறைய ரஸம். ரஸத்தில் ஊறிய உருண்டை உருண்டையான குதிரைவாலிப் பருக்கைகளை அவர்கள் கை நிறைய எடுத்துப் பிழிந்து உண்பார்கள்.வேலைக்காரர்களுக்கு மட்டுமில்லை, பிச்சைக்காரர்களுக்குக்கூட நாச்சியாரம்மாஎன்றால் ‘குலதெய்வம்’தான். அவளுக்கு

என்னவோ அப்படி அடுத்தவர்களுக்குப்படைத்துப் படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்தி.அவள் வாழ்க்கைப்பட்டு, புருஷன் வீட்டுக்குப் போனபிறகு எங்கள் நாக்குகள் எல்லாம்இப்போது சப்பிட்டுப் போய்விட்டது. உயர்ந்த ஜாதி நெத்திலியைத் தலைகளைக் கிள்ளிநீக்கிவிட்டுக் காரம் இட்டு வறுத்துக் கொடுப்பாள். இப்போது யாருமில்லை எங்களுக்கு. அந்தப் பொன்முறுவல் பக்குவம் யாருக்கும் கைவராது.

பருப்புச்சோற்றுக்கு உப்புக்கண்டம் வறுத்துக் கொடுப்பாள். ரஸ சாதத்துக்கு முட்டை அவித்துக் காரமிட்டுக் கொடுப்பாள். திரண்ட கட்டி வெண்ணெயை எடுத்துத் தின்னக் கொடுப்பாள், அம்மாவுக்குத் தெரியாமல்.அவள் அப்பொழுது எங்கள் வீட்டிலிருந்தது வீடு நிறைந்திருந்தது. தீபம்போல் வீடுநிறைஒளி விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தாள்.மார்கழி மாசம் பிறந்துவிட்டால் வீட்டினுள்ளும் தெருவாசல் முற்றத்திலும் தினமும்வகை வகையான கோலங்கள் போட்டு அழகுபடுத்துவாள். அதிகாலையில் எழுந்து நீராடி திவ்யப்பிரபந்தம் பாடுவாள். இப்பொழுதும் பல திருப்பாவைப் பாடல்களை என்னால் பாராமல் ஒப்புவிக்கமுடியும். சிறுவயசில் அவளால் பிரபந்தப் பாடல்களைப் பாடக் கேட்டுக்கேட்டு எங்கள் எல்லோர்க்கும் அது மனப்பாடம் ஆகிவிட்டது.அப்பொழுது எங்கள் வீட்டில் மரத் திருவிளக்கு என்று ஒன்று இருந்தது. அதுஅவ்வளவும் மரத்தினாலேயே ஆனது. தச்சன் அதில் பல இடங்களில் ஊசிகளைப் பதித்து நேர்கோடுகளால் ஆன கோலங்களைப் போட்டிருந்தான். மொங்காங்கட்டையின் வடிவத்தில் நிற்கும் பெரிதான பற்கள் இருக்கும். அதில் உயரத்துக்குத் தகுந்தபடி ஏற்றவும் இறக்கவும் வசதியாக இருக்கும்படியாக 'ட' வடிவத்தில் ஒரு துளையிட்ட சக்கையில் 'சல்ல முத்த' என்று சொல்லப்படும் மாட்டுச்சாண உருண்டையின் மீது மண் அகல்விளக்கு வைக்கப்பட்டு எரியும். சாணி உருண்டை தினமும் விளக்கு இடும் போதெல்லாம் மாற்றிவிட்டுப் புதிதாக வைக்கப்படும். அப்புறம் x மாதிரி ஒரு போர்வைப் பலகை கொண்டு இரவு வெகு நேரம் வரைக்கும் பெண்கள் புடைசூழ இவள் உரக்க ராகமிட்டு வாசிப்பாள்.

வாசித்துக்கொண்டே வரும்போது இவளும் மற்றப் பெண்களும் கண்ணீர் விடுவார்கள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டே தொண்டை கம்மத் திரும்பவும் ராகமிட்டு வசனத்தைப் பாடுவாள். அவர்கள் கண்ணீர் விடுவதையும் மூக்கைச் சிந்துவதையும் நான் படுக்கையில் படுத்துக்கொண்டு பேசாமல் இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருப்பேன்.அவள் வாசிப்பதை என் காதுகள் வாங்கிக்கொள்ளாது. என் கண்களே பார்க்கவும்செய்யும்; 'கேட்க'வும் செய்யும்.விளக்கின் ஒளியில்தான் அவள் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கிறாள். அழகுக்கும்விளக்கின் ஒளிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. கறிக்கு உப்பைப்போல் அழகுக்கும்அதி ருசி கூட்டுகிறதுபோலும் விளக்கு.தானாகக் கண்கள் சோர்ந்து மூடிக்கொண்டுவிடும்.அதிகாலையில் ரங்கையா வந்து என்னை எழுப்பினான். ராமர்,

லக்ஷ்மணர், சீதை மூவரும் எங்கள் தெருவின் முடிவிலுள்ள கிழக்காகப் பார்த்த ஒரு வீட்டிலிருந்து இறங்கிக் காட்டுக்குப் போகிறார்கள். பார்வதி அம்மன் கோயிலைத் தாண்டி, பள்ளிக்கூடத்தையும் கடந்து, கம்மாய்க்கரை வழியாக அந்த மூவரும் போகிறாள். எனக்குத் தொண்டையில் வலிக்கிறாற்போல் இருக்கிறது. முகத்தைச் சுளிக்க முடியவில்லை. ரங்கையா தோள்களைப் பிடித்துப் பலமாக உலுக்கியதால் விழித்துவிட்டேன். சே! நன்றாக விடிந்துவிட்டிருக்கிறது. ரங்கையா சிரித்துக்கொண்டு நின்றிருந்தான், கிளம்பு கிளம்பு என்று ஜரூர்ப்படுத்தினான்.நாச்சியாரம்மா செம்பு நிறையத் தயிர் கொண்டுவந்து வைத்தாள், இருவரும்வயிறுமுட்டக் குடித்துவிட்டுக் கிளம்பினோம்.ரங்கையா எங்கள் மச்சினன்; ‘வீட்டுக்கு மேல்’ வரப்போகும் மாப்பிள்ளை.

நாச்சியாரம்மாவை இவனுக்குத்தான் கொடுக்க இருக்கிறோம். இவனும்நாச்சியாரம்மாபேரில் உயிரையே வைத்திருக்கிறான்; அவளும் அப்படித்தான்.‘புல்லை’யையும் ’மயிலை’ யையும் பிடித்து ரங்கையா வண்டி போட்டான். அவை இரண்டும் எங்கள் தொழுவில் பிறந்தவை. ஒன்று இரண்டு; இன்னொன்று நாலு பல். பாய்ச்சலில் புறப்பட்டது வண்டி. ஊணுக் கம்பைப் பிடித்துத்தொத்தி, அவற்றில் இரண்டைக் கைக்கு ஒன்றாகப் பிடித்துக்கொண்டு குனிந்து நின்றுகொண்டேன். சட்டத்தில் இரும்பு வளையங்கள் அதிர்ந்து குலுங்கிச் சத்தம் எழுப்பியது. வண்டியின் வேகத்தினால் ஏற்பட்ட குலுக்கலில் உடம்பு அதிர்ந்தது. கல்லாஞ்சிரட்டைத் தாண்டி வண்டியின் அறைத் தடத்துக்குள் காளைகள் நிதானங்கொண்டு நடை போட்டன.நடுவோடைப் பாதையிலுள்ள வன்னிமரத்தருகில் வண்டியை அவிழ்த்து, காளைகளைமேய்ச்சலுக்காக ஓடைக்குக் கொண்டு போனோம்.காட்டில் பருத்தி எடுக்கும் பெண்கள் காட்டுப் பாடல்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடையே நாச்சியாரம்மாவும் நிரை போட்டுப் பருத்திஎடுத்துக் கொண்டிருந்தாள். பருத்தி ‘���ாடாய்’ வெடித்துக் கிடந்தது; பச்சைவானத்தில் நட்சத்திரங்களைப்போலே. ரங்கையா தன் மடியிலிருந்த கம்பரக் கத்தியால்கருவைக் குச்சியைச் சீவி, பல் தேய்க்கத் தனக்கு ஒன்று வைத்துக்கொண்டு எனக்குஒன்று கொடுத்தான். போக இன்னொன்று தயார் செய்து வைத்துக்கொண்டான்!நேரம், கிடை எழுப்புகிற நேரத்துக்கும் அதிகமாகிவிட்டது. காளைகள் வயிறு முட்டப்புல்மேய்ந்து விட்டு வன்னிமர நிழலில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன.நாச்சியாரம்மா, பருத்தியைக் கருவமரத்து நிழலில் கூறுவைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

மடிப் பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடு பருத்தி என்றுபகிர்ந்து போட, பள்ளுப் பெண்கள் சந்தோஷமாக நாச்சியாரம்மாவை வாழ்த்திக்கொண்டே வாங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் வேறு யார் வந்து கூறுவைத்துக் கொடுத்தாலும் ஒப்பமாட்டார்கள். நாச்சியாரம்மாதான் வேணும் அவர்களுக்கு.கிஸ்தான் தாட்டுக்களில் பகிர்ந்த பருத்தி அம்பாரத்தைப் பொதியாக்கட்டி வண்டியில்பாரம் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டோம். பள்ளுப்பெண்கள் முன்கூட்டிப்புறப்பட்டுப்

போய் விட்டார்கள் – நாச்சியாரம்மாவும் நானும் வண்டியில்ஏறிக்கொண்டு பருத்திப் பொட்டணங்களின்மேல் உட்கார்ந்துகொண்டு ஊணுக்கம்புகளைப் பிடித்துக்கொண்டோம். ரங்கையா வண்டியை விரட்டினான்.வருகிற பாதையில் மடியில் பகிர்ந்த பருத்தியோடு நடந்து வருகிற பெண்டுகளின்கூட்டத்தைக் கடந்துகொண்டே வந்தது வண்டி. அவர்கள் வேண்டுமென்றுகுடிகாரர்களைப்போல் தள்ளாடி நடந்துகொண்டே வேடிக்கைப் பாடல்களைப் பாடிக்கொண்டும் ஒருவருக்கொருவர் கேலிசெய்து தள்ளிக்கொண்டும் வந்தார்கள். தொட்டெரம்மா கோயில் பக்கத்தில் வந்ததும் ரங்கையா கயிறுகளை முழங்கைகளில் சுற்றி இழுத்து வண்டியை நிறுத்தினான். தொட்டெரம்மா கோயிலின் இலந்தைமுள் கோட்டையின்மேல் நாச்சியாரம்மா ஒரு கூறு பருத்தியை எடுத்து இரு கைகளிலும் ஏந்திப் பயபக்தியோடு அந்த முள்கோட்டையின் மீது போட்டாள். பின்னால் வந்துக்கொண்டிருந்த பள்ளுப்பெண்கள் குலவையிட்டார்கள். ரங்கையா கயிற்றை நெகிழ்ந்து விட்டதும் புல்லையும் மயிலையும் வால்களை விடைத்துக்கொண்டு பாய்ந்து புறப்பட்டது.

ஊரெல்லாம் ஒரே சலசலப்பு. என்ன ஆகுமோ என்ற பயம். தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான் ரங்கையா. ‘என்ன ஆச்சி?’ என்று அவனைக் கேட்பதுபோல் பார்த்தோம் யாவரும். அவன் என்னை மட்டிலும் ‘ராஜா, இங்கே வா’ என்று தனியாகக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னான்.எங்கள் ஊரில், சுந்தரத்தேவன் என்று ஒரு பெரிய போக்கிரி இருந்தான். ஏழுதடவைஜெயிலுக்குப் போனவன். மூன்று கொலைகள் செய்தவன். அதில் ஒன்று இரட்டைக் கொலை. அவனுடைய மகனை, எங்கள் தகப்பனார் எங்கள் புஞ்சையில் ‘வாங்கித்திங்க’பருத்திச்சுளை எடுத்தான் என்றதுக்கு ஊணுக்கம்பால் அடி நொறுக்கி எடுத்துவிட்டார். பையனைக் கட்டிலில் வைத்து எடுத்துக்கொண்டு வந்து அவனுடைய வீட்டில் கிடத்தியிருக்கிறார்கள். சுந்தரத்தேவன் வெட்டரிவாளை எடுத்துக்கொண்டு வந்து எங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறான். விஷயம் இதுதான். ரங்கையா போய் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை அவன்.நாச்சியாரம்மா சுந்தரத்தேவன் வீட்டை நோக்கிப் போனாள். அவள் அங்கு போயிருப்பாள் என்று நாங்கள் முதலில் நினைக்கவில்லை; பிறகுதான் தெரியவந்தது.அங்கு அவள் போனபோது ஒரே கூட்டம். அழுகைச் சத்தம். நாச்சியாரம்மா நுழைந்ததும் பரபரப்பு உண்டானது. பெண்கள் பணிவாக வழிவிட்டு விலகி நின்றனர். அடிப்பட்ட சிற���வனை அந்தக் கட்டிலிலேயே கிடந்த்தியிருந்தது. இரத்த உறவு கொண்ட பெண்கள் ஓவென்று அழுதுகொண்டிருந்தார்கள்.

சிறுவனின் தாய் கதறியது உள்ளத்தை உலுக்குவதாக இருந்தது. நாச்சியாரம்மா சிலையானாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது. அவள் சுந்தரத்தேவனை ஏறிட்டுப் பார்த்தாள். பின்பு கட்டிலின்சட்டத்தில் உட்கார்ந்தாள். தன் முந்தானையாள் கண்ணீரை ஒத்திக்கொண்டுஅச்சிறுவனின் இரத்தம் உறைந்த

முகத்தைத் துடைத்தாள். சுந்தரத்தேவன் கட்டிலின்பக்கத்தில் நெருங்கி அரிவாளைத் தரையில் ஊன்றி ஒற்றைக் கால் மண்டியிட்டுஉட்கார்ந்துகொண்டு இடது முழங்கையைக் கட்டிலின் சட்டத்தில் ஊன்றி முகத்தில்ஐந்து விரல்களால் விரித்து மூடிக்கொண்டு ஒரு குழந்தைபோல் குமுறி அழுதான்.நாச்சியாரம்மா சிறுவனை மூர்ச்சை தெளிவித்தாள். வீட்டிலிருந்த புளித்த மோரைவருத்திச் சிறிது கொடுத்துத் தெம்பு உண்டாக்கினாள். மஞ்சணத்தி இலைகளைப்பறித்துக்கொண்டு வரச் சொன்னாள். அதை வதக்கித் தன் கையாலேயே ஒத்தடம் கொடுத்தாள்.சுவரொட்டி இலைகளை வாட்டிப் பக்குவப்படுத்திக் காயங்களைக் கட்டினாள். பின்புவீட்டுக்கு வந்து, பத்துப் பக்கா நெல் அரிசியும், இரண்டு கோழிகளையும்கொடுத்தனுப்பினாள். நாங்கள் ஊமைகளைப்போல் ஒன்றுமே பேசாமல் அவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தோம்.எங்கள் தகப்பனாரோ, இப்பொழுதுதான் ஒன்றுமே நடக்காதது போல் தலையில் கட்டியலேஞ்சியோடு நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு சுவர்நிழலில் சூரித்தட்டைவீசிக்கொண்டிருந்தார். இடையிடையே வாயில் ஊறும் வெற்றிலை எச்சியை இரண்டுவிரல்களை உதட்டில் அழுத்திப் பதித்துக்கொண்டு பீச்சித் துப்புவார். அதுகம்மந்தட்டைகளையெல்லாம் தாண்டித் தூரப்போய் விழும்.

எல்லாப் பெண்களையும்போல் நாச்சியாரம்மாவுக்கும் ஒருநாள் கல்யாணம் நிச்சயமானது. அந்தக்காலத்துப் பெண்கள் தங்களுக்குக் கல்யாணம் நிச்சயமானவுடன் அழுவார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்று இன்றுவரைக்கும் நான் யாரிடமும் காரனம் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால், அதில் ஒரு ‘தேவ ரகஸியம்’ ஏதோ இருக்கிறது என்று மட்டும் நிச்சயம். நாச்சியாரம்மாவும் ஒரு மூணுநாள் உட்கார்ந்து கண்ணீர் வடித்து ‘விசனம்’ காத்தாள்.வழக்கம்போல் மூன்றுநாள் கல்யாணம். அந்த மூன்று நாளும் அவள் ‘பொண்ணுக்கு இருந்த’ அழகைச் சொல்லிமுடியாது. கல்யாணம் முடிந்த நாலாம்நாள் அவள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து மறுவீடு போகிறாள். சுமங்கலிகள் அவளுக்கு ஆரத்தி எடுத்தார்கள். ஆரத்தி சுற்றிக்கொண்டே அவர்கள் பாடினார்கள். அந்தப் பாடலின்ஒவ்வொரு கடேசி அடியும் கீழ்க்கண்டவாறு முடியும்-*‘மாயம்ம லக்ஷ்மியம்ம போயிராவே…’(எங்கள் தாயே லக்ஷ்மி தேவியே போய் வருவாய்)*அந்தக் காட்சி இன்னும் என் மனசில் பசுமையாக இருக்கிறது. அவளை நாங்கள்உள்ளூரில்தான் கட்டிக்கொடுத்திருக்கிறோம். ஐந்து வீடுகள் தள்ளித்தான் அவளுடையபுக்ககம். அவளுக்கு நாங்கள் விடை கொடுத்து அனுப்புவது என்பதில்அர்த்தமில்லைதான். ஆனால் ஏதோ ஒன்றுக்கு நிச்சயமாக விடை கொடுத்தனுப்பிஇருக்கிறோம்.அந்த ஒன்று இப்பொழுது எங்கள் நாச்சியாரம்மாவிடம் இல்லை. அது அவளிடமிருந்துபோயே போய்விட்டது.

ஆம் அது ரொம்ப உண்மை.ராஜா அடிக்கடி சொல்லுவான். இப்பொழுதுதான் தெரிகிறது எனக்கு.நான் நாச்சியாரம்மாவைக் கல்யாணம் செய்து அடைந்து

கொண்டேன். ஆனால் அவளிடமிருந்து எதையோ பிரித்துவிட்டேன்.அவள் இப்பொழுது ரெட்டிப்புக் கலகலப்பாக உண்மையாகவே இருக்கி���ாள். என்குடும்பத்தைப் பிரகாசிக்கச் செய்கிறாள். எங்கள் கல்யாணத்துக்கு முன்பு எனக்குஇருந்த நாச்சியாரம்மாள்; இப்பொழுது இருக்கும் என் நாச்சியாரம்மாள்; நான் அந்தஅவளைத்தான் மிகவும் நேசிக்கிறேன்.இப்பொழுது மூணு குழந்தைகள் எங்களுக்கு, தொடர்ந்த பிரசவம். இது அவளைப்பாதித்திருப்பது உண்மைதான். குழந்தைகளையும், குடும்பத்தையுமே சதா கவனிக்கும்சுயநலமி ஆகிவிட்டாள்.எங்கோ ஓர் இடத்தில் கோளாறாகிவிட்டது. சந்தேகமே இல்லை. ஓய்வு ஒழிச்சலில்லாமல் முன்னைவிடப் பலமடங்கு அவள் இப்பொழுது உடைக்கிறாள். உழைத்து ஓடாய்த் தேய்ந்து வருகிறாள் என்னவள். ஒருநாளில் அவள் தூங்குகிற நேரம் மிகவும் அற்பம். என்ன பொறுமை, என்ன பொறுமை!குழந்தைக்கு முலையூட்டிவிட்டு விலகிய மாராப்பைக்கூடச் சரி செய்து கொள்ளாமல்தூளியில் இட்டு ஆட்டும் இந்த இவளா அவள்?ஏகாலிக்கும், குடிமகளுக்கும் சோறுபோட எழுந்திருக்கும்போது முகம் சுளிக்கிறாள்.குழந்தைக்குப் பாலூட்டும்போதோ, அல்லது தான் சாப்பிட உட்காரும்போதோபார்த்துத்தான் அவர்கள் சோறு வாங்கிப் போக வருகிறார்கள் தினமும் என்று புகார்செய்கிறாள்.

பிச்சைக்காரர்களுக்கு ‘வாய்தாப்’ போடுகிராள். வேலைக்காரகளின்மேல்எரிந்து விழுகிராள். ‘அப்பப்பா என்ன தீனி தின்கின்றான்கள் ஒவ்வொருத்தரும்’என்று வாய்விட்டே சொல்ல ஆரம்பித்துவிட்டாள்.குடுகுடுப்பைக்காரன் இப்பொழுதெல்லாம் அட்டகாசமாக வந்து எங்கள் தலைவாசலில்வெகுநேரம் புகழ்வதில்லை. பெருமாள் மாட்டுக்காரன் தன் மாட்டுக்குகம்மஞ்சோற்றையும் பருத்திக்கொட்டையையும் தவிட்டையும் கலந்து வைக்கும் அந்த ‘நாச்சியார்’ எங்கே போனாள் என்று தேடிக்கொண்டிருக்கிறான்.கல்யாணத்துக்கு முன் நாச்சியாரு, நின்ற கண்ணிப்பிள்ளை சேகரித்து மெத்தைகள்,தலையணைகள் தைப்பாள். மெத்தை உறைகளிலும் தலையணை உறைகளிலும் பட்டு நூலால்வேலைப்பாடுகள் செய்வாள். அவள் தனியாக உட்கார்ந்துகொண்டு நிம்மதியாகவும்நிதானமாகவும் யோசித்து யோசித்துச் செய்யும் அந்தப் பின்னல் வேலைகளில், தன்கன்னிப் பருவத்தின் எண்ணங்களையும் கனவுகளையுமே அதில் பதித்துப் பின்னுவதுபோல் தோன்றும். இடையிடையே அவளுக்குள் அவளாகவே குறுநகை செய்து கொள்வாள். சில சமயம் வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டுப் பார்வை எந்தப் பொருள்பேரிலும் படியாமல் ‘பார்த்து’க்கொண்டே இருப்பாள். அப்புறம் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மீண்டும் தையலில் மூழ்குவாள்.ஒருநாள் நாச்சியாருவின் வீட்டுக்குப் போயிருந்தேன். எனக்கு ஒரு புதிய ஏர்வடம்தேவையாக இருந்தது. அவர்களுடைய வீட்டில் அப்பொழுது களத்து ஜோலியாக எல்லாரும் வெளியே போயிருந்தார்கள். அடுப்பங்கூடத்தை ஒட்டி ஒரு நீளமான ஓடு வேய்ந்த கட்டிடம். அதில் ‘குறுக்க மறுக்க’ நிறையக் குலுக்கைகள்.

குதிரைவாலி,நாத்துச்சோளம், வரகு, காடைக்கண்ணி முதலிய தானியங்கள் ரொம்பி இருக்கும். புதியஏர் வடங்கள் ஓட்டின் கைமரச் சட்டங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது.தொங்கிய கயிறுகளுக்கு மத்தியில், மண் ஓட்டில் ஓட்டை போட்டுக்கோர்த்திருந்தார்கள். ஏர்வடத்தைக் கத்தரிக்கக் கயிறு வழியாக இறங்கி மண்ஓட்டுக்கு வந்ததும் எலிகள் கீழே விழுந்துவிடும். ஆள் புழக்கம் அங்குஅதிகமிராததால் தேள்கள் நிறைய இருக்கும். பதனமாகப் பார்த்துக் குலுக்கை மேல் ஏறி நின்றேன். மத்தியான வெயிலால் ஓட்டின் வெக்கை தாள முடியாததாக இருந்தது.தற்செயலாக மறுபக்கம் திரும்பிப் பார்த்தேன். அங்கே தரையில் நாச்சியாரு ஒருதலைப்பலகையை வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தாள்! மார்பின்மீது விரித்துக்கவிழ்க்கப்பட்ட 'அல்லி அரசாணி மாலைப் புத்தகம். பக்கத்தில் வெங்கலப்பல்லாங்குழியின் மீது குவிக்கப்பட்ட சோழிகள். ஜன்னலில் ஒரு செம்பு, பக்கத்தில்ஒரு சினுக்குவலி, இரண்டு பக்கமும் பற்கள் உள்ள ஒரு மரச்சீப்பு, ஒரு ஈருவாங்கி,ஒரு உடைந்த முகம்பார்க்கும் கண்ணாடி முதலியன இருந்தன. அவள் அயர்ந்துதூங்கிக்கொண்டிருந்தாள். பால் நிறைந்து கொண்டே வரும் பாத்திரத்தில்பால்நுரைமீது பால் பீச்சும்போது ஏற்படும் சப்தத்தைப்போல் மெல்லிய குறட்டை ஒலி.அவள் தூங்கும் வைபவத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அடர்ந்த நீண்டு வளைந்த ரெப்பை ரோமங்களைக் கொண்ட மூடிய அவள் கண்கள் அவ்வளவு அழகாய் இருந்தது. மெதுவாக இறங்கிப் போய் அந்த மூடிய கண்களில் புருவத்துக்கும் ரெப்பை ரோமங்களுக்கும் மத்தியில் முத்தமிட வேண்டும்போல் இருந்தது.சொல்லி வைத்ததுபோல் நாச்சியாரு கண்களைத் திறந்தாள். தூக்கத்தினால் சிவந்தவிழிகள் இன்னும் பார்க்க நன்றாக இருந்தது. குலுக்கைமேல் இருந்த என்னை அதே கணம் பார்த்துவிட்டாள்.

இது என்ன வேடிக்கை?' என்பதுபோல் சிரித்துப் பார்த்தாள்.அவள் எழுந்த வேகத்தில் புஸ்தகம் அவளுடைய காலடியில் விழுந்தது. விழுந்தபுஸ்தகத்தைத் தொட்டு வேகமாக இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு அதை எடுத்து ஜன்னலில் வைத்தாள். பின்பு லஜ்ஜையோடு சிரித்துத் தலைகவிந்துகொண்டே, நழுவும் மார்பு சேலையை வலதுகையினால் மார்போடு ஒட்ட வைத்துக்கொண்டு மெதுவாக அந்த இடத்தை விட்டு நழுவினாள்.கல்யாணத்துக்கு முன்பிருந்தே நாங்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்துகொண்டோம். யாரும் அறியாமல் தொலைவில் இருந்துகொண்டே ரகசியமாக ஒட்டிப் பழகினோம். இதயங்கள் அப்படி ஒன்றி ஊசலாடின. பேசாத ரகசியங்கள்தான் எங்களுக்குள் எத்தனை!எனக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமென்று நான் உணர்த்தாமலே அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆச்சரியப்படும்படி அவைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கும் அப்போது.*******ஒரு நாள் கோவில்பட்டியிலிருந்து ராத்திரி வந்தேன். அன்று வீட்டிற்கு நிறையச்சாமான்கள் வாங்க வேண்டியிருந்தது. காலம் முன்னைமாதிரி இல்லை.

ஒரும்பாகிவிட்டது.முன்னெல்லாம் கொஞ்ச ரூபாயில் நிறையச் சாமான்கள் வாங்கிக்கொண்டு வரலாம். இப்போதோ நிறைய ரூபாய்கள் கொண்டுபோய் கொஞ்ச சாமான்களையே வாங்கமுடிகிறது.வந்ததும் வராததுமாய்ச் சாமான்களையெல்லாம் வண்டியிலிருந்து இறக்கிவைத்துவிட்டுப் பணப்பையையும் கச்சாத்துகளையும் நாச்சியாருவிடம் கொடுத்துவிட்டு அப்படியே வந்து கட்டிலில் வீழ்ந்தேன்.

உடம்பெல்லாம் அடித்துப்போட்டதுமாதிரி வலி. கண்கள் ஜிவ்வென்று உஷ்ணத்தைக் கக்கிக்கொண்டிருந்தது. மண்டைப் பொருத்தோடுகளில் ஆக்ரா இறக்கியது போல் தெறி. கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டேன். குழந்தைகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தன. அரிக்கன் லாம்பை சரியாகத் துடைத்துத் திரியைக் கத்தரித்து விடாததாலோ என்னவோ சுடர் பிறைவடிவில் எரிந்துகொண்டிருந்தது. சிம்னியில் புகைபிடிக்க ஆரம்பித்திருந்தது.அந்த வெளிச்சத்தில் அவள் கச்சாத்துக்களிலிருந்த தொகைகளைக் கூட்டிக்கொண்டும்,மீதிப்பணத்தை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டுமிருந்தாள்.கணக்கில் ஒரு ஐந்து ரூபாய் சொச்சம் உதைத்தது. அந்த ரூபாய்க்கான கணக்கு என்னஎன்று என்னிடம் கேட்டாள்.'எல்லாத்தையும் எடுத்துவைகணக்கு எங்கெயும் போய்விடாது;காலையில் பாத்துக்கலாம், எல்லாம்.'அவள் பிடிவாதமாகக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தாள்.எனக்கு கண்களைத் திறக்க முடியவில்லை. மூடிக்கொண்டே இருக்கவேண்டும்போல்இருந்தது. என்னுடைய நெற்றி ஒரு இதமான விரல்களின் ஒத்தடத்துக்கு ஏங்கியது.மூக்கு மயிர் கருகும்படியான உஷ்ணக்காற்றை நான் வெளிவிட்டுக் கொண்டிருந்தேன்.நல்ல உயர்ந்த காய்ச்சல்.சூழ்நிலையின் பிரக்ஞை வட்டம் சுருங்கிக்கொண்டே வந்தது. சின்ன, மெல்லியசப்தங்கள்கூடக் கோரமாகக் கேட்டன. கண்களைத் திறந்து நாச்சியாரு என்ன செய்கிறாள் என்று திரும்பிப் பார்த்தேன். அவள் ரூபாய் அணா பைசாவில் மூழ்கியிருந்தாள்.குளிர்ந்த காற்றுப்பட்டதால் கண்கள் நீரை நிறைத்தன, துடைத்துக்கொள்ளக் கையைஎடுக்க இஷ்டமில்லை. அதை இமைகளாலேயே மூடி வெளியேற்றினேன். மீண்டும்நாச்சியாருவையே பார்த்தேன். அவளுடைய ரவிக்கையின் அவிழ்க்கப்பட்ட முடிச்சுமுடியப்படாமலே தொங்கின.

கூந்தல் வாரிச் சேர்க்கப்படாததால் கற்றைகள்முன்முகத்தில் வந்து விழுந்து கிடந்தன.என்ன ஆனந்தமான ‘சொகம்’ இந்தக் கண்களை மூடிக்கொண்டே இருப்பதினால்! கானல்அலைகளைப்போல் என் உடம்பிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் உஷ்ண அலைகள் கண்ணால் பார்க்கமுடியாமலிர்ந்தாலும் தெரிந்தது. நான் எரிந்துக்கொண்டிருக்கும் ஒருசிதைக்குள் படுத்திருப்பதுபோல் குளிருக்கு அடக்கமாக இருந்தது. உயர்ந்தகாய்ச்சலின் போதை இடைவிடாது மீட்டப்படும் சுருதிபோல் லயிப்பு மயமாக இருந்தது.இந்த ஆனந்தத்தில் பங்குகொள்ள எனக்கு ஒரு

துணைவேண்டும்போல் இருந்தது. அவள் எங்கே? அவள்தான்; என் அருமை நாச்சியாரு.'நாச்சியாரு, என் பிரியே! நீ எங்கிருக்கிறாய்?'

-------------------

ராசா தேடின பொண்ணு!

(18+ வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் – நாட்டுப்புற பாலியல் கதைகள் நூலின் இருந்து).

இப்படித்தான் ஒரு ராஜகுமாரன்; நாலுதனங்கள் உள்ள பொண்ணைத்தான் கட்டுவேன்னு அடம்பிடிச்சான். இது என்ன கூத்துடாப்பா; மதுரை மீனாச்சிக்கு மூணுதனங்கள் முதலில் இருந்ததாகச் சொல்லுவாங்க. இவன் என்னடான்னா நாலு தனங்கள் வேணுங்கறானே எங்க போக, என்று பெரியவங்க வருத்தப்பட்டாங்க.

யப்பா, இப்பிடியா உள்ள ஒரு பெண்ண நீதாந் தேடிக் கண்டுபிடிக்கணும். எங்களாலே ஆகாதுன்னுட்டாங்க.

சரீன்னு சொல்லி இவன் புறப்பட்டாம். ஊரு ஒலகமெல்லாம் சுத்தினாம். ஆத்துல குளத்துல வாய்க்கால்லன்னுட்டு வரீசைய பாத்துகிட்டே வந்தாம். விதவிதமானதுகளத் தாம் பாத்தானே தவிர நாலு உள்ளதுகளுமில்ல. மூணு உள்ளதுகளுமில்ல. சொல்லப் போனா ஒண்ணரை, ஒண்ணே முக்காலு இப்பிடித்தான் இருந்துச்சாம்.

பயலுக்கு சே'ன்னு ஆயிட்டது!

பின்னே ஏம் இப்பிடிச் சொன்னாம்?

அதுக்கு ஒரு காரணம் இருந்தது.

ஒரு நா ராத்திரி அவம் தூக்கத்துல ஒரு சொப்பனங்கண்டாம். அந்த சொப்பனம் விடியப் போற நேரத்துல வந்தது.

விடியப் போற நேரத்துல வார சொப்பனம் பலிக்கும்ங்கிற நம்பிக்கெ.

அந்த சொப்பனத்துல ஒரு பொண்ணு குளிச்சிக்கிட்டிருக்கா; உடம்பெத் தேச்சிக் குளிக்கிறப்போ தேக்கிற வளைய சத்தங்கூடக் கேட்டுது. கவனிச்சிப் பாத்தப்போ அந்தப் பொண்ணுக்கு முதுகுல ரெண்ணு தனங்கள் இருந்தது.

ரொம்ப ஆச்சர்யம் இவனுக்கு.

இவனே நெனச்சது உண்டு; இப்பிடி இருந்தா சில சமயத்துல வசதியா இருக்குமேன்னுட்டு.

முழிப்புத் தட்டியதும் தான் நினைச்சாம். நிச்சயம் எங்கோ அப்பிடி ஒரு பொண்ணு இருக்கா. கட்டாயம் தேடிக் கண்டுபிடிச்சிக் கட்டிக்கிடணும். அதுலயிருந்து அவன் அவளைத் தேட ஆரம்பிச்சாம்.

நாலு தனங்கள் உள்ள பொண்ணுகளெத் தேடித் தேடி எங்கயும் காங்காம அலுத்து, ஒருநா ஒரு குளத்தங்கரை மரத்து எணல்லெ அசந்து படுத்தவன் நல்லாத் தூங்கிட்டாம்.

அவம் முந்தி ஒருநா சொப்பனத்துல கண்டானே, அப்பக் கேட்டுதெ, அதேபோல வளைய சத்தம் கேட்டுது.

கொஞ்சங்கொஞ்சமா பயலுக்கு முளிப்பு வந்தது.

அரண்மனையில, பஞ்சுமெத்தயில படுத்துக்கிட்டிருக்கிறதா நெனச்சிக்கிட்டிருந்தவனுக்கு, மரத்துக் கடியில உதுந்து குமிஞ்சிக் கிடக்கிற சருகு இலைக மேல வேட்டிய விரிச்சிப் படுத்துக் கிடக்குது தெரிஞ்சது. பெறவுதாம் குளத்துக்கரைங்கிறது ஞாபகத்துக்கு வந்தது. ஆனா, வளையச்சத்தம் இன்னும் கேட்டுக்கிட்டுத் தானிருந்தது.

பைய்ய எந்திரிச்சி பாத்தாம். கண்ணெ கசக்கிவிட்டுப் பாத்தாம். சொப்பனங்காணலை, நெசந்தாம்! அந்த தாமரைக் குளத்து படிக்கட்டுல ஒரு பொண்ணு அம்மணமா குளிச்சிக்கிட்டிருந்தா. யாருமே பாக்கலெங்கிற தைரியத்துல சாவாசமா உக்காந்து குளிச்சிட்டிருந்தா. இவனுக்கு அவளோட முதுகுப்பக்கந்தாம் தெரியிது. முதுகுல ரெண்டு தனங்கள் இருந்தது தெரிஞ்சது.

ஆகா! நாம நெனச்சது கெடச்சுட்டு. கடவுளே கொண்டாந்து காணிச்சிட்டார். சரி, இவ குளிச்சி முடிக்கட்டும். இவளுக்குத் தெரியாமயே இவ பெறத்தால போவம். எந்த வீட்டுக்குள்ளாற நுழையிதாளோ அதெ கவனிச்சி வச்சிருந்து மொறப்படி போயி பொண்ணு கேட்டு கலியாணத்த முடிச்சிருவம்னு தீர்மானிச்சி, அதே பிரகாரம் அவ குளிச்சிட்டுப் போயி நுழையிற அவ வீட்டையுங் கண்டுபிடிச்சிட்டாம்.

பெறகென்ன; போயி பொண்ணு கேட்டாம்.

ராசாவுக்கு பொண்ணுகேட்டா முடியாதுன்னு சொல்ல இயலுமா?

கலியாணம் முடிஞ்சது.

மொதநா ராத்திரி, பய ஆசையோட அவளெ கட்டிப்புடுச்சி முதுகெப் புடிச்சாம்.

என்னத்தெ எளவு ஒண்ணத்தையுங்காணம்?ன்னு அவக்கிட்டயவே கேட்டாம்.

அவளுக்கு சிரிப்பு வந்திட்டு. அட கோட்டிக்காரப்பய ராசா மவனேன்னு நெனச்சிக்கிட்டு.

‘மாட்டுக்கு வாலு பின்னாலே

மனுசனுக்கு பாலு முன்னாலே’ங்கிறது கூட ஒனக்குத் தெரியாதா?

மார்ல இருக்கவேண்டியது எங்கனாச்சும் முதுகில இருக்குமான்னு கேட்டா

ஏங்கண்ணாலயே பாத்தென ஒம் முதுகில இருந்த்தேன்னு கேட்டாம்

முன்னால இருந்த அதெத்தாம் நீ பின்னால பாத்தென்னா

இவனுக்கு வெளங்கல.

பெறவு அவதாம் வெளக்கமாச் சொன்னா

ஒடம்ப நல்லாத் தேய்ச்சிக் குளிக்கணும்னுட்டுதொம் அவ அந்த காட்டுக் குளத்துக்குப் போவாளாம். வயித்துக்குச் கீழெயெல்லாம் தேச்சிக் குளிக்க இதுக ரெண்டும் எடைஞ்சலா இருக்கும்னுட்டு அதுகள ரெண்டு தோள்களுக்கும் மேலே எடுத்துப் போட்டுக்கிடுவாளாம். அதுக முதுகில கிடக்கும்போது பாத்துட்டு பய சரியாப் பாக்காம முதுகுலதாம் இருக்கும்னுட்டு நெனச்சிக்கிட்டா நாம என்ன செய்யிறதுன்னு கேட்டாளாம்.

(18+ வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் – நாட்டுப்புற பாலியல் கதைகள் நூலின் இருந்து).இப்படித்தான் ஒரு ராஜகுமாரன்; நாலுதனங்கள் உள்ள பொண்ணைத்தான் கட்டுவேன்னு அடம்பிடிச்சான். இது என்ன கூத்துடாப்பா; மதுரை மீனாச்சிக்கு மூணுதனங்கள் முதலில் இருந்ததாகச் சொல்லுவாங்க. இவன் என்னடான்னா நாலு தனங்கள் வேணுங்கறானே எங்க போக, என்று பெரியவங்க வருத்தப்பட்டாங்க.யப்பா, இப்பிடியா உள்ள ஒரு பெண்ண நீதாந் தேடிக் கண்டுபிடிக்கணும். எங்களாலே ஆகாதுன்னுட்டாங்க.சரீன்னு சொல்லி இவன் புறப்பட்டாம். ஊரு ஒலகமெல்லாம் சுத்தினாம். ஆத்துல குளத்துல வாய்க்கால்லன்னுட்டு வரீசைய பாத்துகிட்டே வந்தாம். விதவிதமானதுகளத் தாம் பாத்தானே தவிர நாலு உள்ளதுகளுமில்ல. மூணு உள்ளதுகளுமில்ல. சொல்லப் போனா ஒண்ணரை, ஒண்ணே முக்காலு இப்பிடித்தான் இருந்துச்சாம்.

பயலுக்கு சே'ன்னு ஆயிட்டது!பின்னே ஏம் இப்பிடிச் சொன்னாம்?அதுக்கு ஒரு காரணம் இருந்தது.ஒரு நா ராத்திரி அவம் தூக்கத்துல ஒரு சொப்பனங்கண்டாம். அந்த சொப்பனம் விடியப் போற நேரத்துல வந்தது.விடியப் போற நேரத்துல வார சொப்பனம் பலிக்கும்ங்கிற நம்பிக்கெ.அந்த சொப்பனத்துல ஒரு பொண்ணு குளிச்சிக்கிட்டிருக்கா; உடம்பெத் தேச்சிக் குளிக்கிறப்போ தேக்கிற வளைய சத்தங்கூடக் கேட்டுது. கவனிச்சிப் பாத்தப்போ அந்தப் பொண்ணுக்கு முதுகுல ரெண்ணு தனங்கள் இருந்தது.ரொம்ப ஆச்சர்யம் இவனுக்கு.இவனே நெனச்சது உண்டு; இப்பிடி இருந்தா சில சமயத்துல வசதியா இருக்குமேன்னுட்டு.முழிப்புத் தட்டியதும் தான் நினைச்சாம். நிச்சயம் எங்கோ அப்பிடி ஒரு பொண்ணு இருக்கா. கட்டாயம் தேடிக் கண்டுபிடிச்சிக் கட்டிக்கிடணும். அதுலயிருந்து அவன் அவளைத் தேட ஆரம்பிச்சாம்.நாலு தனங்கள் உள்ள பொண்ணுகளெத் தேடித் தேடி எங்கயும் காங்காம

அலுத்து, ஒருநா ஒரு குளத்தங்கரை மரத்து எணல்லெ அசந்து படுத்தவன் நல்லாத் தூங்கிட்டாம்.அவம் முந்தி ஒருநா சொப்பனத்துல கண்டானே, அப்பக் கேட்டுதெ, அதேபோல வளைய சத்தம் கேட்டுது.கொஞ்சங்கொஞ்சமா பயலுக்கு முளிப்பு வந்தது.

அரண்மனையில, பஞ்சுமெத்தயில படுத்துக்கிட்டிருக்கிறதா நெனச்சிக்கிட்டிருந்தவனுக்கு, மரத்துக் கடியில உதுந்து குமிஞ்சிக் கிடக்கிற சருகு இலைக மேல வேட்டிய விரிச்சிப் படுத்துக் கிடக்குது தெரிஞ்சது. பெறவுதாம் குளத்துக்கரைங்கிறது ஞாபகத்துக்கு வந்தது. ஆனா, வளையச்சத்தம் இன்னும் கேட்டுக்கிட்டுத் தானிருந்தது.பைய்ய எந்திரிச்சி பாத்தாம். கண்ணெ கசக்கிவிட்டுப் பாத்தாம். சொப்பனங்காணலை, நெசந்தாம்! அந்த தாமரைக் குளத்து படிக்கட்டுல ஒரு பொண்ணு அம்மணமா குளிச்சிக்கிட்டிருந்தா. யாருமே பாக்கலெங்கிற தைரியத்துல சாவாசமா உக்காந்து குளிச்சிட்டிருந்தா. இவனுக்கு அவளோட முதுகுப்பக்கந்தாம் தெரியிது. முதுகுல ரெண்டு தனங்கள் இருந்தது தெரிஞ்சது.ஆகா! நாம நெனச்சது கெடச்சுட்டு. கடவுளே கொண்டாந்து காணிச்சிட்டார். சரி, இவ குளிச்சி முடிக்கட்டும். இவளுக்குத் தெரியாமயே இவ பெறத்தால போவம். எந்த வீட்டுக்குள்ளாற நுழையிதாளோ அதெ கவனிச்சி வச்சிருந்து மொறப்படி போயி பொண்ணு கேட்டு கலியாணத்த முடிச்சிருவம்னு தீர்மானிச்சி, அதே பிரகாரம் அவ குளிச்சிட்டுப் போயி நுழையிற அவ வீட்டையுங் கண்டுபிடிச்சிட்டாம்.

பெறகென்ன; போயி பொண்ணு கேட்டாம்.ராசாவுக்கு பொண்ணுகேட்டா முடியாதுன்னு சொல்ல இயலுமா?கலியாணம் முடிஞ்சது.மொதநா ராத்திரி, பய ஆசையோட அவளெ கட்டிப்புடுச்சி முதுகெப் புடிச்சாம்.என்னத்தெ எளவு ஒண்ணத்தையுங்காணம்?ன்னு அவக்கிட்டயவே கேட்டாம்.அவளுக்கு சிரிப்பு வந்திட்டு. அட கோட்டிக்காரப்பய ராசா மவனேன்னு நெனச்சிக்கிட்டு.‘மாட்டுக்கு வாலு பின்னாலேமனுசனுக்கு பாலு முன்னாலே’ங்கிறது கூட ஒனக்குத் தெரியாதா?மார்ல இருக்கவேண்டியது எங்கனாச்சும் முதுகில இருக்குமான்னு கேட்டாஏங்கண்ணாலயே பாத்தென ஒம் முதுகில இருந்த்தேன்னு கேட்டாம்முன்னால இருந்த அதெத்தாம் நீ பின்னால பாத்தென்னாஇவனுக்கு வெளங்கல.

பெறவு அவதாம் வெளக்கமாச் சொன்னாஒடம்ப நல்லாத் தேய்ச்சிக் குளிக்கணும்னுட்டுதாம் அவ அந்த காட்டுக் குளத்துக்குப் போவாளாம். வயித்துக்குச் கீழெயெல்லாம் தேச்சிக் குளிக்க இதுக ரெண்டும் எடைஞ்சலா இருக்கும்னுட்டு அதுகள ரெண்டு தோள்களுக்கும் மேலே எடுத்துப் போட்டுக்கிடுவாளாம். அதுக முதுகில கிடக்கும்போது பாத்துட்டு பய சரியாப் பாக்காம முதுகுலதாம் இருக்கும்னுட்டு நெனச்சிக்கிட்டா நாம என்ன செய்யிறதுன்னு கேட்டாளாம்.

---------------

தவளையும் பாம்பும்

(18+ வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் – நாட்டுப்புற பாலியல் கதைகள் நூலின் இருந்து).

வேசி ஒருத்தி தினமும் ஒரு குளத்தில் குளிக்கப் போவா. அந்தக் குளத்துல தவளைக நிறைய்ய இருந்தது.

தவளைக நிறைய்ய இருந்ததுனால அதுகளைப் பிடிச்சித் தின்ன பாம்புகளும் நிறைய்ய வந்தது. பாம்புக வந்து தவளைகளை பிடிச்சித் திங்க ஆரம்பிச்சதும் தவளைகளுக்கு ரொம்ப பயமாப் போச்சி. அதுகளுக்கு என்ன செய்யிறதுன்னுட்டுத் தெரியல. எங்கன போயி ஒளியறதுன்னுட்டுந் தெரியல. அதுகளோட நிலமை ரொம்பப் பரிதாபமா ஆயிட்டது.

இவ தலைக்கு சீய்க்கா போட்டுத் தேச்சிக் குளிக்க, தண்ணிக்குள்ள முங்குன ஒரு படிக்கட்டுல வசமா உக்கார்ந்துகிட்டு கண்ணுல சீய்க்க விழுந்துராம இருக்க கண்ண மூடிக்கிட்டு தலையைத் தேய்ச்சிக்கிட்டிருக்கா.

அந்த சமயத்துல ஒரு தண்ணிப் பாம்பு ஒரு தவளைய விடேன் தொடேன்னு முடுக்கிட்டு வருது. கடோசியா தவளைக்குத் தப்பிக்க ஒரு வழியுந் தெரியல.

இவ கால அகட்டி உக்காந்து தலெ குளிச்சிட்டிருந்தாளா, அது பாட்டுக்குப் போயி இருந்துக்கிட்டது. பாம்புக்குப் பார்வை தவளை மேல. அதனால தவளையங் காங்கலங்கவும் அது திரும்பி போயிட்டது. தவளைக்கு இப்பதாம் உயிரு வந்தது. இம்புட்டுப் பாதுகாப்பா, குளிருக்கு அடக்கமா ஒரு இடம் கிடைக்கும்னு அது கனவுலயும் நெனக்கல.

சரி. இதுலயே இப்படியே இருப்போம்னு இருந்துக்கிட்டது. அந்தத் தவளையப் பிடிக்க அதெ வெரட்டிக்கிட்டு வந்த பாம்புக்கு ஒரு சந்தேகம் வந்துட்டது. அதுக்குள்ள இந்தத் தவள எங்கிட்டுப் போயிருக்க முடியும்ன்னுட்டு.

ஒரு வேள இதுக்குள்ள இருக்கலாமோன்னு தலைய நுழைச்சிப் பாத்தது.உசாரா இருந்த தவளை இத எதிர்பார்த்து இருந்ததால இன்னும் உள்ளுக்குப் போயி வசமான இடத்துல பதுங்கியிருந்துக்கிட்டது. உள்ள நுழைஞ்சி பாத்த பாம்புக்கு ஒரே இருட்டா இருந்ததுனால ஒண்ணுந் தெரியல. அதனால தலைய வெளிய இழுத்துக்கிட்டு வேற தவளையப் பாப்பம்னு போயிட்டது.

பாம்பு போயிட்டதுன்னு உறுதியாத் தெரிந்த பிறகு தவளை மெள்ள வெளியே வந்துட்டது.

உயிரு தப்பியதை நினைத்து அதுக்கு ஒரே புல்லரிப்பு நிறைந்த தாங்க முடியாத மகிழ்ச்சி.

இந்த மகிழ்ச்சியை தனது சேக்காளித்தவளையிடம் போய்ச் சொன்னது. நடந்ததை அப்பிடியே சொல்லி, பாம்பு உள்ளே வந்து தேடியதையும் தன்னைப் பிடிக்க முடியலைன்னு சொல்லிவிட்டு-

ஹ..! அந்த இடம்; ரொம்ப அருமையான இடம் ஒளிய. நீயும் அதப் போய்ப் பாக்கணும். பாத்து வச்சிக்கிட்டா பாம்புக வெறட்டும்போது போயிப் பதுங்கிக்கலாம்னு சொன்னதும் இந்தப் பயித்தியாரத் தவளை உள்ளே போயிப் பாக்கிறதுக்கும் அவ குளிச்சி எழுந்திருக்கிறதுக்கும் சரிய்யாக இருந்தது.

அடடா உள்ள மாட்டிக்கிட்டமே. சரி. நாளைக்கு இந்நேரந்தாம் வெளியே வர முடியும்னு கம்முனு பதுங்கி இருந்துக்கிட்டது.

அதேபோல மறுநா அவ அந்த குளத்துக்கு தலை குளிக்க வந்து தண்ணீர்ப் படியில உக்காந்து தலெயெத் தேச்சிக் குளிச்ச போது தவளை தப்பிச்சேன் பிழைச்சேன்னு பாஞ்சி வெளியே வந்திட்டது. சேக்காளித்தவளெ என்னடா இவம் போனவனெக் காங்கலயே; பாம்புதாம் முழுங்கிருச்சோன்னு கவலையா இருந்த சமயம்; இது அதெத்தேடி வந்தது சிரிச்சுக்கிட்டே.

என்னப்பா என்ன ஆச்சி; எப்பிடி இருந்ததுன்னு மற்ற தவளை கேக்க…

அய்யோ! அதெ ஏங் கேக்கெபோ; ஒரு பாம்பா ரெண்டு பாம்பா எத்தென பாம்புங்கிற; விதவிதமா வருதப்போவ்! நானும் பாத்ததுலயும் பாத்தேன்; இப்படிப் பாம்புகளைப் பாத்ததில்லப்ப, வார சனியன் எட்டிப் பாத்துட்டு, இல்லேன்னு தெரிஞ்சதும் போக வேண்டியதுதானே. ரொம்ப சந்தேகம் பிடிச்ச பாம்புகப்பா. மாறி மாறி மாறி மாறி வந்து வந்து பாக்குதுங்கெ.

நா அம்புடுவேனா. எவ்ளோ எடம்கிற. நம்ம குளத்துத் தவளயெல்லாம் போயி இருந்துக்கிறலாம். அப்பேர்க்கொத்த பெரிய இடம் அது என்று பெருமை பீத்திக்கொண்டது அந்த தவளை. அப்படியா சங்கதி. நா நாளைக்குப் போயி பாத்துட்டு வந்துரணும். அதெ என்று சொல்லிக் கொண்டது மற்ற தவளை.

வேசி ஒருத்தி தினமும் ஒரு குளத்தில் குளிக்கப் போவா. அந்தக் குளத்துல தவளைக நிறைய்ய இருந்தது.தவளைக நிறைய்ய இருந்ததுனால அதுகளைப் பிடிச்சித் தின்ன பாம்புகளும் நிறைய்ய வந்தது. பாம்புக வந்து தவளைகளை பிடிச்சித் திங்க ஆரம்பிச்சதும் தவளைகளுக்கு ரொம்ப பயமாப் போச்சி. அதுகளுக்கு என்ன செய்யிறதுன்னுட்டுத் தெரியல. எங்கன போயி ஒளியறதுன்னுட்டுந் தெரியல. அதுகளோட நிலமை ரொம்பப் பரிதாபமா ஆயிட்டது.இவ தலைக்கு சீய்க்கா போட்டுத் தேச்சிக் குளிக்க, தண்ணிக்குள்ள முங்குன ஒரு படிக்கட்டுல வசமா உக்கார்ந்துகிட்டு கண்ணுல சீய்க்க விழுந்துராம இருக்க கண்ண மூடிக்கிட்டு தலையைத் தேய்ச்சிக்கிட்டிருக்கா.அந்த சமயத்துல ஒரு தண்ணிப் பாம்பு ஒரு தவளைய விடேன்

தொடேன்னு முடுக்கிட்டு வருது. கடோசியா தவளைக்குத் தப்பிக்க ஒரு வழியுந் தெரியல.இவ கால அகட்டி உக்காந்து தலெ குளிச்சிட்டிருந்தாளா, அது பாட்டுக்குப் போயி இருந்துக்கிட்டது. பாம்புக்குப் பார்வை தவளை மேல. அதனால தவளையங் காங்கலங்கவும் அது திரும்பி போயிட்டது. தவளைக்கு இப்பதாம் உயிரு வந்தது.

இம்புட்டுப் பாதுகாப்பா, குளிருக்கு அடக்கமா ஒரு இடம் கிடைக்கும்னு அது கனவுலயும் நெனக்கல.சரி. இதுலயே இப்படியே இருப்போம்னு இருந்துக்கிட்டது. அந்தத் தவளையப் பிடிக்க அதெ வெரட்டிக்கிட்டு வந்த பாம்புக்கு ஒரு சந்தேகம் வந்துட்டது. அதுக்குள்ள இந்தத் தவள எங்கிட்டுப் போயிருக்க முடியும்ன்னுட்டு.ஒரு வேள இதுக்குள்ள இருக்கலாமோன்னு தலைய நுழைச்சிப் பாத்தது.உசாரா இருந்த தவளை இத எதிர்பார்த்து இருந்ததால இன்னும் உள்ளுக்குப் போயி வசமான இடத்துல பதுங்கியிருந்துக்கிட்டது. உள்ள நுழைஞ்சி பாத்த பாம்புக்கு ஒரே இருட்டா இருந்ததுனால ஒண்ணுந் தெரியல. அதனால தலைய வெளிய இழுத்துக்கிட்டு வேற தவளையப் பாப்பம்னு போயிட்டது.பாம்பு போயிட்டதுன்னு உறுதியாத் தெரிந்த பிறகு தவளை மெள்ள வெளியே வந்துட்டது.உயிரு தப்பியதை நினைத்து அதுக்கு ஒரே புல்லரிப்பு நிறைந்த தாங்க முடியாத மகிழ்ச்சி.இந்த மகிழ்ச்சியை தனது சேக்காளித்தவளையிடம் போய்ச் சொன்னது. நடந்ததை அப்பிடியே சொல்லி, பாம்பு உள்ளே வந்து தேடியதையும் தன்னைப் பிடிக்க முடியலைன்னு சொல்லிவிட்டு-ஹ..! அந்த இடம்; ரொம்ப அருமையான இடம் ஒளிய. நீயும் அதப் போய்ப் பாக்கணும். பாத்து வச்சிக்கிட்டா பாம்புக வெறட்டும்போது போயிப் பதுங்கிக்கலாம்னு சொன்னதும் இந்தப் பயித்தியாரத் தவளை உள்ளே போயிப் பாக்கிறதுக்கும் அவ குளிச்சி எழுந்திருக்கிறதுக்கும் சரிய்யாக இருந்தது.

அடடா உள்ள மாட்டிக்கிட்டமே. சரி. நாளைக்கு இந்நேரந்தாம் வெளியே வர முடியும்னு கம்முனு பதுங்கி இருந்துக்கிட்டது.அதேபோல மறுநா அவ அந்த குளத்துக்கு தலை குளிக்க வந்து தண்ணீர்ப் படியில உக்காந்து தலெயெத் தேச்சிக் குளிச்ச போது தவளை தப்பிச்சேன் பிழைச்சேன்னு பாஞ்சி வெளியே வந்திட்டது. சேக்காளித்தவளெ என்னடா இவம் போனவனெக் காங்கலயே; பாம்புதாம் முழுங்கிருச்சோன்னு கவலையா இருந்த சமயம்; இது அதெத்தேடி வந்தது சிரிச்சுக்கிட்டே.என்னப்பா என்ன ஆச்சி; எப்பிடி இருந்ததுன்னு மற்ற தவளை கேக்க…அய்யோ! அதெ ஏங் கேக்கெபோ; ஒரு பாம்பா ரெண்டு பாம்பா எத்தென பாம்புங்கிற; விதவிதமா வருதப்போவ்! நானும் பாத்ததுலயும் பாத்தேன்; இப்படிப் பாம்புகளைப் பாத்ததில்லப்ப, வார சனியன் எட்டிப் பாத்துட்டு, இல்லேன்னு தெரிஞ்சதும் போக வேண்டியதுதானே.

ரொம்ப சந்தேகம் பிடிச்ச பாம்புகப்பா. மாறி மாறி மாறி மாறி வந்து வந்து பாக்குதுங்கெ.நா அம்புடுவேனா. எவ்ளோ எடம்கிற. நம்ம குளத்துத் தவளயெல்லாம் போயி இருந்துக்கிறலாம். அப்பேர்க்கொத்த பெரிய இடம் அது என்று பெருமை

பீத்திக்கொண்டது அந்த தவளை. அப்படியா சங்கதி. நா நாளைக்குப் போயி பாத்துட்டு வந்துரணும். அதெ என்று சொல்லிக் கொண்டது மற்ற தவளை.